

கல்கி
KALKI 13-1-1963
30 காசு



டெட் கொண்டு சலவை செய்த ஆடைகளிலுள்ள நம்பிக்கை



இதோ இந்த இணைபிரியாத விளையாட்டுத் தோழர்களின் கம்பீரத் தோற்றத்திற்கும், தன்னம்பிக்கைக்கும் காரணம் அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகள் பூப்போன்ற புதுமையுடன் பளிச்சென்று டெட் கொண்டு சலவை செய்யப்பட்டதால்தான்.

டெட் ஒரு செயற்கை சலவைப் பொருள், கண்ணுக்குப் பளிச்சிடும் பொருள் கலந்துள்ள டெட் ஒரு பூர்ண சலவைப் படைப்பாகும். கடின மற்றும் லேசான நீரிலும் டெட் ஏராளமாக நுரைக்கிறது. பலவீதமான ஆடைகளையும்-பருத்தி, சில்க், ரேயான், கம்பளி-வெள்ளை அல்லது பல வர்ணங்களிலுள்ள ஆடைகளையும்-எவ்வித அபாயமுமின்றி திறமையுடன் டெட் சலவை செய்கிறது.

டெட்டின் சலவை உங்களுக்குப் பெருமை.


டெட்டினால் சலவை செய்தால் அதிக வெண்மை கிடைக்கும்.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்-1.

SHILPI SOM 4 TAM

உங்களுடைய தேய்ந்த டயர்களை
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸில்
ரீட்ரெட் செய்யுங்கள்

டிவிஎஸ்ஸில் தேய்ந்த டயர்களைப் புதுப்பித்தால் அவை புது டயர்களைப் போலவே நீடித்து உழைக்கும். ஏனெனில்





மிக உயர்ந்த கூடுதலான கனமுள்ள காமெல் - பாக் டிரெட் ரப்பரையே டிவிஎஸ் உபயோகிக்கிறார்கள்



டிவிஎஸ் குளிர்சாதன அறைகளில் காமெல்-பாக் உலராமலிருக்கின்றன. ஆகையால் உழைப்பு நீடிக்கிறது

ரீட்ரெடிங் செய்வது எளிதன்று. அது நிபுணர்களின் வேலை. டிவிஎஸ் தொழிற்சாலையில் தேய்ந்து போன டயர்களை ரீட்ரெடிங்செய்வதற்கு நவீன நுண்ணிய இயந்திரங்களை அமைத்துள்ளார்கள். தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் அவற்றை இயக்குகின்றனர். விசேஷ "பாண்டிங்" முறையினால் டிவிஎஸ்ஸில் புதுப்பிக்கப் பெறும் டயர்கள் புத்துயிர் பெறுகின்றன. ஒவ்வொரு டிரக் டயரையும்—உரிய காலத்தில் செய்தால் — மூன்று முறை ரீட்ரெட் செய்யலாம்.





ரீட்ரெட் பணியில் சிறந்தவர்கள்


சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்

(டி.வி.எஸ். ஸ்தாபனம்)

TVS

புதுக்கோட்டை - மதுரை
கோயமுத்தூர் - பெங்களூர்

JWT/SS-RD-1441a Rev.



சிந்தால்
வருஷங்கள்



குழந்தைப் பருவம்

சரும ஆரோக்கியத்திற்கும், அழகுக்கும் சிந்தால் நம்பகமான வழி. ஆச்சரியகரமான ஜி-11* என்ற கிருமி நாசினி சேர்ந்த சிந்தால் குழந்தையின் மிருதுவான சருமத்தை அதன் மேல் சாதாரணமாக வளரும் லட்சக்கணக்கான கிருமிகளிலிருந்து காப்பாற்றுகிறது... சிறுய்த்தபுண், வேர்க்குரு, கருகிறப்படை ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கவும், குணப்படுத்தவும் செய்கிறது.

மனோகர நறுமணங்கொண்ட சிந்தால் மிகவும் மிருதுத்தன்மையுடைய தால் சருமத்தைச் சுத்தம் செய்கையிலேயே இதமளிக்கிறது... கண்களுக்குக் கெடுதலற்றது... சிறுவர் இல்லத்தில் வைத்திருக்க அத்தியாவசியமானது.



வியர்வை நாற்றத்தைப் போக்கி, எழிலுடன் விளக்கச்செய்யும் சோப்

பூரணப் பாதுகாப்பிற்கு இனிய மணங்கமழும் வியர்வை நாற்றத்தைப்போக்கி ஆறுதல் அளிக்கும் ஜி-11 அடங்கியுள்ள கோத்ரெஜ் சிந்தால் டாய்லெட் பவுடர் உபயோகியுங்கள்.

*படங்களுடன் கூடிய "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவச புத்தகத்திற்கு 'கோத்ரெஜ், பம்பாய்-12,' என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

Godrej கோத்ரெஜ்

சோப்புகளில் முதன்மையான பெயர்

[illegible] (8"×2 6") TAM.

கல்கி

பொங்கல் மலர் ❀ பொருளடக்கம்

சுபகிருது மார்கழி 29௳ ★ ஜனவரி 13௳ 1963

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

'அனஸின்'

வலி நிவாரணத்திற்கு சிறந்தது

ஏனெனில் அது நான்கு வழிகளில் வேலை செய்கிறது

வலியைப் போக்குகிறது.

ஜுரத்தைத் தணிக்கிறது.

நரம்புகளைச் சமனப்படுத்துகிறது

சோர்வைப் போக்குகிறது.

அனஸின் அதிலுள்ள மருந்துகளின் சேர்க்கையால் சிறந்த நிவாரணியாகிறது. தலைவலி, ஜலதோஷம், பல்வலி மற்றும் தசைவலி முதலிய எல்லாவிதமான வலிகளுக்கும் அது சிறந்தது. மேலும் அனஸின் ஜுரத்தைத்தணிக்கிறது. நரம்புகளுக்குசமனமூட்டுகிறது, சோர்வைப் போக்குகிறது. ஞாபகமிருக்கட்டும், இரண்டு அனஸின் மாத்திரைகள் வலிகளுக்கு சிறந்த நிவாரணி.






2 மாத்திரைகளுக்கு 13 ந. பைசேதான்.

Registered User: GEOFFREY MANNERS & CO. LIMITED.

O-38-TAM

புகைபிடிக்கும் இங்கிதம்.

பாத்திரமறிந்து சாம்பலிடு



சிகரெட்டுச் சாம்பலைச் சுற்றுமுற்றும் சிந்தாமலிருப்பது உங்கள் ஒழுக்கத்திற்கு உதவும். சாம்பல் படிக்கம் (ஆஷ் ட்ரே) தென்படவில்லையெனில் கேட்டுப் பெறுவதே மேல். அதை விட்டு, புகைத்த துணுக்குகளைத் தீப் பெட்டிக்குள்ளோ வேறு எதனுள்ளோ திணித்து வைப்பது ஆபத்தாக முடியலாம்.

உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனாமா



இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை

விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 614 TAM.

Greens' Advtg.



மலர் 22

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இதழ் 24

பொங்கல் திருநாள்

வாசகர்கள் யாவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். தெய்வங்கள் அனைவருக்கும் இறைவனுக்கும் பொங்கல் பிரார்த்தனைகளைச் செலுத்தி அஞ்சலி செய்கிறோம். நானிலமெல்லாம் நலங்கள் கூட வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறோம்.

பொங்கல் திருநாளின் நாயகன் சூரியன். உலகுக்கெல்லாம் உயிரளித்து அருள் புரிபவன் அவன். அவனது இயல்பு தாங்கொணாத வெம்மையாகும். உக்கிரத்தின் மூலம் நலன் விளைவிக்கும் ஆதவனை இவ்வருஷத்திய பொங்கல் திருநாளில் விசேஷமாக வணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நாட்டுக்கு இன்று நேரிட்டுள்ள ஆபத்துக்களைத் தீர்க்க நம் மக்களுக்கும் உக்கிரமும், பராக்கிரமமும் தந்து அவை நன்மை பயக்கும் மார்க்கங்களிலேயே செல்ல அவன் அருள்வானாக!

பொங்கல் பண்டிகையின் நாயகி பயிர் பச்சைகளைத் தந்தருளும் பூமிதேவி. பூமிதேவி என்பது உலகமுழுவதையும் குறிக்கும் எனினும் இந்திய பூமியைப் பாரதத்தாய் என்று உருவகப்படுத்தித் தொழுகிறவர்கள் நாம். அந்தப் பாரதத் தாயின் திருமேனியில் நிகழும் ஆக்கிரமிப்புக்களை முறியடிக்க நாடு உத்வேகத்துடன் பொங்கி எழுந்துள்ளது. பொங்கலன்று நிலமகளை வணங்கும்போது இந்த உணர்ச்சியை மேலும் வலிவுபெறச் செய்வோமாக!

பொங்கல் திருநாள் உழவர்களின் களியாட்ட தினம். நாட்டில் எத்தகைய ஆபத்துக்கள் நேர்ந்தாலும் உழவுத் தொழில் தடைபுறாமல் நடைபெற்றேயாக வேண்டும். வெடி மருந்தில்லாமல் பீரங்கிகள் இயங்காதது போலவே போதிய உணவில்லாமல் வீரர்களும் போரிட முடியாது. இதனால்தான் ‘உணவும் யுத்த தளவாடங்களில் ஒன்றே’ என்று அரசாங்கத்தின் போர் விளம்பரங்கள் கூறுகின்றன. போருக்காகப் புறக்கணிக்க முடியாத உழவுத் தொழிலின் தனி விழாவை இவ்வாண்டும் உற்சாகத்துடன் கொண்டாடுவோமாக!

உடலுக்கு எப்படி உணவோ, அதேபோல உயிருக்குச் சுதந்திரம். ஆனபடியால், எந்த அபாயத்திலும் உணவை அலட்சியப்படுத்தக் கூடாது என்பது போலவே சுதந்திரத்தையும் அலட்சியம் செய்வதற்கில்லை. நாட்டின் அத்தியாவசியத் தேவைகளுக்காகச் சில உரிமைகளை விட்டுக் கொடுக்க நாம் தயாராக இருக்க வேண்டியதுதான். எனினும் இந்தச் சமயத்தை ஒரு வாய்ப்பாக்கிக் கொண்டு மக்களின் எல்லா உரிமைகளையும் பறிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அவற்றைத் தடுத்து நியாயமான உரிமைகளைக் காத்துக் கொள்ள மக்கள் தயங்கக் கூடாது. போகிப் பண்டிகையன்று பழைய பாய்களையும், பழந் துணிகளையும் கொளுத்தும்போது பயம், பொய், அனாவசியமான வெறுப்பு இவற்றையும் கொளுத்துவோமாக!


ஆதவனின் ஆற்றலையும், புவிமகளின் பொறுமையையும் பெற்று, ஆபத்துக்களைக் கடந்து, ஒளியும் வளமும் காண ஆண்டவன் அருள்வானாக!

பாவம், பத்தொன்பதாம் பிரிவு!

சட்டத்துக்கு இணங்க சர்க்கார் ஆட்சி புரியும் என்று அரசியல் நிர்ணயச் சட்டத்தை வகுத்தவர்கள் எண்ணினார்கள். ஆனால் காங்கிரஸ் சர்க்காரோ சட்டத்துக்கே தனக்கு இணக்கமாகப் புத்துருவம் கொடுத்து வருகிறது. புதிதாகக் காங்கிரஸ் ஏதேனும் சட்டம் வகுக்க எண்ணியுள்ளதென்றால், மூலச் சட்டத்தை மாற்றியேதான் தீர வேண்டும் என்ற விசித்திர நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முதலில் இப்படிச் செய்யத் தயங்கினார்கள். இப்போது 'குளிர்' விட்டுவிட்டது. சற்றும் லஜ்ஜையின்றி மூலச் சட்டத்தை இழுத்த இழுப்புக்கு வளைத்துப் புதுப்புது சட்டங்களைப் போடுகிறார்கள். சட்டத்தைத் 'திருத்துவதோடு' நில்லாமல் இந்தத் திருத்தத்தை ரத்து செய்யவேண்டும் என்று பேசுவதே சட்ட விரோதமாகும் என்றும் காங்கிரஸ் சர்க்கார் சட்டம் பிறப்பிக்கும் நாள் தொலைவில் இல்லை. இப்படி நாம் கூறுவது பொது மக்களுக்குப் புரியாமல் போகலாம்; ஆனால் காங்கிரஸ் கட்சியின் பூரண அங்கத்தினரான, வரப்போகும் புது அட்டர்னி ஜெனரல் புரிந்து கொள்வார்.


மக்களின் ஜீவாதார உரிமைகளை மதித்துப் பிரகடனம் செய்யும் 19-வது பிரிவையும் மாற்றத் தீர்மானித்திருக்கிறார்கள். தேசப் பிரிவினை கோருவதைக் குற்றமாக்குவதற்குத் தற்போதுள்ள சட்டம் இடம் கொடுக்கவில்லை. ஆனபடியால் இந்தத் திருத்தம் கொண்டு வர இருக்கிறார்கள்.

தேசப் பிரிவினை கோருவதை நாம் ஒரு போதும் ஆதரிக்கவில்லை. என்றாலும் தி. மு. க. தன் பிரிவினை இயக்கத்தை நிறுத்தியிருக்கையில் இப்போது இவ்வாறு சட்டமாற்றம் செய்தாவது இந்தப் பிரச்னையைக் கிளப்புவதற்கு என்ன காரணம்? 'அவசர நிலைமை' என்ற பெயரில் யாரும் எத்தகைய ஆட்சேபணையும் தெரிவிக்க முடியாத போது கட்சிக்குச் சாதகமான சட்டத் திருத்தங்கள் செய்வது நேர்மையாகாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்ப்பைக் கவிழ்க்கத்தான் இப்போது சட்டத்தில் மாற்றம் செய்யவிருக்கிறார்கள். சர்க்காரின் யுத்த முயற்சியில் எல்லா விதங்களிலும் உதவ முன்வந்துள்ள தி. மு. க. தானாகவே நெருக்கடி நிலையை உத்தேசித்துப் பிரிவினைப்



மாட்டுப் பொங்கலன்று ஜல்லிக்கட்டில் வெற்றிபெறும் இளைஞனுக்கு மாலையிடுவாள் தமிழ்க் கன்னி.

அவசரகாலச் சுவரொட்டிக்கு நம் கேலிச் சித்திரக்காரர் யோசனை!



பிரச்னையை ஆறப் போட்டிருக்கிறது. தி. மு. க. வின் பிரிவினைக் கோரிக்கை எப்போதுமே ஒரு கற்பிதமான கோரிக்கையாகத்தான் இருந்திருக்கிறதே ஒழிய அது நடைமுறையாவதற்குச் சாத்தியக் கூறுகள் இருந்ததில்லை. இந்தக் கற்பிதக் கொள்கையையும் இப்போது கழகத் தலைவர்கள் விவேகத்துடன் தூங்கப் பண்ணியிருக்கிறார்கள். இந்நிலையில் ஓய்ந்து போன ஒரு மாயத்துக்கு உயிரூட்டி அதனுடன் தடபுடலாகச் சண்டைக்குக் கிளம்பி யிருக்கும் காங்கிரஸை என்னவென்பது ?

பூசல் நின்றுபோன நிலைமை ஏற்பட்ட பின்னும் 'அவசர நிலைமை'யின் அநுகூலங்களை ஆளும் கட்சி அநுபவித்து வருவது முறையல்ல. பாதுகாப்பைப் பலப்படுத்தும் முயற்சிகளுக்கு யாரும் தடை சொல்லவில்லை. நாட்டு மக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டியதுதான். ஆனால் சட்டத்தின் கீழ் நிருவாகம் நடைபெற வேண்டும் என்ற தருமத்தைக் கவிழ்க்கும் திட்டங்களை எதிர்க்கத்தான் வேண்டும். போர் முயற்சிகளில் சர்க்காருக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது என்ற நியாயமான கொள்கையை ஆதாரம் காட்டி, இன்று ஆட்சியிலுள்ள கட்சியை எதுவும் சொல்லக் கூடாது. போருக்குத் தொடர்பற்ற துறைகளில் அது செய்யும் மாற்றங்களையும் ஆட்சேபிக்கக் கூடாது; பிரதமர் எது கூறினாலும் அதை மந்திரமாகக் கருத வேண்டும் என்றெல்லாம் கட்டுப்படுத்துவது நீதியல்ல.

அரசியல் சட்டத்தின் 19-வது பிரிவு ஜனநாயகத்தின் ஜீவநாடியாகும். ஏக கட்சி ஆட்சிக்கு இடையூறாக நிற்பது அது. அரசியல் பரிசோதனைலயத்தில் ஆளும் கட்சியின் நலனுக்காகச் செய்யப்படும் யோசனைகளுக்குத் தடையாக இருப்பது இந்த 19-வது பிரிவே. இதனால்தான் இதற்கு அவ்வப்போது அதிர்ச்சியும், ஆபத்தும், குத்துக் காயங்களும், வெட்டுப் புண்களும் ஏற்பட்டு விடுகின்றன.

பத்தொன்பதாம் பிரிவே, ஐயோ, பாவம்! நீ படும்பாட்டைக் கண்டு பரிவு காட்டுகிறோம்.

பூஜை அறையில் ஒரு படம்



பட்டாபிராமன் படிப்பு முடிந்து சென்னை சர்க்கார் ஆபீஸில் இரண்டாந்தரக் குமாஸ்தாவாகச் சேர்ந்து சுகமாகக் குடும்பம் நடத்திக் கொண்டு வந்தான். மனைவியும் அவனும் அவன் தாயாருமே குடும்பம். தகப்பனார் இவனுடைய பதினைந்தாவது வயதிலேயே இறந்துவிட்டார். அண்ணன் வடக்கே ஒரு உத்தியோகத்தில் தன் குடும்பத்துடன் இருந்து தம்பியின் படிப்பைக் கஷ்டப்பட்டு முடித்துத் தந்து, 'இனி உன் யோக க்ஷேமம் உன்னுடைய பொறுப்பு' என்று சொல்லிவிட்டான். தாயார் பெரிய மகனுடன் இருக்கப் பிரியப்பட்டாளாயினும் அவ்வளவு தூர தேசத்துக்குப் போக விருப்பமில்லாமல் சின்ன மகனுடன் சென்னையில் இருந்தாள்.

பட்டாபிராமனுக்கு ஒரு குழந்தை உண்டாயிற்று. குடும்பத்தின் மகிழ்ச்சி இருமடங்காயிற்று. பாட்டி, தன் வாழ்க்கை அதன் முழுப் பயனைப் பெற்றது என்று அடங்காத ஆனந்தத்தில் மூழ்கினாள். மருமகளிடம் முன்னை விடப் பிரீதி அதிகமாயிற்று. தனக்கு இவள் ஒரு பேரனைத் தந்துவிட்டாளல்லவா? அதற்கு நன்றி செலுத்தும் முறையில் அவளை முன்னை விட அதிக அன்புடனும் மரியாதையாகவும் நடத்தி வந்தாள்.

பட்டாபிராமனுங் கூடக் குழந்தையைப் பாட்டியின் தனிச் சொத்தாகவே பாவித்தான். அவன் மகிழ்ச்சி அதனால் குறையவில்லை; இருமடங்காயிற்று.

ஃ ஃ ஃ

இதுவெல்லாம் சந்தோஷமேயாயினும் வீட்டுச் செலவு பெருகிற்று. பாலுக்கும் ஆளுக்கும் இன்னும் சில்லறைச் செலவும் ஏறிவிட்டது. சம்பளம் போதவில்லை. அது உயரும் வாய்ப்பும் காணவில்லை. இந்தக் கவலை பட்டாபிராமன் மனத்தை வாட்டிற்று. மனைவியிடம் முன் போல விளையாட்டும் பேச்சும் நடப்பதில்லை.

இதனால் தன்மேல் புருஷனுக்கு அன்பு குறைந்து போயிற்று என்று எண்ணினாள் பார்வதி. அதை வெளியில் காட்டவில்லை. ''குழந்தை பெற்று விட்டேன். கிழவியாகிப் போனேன். புருஷர்களுக்கு இள மனைவிகள் தான் பிரியம்'' என்று மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டு குழந்தை மேல் தன் கவனத்தையும் அன்பையும் செலுத்திப் புருஷனுடைய உதாசீனத்தைப் பொறுத்துக் கொண்டு வந்தாள்.


வீட்டுச் செலவுக்கும் சம்பளத்துக்கும் உள்ள வித்தியாசத்தை அவள் அறிய மாட்டாள்; அவள் எந்தப் பள்ளிக்கூடமும் போய்ப் படித்ததில்லை. கர்நாடகக் குடும்பத்தில் பிறந்தவள். நல்ல லக்ஷணம்; மிக நல்ல குணம். ஆனால் படிப்பு சூன்யம்.

ஃ ஃ ஃ

இதன் மேல் இரண்டாம் குழந்தை உண்டாகும்படியாயிற்று. பார்வதியின் உடல் நலம் சரியாக இல்லை. டாக்டரைக் அழைத்துக் காட்டப் பண வசதியில்லை. ''எப்படியோ நடக்கட்டும், தெய்வம் விட்ட வழி''

என்று பட்டாபிராமன் அவளுடைய தேகஸ்திதியைக் கவனிக்காமல் இருந்தான். தாயாருக்கோ கர்ப்பிணி ஸ்திரீயைப் பற்றிக் கவலைப்பட அவகாசமில்லை. பேரனைச் செல்லமாகப் பார்த்துக் கொள்வதிலேயே அவள் கவனம் பூர்த்தியாகச் செலவழிந்தது.

இரண்டாம் தடவை பிரசவம் கஷ்டப்பட்டது. குழந்தை, பிறந்த மூன்றும்



நாள் இறந்து போய், தாயாரும் சுரம் கண்டு வேதனைப்பட்டாள். இருபது நாட்கள் மிகத் தவித்து இருபத்தோராவது இரவு உயிர் நீத்தாள்.

பட்டாபிராமனுடைய வாழ்க்கை சீரழிந்தது.

அண்ணன் சென்னை பட்டினம் வந்து தம்பியையும் தாயாரையும் சமாதானப்படுத்தி ஒரு மாதம் அங்கேயே இருந்து, தாயாரின் வற்புறுத்தலின்மேல் தம்பிக்கு மறு கலியாணம் செய்விப்பதைப் பற்றி யோசித்தான். தன் மனைவிக்கு ஒரு தங்கை கலியாணப் பருவம் தாண்டிச் சரியான இடம் கிடைக்காமலிருந்தது. அவளை ஏன் தம்பிக்கு ஏற்பாடு செய்யக்கூடாது என்று அவனும் அவன் மனைவியும் யோசித்து அப்படியே முடித்து விட்டார்கள்.

முதல் மனைவி இறந்து எட்டு மாதத்துக்குள் இரண்டாம் விவாகம் திருப்பதியில் சுருக்கமாக நடந்து விட்டது. பார்வதியின் குழந்தை கோபாலனுக்கு அப்போது மூன்று வயது.

சீதாலக்ஷ்மி மிகப் புத்திசாலி. தன் புருஷன் ஏற்கனவே ஒரு மனைவியுடன் வாழ்ந்தவன் என்பதையும் குழந்தைக்கு ஒரு மாற்றுந் தாயாகத் தான் வந்திருக்கிறாள் என்பதையும் எல்லாம் நன்றாக உணர்ந்து கொண்டு முதலிலிருந்து குடும்பத்தில் மிக ஜாக்கிரதையாக நடந்து கொண்டாள். புருஷனிடமும் மாமியிடமும் மிக வணக்கத்துடன், எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் மனம் புண்படாமல் வீட்டைக் கவனித்து வந்தாள். சீதாலக்ஷ்மி படித்தவள். படிப்போடு இயற்கை அறிவும் படைத்தவள்.

''உனக்கு நல்ல பெண்டாட்டி வந்திருக்கிறாள். நடந்து போனதைப் பற்றி விசனப்பட வேண்டாம். அநாதைக் குழந்தையை, பெற்ற தாயை விட நன்றாகப் பார்த்துக் கொள்ளுகிறாள். நீ பாக்கியசாலி'' என்றாள் தாயார்.

பட்டாபிராமனும் ''நீ சொல்வது சரியே, அம்மா!'' என்று ஒப்புக் கொண்டான்.

ஆனால் வீட்டுச் செலவுக்குச் சம்பளம் போதாமலிருப்பதை எண்ணி அவன் முகத்தில் நாளுக்கு நாள் கவலை வளர்ந்தது. தாயார் அது தன் முதல் மனைவியைப் பற்றிய வருத்தம் என்று எண்ணி ஒரு நாள் ஏதோ சமாதானப் பேச்சும் வேதாந்தமும் சொன்னாள்.

''அப்பனே! ஒருத்தியைப் போல் ஒருத்தி இருப்பாளா? அதற்கு ஆசைப் படலாமா? இருப்பதை வைத்துக் கொண்டு திருப்தி அடைய வேண்டும்'' என்றாள். பட்டாபிராமன், ''என்ன உளறுகிறாய்?'' என்று சொல்லி விட்டு எழுந்து வெளியே போனான்.

மாசிலாமணி முதலி, ஆபீசில் பட்டாபிராமனுக்கு மேல் வேலை செய்து வந்த குமாஸ்தா, திடீர் என்று மாரடைப்புக் கண்டு இறந்து விட்டார். மனைவியையும் தாயார்க் கிழவியையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தி விட்டு அவர் மறைந்து விட்டார். அவருக்கும் பட்டாபிராமனுக்கும் மிகுந்த நட்பு. இவனும் அந்தக் குடும்பத்தாரோடு துக்கம் பங்கிட்டுக் கொண்டான்.

விதியின் போக்கை என்ன சொல்வது? மாசிலாமணி முதலி இறந்து விட்டபடியால் அவர் வகித்து வந்த மேல் வகுப்புக் குமாஸ்தா வேலையைப் பட்டாபிராமனுக்குக் கொடுத்தார்கள். இந்தப் பிரமோஷனின் பயனாகப் பட்டாபிராமனுடைய சம்பளம் முப்பது ரூபாய் உயர்ந்ததோடு மேலும் வருஷந்தோறும் சம்பளம் உயர்வதற்கு வாய்ப்பும் ஏற்பட்டது. மாசிலாமணியின் மனைவியையும் தாயாரையும் திருநெல்வேலியிலிருந்து அவர் மைத்துனர் வந்து அழைத்துக் கொண்டு போய்விட்டார்.

''ஒருவர் துக்கம் மற்றொருவருக்கு லாபம் — இது என்ன உலகம்!'' என்று பட்டாபிராமன் தன் நண்பனைப் பற்றித் துக்கப்பட்டான். தன்னுடைய வீட்டுச் செலவைப் பற்றி இனிக் கவலையில்லை என்று உள்ளத்தில் பகவானுக்கு நன்றியும் செலுத்தினான்.

''என்ன, ஆண்பிள்ளைகளைப் போல் புஸ்தகம் படித்துக் கொண்டு சாய்ந்து படுத்துக் கொண்டிருக்கிறாய்? கோபாலன் 'பசி,பசி' என்று துள்ளுகிறான்'' என்றாள் பட்டாபிராமனுடைய தாயார்.

புஸ்தகத்தை எறிந்து விட்டு எழுந்து உட்கார்ந்தாள் சீதாலக்ஷ்மி. எழுந்து கோபாலனை அழைத்துக் கொண்டு, சமையலறைக்குள் போனாள். போகும் வழியில் பூஜையறை. அங்கே ஒரு சுவரில் ராமச்சந்திரனுடைய படம். அதற்குக் கீழ் பூஜை விளக்கு முதலிய சாமான்கள். எதிர்ச் சுவரில் ஒரு படம் மாட்டியிருந்தது. அது இறந்துபோன மனைவி பார்வதியின் ஒரு சிறு படம்.

அந்த வழியில் செல்லும்போது ''அது அம்மா படம்'' என்றான் கோபாலன். இது அவன் பாட்டி சொல்லித் தந்த பாடம்.

''ஆமாம்!'' என்று சொல்லிய வண்ணம் சீதாலக்ஷ்மி குழந்தையைச் சமையலறைக்கு அழைத்துச் சென்றாள்.

''நீதானே எனக்கு அம்மா?'' என்றான் கோபாலன் மறுபடியும்.

''ஆமாம், அதற்கு என்ன சந்தேகம்?'' என்றாள் சீதாலக்ஷ்மி.

''அந்த அம்மா யார்?'' என்று கோபாலன் விஷயத்தை விடாமல் கேட்டான்.

''அது என் அக்கா. உனக்குத் தெரியாதா? அவள் உன்னை என்னிடம் விட்டு விட்டுச் சாமியண்டை போய் விட்டாள்!''

''ஏன் போய்விட்டாள்?'' என்றான் கோபாலன்.

''சாமி அழைத்தார், போய்விட்டாள். அதைத் தடுக்க முடியாது'' என்று சொல்லி விட்டுச் சாப்பாட்டில் கவனம் செலுத்தச் செய்தாள்.

சீதாலக்ஷ்மி அப்போது நாலு மாதங்களாக மாதவிடாய் குளிக்கவில்லை. உள்ளத்தில் என்னென்னவோ வேலை செய்து கொண்டிருந்தது.

தன்மேல் புருஷனுக்குப் பிரியம் விட்டுப்போச்சு என்று ஒரு மாற்ற முடியாத பயம் மனத்தில் குடிகொண்டது.

தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துப் பூஜையறையில் இருந்த படத்தோடு மனத்தில் ஒத்துப் பார்ப்பாள். கவலையும் வேதனையும் தன் மனத்தைக் கோணல் படுத்தியிருப்பதைப் பார்ப்பாள். அதுதான் தன் லக்ஷணம் என்று எண்ணிப் படத்தில் பார்வதி சாந்தமாகவும் மிக அழகாகவும் இருப்பதைப் பார்த்துப் பொறுமை கொள்வாள். இறந்துபோன மனைவியைப் பட்டாபிராமன் மறக்கவில்லை. படத்தைப் பூஜையறையில் வைத்திருக்கிறான். தன் மேல் அவனுக்குப் பிரியமில்லை. தன்

னுடைய வாழ்க்கை இப்படியாயிற்றே என்று எண்ணி எண்ணி யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியாமல் வருத் தப்படுவாள்.

இந்த நிலையில்தான் வயிற்றில் குழந்தை தன்பாட்டுக்கு வளர்ந்தது. பருவம் பூர்த்தியாயிற்று.

''சிறு வயதில் குழந்தை பெற இருக் கிறாள். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள் பட்டு! பார்வதியைப் போல் ஆகக் கூடாது. அசிரத்தையாக இருக் காதே'' என்றாள் தாயார். சீதாலக்ஷ்மி யின் பிரசவம் நெருங்கும் காலம் அது.

பட்டாபிராமன் மனைவியின் பிரச வத்துக்கு ஆஸ்பத்திரியில் ஏற்பாடு செய்திருந்தான். ''ஒன்றும் பயப் படாதே. அபசகுனமாகப் பேசாதே. ஆஸ்பத்திரியில் சொல்லி வைத்திருக் கிறேன்'' என்றான் பட்டாபிராமன்.

அடுத்த எட்டாவது நாள்.

''உனக்கு ஒரு தங்கை பிறந்து விட்டாள்'' என்றாள் பாட்டி கோபால னைக் கட்டி முத்தமிட்டு.

''எனக்குக் காட்டு'' என்று கோபா லன் குதித்தான்.

''இன்னிக்கு முடியாது, இரண்டு நாள் போகட்டும், பார்ப்பாய்!'' என் றாள் பாட்டி. மூன்றாவது நாள் ஆஸ் பத்திரிக்குக் கோபாலனையும் அழைத்துச் சென்றார்கள்.

''நன்றாயிருக்கிறது. நான் முத்த மிடலாமா?'' என்றான் கோபாலன், சின்னஞ் சிறு குழந்தையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு.

குழந்தை மிக அழகாகத்தான் இருந் தது. தாயாரின் கவலையும் பொறாமை யும் அதைத் தீண்டவில்லை.

எட்டாவது நாள் சீதாலக்ஷ்மி ஆஸ் பத்திரியில் தன் முகத்தைக் கண்ணாடி யில் பார்த்துக் கொண்டாள்.

''நானும் அழகாகத்தானே இருக் கிறேன்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். உலகம் எல்லாமே முன்னை விட அழகாக மாறிவிட்டது.

சீதாலக்ஷ்மி வீட்டுக்கு வந்த அன்று பட்டாபிராமனை சூபரின்டென்டெண்ட் வேலைக்கு உயர்த்தி விட்டதாகத் தெரிய வந்தது. புதுக் குழந்தையின் பாக்கியம் என்று எண்ணினாள் பாட்டி. தன் பையனிடமும் அப்படியே சொன்னாள்.

''பாக்கியலக்ஷ்மியடா இவள். அதுவே அவளுக்குப் பெயர் வை'' என் றாள்.

''பெயர் அதுவே வைக்கலாம். எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் உத்தியோக உயர்வுக்கு நான் ஆபீசில் நன்றாக வேலை செய்தது காரணமே இல் லையோ?'' என்றான் பட்டாபிராமன் சிரித்துக் கொண்டு. சொல்லி விட்டு மனைவியையும் திரும்பிப் பார்த்தான்.

மாமியின் பேச்சைக் கேட்டு அவள் முகத்தில் பிரகாசித்த ஒளியைக் கண் டான். தாயார் சொன்னது உண்மை. குழந்தையின் பாக்கியமே தனக்கு வந்த பிரமோஷன் என்று அவனும் தீர்மானித் துக் கொண்டான்.

அடுத்த நாள் ஒரு புகைப்படம் எடுப் பவனைத் தருவித்துச் சீதாலக்ஷ்மியையும் குழந்தையையும் உட்கார வைத்துப் படம் எடுத்தான். தானும் தாயாரும் உட்கார்ந்து ஒரு படமும் எடுக்கச் செய் தான். இரண்டு படங்களும் வீட்டு ஆசாரத்தில் மாட்டப்பட்டன. பார் வதியின் படம் பூஜை அறையிலேயே இருந்தது. சீதாலக்ஷ்மி தினமும் பூவைக் கோத்து அந்தப் படத்தில் சூட்டி வணங் குவாள். அப்போது கோபாலனையும், ''அம்மாவுக்கு நமஸ்காரம் செய்'' என்று சொல்லி வணங்கச் செய்வாள்.

ஒரு நாள் தாயார் பார்வதியைப் பற்றியும், அவள் குணத்தைப் பற்றியும் பேச ஆரம்பித்தாள். சீதாலக்ஷ்மி அதைக் கேட்டு ஆனந்தம் அடைந்தாள். முன் அவளை வருத்திய பயமும் பொறாமையும் இப்போது எங்கேயோ போய் விட்டன. அவள் மடியில் இரண்டு குழந்தைகளை யும் அணைத்து வைத்துக் கொண்டிருந் தாள்.

பட்டாபிராமன், ''அம்மா, இறந்து போனவளை ஸ்தோத்திரம் செய்யாதே. இருக்கிறவள் பொறாமைப்படுவாள். ராமன் காட்டுக்குப் போகும் போது சீதை அயோத்தியிலேயே இருக்க வேண் டியது என்று முதலில் எண்ணி அவ ளுக்கு உபதேசம் செய்தது உனக்குத் தெரியாதா?'' என்றான்.

''என்ன உபதேசம்?'' என்று கேட் டாள் சீதாலக்ஷ்மி.

''காட்டுக்குப் போன என்னைப் பாராட்டி பரதன் எதிரில் நீ ஸ்தோத் திரம் செய்யாதே. நல்ல சம்பத்து அடைந்தவர்கள் பிறருடைய ஸ்தோத் திரத்தைக் கேட்கப் பிரியப்பட மாட் டார்கள் என்று ராமன் சீதைக்குப் புத்தி மதி சொன்னான். இதை வால்மீகி எழுதி யிருக்கிறார்'' என்றான் பட்டாபிராமன்.

''பரதனைப் பற்றி ராமச்சந்திரன் சொன்னது எவ்வளவு தவறோ அப்படித் தான் என்னைப் பற்றி நீங்கள் மாமியிடம் சொல்வதும்'' என்றாள் சீதாலக்ஷ்மி சிரித்து.

''இவளும் நல்லவள். அவளும் நல்லவள். அதைப் பற்றிப் பொறாமை என்ன?'' என்றாள் கிழவி.

''என்ன இருந்தாலும் ஜாக்கிரதை யாக இருப்பது நல்லது'' என்றான் பட் டாபிராமன். நன்றி: **நண்பன்**

கல்வெட்டில் காமகோடி

श्रीमत्काञ्चीनगर्यां जगदखिलगुरुः शङ्कराचार्य आर्यः
पीठं सर्वज्ञमेत्य स्वमठमरचयत् लोककल्याणहेतोः ।
तत्राविच्छिन्नपारम्परगुरुचरणाऽऽराधकाचार्यवर्याः
राजन्ते कामकोटीप्रथितमनुपमं पीठमध्यासमानाः ॥ [स्वकृतम् ।]


திருவளரும் காஞ்சிமாநகரில் அகில புவனங்களுக்கும் குருவான ஆதி சங்கரர் சர்வக்ஞ பீடமேறி உலகங்களின் நலனுக்கென்று தமக்காக ஒரு மடம் ஸ்தாபித்துக் கொண்டார். அம்மடத்தில், காமகோடி என்ற பெயரில் ஒப்புவமையற்ற கியாதியுடன் திகழும் பீடத்தில் குரு பரம்பரை யொன்று முறிவுபடாமல் விளங்கி வருகிறது; அந்தக் குரவர்கள் லோக க்ஷேமத்துக்காகத் தத்தம் முந்தைய ஆசாரியர்களின் சரணங்களை எல்லாம் ஆராதித்து வருகிறார்கள்.

1961-ம் வருஷத்திய 'கல்கி' தீபாவளி மலரில் 'காலத்தை வென்ற காமகோடி' என்று ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதில் காமகோடி பீடத்தைக்குறித்த ஒரு பண்டைய செப்பேட்டின் காலத்தை நிர்ணயம் செய்திருந்தேன். காஞ்சீபுரத்துக்கு அருகிலுள்ள அம்பி என்ற கிராமத்தை விஜயகண்ட கோபாலன் என்ற மன்னன் காமகோடி பீடத்துக்கு வழங்கியதைப் பற்றிய தாமிர சாஸனம் அது. இவ்வாறு தானம் வழங்கிய தினம் கி. பி. 1111ம் ஆண்டு ஜூலை மாதம் 17ந் தேதி என்று தீர்மானமாக நிச்சயம் செய்து அக்கட்டுரையில் விளக்கியிருந்தேன். இந்த அம்பி கிராமத்தில் இன்றும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்துக்குச் சொந்தமாக நிலம் இருக்கிறது.

சமீபத்தில் காஞ்சீபுரத்தின் சுற்றுப்புறங்களில் பயணம் செய்யும் போது இந்த அம்பி கிராமத்துக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இன்று இந்தக் கிராமத்தைக் 'கீழம்பி' என்கிறார்கள். இந்தக் கிராமக் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களை ஆராய்ந்ததில் சிலசுவையான விவரங்கள் தெரியவந்தன. இந்த ஊரில் கல்வெட்டுக்கள் இருப்பதாகவும், அவை நான் அம்பி கிராமதானம்பற்றி முன்பு எழுதியதற்கு மேல் சில உண்மைகளைச் சொல்லக்கூடும் என்றும் கூறி இப்பணியில் என்னை ஈடுபடுத்தியவர் சகலகலாவல்லபரான நமது காமகோடி பீடாதிபதிகள்தாம். அவர்களின் மங்கள வாக்கு பலிதமாகாது போகுமா?

தொல் பொருள் இலாகாவின் தெற்கு வட்ட அதிகாரி டாக்டர் ஆர். சுப்பிரமணியம் அவர்களுக்கும் டி. என். ராமச்சந்திரன் அவர்களுக்கும் இந்தக் கல்வெட்டு ஆராய்ச்சி விஷயத்தில் நான் கடமைப்பட்டிருக்கிறேன். இத்துறையில் தேர்ந்த ஞானமுடைய அவ்விருவரும் இந்த ஆராய்ச்சி முடிவுகளை முற்றிலும் ஒப்புக் கொள்வது அவற்றைச் சந்தேகத்துக்கிடமின்றி நிச்சயப்படுத்துகிறது.

அம்பி கிராமத்தில் உள்ள அம்பிகாபதி ஆலயத்தின் வடக்குப் பிராகாரத்தில்தான் இங்கு ஆராயப்படும் கல்வெட்டு உள்ளது. மூன்று வெகு நீண்ட வரிகளும், அவற்றில் மூன்றில் ஒரு பங்கு நீளமுள்ள நாலாம் வரியும் கொண்டது இக்கல்வெட்டு. இந்தக் கல்வெட்டின் புகைப்படத்தைத்தான் அடியில் காண்கிறீர்கள். 'கல்கி'யின் இரண்டு பக்கங்களின் நீளமும் சேர்ந்து கல்வெட்டின் ஒரு வரியாகும். கல்வெட்டின் இந்த முழு வரிகள் ஒவ்வொன்றும் பன்னிரண்டடி நீளமானவை.



என்.ராமேசன்

இந்தக் கல்வெட்டில் காணப்படும் லிபி மத்திம காலத்தை (medieval age)ச் சேர்ந்த கிரந்த எழுத்தாகும். கல்வெட்டின் மொழி தமிழே. கல்வெட்டின் வாசகம், அதிலுள்ள வரிசைப்படியே இதுதான்:

முதல் வரி: ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹாமண்டலேசுவர ஸ்ரீ வீர பிறதாப கிஷ்ண்ய தேவர மஹாராயர் ப்ருத்வீ ராஜ்யம் பண்ணி அருளா நின்ற சகாப்தம் ௲௪௱௩௰௬

இரண்டாம் வரி: ௬ மேல் செல்லா நின்ற பாவஸம்வத்ஸரத்து ஆடி மாதம் ௰௩ தியதி.

மூன்றும் வரி: நம்முடைய மடப்பிறம் அம்பி, அம்பிகாவனமுடைய தம்பிரானர் பூசை திருப்பணி மார்கழித் திருனளுக்கு கிஷ்ணராயர் தன்மமாக சந்திராதித்து வரையும் தர்ம தூளி நடக்க

நாலாம் வரி: கடவதாகவும் இவை சந்திற சேகர சரசுவதி எழுத்து.

எங்கே, இப்போது இந்த வாசகத்தை வைத்துக் கொண்டு புகைப்படத்தில் எவ்வளவு புரிகிறது என்று பாருங்களேன்!

இந்தக் கல்வெட்டில் காணப்படும் கிரந்த எழுத்து 14 அல்லது 15ம் நூற்றுண்டைச் சேர்ந்தது என்பது தெளிவு. திருப்பதி திருமலைக் கல்வெட்டுகளில் முதல் தொகுப்பில் காணப்படும் லிபியைப் போன்றே காணப்படுகிறது இது. இதனைக் கொண்டும், இதில் காணப்படும் இலக்கங்களைக் கொண்டும் இந்தக் கல்வெட்டு 15 அல்லது 16ம் நூற்றுண்டைச் சேர்ந்தது என அனுமானிக்கலாம்.


௲ ௪௱ ௩௰ ௬ என்று கல்வெட்டில் கண்டிருப்பது சக வருஷம் 1436—ஐக் குறிக்கும் இலக்கமாகும். அப்போது வீரப் பிரதாப கிருஷ்ண தேவராயர் உலகை யெல்லாம் ஆண்டதாக (ப்ருத்வீ ராஜ்யம் பண்ணி) உயர்த்திக் கூறுகிறது சாஸனம். பிரபவாதி ஷஷ்டி சம்வத்ஸரத்தில் பாவ வருஷத்தில், ஆடி மாதம், 13ந் தேதி (௰௩ தியதி)—கிருஷ்ண தேவராயர் பெயரில் ஒரு கொடை வழங்கியதாகச் சொல்கிறது அது. என்ன பொருள் வழங்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை. அது எதுவாயினும் 'நம்முடைய மடப்புறத்து' கிராமமாகிய அம்பியிலுள்ள ஆண்டவனின் மார்கழி மாத விழாவுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக வழங்கப்பட்டிருக்கிறது. 'நம்முடைய மடப்பிறம் அம்பி, அம்பிகாவனமுடைய தம்பிரானர் பூஜை திருப்பணி மார்கழித் திருநாளுக்கு' என்று கல்வெட்டின் மூன்றும் வரியில் கண்டிருக்கிறதல்லவா? இந்தத் தர்மம் சூரியனும் சந்திரனும் உள்ளவரை பயன்தர வேண்டும் — 'சந்திராதித்து வரையும்' என்று விரும்பப்பட்டிருக்கிறது. இவ்விவரங்களைக் கூறும் கல்வெட்டு, இது அவ்வளவும் சந்திர சேகர சரஸ்வதியின் எழுத்து என முடிகிறது.

கல்வெட்டில் கண்டுள்ள எண்கள் சக ஆண்டு 1436 என்று சொன்னேன். இவ்வாறு நிர்ணயிப்பதற்குச் சிறிது விளக்கம் தேவை. தமிழ்நாட்டு சாஸனங்களில் கி. பி. எட்டாம் நூற்றுண்டுக்குப் பின்தான் எண் குறிகள் காணப்படுகின்றன. தமிழ் மொழியிலுள்ள மத்திம கால சிலா சாஸனங்களில் காணப்படும் இலக்க முறையில் ஒரு தனித் தன்மை உண்டு.

இங்குள்ள இலக்கங்கள் நாட்டின் இதர பகுதிகளில் காணப்படுவனவற்றிலிருந்து இரு விதங்களில் மாறுபட்டவை.

வடஇந்தியாவிலும் மற்றப் பிரதேசங்களில் உள்ள கல்வெட்டுகளில் இருபதிலிருந்து, தொண்ணூறு வரையிலும் உள்ள ஒவ்வொரு பத்துக்கும் தனி இலக்கம் உண்டு. ஆனல் தமிழ் நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்தானங்களை உடைய எண்களுக்குள், பத்து, நூறு ஆயிரம் ஆகியவற்றுக்கு மட்டுமே தனிக் குறிகள் உண்டு. 10, 100, 1000 என்ற எண்களை முறையே ௰, ௱, ௲ என்ற குறிகளால் எழுதி வந்தார்கள். உதாரணமாக 20, 200, 2000 ஆகிய எண்களைக் குறிக்க, முதலில் உ என்ற எண்ணை எழுதி, பிறகு முறையே அதன் வலப்புறத்தில், 10, 100, 1000 என்றவைகளைக் குறிக்கும் எண்களையும் எழுதி வந்தார்கள். இந்த முறைப்படி, 20, 200, 2000 முதலிய எண்களைக் குறிக்க, உ௰, உ௱, உ௲ என்றே எழுதி வந்தார்கள்.

கி. பி. 600க்குப்பிறகு காணப்படும், வட நாட்டுச் சாஸனங்களின் எண்கள் நாம் இப்போது எழுதுவது போலத் தசாம்சமானத்தாலேயே எழுதப்பட்டுள்ளன. இம்முறையில்



பூஜ்யத்தை ஒரு புள்ளியாகக் குறிப்பிட்டனர். இதுவே பிற்காலத்தில் வட்ட வடிவமாக மாறியது. ஆனால் தமிழ் நாட்டில் இம்முறை வழங்கவில்லை. வேறொரு விசித்திரமான முறை கடைப் பிடிக்கப்பட்டது. இதன்படி 2495 என்ற எண்ணை, 2000 + 400 + 90 + 5 என்றே எழுதி வந்தார்கள். அந்த நாளில் '+' குறியும் கிடையாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, 2000த்தை, உது என்ற குறியாலும், 400ஐ சா என்ற குறியாலும், 90-ஐ,' கூம் என்ற குறியாலும் எழுதி, 2495 என்ற எண்ணை ''உதுசாகூம்டு'' என்றே எழுதி வந்தார்கள்.

இம்முறைப்படி நாம் இங்கே குறிப்பிட்டுள்ள கல்வெட்டில் காணப்படும் துசாகூம்கூ என்ற இலக்கத்தைப் புரிந்து கொள்வோம். து என்பது ஆயிரம்; ச என்பது நாலு, ா என்பது நூறு — எனவே சா என்பது 400; ௩ என்றால் மூன்று, ம் பத்தைக் குறிக்கும். ஆகவே, ௩ம் என்பது முப்பது; கூ என்றால் ஆறு. ஆனபடியால் சாஸனம் குறிக்கும் ஆண்டு 1000 + 400 + 30 + 6 - அதாவது 1436. 'சகாப்தம்' என்றும் கல்வெட்டில் காண்பதால் இது சக வருஷக் கணக்கில் 1436ம் ஆண்டு என்பது தெளிவு. அதாவது இது கி.பி. 1514ம் ஆண்டு ஆகும். 'பாவ' வருஷம் என்று இதில் கூறியிருப்பது 'இப்போது நாம் பிரபவ, விபவ என்று வரிசைப் படுத்திக் கூறும் அறுபதாண்டுகளில் வரும்' 'பவ' வருஷமாகும். 'பாவ' என்பதுதான் சரியானது; ஆனால் நடைமுறையில் நாம் சொல்லும்போது 'பவ' என்று வழங்கி வருகிறது. இதே ஆண்டில் திருப்பதியில் கிருஷ்ண தேவ ராயர் பொறிக்கச் செய்த சாஸனங்களிலும் 'பாவ சம்வத்ஸரம்' என்றேதான் காண்கிறது.

நாம் முன்பு கண்டு பிடித்த கி.பி. 1514ம் ஆண்டு பவ வருஷமாகவே அமைந்திருக்கிறது. ஆடி பதின்மூன்றும் தேதி என்று கல்வெட்டில் காண்பது ஆங்கிலத்தில் ஜுலை 11ந் தேதியாகும். அன்று ஒரு வியாழக் கிழமை என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் தெரியும். 1514ம் ஆண்டு என்பது சாஸனத்தில் காண்பது போல விஜயநகரத்தின் ஈடிணையற்ற வேந்தர் கிருஷ்ணதேவராயரின் ஆட்சிக் காலத்தில் அடங்கியதேயாகும். அவர் பெயரில்தான் தானம் வழங்கியிருக்கிறது. என்ன பொருளை என்பது குறிப்பிட வில்லை என்பது முன்பே சொன்னேன். என்றாலும் தானப் பொருளைப் பற்றி நாம் ஓர் ஊகம் செய்ய முடியும். கச்சியம்பதியிலுள்ள ஏகம்பனின் ஆலயத்தில் கிருஷ்ண தேவராயரின் கல்வெட்டொன்று உள்ளது. (இது இன்னும் பிரசுரமாகவில்லை). இக்கல்வெட்டில், அவர் காஞ்சியைச் சுற்றியுள்ள பல கிராமங்களிலுள்ள தெய்வங்களுக்குப் பொற்காசுகள் அர்ப்பித்ததாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தக் கிராமங்களில் அம்பியின் பெயரும் காணப்படுகிறது. எனவே இங்கு நாம் ஆராயும் கல்வெட்டு அம்பி கோயிலுக்குக் கிருஷ்ண தேவர் பொற் காசுகளை வழங்கியதனையே குறிக்கிறது என்று அனுமானிக்கலாம்.

'காலத்தை வென்ற காமகோடி' என்ற கட்டுரையில் கிருஷ்ணதேவராயர் அடுத்தடுத்துக் காமகோடி பீடத்தை அலங்கரித்த இரு ஆசாரியர்களுக்கு இரு கிராமங்களை வழங்கியதாகக் கண்டிருப்பதை இங்கு நினைவுக்குக் கொண்டு வரலாம். அம்பி கிராமம் 1111ம் ஆண்டு விஜயகண்ட கோபாலன் காமகோடி பீடத்துக்குச் சாஸனம் செய்ததிலிருந்து ஸ்ரீமடத்தின் மானியமாக இருந்து வந்திருக்கிறது. எனவே அப்போது பீடத்திலிருந்த சுவாமிகளின் ஒப்புதலையும் பெற்றே அந்தக் கிராமத்திலுள்ள கோயிலுக்கு அரசன் தானம் வழங்கியிருக்க வேண்டும். இந்தப் பொற்காசுகளைக் கொண்டு அக்கோயிலில் எழுந்தருளியிருந்த ஆண்டவனுக்கு மார்கழி மாதத்தில் விழா நடத்த வேண்டும் என்று அன்றைய காமகோடி பீடாதிபதிகள் ஏற்பாடு செய்திருக்கக் கூடும். இன்று, மார்கழி மாதப் பாவை நோன்புக்கு நமது பெரியவர்கள் புத்துயிர் அளித்திருப்பதை மனத்தில்கொண்டு பார்த்தால் இந்த ஊகம் சரியாகவேயிருக்கக் கூடும்.

கல்வெட்டை எழுதுவித்தது 'சந்திர சேகர சரசுவதி' என்று அதில் பொறித்துள்ளது. இந்தத் திருநாமம் காமகோடி பீடாதிபர்களில் பலரால் தரிக்கப்பட்டது என்பதைக் 'கல்கி' வாசகர்களுக்குச் சொல்லத் தேவையில்லை. கிருஷ்ணதேவராயர் பொடவூர், காட்டுப்பட்டு ஆகிய கிராமங்களை 'சந்திரசூடர்' என்ற காமகோடி பீடத்து ஆசாரியருக்கு அளித்ததாகச் சாஸனங்கள் உள்ளன. பிற்பாடு உதயம்பாக்கம் என்ற கிராமத்தை அடுத்த காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சதாசிவ சரஸ்வதி சுவாமிகளுக்குக் கிருஷ்ண தேவராயர் மானியமளித்ததைத் தெரிவிக்கும் சாஸனம், அந்த ஆசாரியரை 'சந்திர சேகர சரஸ்வதி'யின் சிஷ்யர் எனக் கூறுகிறது. 'சந்திர சூடர்' 'சந்திரசேகரர்' என்பன ஒரே பொருள் கொண்ட பதங்கள்தாம். காமகோடி பீடத்தின் குரு பரம்பரைப்படி கி. பி. 1507 லிருந்து 1524 வரையில் பீடத்தின் ஐம்பத்தைந்தாவது அதிபதிகளாக ஸ்ரீ சந்திர சூட ஸ்வாமிகள் விளங்கியிருக்கிறார்கள் எனத் தெரிய வருகிறது. இந்த முந்தைய ஆதாரங்கள் யாவும் அம்பிக் கல்வெட்டால் உறுதிப் படுத்தப் பெறுகின்றன.

இந்த 55வது பீடாதிபதிகளான ஸ்ரீசந்திர சேகர சரஸ்வதி சுவாமிகள்தாம் 1514-ல் அம்பிக் கோயில் கல்வெட்டை எழுதி வைத்தவர். அவர்கள் இந்தக் கிராமத்துக்கு 'நம்முடைய மடப்பிறம்' என்று அடை மொழி கொடுத்திருக்கிறார்கள். 'மடப்புறம்' என்பது தான் கல்வெட்டு மொழிக்கே உரிய கொச்சையில் 'மடப் பிறம்' ஆகியிருக்கிறது. 'மடப் புறம்' என்றால் என்ன?

பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலுள்ள தமிழகக் கல்வெட்டுக்களிலிருந்து நில உரிமை பற்றிப் பல உண்மைகள் தெரிய வருகின்றன.

தனிமனிதர்களைப்போலவே ஒரு சமுதாயத்தினரும் கூட்டாக நிலச் சொந்தக்காரராயிருந்திருக்கின்றனர். தனிமனிதர்களைப் போலவே கோயில் நிலங்களையும் குறிப்பிட்ட ஒரு மேல்வாரமளிக்கும் குத்தகைக்காரர் பயிர் செய்யும் வழக்கம் இருந்திருக்கிறது. நில உரிமை

யில் பல ரகங்கள் இருந்திருக்கின்றன. கீழ்க்கண்டவை பற்றிப் பல கல்வெட்டுக்களில் குறிப்புக்கள் உள்ளன.*

படைப்பற்று: குறிப்பிட்ட அளவு வீரர்களைச் சேவைக்குத் தயாராக வைத்திருப்பதற்காகக் குறுநிலத் தலைவர்களுக்கு அளிக்கப்படும் நில மானியம்.

உதிரப்பட்டி: யுத்தத்தில் உயிர் துறப்போரை அண்டி வாழ்ந்தோருக்காக அளிக்கப்படுவது.

குளப்பட்டி அல்லது **ஏரிப்பட்டி** அல்லது **ஊரணிப்புறம்:** ஏரி, குளங்களைப் பரிபாலித்து வருவதற்காக வழங்கப்பட்ட நில மானியம்.

போக, ஜீவிதப் பற்று: கோயிலுக்கோ, கிராமத்துக்கோ செய்யும் குறிப்பானதொரு சேவைக்காக வழங்கப்படும் மானியம்.

இது தவிர, கீழ்க்கண்ட தானமாக வழங்கப்பட்ட நில பாத்தியதைகள்:

அரசனோ பிரபுக்கள் சபையோ ஆலயங்களுக்கு அளிக்கும் **தேவதானம்.**

அந்தணர்களுக்கு வழங்கப்படும் **பிரம்மதேயம்.**

உற்சவாதிகளுக்காக அளிக்கப்படும் **திருவிழாப்புறம்.**

சமணப் பள்ளிகளுக்கும் அவர்களது இதர நிறுவனங்களுக்கும் தரப்பட்ட **பள்ளிச்சந்தம்.**

உணவு விடுதிக்கு அளிக்கப்பட்ட **சாலபோகம்.**

மடங்களுக்கும் சந்நியாசி சங்கங்களுக்கும் வழங்கப்பட்ட **மடப்புறம்.**

நிலப் பிரபுத்துவ முறைப்படி ஆட்சி நடைபெற்றபோது நில உரிமை எப்படி இருந்தது என்பதைக்கல்வெட்டுக்களைக் கொண்டு ஆராயும்போது ஐயம் திரிபறச் சில பிரத்தியேகச் சொற்றொடர்களின் பொருள் புரிகிறது. அவற்றில் மடப்புறம் என்பது பொதுவாக ஏதேனும் ஒரு மடத்துக்கோ சந்நியாசி சங்கத்திற்கோ வழங்கப்பட்ட கிராமத்தைக் குறிக்கும் சொற்றொடராகும்.

இந்தப் பொருளில் மடப்புறம் என்ற பதம் காணப்படும் வேறு மத்திம காலக் கல்வெட்டுக்களும் உண்டு. அவற்றில் நாலை மாத்திரம் இங்கே குறிப்பிடுகிறேன். ‡குலோத்துங்க சோழன் ஆட்சிக்கு வந்த பதினெட்டாம் ஆண்டில் பொறிக்கப்பட்ட ஒரு சாசனம் திருமயம் வட்டத்தில் உள்ள பொன்னமராவதியில் சோளீஸ்வரர் கோயில் தெற்குப் பிராகாரத்தில் உள்ளது. ''நிஷ்ய ராஜனைன்



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் முப்பதாண்டுகளுக்கு முன்பு சென்னை மாநகருக்கு எழுந்தருளியபோது செம்மாசனாதிபதிகளாக ஞான ஆட்சி செலுத்தும் திருக்கோலத்தில் எடுத்த படம்.

*இவை முறையே Annual Reports on Epigraphy-ன் *194(1926), 556(1919); 47(1929); 27(1893), 252(1921); 556 (1919); 205(1919); 319(1913); 572 (1907); 197(1919), 389 (1922); 466 (1912);* S. I. I. (ii)*5; 155(1925), 36(1888)* அறிக்கைகளில்காணப்படுகின்றன.

‡ இந் நாலு கல்வெட்டு பற்றிய விவரங்கள் Annual Reports on Epigraphy-ன் *5(1909), 155 (1925), 36(1888), 382(1921)* அறிக்கைகளில்காணப்படுகின்றன

இராசேந்த சோளீசரமுடைய நாயனார் திருமடை விளாகத்தில் நிலைமை அழகியார்திரு மடத்துக்கு மடப்புறமாகக் குடுத்த குடிக் காடு'' என்பது அதன் வாசகம். நிஷாத ராஜன் என்ற மன்னன் ''நிலைமை அழகிய திரு மடம்'' என்ற பெயருள்ள மடத்துக்கு மடப்புறமாக மானியம் வழங்கியதை இது குறிக்கிறது.

தஞ்சை மாவட்டத் திருவாவடுதுறையில் ''ப்ரமாண வாசகன் மடத்துக்கு'' வரும் அடியார்களுக்கு உணவளிப்பதற்காக விராடராஜன் என்பவன் மடப்புற நிவந்தம் ஏற்படுத்தியது பற்றிக் கல்வெட்டு உள்ளது.

காஞ்சியிலேயே ஒரு சிலாசாஸனம் உள்ளது. அதன்படி கணிகை ஒருத்தி மகா சபைக்கு ஐந்து காசுகள் அளித்திருக்கிறாள். பத்து நாள் உற்சவத்தில் உதவி புரிந்தவர்களுக்கும் மடமொன்றைச் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் உணவு படைப்பதற்காக அவள் இந்தக் கொடை வழங்கி யிருக்கிறாள். மகா சபை இதற்குப் பதிலாக சபைப்போடு என்ற தரிசு நிலத்தை 'மடப்புறமாக' அளித்திருக்கிறது.

திருநாவுக்கரசு தேவ மடத்துக்கென அரும்பாக்கிழானுக்குச் சொந்தமான 48000 குழி புஞ்சை நிலத்தை அதிராஜமாங்கல்யபுரத்துக்கு நகரத்தார் 'மடப்புறம்' செய்திருக்கிறார்கள்.

இவற்றிலிருந்து மடப்புறம் என்பது மடத்துக்களிக்கப்பட்ட கிராம மான்யத்தைக் குறிக்கும் பதம் என்பது உறுதியாகிறது. எனவே 1514ம் ஆண்டில் காமகோடி பீடாதிபதிகளாக இருந்த ஆசாரியர் 'நம்முடைய மடப்புறம்' என்று குறிப்பிடும் அம்பி கிராமம் ஸ்ரீ காமகோடி பீடத்துக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது உறுதி. இதற்கு முன்பே நீண்ட நாட்களாக அது இப் பீடத்துச் சொத்தா யிருந்திராவிடில் 'நம்முடைய மடப்புறம்' என்று ஆசாரியரின் பெயரிலுள்ள கல் வெட்டு குறிப்பிட்டிராது. 1961 கல்கி தீபாவளி மலர் கட்டுரையில் அம்பி கிராமத்தை 1111ல் விஜயகண்ட கோபாலன் காமகோடி பீடத்துக்கு அளித்ததாகச் சான்றுகளுடன் விளக்கி யிருந்தேன். அவ்வாறு மடத்துக்கு மானியமானதால் தான் அம்பி 'மடப்புற'மாகி யிருக்கிறது. அன்றிலிருந்து 1514 வரையிலும் மடத்துக்கே சொந்தமா யிருந்தபடியால்தான் இக் கல்வெட்டிலும் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது நானூறு ஆண்டுகளுக்கு மேலாக அம்பி கிராமம் காமகோடி பீடத்தின் சொத்தாக இருந்திருக்கிறது. தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மடத்துக்கு மானியமானதிலிருந்து இன்று வரையுள்ள கால இடைவெளியின் மத்தியைக் குறிக்கும் இக் கல்வெட்டு மடத்தின் பண்டைச் சரித்திரத்தை இன்றுடன் இணைக்கும் சங்கிலித் தொடரில் ஒரு முக்கியமான பிணைப்பாகும். இன்றும் அம்பி கிராமத்தில் கணிசமான நிலம் ஸ்ரீமடத்துக்குச் சொந்தமாக இருந்து, அதன் மாபெரும் ஆன்மீகப் பணிக்கு உபயோகமாகி வருவது அந்தக் கிராமத்தின் பாக்கியமாகும்.

சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பத்தாவது மகாநாட்டை டிசம்பர் 30 ந் தேதி ராஜாஜி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். பல எழுத்தாளர்களும், கலைஞர்களும் கலந்துகொண்ட இவ்விழாவுக்குத் திரு அன்பு கணபதி தலைமை வகித்தார். 'தமிழில் புதிய முயற்சிகள்' என்ற கருத்தரங்கிலும், 'எல்லைப்போர்' என்னும் கவியரங்கத்திலும் பல எழுத்தாளர்களும், கவிஞர்களும் பங்குபற்றினர். இந்த எழுத்தாளர் மகாநாட்டிலே தமிழுக்குத் தொண்டாற்றிய கவிஞர் பாரதிதாசனுருக்கும், திரு மே. வீ. வேணுகோபாலப் பிள்ளைக்கும் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் கேடயங்கள் வழங்கினார். தமிழுக்கும் ஹிந்திக்கும் இலக்கியப் பாலமாக அருந்தொண்டாற்றி வரும் கல்கி உதவி ஆசிரியர் திரு ரா. வீழிநாதன் அவர்களுக்கும், தமிழுக்கும் மலையாளத்துக்கும் சேவை செய்துள்ள டாக்டர் எஸ். கே. நாயர் அவர்களுக்கும் கருமுத்து. தி. சுந்தரம் செட்டியார் அவர்கள் பதக்கங்கள் அளித்துக் கௌரவித்தார்.



ஆய்ச்சியர் குரவை

சிலப்பதிகாரக் காப்பியத்தின் அழகுகளில் ஒன்றாக இடையிடையே அக்காப்பியத்தில் வரும் வரிப் பாடல்களைச் சொல்லலாம்.

ஆய்ச்சியர் குரவை மதுரைக் காண்டத்தில் மனத்தை உருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் வருவதாகப் பாடப்பட்டுள்ளது. குரவை என்பது கூத்து வகைகளில் ஒன்று. பெண்கள் எழுவரேனும், ஒன்பதின்மரேனும் இறைவன் பெருமையைச் சொல்லிக்கொண்டே கைகோத்தாடுவது.

கோவலனும், கண்ணகியும் மதுரை ஆயர்பாடியில் மாதரிக்கு அடைக்கலமாகித் தங்கியிருக்கும்போது சிலம்பை விற்றுவரக் கோவலன் நகருக்குள் சென்று வெகு நேரமாகியும் திரும்பவில்லை. ஆயர்பாடியிலோ தயிர்த் தாழிகளில் பிரையிட்ட பால் தோயவில்லை. அழகிய திமிலையுடைய எருதுகளின் கண்களில் நீர் வடிந்தது. வெண்ணெய் உருகவில்லை. இளங்கன்றுகள் துள்ளி விளையாடாமல் சோர்ந்து கிடந்தன. பசுக்களின் உடம்புகள் நடுங்கின; கழுத்தில் கட்டப்பெற்றிருந்த மணிகள் பல அறுந்து விழுந்தன.

இந்தத் தீய நிமித்தங்களைப் பார்த்து, ''விரைவில் ஏதோ உற்பாதம் வரப் போகிறது; அதைத் தவிர்க்க இறைவனை வணங்கிக் குரவைக் கூத்தாடுவோம்'' என்று மாதரி குரவைக் கூத்துக்கு ஏற்பாடு செய்தாள். அங்கே தங்கியிருந்த கண்ணகி காணும்படி இக்கூத்து ஆடப்பட்டது

உரைப் பாட்டு மடை, எடுத்துக்காட்டு, கூத்துள்படுதல், பாட்டு ஒன்றன் பகுதி, ஆடுநர்ப் புகழ்தல், உள்வரி வாழ்த்து, முன்னிலைப் பரவல், படர்க்கைப் பரவல் என்ற பிரிவுகளையுடைய ஆய்ச்சியர் குரவையில் கடைசி இரண்டு பிரிவுகளாகிய முன்னிலைப் பரவல், படர்க்கைப் பரவல், இரண்டு பகுதிகளிலும் சில காட்சிகளை ஓவியர் வினு இலக்கிய நயம் நிறைந்த அழகிய சித்திர மடலாக வழங்கியிருக்கிறார். வாழ்வில் உற்பாதம் வரும்போதெல்லாம் இந்தப் பாடல்களைப் பாடி வெல்ல முடியும் என்பது சிலப்பதிகாரத்திலிருந்து தெரியவரும் உண்மை. இவ்வுண்மையைப் பொங்கல் நாளில் நினைவுகூரும்முகமாக ஆய்ச்சியர் குரவையின் இவ்வழகிய பாடல்களை நேயர்களுக்கு வழங்குகிறோம்.

வடவரையை மத்தாக்கி, வாசுகியை நாணாக்கி,
கடல்வண்ணன் ! பண்டொரு நாள் கடல்வயிறு
கலக்கினையே ;
கலக்கிய கை யசோதையார் கடைகயிற்றால் கட்டுண் கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே.

அறுபொருள் இவனென்றே அமரர்கணம் தொழுதேத்த
உறுபசி ஒன்றின்றியே உலகு அடைய உண்டனையே
உண்டவாய் களவினால் உறிவெண்ணெய் உண்டவாய்
வண் துழாய் மாலையாய்! மாயமோ மருட்கைத்தே!

திரண்டமரர் தொழுதேத்தும் திருமால்! நின்செங்கமல
இரண்டடியால் மூவுலகும் இருள் தீர நடந்தனையே
நடந்த அடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்த அடி
மடங்கலாய்! மாறட்டாய்! மாயமோ மருட்கைத்தே!

மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகை முடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்இலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே ?
திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே ?

பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே !
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே!

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை, நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தாரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே !
'நாராயணா' என்னா நாவென்ன நாவே !









பொங்கல் பலவிதம்



ஆம், சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், ரவா பொங்கல் என்று பொங்கலில் பலவிதங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அந்தச் சர்க்கரைப் பொங்கல் ஒன்றிலேயே, உண்மையில் சர்க்கரை சேராத நம் வீட்டு வெல்லப் பொங்கல், 'ஷக்கர் பாத்' அக்கார அடிசில் என்று பல தினுசுகள் இருக்கின்றன.

ஆனல் இங்கே சொல்ல வந்தது இந்தப் பொங்கலே அல்ல. பொங்கல் பண்டிகையிலும் பல விதங்கள் இருக்கின்றன. உலக நாடுகளில் எல்லாம் பொங்கல் பண்டிகை பலவிதங்களில் கொண்டாடப்படுகின்றன. அவற்றில் சிலவற்றையே இங்கு அறியப் புறப்படுகிறேம். தமிழ் நாட்டுப் பொங்கலில் உள்ளடங்கியுள்ள சில விஷயங்களையும் தெரிந்து கொள்ளுகிறேம்.

ஃ ஃ ஃ


தன தானிய வளம் பொங்குவதை முன்னிட்டு, இந்த வளமைப் 'பொங்கலுக்கு'க் காரணமான ஆண்டவனுக்கு நன்றி கூறுவதுதான் பொங்கல் பண்டிகை.

மறைந்து நின்றே அருளும் ஆண்டவன் சூரிய வெளிச்சம், மழை இவற்ருல் பயிர் பச்சைகளுக்கு உயிர் ஊட்டிவளர்க்கிருன். ஆண்டவனின் உழவுக் கருவிகளாகிய சூரிய வெளிச்சம், மழை இவற்ரேடு ஆண்டவன் படைத்து, மனிதன் உழவுக்குப் பயன் படுத்திக் கொண்ட மாடுகளிடமும் நம் தமிழ் மக்கள் நன்றி கொண்டிருக்கிருர்கள். எனவே தான் மழைத் தெய்வமாகிய இந்திரனை வழிபடப் போகிப் பண்டிகையும், சூரியனை வழிபடப் பொங்கலும், மாடுகளைப் போற்ற மாட்டுப் பொங்கலும் கொண்டாடி இருக்கிருர்கள்.


இன்று நாம் இந்திர வழிபாடு செய்வதில்லை. இந்திரன், தானே பெருந் தெய்வம் என்று எண்ணிச் செருக்கடைந்தபோது கண்ணபெருமான் இந்திர பூஜையை நிறுத்தினுன் என்றும், அப்போது இந்திரன் பெரு மழையைத் தோற்றுவிக்க, உடனே கோவர்த்தனகிரியைக் குடையாகத் தூக்கினுன் என்றும் நமக்குத் தெரியும். அவ்வாறு கண்ணன் கிரிதரனுக நின்றது போகி அன்றுதான் என்று சொல்கிருர்கள். ஆனல் நம் பகுதிகளிலோ நாம் இந்திரன், கண்ணன் இருவரில் ஒருவருக்குமே போகிப் பண்டிகையை



1



௨



௩





௪



அர்ப்பிக்கவில்லை. புவித் தாய் அளிக்கும் புதுப் பயிர்களை அநுபவிக்கும் பொங்கலுக்கு முதல் நாளாகிய அன்று பழையன கழிப்பதற்கு அடையாளமாகப் பழம் பாய், கந்தல் முதலியவற்றை எரிப்பதே நம்முடைய போகி.

மறு நாள் பொங்கல். அறுவடை விழாவாகிய இது, நம் தமிழ் நாட்டில் சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கும் சங்க்ராந்தி அன்றே கொண்டாடப் படுகிறது. எனவே ஏனைய நாட்டு அறுவடை விழாக்களுக்கும் நம் நாட்டு அறுவடை விழாவுக்கும் ஒரு மாறுபாடு இருக்கிறது. அங்கெல்லாம் தானியத்துக்கும், தானியங்களைத் தாங்கும் நிலத்துக்கும் தான் அறுவடைத் திருநாளன்று முக்கியத்துவம். நம் நாட்டிலோ தானியத்தை, அஷ்ட லட்சுமிகளில் ஒன்றாகிய தானிய லட்சுமி என்றே கருதுகிறோம். நிலத்தைப் பூமி தேவி என்று சொல்லித் திருமாலின் முக்கியமான இரு மனைவியரில் ஒருத்தியாகப் போற்றுகிறோம். என்றாலும் சூரியனின் சங்க்ரமணம் காரணமாக, தானிய லட்சுமி பூமி தேவி இருவரையும்விட அந்தச் சூரியனே அறுவடைத் திருநாளில் முக்கியஸ்தனாகி விடுகிறான்.

வேத காலத்திலிருந்து ஆண்டவனாகப் பூஜிக்கப்பட்ட சூரியன் — ஆதிசங்கரர் ஸ்தாபித்த ஆறு சமயங்களில் ஸௌர மதத்தின் தனிப் பெரும் தெய்வமாகிய சூரியன் — எல்லா மக்களும் வழிபட வேண்டிய ஐந்து தெய்வங்களில் ஒருவன் என்பதாகச் சங்கரர் தமது பஞ்சாயதனத்தில் இடம் அளித்த சூரியன் — இன்று சிவன் கோயில்களில் உள்ள நவக்கிரகங்களில் ஒருவனாக மட்டுமே இருந்து வருகிறான். இந்தப் பண்டிகையில் மட்டும், நமக்குப் பிரத்தியட்சமாகப் புலப்படும் தெய்வமாகிய அந்தச் சூரிய நாராயணன் பிரதானமாக இருக்கிறான்!


பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல். அதற்கும் மறுநாள் கனுப் பொங்கல். உறவினர்களைச் சென்று காணும் நாளாகையால் இது 'காணும் பொங்கல்' என்றும் அதுவே திரிந்து கனுப் பொங்கலாயிற்று என்றும் சிலர் சொல்கிறார்கள். அல்ல, கன்னியர்களுக்கு விசேஷமான தினம் அது: 'தைந் நீராடல்' என்று இலக்கியம் சொல்லும் கன்னியரின் நோன்புக்குத் தொடர்புடைய தினம் அது என்றும் வேறு சிலர் சொல்லுகிறார்கள். இல்லை, மாடுகளுக்கு மாட்டுப் பொங்கல் போல, கன்றுகளுக்காக ஏற்பட்ட கன்றுப் பொங்கலே கனுப் பொங்கலாயிற்று என்று கருதுவோருமுண்டு.


5


6


7


8







அன்று பெண்கள் தம் சகோதரர் நல்வாழ்வுக்காக, பல வர்ணச் சாதங்கள் பிசைந்து, காக்கைக்கு உணவிடுகிறார்கள். ஒரு சமயத்தில் யமதர்ம ராஜன் காக்கை உருத் தரிக்க வேண்டி நேர்ந்ததாம். அந்த யமனைச் சந்தோஷப்படுத்தித் தமது உடன் பிறந்தாருக்கு நீண்ட ஆயுள் பெற்றுத் தரவே கனுப் பொங்கலில் காக்கைக்கு அன்னமிடப்படுகிறது.

இவ்வளவும் தமிழ் நாட்டுப் பொங்கலைப் பற்றி. இந்தியாவில் பொங்கல் என்பது தமிழ் நாட்டில்தான் முக்கியம். வட இந்தியாவில் தீபாவளியே அறுவடைத் திருநாளும் ஆகும். அவரவர் அறுவடை செய்யும் பருவத்தில் தானே அறுவடை நாள் கொண்டாட முடியும்? எனவே அங்கெல்லாம் 'சங்க்ராந்தி' என்பது உத்தராயண புண்ணிய காலமாக மட்டுமே கருதப்படுகிறது.

மனித ஆண்டொன்று தேவர்களின் ஒரு நாளுக்குச் சமானம். அதில் தேவர்களின் உதய காலம்தான் சூரியன் மகர ராசிக்குச் செல்லும் தை மாதத் தொடக்கம். இந்த உத்தராயணத்துக்காகவே காத்து இருந்து தான் பீஷ்மபிதாமகர் தமது உயிரை நீத்தார்.

ஆதியில் நம் முன்னோர்கள் வடதுருவப் பகுதியில்வசித்தவர்கள் என்றும், அவர்களுக்கு ஆறு மாதங்கள் இரவாகவும் ஆறு மாதங்கள் பகலாகவும் இருந்ததென்றும், பகலில் மட்டுமேதான் பிதிர்க் கடன்களை ஆற்ற முடியுமாதலால் அவர்கள் மகர ராசியில் சூரியன் பிரவேசித்து உலக கோளத்தின் வட பாகத்தில் ஒளி பரப்பிய சங்க்ராந்தியைப் பண்டிகையாகக் கொண்டாடினார்கள் என்றும் சொல்பவர்களுண்டு.

உத்தர பாரதத்தில் பொங்கல் விசேஷமில்லா விடினும், தென் இந்தியாவில் ஆந்திர தேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம் முதலிய பகுதிகளில் பொங்கலை யொட்டிச் சில விநோதச் சடங்குகள் உண்டு.

ஆந்திர தேசத்தில் போகிப் பண்டிகையன்று ஆண் குழந்தைகளுக்கு ஸ்நானம் செய்வித்து மணையில் அமர்த்தி, கனிகளையும் காசுகளையும் கலந்து குழந்தையின் மேல் கொட்டுவதுண்டு. பொங்கலுக்குச் சில நாட்கள் முன்பிருந்தே ஆந்திர நாட்டுத் தெருப் பாடகர்கள் தலையிலே தாமிரக் கப்பரையை அழகாக நிலை நிறுத்தி, காலில் சதங்கைகளைக் கட்டிக் கொண்டு கிராமம்கிராமமாகச் சுற்றுவார்கள். 'ரங்கவல்லி' எனப்படும் பெரிய பெரிய மாக் கோலங்கள் போட்டு வீட்டு வாசல்களை அலங்கரிப்பதைப் பொங்கலின் விசேஷ அம்சமாக ஆந்திரப் பெண்கள் கருதுகின்றனர். போகியன்று பொம்மைகளைக் கொலு போல வைக்கும் வழக்கமும் அங்கு உண்டு. பழைய ஹைதராபாத் ராஜ்யப் பகுதிகளில், வனங்களை அடுத்துள்ள மக்கள் சங்க்ராந்தியின் போது வேட்டையாடுவது வழக்கம்.

தமிழகத்தில் உண்ணும் பொங்கல் எப்படிப் பொங்கல் பண்டிகையின் ஜீவநாடியாக இருக்கிறதோ, அதே போல மகாராஷ்டிரத்திலும் உணவு வகை யொன்று சங்க்ராந்தியின் மையமாக இருக்கிறது. எள்ளையும், வெல்லப் பாகையும் கலந்து சாப்பிடுவதைப் பொங்கல் விருந்தின் விசேஷ அம்சமாக மராத்தியர்கள் கருதுகிறார்கள். இது நம் நாட்டு எள்ளுருண்டையைப் போன்றதாகும் என்று அலட்சியமாக எண்ணி விடாதீர்கள். இந்த எள்ளுருண்டையை ஒரு கலைப் பொருளாகவே, பல வர்ணக்கலவையாகச் செய்கிறார்கள் மராட்டியர்கள். '' 'இல்குல்' எனப்படும் இந்தப் பணியாரத்தைத் தின்று இனி தித்திக்கப் பேசுங்கள்'' என்று சொல்லி இதைப் பரிமாறுவது வழக்கமாம்.

கர்நாடகத்திலும், பஞ்சாபிலும் அறுவடை நாளன்று எப்படி ஆடிப் பாடுகிறார்கள் என்பதைத்தான் 6, 7 படங்களில் காண்கிறீர்கள்.

இனி உலக நாடுகளில் எப்படி உழவர் திருநாள் கொண்டாடப்படுகிறது எனப்பார்ப்போம். உழவர்கள் விதை விதைக்கும் போதும், நாற்று நடும்போதும் பல சடங்குகளைக் கொண்டாடினாலும் அறுவடையின் போதே பெரிய விழாவாக எடுப்பது உலகெங்கிலும் வழக்கமாக இருக்கிறது.

ஆதியில் ரோம சாம்ராஜ்யத்தில் ஸிரிஸ் என்ற தானிய தேவிக்கு வெகு அமர்க்களமாக வழிபாடு நடத்தியிருக்கிறார்கள். இந்த ஸிரிஸ் தேவியின் பெயரில்தான் தானியங்களுக்கே ஸிரியல் (cereal) என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. இன்று நம் தானிய லட்சுமியைப் போலவே ஸிரிஸ் தேவதையும் மறைவிடம் சென்று விட்டாள். என்றாலும் உலகின் பல பகுதிகளில் நடைபெறும் அறுவடைத் திருநாளன்று தானியங்களைப் பெண் தெய்வமாக உருவகப்படுத்தும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது. ஐரோப்பிய தேசங்கள் பலவற்றில் இப்படியேதான் அறுவடையின் போது சடங்குகளெல்லாம் நடத்திக் கும்மாளமிடுகிறார்கள்.

இங்கிலாந்தில் நார்தம்பர்லாந்தில் கோதுமைக் கதிர்களைக் கொண்டே ஒரு பெண்ணுருவம் செய்து அதற்கு வெள்ளையில் நீளமான அங்கி அணிவித்து, ரிப்பன்கள் கட்டி, கம்பமொன்றின்மீது அதை இருத்துகிறார்கள். இதை 'அறுவடை ராணி' என்று கூறி, விருந்துக் களியாட்டத்தின் முக்கிய விருந்தினராகக் கருதுகிறார்கள்.

பொதுவாக இங்கிலாந்தில் அறுவடைத் திருநாளன்று புதிதாகப் பறிக்கப்பட்ட காய்கறி, பழங்களையும் புஷ்பங்களோடு சேர்த்து மாதா கோவில்களை அலங்கரிக்கிறார்கள். (படம் 8)

பயிர்களுக்குப் பாதிரியார் ஆசி கூறுவது என்பதாகவும் இங்கிலாந்தில் ஒரு வழக்கம் இருக்கிறது. கிராம எல்லை முழுவதையும் மக்களோடு பாதிரியார் சுற்றி வருவார். பிறகு திறந்த வயல்வெளியிலேயே தொழுகை நடத்திப் பயிர்களை வாழ்த்துவார். (படம் 4)

ஏர் திங்கள் (Plough Monday) என்பதாகவும் இங்கிலாந்தில் ஒரு கொண்டாட்டம் உண்டு (படம் 5). அன்று உழவர்கள் தங்கள் ஏர்களை அலங்கரித்து, யார் வேகமாக ஏரைச் செலுத்துகிறார்கள் என்பதில் போட்டி நடத்துவார்கள். முன் நாட்களில் அன்று விவசாயிகள் தங்கள் ஏர்களை வீடு வீடாக இழுத்துச் சென்று இனாம் கேட்பார்களாம், நம் நாட்டில் 'பொங்கல் இனாம்' கேட்பது போல. இனாம் தராதவர்களின் வீட்டு வாசலையே ஆழமாக உழவும்





எமது மனமார்ந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

பண்டிகைகளில் தலைசிறந்தது பொங்கல்

கூந்தல் தைலங்களில் தலைக்குச் சிறந்தது

கேசவர்த்தினி

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்

கிராஸ்கட் ரோடு : கோயமுத்தூர் -12

ஆரம்பித்து விடுவார்களாம் — அசல் கல்லுளி மங்கத்தனமேதான்! இந்த இனும் தொகைகளைக் குடியிலும் கூத்திலுமே செ விட்டார்களாம். பிறகுதான் இந்தப் பணத்தைக் கொண்டு 'ஏர்விளக்கு' என்பதாக வருஷம் முழுவதும் ஒரு தீபத்தை மாதாகோவிலில் ஏற்றி வைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

ஸ்காட்லாந்தில், அர்ச்சிஷ்டர்களின் தினமான நவம்பர் முதல் தேதியன்றுதான் அறுவடை முடிக்கிறார்கள். (ட்ருயிட்கள் என்று அழைக்கப்பட்ட மாந்திரீகர்களும் ஆதியில் நவம்பர் முதல் தேதியன்றுதான் அறுவடை விழாக் கொண்டாடினார்கள் என்பதை இங்கு குறிப்பிடலாம்.) கடைசியாக வெட்டப்படும் கதிரைக் 'கன்னி' என்று ஸ்காட்லாந்துமக்கள் அழைக்கிறார்கள். அறுவடை நிலத்தில் உள்ள மிகச் சிறிய பெண்ணே அந்தக் கதிரைவெட்ட வேண்டும் என்பது அவர்கள் சம்பிரதாயம். அதாவது பொங்கலும், கனுப் பொங்கலும் ஸ்காட்லாந்தில் ஒன்றாகி விடுகின்றன.

'பகுத்தறிவு' என்ற பெயரில் மனத்தைப் புறக்கணிக்கும் கம்யூனிஸ ருஷ்யாவின் மேற்குப் பகுதிகளிலும் பயிர்களை உருவகப்படுத்தி வழிபடும் கிராம வழக்கு இருந்து வருகிறது.

கதிர்களை மொத்தையாகக் கட்டி ஒரு பெண்ணுருவமாக்குகிறார்கள். 'வழி தவறிப் பிறந்தவன்' (bastard) என்று ஒரு பையனுக்குப் பெயரிட்டு அவனை அந்தக் கட்டுக்குள் திணிக்கிறார்கள். இந்தக் கட்டை முடிக்கும் பெண்ணைத் 'தானிய மாதா' என்கிறார்கள். உண்மையில் பிள்ளைப் பேற்றுக்குள்ள இன்னல்கள் அவ்வளவையும் அந்தப் பையன் அநுபவிப்பது போல நடிக்கச் செய்து இறுதியில் அவனைப் 'பிறக்க' வைக்கிறார்கள்.

தங்களுடைய மத உணர்வுக்காகவே இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டு, பல இன்னல்களைக் கடந்து அமெரிக்கா வந்து சேர்ந்து, அங்கு காடு திருத்தி நாடாக்கிய ஆங்கிலேயர்கள் முதன் முதலில் அந்தப் புது நாட்டில் அறுவடை செய்தபோது எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருப்பார்கள்? அந்த மகிழ்ச்சியின் அறிகுறியாகவே நவம்பர் மாதத்து நான்காம் வியாழக்கிழமையை அவர்கள் ஆண்டவனுக்கு நன்றி தெரிவிக்கும் தினமாக (Thanksgiving Day) கொண்டாடினார்கள்.

மஸ்ஸாசூஸெட்ஸ் ராஜ்யத்தில் உள்ள பிளிமத்தில்தான் முதல் முதலில் 1621ம் ஆண்டு யாத்திரைத் தந்தையர் (Pilgrim Fathers) அறுவடைத் திருநாள் கொண்டாடி ஆண்டவனுக்கு நன்றி செலுத்தியிருக்கிறார்கள். இன்றும் அங்குள்ள மக்கள் தமது அந்த முந்தையரைப் போலவே உடை அணிந்து அவர்கள் இவ்விழாவை எப்படிக் கொண்டாடினார்களோ அப்படியே மறுபடி நடித்துக் காட்டி மகிழ்கிறார்கள். (படம் 2) முந்நூறாண்டுக்கு முற்பட்ட ஆடைகளுடனும், வாத்தியங்களுடனும் இவர்கள் அந்த முன்னோர்களின் கல்லறைகளுக்கு ஊர்வலம் செல்வது உள்ளத்தைத் தொடுமாம்.

அறுவடைப் பண்டிகையே அமெரிக்காவின் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தேசியப் பண்டிகையுமாகும். ஜார்ஜ் வாஷிங்டன் நாளிலேயே அது தேசியப் பண்டிகையென அறிவிக்கப்பட்டது. ஆப்ரகாம் லிங்கன் இதற்காகத் தனிப் பிரகடனமே செய்திருக்கிறார்.

நம் நாட்டில் முற்காலத்தில் மாட்டுப் பொங்கலன்று எப்படி ஜல்லிக்கட்டு விளையாட்டு நடைபெற்றதோ அதே உற்சாகத்துடன் இன்று அமெரிக்காவில் அறுவடை விழாவன்று கால்பந்துப் போட்டிகள் நடக்கின்றன. நியூயார்க் நகரத்தில் அன்று பிரம்மாண்டமான ஊர்வலம் நடைபெறும். கோமாளிகளும், பாண்டு வாத்தியக் குழுவினரும் அமர்க்களப்படுத்துவார்கள். ரப்பரில் விநோத மிருகங்கள்போல ராட்சத அளவில் பொம்மைகள் செய்து எடுத்து வருவார்கள். (படம் 3)

ஜெர்மனியின் பொங்கலாகிய அறுவடைத் திருநாளன்றும் மாதா கோயில்களில் ஆண்டவனுக்கு நன்றி தெரிவிப்பதே பிரதானமாக இருக்கிறது. இயந்திரத் தொழிலில் அந்நாடு எவ்வளவோ முன்னேறிய போதிலும் இன்றும் ஜெர்மனியில் அறுவடைத் திருநாளில் வெட்டப்படும் கடைசிப் பயிர்கள் குதிரைகள் பூட்டிய வண்டியில்தான் களஞ்சியத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனவாம். அவற்றோடு உழவர்களும் ஆடிப் பாடிச் செல்வார்களாம். (படம் 1)

மது வகைகளுக்குப் பெயர் போனதல்லவா பிரான்ஸ் தேசம்? அதோடு சமையலையும் 'குஸின்' என்ற மாபெரும் கலையாக்கியவர்களாயிற்றே பிரெஞ்சு மக்கள்! அறுவடைத் திருநாளன்று அவர்கள் தடபுடலாக விருந்து தயாரித்து உண்பார்களாம்; குடித்து மகிழ்வார்களாம். உணவு வகைகளைப் பற்பல விநோத வடிவங்களில் சமைத்து, உண்பதற்கு முன்பே அவற்றைக் கண்ணுக்கும் விருந்தாக்குவார்களாம்.

உள்ளத்தை நிரப்பிக் கொள்வதற்காக ஏற்பட்டவை பண்டிகைகள். கண்ணையும் வயிற்றையும் நிரப்பிக் கொள்ளச் சாதனமாகவும் நாம் அவற்றைச் செய்து களிக்கிறோம். உழவர் திருநாளின் தனி விசேஷம் காதுகளையும் நிரப்பிக் கொள்வதாகும். அன்று ஒவ்வொரு நாட்டிலும் ஒரு குறிப்பிட்ட வாசகத்தை உழவர்கள் உரக்கக் கோஷித்து மகிழ்வார்கள். முக்கியமாக இங்கிலாந்தில் டிவான் ஷயரில் Crying the neck என்பது அறுவடைப் பண்டிகையின் ஜீவ நாடியாகும். மிகச் சிறந்த கோதுமைக் கதிர்களை 'நெக்' என்று பெயரிட்டு ஒரு கட்டாகக் கட்டுவார்கள் உழவர்கள். அந்தக் கத்தையைக் கையில் வைத்துக் கொண்டு கிழவன் ஒருவன் நடுவில் நிற்க அவனைச் சுற்றி மற்ற விவசாயிகள் வளையமாக நின்று கொள்வார்கள். அவன் சமிக்ஞை செய்தவுடன் அவர்கள் தங்கள் தொப்பிகளைத் தலைக்கு உயரே தூக்கிக் கொண்டு 'தி நெக்' என்று மும்முறை உரக்கக் கத்துவார்களாம். ''தூரத்திலிருந்து இந்த ஒலியைக் கேட்கும்போது எவ்வளவு அற்புதமாக இருக்கும் தெரியுமா?'' என்று கேட்கிறார் உலக விழாக்களின் உட்பொருள்களைப் பற்றியெல்லாம் ஆராய்ந்த ஃப்ரேஸர். எவ்வளவு அற்புதமாக இருந்தாலும் நம் தமிழ் நாட்டில் 'பொங்கலோ பொங்கல்' என்று வாய் நிரம்ப ஒலியை ஏற்றி இறக்கிக் கூறுகிறோமே, அதற்கு ஈடாகாது என்றுதான் நமக்குத் தோன்றும்.

''பொங்கலோ பொங்கல் !''



தரத்திலிருந்து

உயர்தரத்துக்கு அழைக்கிறது...

தரமான ஜெபிர் கைக்கடிகாரத்தைத் தயாரித்தவர்களே உயர்தரமான டைம்ஸ்டாரையும் தயாரித்திருக்கின்றனர். பாரதநாட்டில் தனியார் துறையின் முயற்சியில் தயாரிக்கப்பட்ட முதல் கைக்கடிகாரம்.

இப்பொழுது இந்தோ-பிரஞ்சு இண்டஸ்ட்ரீஸ் தயாரித்திருக்கும் டைம்ஸ்டார் முழு விவர் கைக்கடிகாரம். பாரத நாட்டுத் தொழில் துறையினர் பிரஞ்சு கைக்கடிகாரத் தயாரிப்பாளர்களுடன் இணைந்து அவர்களின் ஒத்துழைப்புடன் தயாரித்தது. கைக்கடிகாரங்களுக்கே அணியாகத் திகழ்வது டைம்ஸ்டார். இம்மியும் பிசகின்றி சரியாக மணிக்காட்டுவது. நம்ப முடியாத அளவுக்கு குறைந்த விலை ரூ. 92/- (வரிகள் பிரத்யேகம்)

10½" சைஸ் * க்ரோம் ஸ்டீல் பின்புறம் * 17 ஜுவல்கள் * மத்திய செகண்டு ஹாண்ட் * தண்ணீர் புகாதது * காந்த சக்தியினுல் கவர முடியாதது அதிர்ச்சிக்குப் பாதுகாப்பானது * எளிதில் உடையாத மெயின் ஸ்பிரிங் * எடுப்பான எண்கள் கொண்ட வித விதமான அழகிய டயல்கள்.

எல்லாப் பிரபல கடிகார டீலர்களிடமும் கிடைக்கும்.

INDO-FRENCH TIME INDUSTRIES LIMITED

MOHATTA BHAVAN, BLOCK NOS, 1 & 8, OFF HAINES ROAD, WORLI, BOMBAY-18

நம்பிக்கைப் பொங்கல்




"இல்லத்திலே இன்பம் பொங்க, இதயத்திலே மகிழ்வு பொங்க, கண்களிலே நம்பிக்கை பொங்க," கருத்தினிலே இனிமை பொங்க, களிப்பினிலே சின்னஞ்சிறு செல்வ மதலையர் சிந்த, ஆற்றும் கடமையிலே உறுதி பொங்க, புத்தாடை உடுத்தி, புதுப்பானை எடுத்து, பூக்கோலம் போட்டு, பூரிப்புக் கொஞ்ச, புத்தரிசி யிட்டு புன்னகை விரவிட, புத்தொளி பரவிட, களத்திலே விளைந்த கன்னலும் செந்நெலும், கனிகளும், கவின்மிகு மலர்களும், மஞ்சளும் இஞ்சியும் எங்கும் நிறைந்திட, அன்போடு அன்னையர் குலம் ஆக்கி அளிக்கும் அருமைப் பொங்கல் வந்தது.

பொங்கல் அறுவடைத் திருநாள், அருமையாகத் திட்டமிடப்பட்ட வேளாண்மையின் விளைவு, அயராது பாடுபட்ட உழைப்பால் விளைந்த உறுபயன், சிந்திய வியர்வை தந்ததோர் நற்பலன். இன்று இதயத்திலே பொங்கும் நம்பிக்கை என்றும் நின்று நிலவட்டும். அதற்குத் துணை நிற்கின்றது ஆயுள் இன்சூரன்ஸ்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் இனிமையான எதிர்காலத்திற்காக இன்றே திட்டமிடுவீர். உங்கள் தேவை எதுவென்றாலும், எந்தச் சூழ்நிலைக்காயினும் ஏற்றமிகு திட்டங்கள் எத்தனையோ உண்டு ஆயுள் இன்சூரன்ஸில்.

நீங்கள் இன்ஷ்யூர் செய்யும் நன்னாளே
நீங்கள் பாதுகாப்புப் பெறும் பொன்னாளாம்

EP:SZ:LIC.30



குமரவேலுவின் நெற்றியில் நீர் துளித்திருந்தது.

பகல் முழுதும் எத்தனை பெரிய தொகைகளாகப் போட்டுக் கழித்துக் கொண்டிருந்தான் அவன்! அப்படிக் கூட்டிக் கூட்டிக் கழித்துச் சரிபார்த்துக் கொண்டே இருந்த வித்தை அவனது 'குமாஸ்தா மனத்துக்கு' ஒன்றும் பெரியதாகத் தோன்றவில்லை. ஆனால் மூன்று இலக்கங்களின் மிகச் சிறிய தொகையான நூறு ரூபாய்க்குள்ளேயே அடங்கிவிட்ட அவனது மாதச் சம்பளத்துக்கிடையில், வீட்டில் தோன்றிய லட்சோப லட்சமான செலவினங்களின் பட்டியலை அடக்கிச் சரிவர 'பாலன்ஸ் ஷீட்' தயாரிப்பதில் குமரவேலு பட்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல.

அன்று பகல் முழுதும், இத்தனை அவசர 'எழுத்தர் தலைவிதிக்கே'யான வேலைகளுக்கிடையிலும் குமரவேலுவின் மனம் அவனுடைய வீட்டுக் கூடத்தைச் சுற்றி வட்டமடித்துக்கொண்டுதான் இருந்தது.

குமாஸ்தாவின் அந்த வீட்டுக் கூடத்தை நட்ட நடுவில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு தொட்டில் அலங்கரித்துக் கொண்டிருந்தது. தொட்டில்தான் எத்தனை அழகான தொட்டில்! பழைய காலத்து 'ரோஸ் உட்' மரச் சட்டங்களாலானது.

தொட்டில் குமரவேலுவின் பரம்பரைச் சொத்து. அவன் குழந்தையாக இருந்த போது அவனுடைய அப்பா ஆசையாக வாங்கியதாம் அது! அதைப் பற்றிக் குமரவேலுவுக்குப் பெருமை அதிகம்! 'இது ஒன்றுவது உங்கள் சொத்தாக இருக்கிறதே!' என்பாள் குமரவேலுவின் மனைவி அடிக்கடி. அவள் கொணர்ந்திருந்த சீதனமாக இருக்கவில்லையே அது?

இந்தத் தொட்டிலில் குமரவேலுவின் குடும்பம் ஒன்று இரண்டு என்று அபிவிருத்தியாகி, இப்போது நான்காவது குழந்தையை ஏந்தி றாற்போல் தூங்கப் பண்ணிக் கொண்டிருந்த பெருமையை அநுபவித்துக் கொண்டிருந்தது.

விடிந்தால் குமரவேலுவின் நான்காவது மகன் தங்கரத்தினத்துக்கு முதல் ஆண்டு விழா. விழாவென்று குமரவேலுவின் உள்ளம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாலும் அவன் சட்டைப் பையில் மாதத்தின் அந்தப் பதினேழாவது தேதியில் எட்டு நயா பைசாக்கள்தானே மிகுதியாக இருந்தன? கூட இரண்டு நயா பைசா இருந்தால் 'பேச்சி முத்து மக்கடையில்' ஒரு கப் 'ஸ்டிராங்' டீ குடித்துவிட்டு இந்தக் கார்பன் பேப்பர் கிறுக்கலை இத்தனை நேரத்துக்குள் வெற்றிகரமாக முடித்திருக்க மாட்டானா அவன்?


பட்டம்மாவிடம் — அதாவது தன் மனைவியிடம் — எப்படியாவது பயலுக்கு ஒரு 'ரெடிமேட்' சட்டையாவது வாங்கி வந்துவிடுவதாகவும், மறு நாள் பாயஸத்துக்காகச் சேமியா, சர்க்கரை, முந்திரிப் பருப்பு வகைகளை மளிகைக் கடை 'பத்து வர'வில் வாங்கி வந்துவிடுவதாகவும்தான் சொல்லி வந்திருக்கிறான் குமரவேலு.

மனம் குமைந்து கொண்டிருக்கிறது. இப்போது பிற்பகல் மூன்று மணி. காரியாலயத்துப் பக்கத்துச் சன்னல் வெய்யிலைச் சாய்த்து இறக்கிக் கொண்டே வந்து குமரவேலுவின் கார்பன் பேப்பர் ஒட்டத்தின் மேல் விழுந்து அதை ஏதோ சினிமாப் படம் போல் ஆட வைத்துக் கொண்டிருந்தது.

பயிற்சி பெற்ற நேர்த்தியானதொரு குமாஸ்தாதான் குமரவேலு. வேலை செய்து கொண்டே தனது சொந்த விஷயங்களைப் பற்றியும் தீவிரமாகச் சிந்திக்கும் சக்தி அவனுக்கு இருந்தது. பார்ப்பவர்களுக்கு அவன் ஒரு வெறும் குமாஸ்தாவாகத் தெரிந்தாலும் உள்ளுக்குள்ளே அந்தக் குமாஸ்தாவின் குரலுக்கென்று பிரத்தியேகமானதொரு சக்தி இருக்கவே செய்தது.

அந்தக் குமரவேலுக்கு இப்போது ஓர் ஆலோசனை தந்தது.

'எதிரே 'ஸப் ஹெட்' சாம்பமூர்த்தி இருக்கிறாரே அவரைத்தான் ஒரு பத்து ரூபாய் கேட்



''அதைப் பிடித்துத் திருகாதே. அது கையோடு வந்து விடும் என்று உனக்கு எத்தனை தடவை சொல்லுவது....?''

டுப் பாரேன்! குழந்தை இல்லாதவர்; ஒரு குழந்தை பிறக்க ஏங்குகிறவர். அவர் உன்னுடைய குழந்தையின் பிறந்த நாளுக்காக ஒரு சிறு உதவியைக் கடனாகக் கொடுத்து உதவ மாட்டாரா?'

'கார்பன் காப்பி அடித்தல்' வேகத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு குமரவேலு இந்தக் குரலுக்குச் சற்றே செவிசாய்த்தான். தடாலென்று மறு கணமே அந்தக் குரல் அவன் உள்ளத்தைப் புரட்டி விட்டதையும் உணர்ந்தான்.

'வேண்டாம், குமரவேலு! மிட்டாயையும் நிலக்கடலை உருண்டையையும் ஒரு குழந்தை சாப்பிடுவதைப் போல் சாப்பிடும் மனிதர் அவர்! ஏதாவது பேசிவிட்டால் உன் மனம் வருந்த நேரிடும். விட்டுவிடு...'

குமரவேலு மறுபடியும் தனது பணியில் வேகமாக இறங்கியபோது —

''சார்! உங்களை 'இன்சார்ஜ்' கூப்பிடுகிறார்'' என்று 'அட்டண்டெ'ரின் குரல் கேட்டது.

குமரவேலு கார்பனையும், அதோடு 'டாட்' பேனா உறவாடிய எழுத்தையும் போட்ட நிறுசில் போட்டு விட்டு, இலாகா அதிகாரியின் அறைக்கு விரைந்தான். போகும் போதே அவனுடைய குமாஸ்தாவின் குரல் அவனுடைய நடைக்கும் முந்திக்கொண்டு அவன் வழியை மறைத்தது.

'ஏன் குமரவேலு, 'இன்சார்ஜை'யே கேட்டுப் பாரேன்! மூந்நூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறவருக்குக்கூட ஒரு பத்து புரட்டுவது கடினமாக இருக்கலாம். ஆனால், தனக்குக் கீழே வேலை புரியும் ஒரு குமாஸ்தாவுக்கு ஒரு பத்து ரூபாய் கூடக் கடனாகக் கொடுக்க முடியாத தனது நிலைக்கு அவர் எப்படியும் இணங்கமாட்டார்! கேட்டுத்தான் பாரேன்!'

ஆயினும் அறைக்குள்ளே புகுந்து ஐந்து நிமிட உரையாடலுக்குப் பின் வெளி வந்த குமரவேலுவின் முகத்தில் ஈயாடவில்லை. தன் மேஜையண்டை திரும்பி வந்து மறுபடியும் கார்பன் தாள்களைக் கையில் எடுத்துக் கொண்டான். அவற்றை அப்படியே கிழித்து எறிந்து விட்டுத் தலைமயிரைப் பிய்த்துக் கொண்டு அங்கிருந்து அந்தக் கணமே எங்கேயாவது ஓட்டம் பிடிப்போமா என்றிருந்தது அவனுக்கு. அப்போதும் அந்த மனக் குரல் தான் அவனுக்குச் சாந்தி அளித்தது.

'என்ன குமரவேலு, இதற்கெல்லாமா பதற்றம் அடைந்து விடுவது? நீ பத்து வரவு வைத்திருக்கும் மளிகைக் கடையில் அவரும் பத்து வரவு ஏன் வைக்க வேண்டும்? அதனால் தானே நீ இரண்டு மாதமாகப் பாக்கி தராத விஷயத்தைக் கடைக்காரன் அவர் காதில் போட்டு, அவர் உன்னைக் கேட்டார். அவரும் பாக்கி தந்திருக்க மாட்டார் என்றே நீ வைத்துக்கொள்ளேன்!'

ஹூம், அதனால் என்ன பயன்? மளிகைக் கடைக்காரனே பாக்கி தரவில்லை என்று ஆபீஸ்வரை வந்து புகார் செய்திருக்கிறான். இனி மறுநாள் சேமியா பாயஸம் ருசிக்கக் கூட வழி இருக்காதோ?

மாலை மணி ஐந்தடித்தது. காரியாலயக் கதவுகள் சாத்தப்பட்டன. வெளியே வந்தான் குமரவேலு. மெதுவாக நடந்தான். நேரே வீட்டுக்குப் போக அவனுக்கு விருப்பம் இல்லை. நெஞ்சில் கார் காலத்து வானம்போல் துக்கம் சூழ்ந்து கொண்டது. இருபத்து ஐந்து— இள வயதுக்குள்ளேயே அவன் மனைவி 'மள மள'வென்று நான்கு குழந்தைகளுக்குத் தாய் ஆகிவிட்டாள். வாழ்க்கையைக் கணவனோடு சுக துக்கங்களில் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்று ஒரு பெண் நினைக்க வேண்டியது அவளுடைய கடமைதான்; ஆயினும் அதே சமயத்தில் மற்றவரைப் போல் நிறைக்கவும் வாழ வேண்டும் என்று அவள் விரும்புவதிலும் தவறு இல்லைதான். குமரவேலுவின் மனைவி பட்டம்மாளும் அப்படிப்பட்டவள்தான்.


இரண்டாவது பெண் பிறந்தபோது ஏற்பட்ட நெருக்கடியான செலவுகளுக்கிடையில் தவித்த குமரவேலுவுக்கு அவள் ஆறுதல் மொழியாகப் பிரசவ அறையிலேயே தனது இரண்டு வடத் தங்கச் சங்கிலியை அவிழ்த்துக் கொடுத்து, ''சமாளித்து விடுங்கள். போனஸ் பணத்தில் மீட்டுக் கொண்டால் ஆயிற்று!'' என்றாள் புன்னகைக்கு இடையில். ஆனால் போனஸ் பணத்தை விழுங்க மற்ற அரக்கச் செலவுகள்தாம் காத்திருந்தனவே!...


வீட்டை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தான். மனைவி ஏதாவது நினைப்பாளே, வெறும் கையோடு வீட்டுக்குப் போகலாமா என்று அவன் அவதிப்பட்டதற்கு அர்த்தமில்லை என்றே இப்போது அவனுக்குப் பட்டது. பார்க்கப் போனால் பட்டம்மா யார்? அவனுடைய சுக துக்கங்களில் கடந்த பத்து வருடங்களாகப் பங்கெடுத்துக் கொண்ட உத்தமி. 'பட்டம்மா நான் எவ்வளவோ முயற்சி செய்தேன்! என்னால் முடியவில்லை' என்று அவன் கூறினால் அவளுக்கு அவன் கஷ்டம் புரியாமலா போய்விடப் போகிறது?

வேகமாக நடந்து கொண்டிருந்தவனின் மனத்தில் இப்போது இன்னொரு நினைவு அலை மோதியது. அது, அந்த அழகான தொட்டிலைப் பற்றியது!

மூன்றாவது குழந்தையின் பிரசவத்துக்கு இரண்டொரு மாதங்களுக்குமுன்பு —

குமாஸ்தாவின் வாழ்க்கையில் நெருக்கடிகளுக்கா பஞ்சம்? ஓர் அவசரச் செலவுக்குப் பணம் வேண்டியிருந்த சமயம்தான்.


நா. பார்த்தசாரதியின்
சரித்திர நவீனம்
மணிபல்லவம்
வெளிவந்துவிட்டது
பிற நூல்கள்
நவினங்கள்
குறிஞ்சிமலர்
வெற்றி முழக்கம்
பிறந்த மண்
கோபுர தீபம்
பட்டுப் பூச்சி
மலைச் சிகரம்
கதைகள்
வலம்புரிச் சங்கு
காலத்துக்கு வணக்கம்
வேனில் மலர்கள்
மூவரை வென்றான்
கட்டுரைகள்
கவிதைக் கலை
மொழியின் வழியே
சொல்லின் செல்வம்
வள்ளுவர் பண்ணை


JEYRAD RADIO
ஜேராட் ரேடியோ அளிக்கும்
மனதிற்குகந்த 4 செட்டுகள்
ஒவ்வொன்றும் ஒப்புயர்வற்றது!
● U-125
5 வால்வுகள் 3 பாண்ட்ஸ் AC/DC
ரூ. 125/-
○ U-147
5 வால்வுகள் 3 பாண்ட்ஸ் AC DC ரூ. 185/-
○ A-222
5 வால்வுகள் 3 பாண்ட்ஸ் AC ரூ. 225/-
○ A-152
6 வால்வுகள் 3 பாண்ட்ஸ் AC ரூ. 285/-
○ எக்சைஸ் வரி மற்றும் உள்ளூர் வரிகள் தனி ● உள்ளூர் வரிகள் தனி
ஜேராட் எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸ்
38. தங்கசாலை வீதி - சென்னை - 3

வாசல் ரேழியில் குறுக்கு நடை போட்டுக் கொண்டிருந்த குமரவேலுவை அழைத்தது ஒரு குரல். காரியாலய நண்பர் — நடுத்தர வயதைக் கடந்த ஒருவர்தான்! பையில் இரண்டு பத்து ரூபாய் நோட்டுகள் தெரிய 'டெரிலின்' சட்டையை அணிந்து கொண்டிருந்தார். பேச்சுக்களின் பரிமாறல் சாராம்சம் இதுதான்:

வந்தவர் குமரவேலுவின் வீட்டுக் கூடத்திலிருந்த அழகிய தொட்டிலை விலைக்குக் கேட்டார். இருபது ரூபாய் தருவதாகச் சொன்னார். குமரவேலுவின் முகம் மலர்ந்தது. ஆனால் நிறை மாதக் கர்ப்பிணியாக இருந்த அவன் மனைவியின் கண்டிப்பு: "வேண்டாங்க. எப்போதும்தான் செலவு இருக்குதுங்க. இனி வெள்ளம் வந்து தன்னைத் துன்புறுத்தாது என்று ஆற்று மணல் தனக்குள் எண்ணிக் கொண்டு சமாதானமடைய முடியுமா? எங்களுக்கு இதை யெல்லாம் சமாளிக்கப் பழக்கம் உண்டுங்க. தொட்டிலை விலைக்குக் கொடுக்கிறதில்லை...."

வந்தவர் எதுவும் பேசாமல் உடனடியாக அப்போது சென்று விட்டார்.

நடந்து கொண்டே இருந்த குமரவேலுவுக்கு இப்போது 'பளிச்'சென்று ஓர் எண்ணம் தோன்றியது. சுமார் இரண்டாண்டுகளுக்கு முன்பு தொட்டிலை விலைக்குக் கேட்டவர், இப்போதும் அதை வாங்கச் சம்மதப்படுவார் என்று அவன் நினைத்தது ஆச்சரியம் தான். எப்படியோ பணம் வேண்டும். அவனைப் பிறகு சமாளித்துக் கொள்ளலாம். இப்போது வேண்டியது பணம், ஒரு 'ரெடிமேட்' குழந்தைச் சட்டை, விருந்துக்கு வேண்டிய மளிகைச் சாமான்கள்!

குமரவேலு ஒரு கிளைப் பாதையில் திரும்பினான். அநேகக் குடியிருப்பு காலனிகளைக் கடந்து, உயர் அந்தஸ்து உள்ளவர்கள் வசித்த 'பக்கா குவார்ட்டர்ஸ்'களுக்கு வந்து ஒரு வீட்டின் முன்னால் நின்றான்.

"சார்....!" என்றான். ஆனால் குரல் கொடுத்த மறுகணமே, வீட்டுக் கூடத்தை அவனுடைய கண்கள் அளவளாவிய நட்சணமே இடுக்கிட்டான் குமரவேலு. ஏனென்றால் அந்த வீட்டின் நட்ட நடுவில் இனி ஒரு தொட்டில் வேண்டியிருக்காது....

இதற்குள் குரல் கேட்டு வெளியே வந்தவர், "யாரு, குமரவேலா? வாங்க சார், என்ன வேணும்?" என்றார்.

"ஒன்றுமில்லை, சார்..... நான் வரேன்.."

"என்ன குமரவேல், வந்தீர்கள், உடனே புறப்படுகிறேன் என்கிறீர்கள்? என்ன விசேஷம்? சொல்லுங்கள்.....!"

"ஒன்றுமில்லை... தொட்டில் உங்களுக்கு வேண்டுமா என்று கேட்கலாம் என...."

அந்த நண்பர் குமரவேலின் தோள்களின் மேல் கையை அன்புடன் வைத்தபடி, "உங்களுக்கு எத்தனை வேண்டுமோ கேளுங்கள், குமரவேல், தருகிறேன். மெதுவாகச் சம்பளத்தில் திருப்பி அளியுங்கள். ஆனால் இனி தயவுசெய்து அந்தத் தொட்டிலை யாருக்கும் விற்றுவிட நினைக்காதீர்கள்...." என்று கூறிவிட்டு, உள்ளே சென்று இருபது ரூபாய்ப் பணத்தை எடுத்துக் கொண்டு வந்து அவன் கையில் கொடுத்தார்.

அப்பொழுதுதான் அந்த வீட்டுச் சூழ்நிலை வடிவேலுவுக்கு நன்றாகப் புரிந்தது. கூடத்தில் தொட்டில் மட்டுமே இருந்தது. குழந்தை எதுவும் இல்லை.

"சார்...!" என்று குழறினான் குமரவேலு.

"போய் வாருங்கள், குமரவேலு! எனக்கு உள்ள குழந்தை இதயத்தால்தான் ஒரு தொட்டிலையாவது வாங்கி வைப்போம் என்று உங்களிடம் அன்று வந்தேன்; பிறகு எனது குழந்தை மனப்பான்மையில் இதை வாங்கி வைத்திருக்கிறேன். எனது துயரில் மற்றவர் துயரம் என் கண்களுக்குப் புலப்படுவது எளிதாக இருக்கிறது.... உங்களுக்கு நேரமாகிறது: நீங்கள் புறப்படுங்கள்!"

குமரவேலு நெஞ்சு நிறைந்த உணர்ச்சியுடன் நேரே கடைத் தெருவுக்கு நடந்தான்.

'ரெடிமேட்' சட்டையும் விருந்துச்சாமான்களும் வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி வேக நடை போட்டான் குமரவேலு. வினாடிக்கு வினாடி உணர்ச்சிப் பிரவாகமாக மாறிக் கொண்டிருந்தது அவனுடைய உள்ளம்.

வீட்டை அடைந்தான். வீட்டு வாசலில், கைப் பொட்டலங்களை மனைவியிடம் தந்து விட்டு, கூடத்துத் தொட்டிலை அணைத்து கொண்டு குமுறிக் குமுறி அழுதான். இந்த அப்பாவி மனிதனின் அழுகைக்குக் காரணம் புரியாமல் விழித்தான் அவன் மனைவி!

— லிப்கோ —

மலிவுப் பதிப்பு மலர்கள்

1. ஸ்ரீ மஹா பக்த விஜயம்

பக்திக் களஞ்சியம்!

ஸ்ரீ கபீர்தாஸர், ஸ்ரீ துளஸிதாஸர், ஸ்ரீ மீராபாய் போன்ற 82 பக்தர்களின் பரவசமூட்டும் திவ்ய சரிதங்கள். படிப்போர் நெஞ்சைப் பாகாய் உருகவைக்கும்.

2. விநோத ரச மஞ்சரி

தமிழ்ப் பெருநிதி!

அஷ்டாவதானம் ஸ்ரீ வீராசாமி செட்டியார் அவர்கள் இயற்றிய நூல். தெய்வ நம்பிக்கை, கற்பு, ஒழுக்கம், நீதி முதலிய கட்டுரைகள்.

ஒவ்வொன்றும் சுமார் 500 பக்கங்கள்!

ஒவ்வொன்றும் விலை ரூ. 2.25 தான்!

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17; எம். தாமோதரம் & கம்பெனி, அப்பர் பில்டிங்ஸ், சென்னை-1; ஹிக்கின்பாதம்ஸ், சுதேசமித்திரன் ரெயில்வே ஸ்டால்கள்.

NALIN



டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்



தன் காதலன் ரகுவைக் கையில் கத்தியுடன் கண்டதைச் சிவகாமியால் தாங்க முடியவில்லை.
4
கதை: கௌசிகன்
சந்திரனே சாட்சி
சித்திரம்: வினு
நல்லவர் என்று நம்பி உங்களுக்கு என் இதயத்திலே இடமளித்தேன். நய வஞ்சகர் என்றறிந்த போது நாணினேன். இப்போது நீங்கள் ஒரு கொலைகாரர் என்பதையும் கண்டு விட்டேன்.
ஐயோ, சிவகாமி! நீ என்ன சொல்லுகிறாய்! இவரை நான் கொல்லவில்லை.
அதே சமயத்தில்..
ஹலோ... ஆமா.... எங்கே? கொலையா? வீட்டு நம்பர்...? துரைசாமியேவா! நீங்க யார் பேசறது? ஹலோ... போனை வைத்து விட்டார்களே.. ம்....
இன்று மாலை நீங்கள் துரைசாமியை மிரட்டிப் பணம் பறிக்க நடத்திய சம்பாஷணையை நான் கேட்காமலிருந்திருந்தால் ஒரு வேளை உங்களை நல்லவர் என்றே இன்னமும் நம்பி...
ஏதேதோ சொல்லுகிறாயே சிவகாமி...? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?
யாரும் நகராதீங்க. 'போர்ட்டிகோ' லைவன் யாரையும் உள்ளே விடாதே. 'சிக்ஸ் காட் போர்' வீட்டைச் சோதனை போடு. ஏய் ரகுமலே! இந்தக் கைக் குட்டையிலே அந்தக் கத்தியை எடு.


உங்க பேரென்ன சார்? இந்தச் சம்பவம் எப்படி நடந்தது...?
என் பெயர் ரகுநாதன். அரை மணிக்கு முன்பு தன்னை வந்து காணும்படி துரைசாமி எனக்குப் போன் செய்தார். வந்தேன். ஆனால் இந்த நிலையில்தான் அவரைக் கண்டேன்.
நீங்கள் இங்கு வந்த போது வேறு யாராவது இருந்தார்களா?
இல்லை நாற்காலியிலே இவர் உட்கார்ந்தி
ருப்பது தெரிந்தது. அருகே சென்றேன். அவர் அசையாதிருக்கவே தொட்டேன். அப்படியே தடாலென்று மேஜையில் சாய்ந்து விழுந்தார்.
அம்மா, இந்தக் கொலையைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுங்கள்.
என் பெயர் சிவகாமி. துரைசாமியைச் சந்திக்க வந்தேன். ஆனால் உயிரோடு அவரைப் பார்க்க முடியவில்லை. கையில் கத்தியோடு இவர்....
நான் உள்ளே நுழைந்த போது துரைசாமியை விட-டு' என்று ஏதோ என் காதில் விழுந்ததே, அது என்ன?
அது... அது... ஒன்றுமில்லை.
தைரியமாகச் சொல்லலாம். உண்மையைச் சொல்லுவதால் உபத்திரவம் எதுமில்லை.
தனபால் வீட்டில் தான் கேட்ட சம்பாஷணையைச் சிவகாமி விவரிக்கும்படியாகிறது.
பொய், பொய்! நான் துரைசாமியைத் தனபால் வீட்டில் சந்திக்கவேயில்லை.
அவர்களிருவரும் பேசிக் கொண்டிருந்ததை நீங்கள் பார்க்கவில்லையா?
இல்லை. ரகு வந்ததைப் பார்த்தேன். பிறகு சம்பாஷணையைக் கேட்டேன்.
மிஸ்டர் ரகுநாதன், உங்கள் மறுப்புக்களை நீதி மன்றத்தில் சொல்லுங்கள்.
சிவகாமி, இத்தனை கொடியவளாக நீ என்றைக்கு மாறினாய்? என் எழுத்துக்கும் மேலாக உன்னை நான் நேசித்தேனே. உன் வாக்குமூலம் என்னைத் தூக்கு மேடைக்கே கொண்டு போய் விடும் போலிருக்கிறதே.
நீதான் இந்த வீட்டு வேலைக்காரனா? உன் பெயரென்ன?
என் பேரு காளியப்பனுங்க. ஐயாவும் நானும்தான் இந்த வீட்டிலே. வேறு யாரும் கிடையாது.
ஐயாவின் கொலை எப்படி நேர்ந்ததுன்னு தெரியுமா?


தெரிஞ்சிருந்தா விட்டிருப் பேனுங்களா! இவரு யோகா வைப் பாக்கணும்னு வந்தாரு. தோட்டத்திலே இருக்காரு, போய்ப் பாருங்கன்னுட்டு யோகாவுக்குப் பழம் வாங்க வெளியே போனேன். திரும்பி வந்தப்போ யோகாவும் இவரும் ரொம்ப வைகாரமாய்ப் பேசிக் கிட்டிருந்தாங்க. கொஞ்ச நேரங் கழிச்சு இந்த அம் மாவோட கூச்சல் கேட்டு ஓடியாந்தேன். வந்து பாத்தா...
மிஸ்டர் ரகுநாதன், துரை சாமி அவர்களின் கொலைக் காக உங்களைச் சட்டத் தின் பெயரால் கைது செய்கி றேன். மன்னிக்கவும்...
சப் இன்ஸ்பெக்டர் சாரா? வாங்க.
நேற்று மாலை துரைசாமியை உங்கள் வீட் டில் ரகுநாதன் சந்தித்துப் பேசினாரா?
ஆமாம். அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?
அவர்கள் சம்பாஷணையில் நீங்களும் உடன் இருந்தீர்களே, அவர்கள் சுமுக மாகப் பேசிப் பிரிந்தார்களா? அல்லது...
சொந்த விஷயமாகப் பேசுவதைப் பிறரிடம் விவரிப்பது நாகரிக மாகாது. என்னை மன் னித்துக் கொள் ளுங்கள்.
விவரிக்க வேண்டிய வேளை வந்து விட்டது மிஸ்டர் தயாபரன். என்னிடம் இல்லாவிட்டாலும் நீதி மன்றத்தில்! உங்கள் நண்பர் ரகு துரைசாமி யைக் கொன்று கொலை செய்ததாகக் சந்தேகிக்கி றோம்.
என் ரகுவா? இருக் கவே இருக்காது.
அதை முடிவு கட்ட வேண்டியது நானல்லவே தயா பரன்...
சிவகாமி, செய்தி தெரியுமா?
தெரியும்... அந்தக் காட்சியை இந்தக் கண்களால் கண்டு கொலைகாரர் என்று இந்த வாயாலேயே கூறும் துர்ப் பாக்கியமும் செய்திருக் றாள் இந்தப் பாவி.
தொடரும்



ஐயரும் ஐயாறும்

தி. ஜானகிராமன்

'சோழ நாடு சோறுடைத்து' என்று சான்றோர் ஏத்திப் போற்றும் சோழவள நாட்டின் கண், பூலோக கைலாயம் என்றும் தென் கைலாயம் என்றும் தகவோர் போற்றி வணங்கும் திருத்தலமாம் திருவையாற்றில், பல் ஆண்டுகளுக்கு முன்னர், தைத் திங்கள் தேய்பிறை ஐந்தாம் நாளன்று, வைகறை யாமத்தில் பச்சைப் பசும் சோலையொன்றில் கரிச்சான் ஒன்று கூவிற்று. அண்மையில் கண்ணை இமைத்திமைத்து அமர்ந்திருந்த சேவலும் கூவிற்று. சோலைக்கு முன்பிருந்த மெத்தை வீட்டின் மேல் தளத்தில் துயிலில் ஆழ்ந்திருந்த மங்கையொருத்தி சேவலின் கூவலைச் செவியுற்று, கண் திறந்தாள். அரளி ஆரம் போன்ற கைகளை உதறிச் சோம்பர் நீக்கி, எழுந்து சாளரத்தின் கதவைத் திறந்து கீழே நோக்கினாள். காவிரிக்குக் குளிக்கச் செல்லும் மக்களின் ஆரவாரத்தினைக் கேட்டாள். திரும்பினாள். ''கிரிஜா, எழுந்திரடி! அலமு, எழுந்திரடி! சியாமளா, எழுந்திரடி, உமா, ரமா, அம்புஜம் எல்லோரும் எழுந்திருங்கள்'' எனத் துயிலில் கிடந்த தன் தோழிமார் அனைவரையும் விளித்துத் தட்டியும் அசைத்தும் எழுப்பினாள். அந்த அரவத்தினைக் கேட்டு அந்த விசாலமான அறையில் கம்பளிப் போர்வைக்குள் முடங்கி உறங்கிக் கொண்டிருந்த திரு அகோரநாதன் ''ஆங்! யாரு! ஹென்ன! ஹென்ன! என்ன ஆச்சு!'' என்றார்.

''நாழியாச்சு சார், அதுதான் எல்லாரையும் எழுப்பறேன். எல்லாம் கும்பகர்ணி மாதிரி தூங்கறதுகள்'' என்றாள் அந்த மங்கை.

''யாரது! மாலதியா! நீ எங்கே வந்தே இப்ப?'' என்று மீண்டும் மலைத்து விழித்தார் அகோரநாதன்.

''இது திருவையாறு சார். பட்டணமில்லே. நன்றாக முழிச்சுப் பாருங்க சார்!'' என்று புன்னகை நெளிய நினைவூட்டுகிறாள் மாலதி என்ற அந்த மங்கை.

அப்பொழுதுதான் தாம் வந்து தங்கியிருப்பது திருவையாற்றில் தம் நண்பரின் இல்லத்தின் மேல் தளத்து அறையென்றும், இசைப் பெரு மூவரில் ஒருவராம் தியாகையரின் திருநாள் இன்னும் ஓரிரு யாமங்களில் கொண்டாடப்படவிருக்கிறதென்றும், அவ்வறையில் படுத்துறங்கியவர்கள் திருநாளைக் காண, தம்முடன் சென்னையிலிருந்து வந்திருந்த தம் ஏழு மாணவியர் என்றும் அகோரநாதனுக்கு உணர்வு வந்தது. மறுகணமே வாரிச் சுருட்டி எழுந்தார். மின்சார விசையைத் தட்டினார். மங்கிய அவ்விளக்கு எரியலாயிற்று. பெட்டியைத் திறந்து சாக்லேட் டப்பாவைத் திறந்து கண்ணாடியை முன்பு வைத்து முகச் சவரம் செய்து கொண்டார். அதற்குள் மாணவியர் யாவரும் எழுந்து குளிக்கச் செல்ல ஆயத்தமாயினர். சிறிது நேரத்தில் அவ்வெண்மரும் காவிரி ஆற்றுக்குச் சென்று அரித்தோடும் நீரில் ஒரு மடுவினைத் தேடி, சுற்றிலும் கண்ணையும் நெஞ்சையும் கவரும் சோழ வள நாட்டின் தனிச் சிறப்பான இயற்கை வனப்பினையும் கண்டு மகிழ்ந்தவாறு நீராடினர். நீராடல் முடிந்ததும் தெருக்களை அடைத்துச் சென்ற கால்நடை ஊர்திகளையும், கார்களையும், பஸ்களையும் மக்களையும் கடந்தவாறு அகோரநாதனும் மாணவியரும் உணவு விடுதி ஒன்றினுட் சென்று சோழ நாட்டுக்கே உரித்தான இட்லி, ரவா தோசை, டிகிரி காப்பி இவற்றை உண்டு மகிழ்ந்து விடுதி திரும்பினர். வந்ததும் அகோரநாதன் தம் சுருண்ட கேசத்தைச் சீவி, கம்பளி முழுக் கால் சட்டையும் கோட்டும் போட்டுக் கொண்டார். மாணவியர் ஆயத்தமானதும் அகோரநாதன் எல்லோரையும் அமரச் செய்து தம் பெட்டியைத் திறந்து ஒவ்வொரு மாணவிக்கும் ஒரு அட்டை, கிளிப், ஒரு தஸ்தா காகிதம், பென்சில் இவற்றை அளித்துவிட்டு, ஒரு சிற்றுரை நிகழ்த்தினார்.

''அன்புள்ள மாணவிகளே, நான் நண்பர்களைக் கொண்டு நீங்கள் யார் யாரைச் சந்திக்க வேண்டும் என ஒரு முடிவுக்கு

வந்திருக்கிறேன்'' என்று கூறியவாறு அகோரநாதன் தம் கையிலிருந்த காகிதச் சுருளை விரித்தார். அது ஒரு வரை படம். திருவையாற்றின் முக்கியமான சில தெருக்கள் அதில் காண்பிக்கப்பட்டிருந்தன. எல்லா மாணவிகளும் ஆர்வத்துடன் வரை படத்தைக் குனிந்து நோக்கினர். ஒவ்வொரு மாணவிக்கும் இரண்டிரண்டு தெருக்களும் நாலு நாலு வீடுகளும் அவ்வீடுகளில் அவர்கள் பேட்டி காண வேண்டிய நபர்களின் பேர்களும் குறிக்கப்பட்டிருந்தன.

''தத்தமக்கு இடப்பட்ட இல்லங்களில் சென்று நீங்கள் பேட்டி காண வேண்டும். நீங்கள் எத்தனைக்கெத்தனை அதிகமாகப் புள்ளி விவரங்களைச் சேகரிக்கிறீர்களோ அத்தனைக் கத்தனை நாம் மேற்கொண்டுள்ள திறனாய்வும் உறுதி பெறும். சரி, கிளம்புகிறீர்களா...? பன்னிரண்டு மணிக்கு இங்கு எல்லோரும் திரும்பி வந்து சேருங்கள். தியாகராஜர் வாழ்ந்த இல்லத்தைக் காணச் செல்ல வேண்டும்'' என்று அகோரநாதன் விடையளித்ததும், மாணவிகள் அட்டை, காகிதம், எழுதுகோலுடன் வெளிப்போந்தார்கள்.

மாலதி தனக்கிடப்பட்டிருந்த தெருவில் புகுந்து முப்பத்து ஏழாம் எண்ணுள்ள இல்லத்தில் நுழைந்தாள். அவள் இடை கழியைக் கடந்ததும், ஒரு சிறுவன் மிடுக்கான அவள் தோற்றத்தையும் கைப் பையையும் அட்டை வகையறுவையும் பார்த்து, ''சச்சு, சோப்பு விக்கிற மாமி!'' என்று கத்தினான். சச்சு என்னும் அவன் தங்கை திரும்பி அவனைப் பார்த்து, ''ஒண்ணும் இல்லே. இது வந்து தலைக்குத் தடவிக்கிற வாசனை விளக்கெண்ணெய் விக்கிற மாமி... இல்லே இல்லே! ஸென்ஸஸ் மாமி... இல்லேல்லே... எலெக்ஷன் மாமி!'' என்று தீர்மானமாகக் கத்தினாள்.

''யார்ரு அங்கே!'' என்று ஒரு சுமங்கலி அடுக்களையினின்றும் வெளிப்பட்டு ''வாஷிங் சோப் விக்கிறவாளா!'' என்று மாலதியை ஏற இறங்கப் பார்த்து அவள் பையையும் காகிதங்களையும் உற்று நோக்கினாள்.

''இல்லே மாமி. நான் மெட்ராஸிலே ஆனர்ஸ் படிக்கிறேன். சங்கீதம் என்னுடைய விசேஷ பாடம். தியாகப் பிரும்மம் இருந்த காலத்தில் திருவையாறு எப்படி எல்லாம் இருந்திருக்கும் என்று ஒரு புத்தகம் எழுதுவதற்காகப் புள்ளி விவரங்கள் சேகரித்து வருகிறோம். இங்கே அனந்தலக்ஷ்மிப் பாட்டி என்று நூற்றிரண்டு வயதான ஒரு பாட்டி இருக்கிறாளாமே...?''

''இருக்கா. எங்க மாமனாருக்குக் கொள்ளுப் பாட்டி அவ.''



''அந்தப் பாட்டியைப் பார்த்துச் சில கேள்வி கேட்கணும். பார்க்கலாமா?''

''நீங்கதானா அது! நேத்து தண்டு சாஸ்திரிகள் வந்து மெட்ராஸிலேர்ந்து யாரோ பாட்டியைப் பார்க்கணும்னு சொன்னதாகச் சொன்னார். வாங்கோ'' என்று மாலதியை உள்ளே அழைத்துச் சென்று அடுக்களைக்குப் போகும் நடை உள்ளில் உட்கார்ந்திருந்த மூதாட்டிக்கு அறிமுகப்படுத்தினாள் அந்த அம்மாள். மூதாட்டிக்குக் கண்ணிரண்டும் தெரியாவிடினும் செவியிரண்டும் கூரியவை. கும்பகோணத்தில் கௌளி சொன்னால் கண்டியூரில் கேட்டுவிடும் செவிகள் அவை. அறிமுகத்துக்குப் பின்பு மாலதிக்கும் மூதாட்டிக்கும் கீழ்க்கண்டவாறு உரையாடல் நிகழ்ந்தது.

''தியாகப் பிரம்மத்தை நீங்க பார்த்திருக்கேளா பாட்டி?''

''நான் எப்படிடிம்மா பார்த்திருக்க முடியும்? எனக்கு முதலாவது ஆண்டு நிறைவு ஆச்சு. அதுக்கு நாலாம் நாள் அவர் சமாதி ஆயிட்டார். ஆனா நான் அவரைப் பத்தி நிறையத் தெரிஞ்சுண்டேம்மா!''

''எப்படி?''

''நான் மூணாவது இளையாளா பத்து வயசிலே வாழ்க்கைப்பட்டேன். எனக்கும் அவருக்கும் முப்பத்தாறு வயசு வித்தியாசம். அவருக்கு விவரம் தெரிஞ்ச நாளா தியாகராஜ ஸ்வாமியைப் பார்த்துண்டே இருந்திருக்கார் அவர். நாலு வருஷம் அவர்கிட்டே பாட்டும் சொல்லிண்டிருக்கார். அய்யர்வாள் ஆத்திலே நித்ய உத்சவமாகத்தான் இருக்குமாம். சீதா கலியாண உற்சவம் எப்ப நடத்தினாலும் இவர்தான் போய் அம்பது குடலை நூறு குடலைன்னு பூவாப் பறிச்சுக் கொண்டு கொடுப்பாராம். அதெல்லாம் சொல்ல ஆரம்பிச்சார்னா என் ஸ்வாமி என் ஸ்வாமின்னு தேம்பித் தேம்பி அழ ஆரம்பிச்சுடுவார். அவர் கிட்ட கேட்ட பாட்டெல்லாம் ராத்திரி இல்லே, பகல் இல்லே, பாடிண்டே இருப்பார். ஆனா அதையெல்லாம் கேட்டுப்புட்டு இன்னிக்கு இவா பாடறதைக் கேட்டா இங்கிலீஷிலே பாடறாப்லே இருக்கு. நருமோமு அவர் பாடின தினுசே வேறே. இன்னிக்கு நான் கேக்கற நருமோமு வேறே. இன்னும் எத்தனையோ பாட்டுக்கள் இப்படி அடையாளம் புரியாமல் இருக்கு. சுப்புணி பாடுவன், வையச்சேரி வைத்தா பாடுவன். அதுக்கப்பறம் எல்லாமே மாறிப் போயிடுத்து!''

''சுப்புணி, வைத்தா-இவாள்ளாம் யாரு?''

''சுப்புணின்னு பட்டணம் சுப்ரமண்யய்யரைச் சொல்றா பாட்டி. வையச்சேரி வைத்தான்னா மகா வைத்தியநாதய்யர்'' என்று சின்ன அம்மாள் விளக்கினாள்.

''அவாளைப் பாத்திருக்கேளா நீங்கள்?'' என்று பரவசமாகக் கேட்டாள் மாலதி.



''பட்டணம் சுப்ரமண்ய அய்யர்னு நீங்க சொன்னா நான் ஒப்புக்குவேனா! எனக்கு அவன் திருவையாத்து சுப்புணிதான் — இவர் தெவ சத்தன்னிக்கி ஒரு தடவை வந்து கண்ணுலெ ஜலம்விட்டுக் கதறிப்பிட்டான். புவனி தாஸ சுடனீயை மாமா மாதிரி பாட முடியலேயே எனக்குன்னு அன்னிக்கி புலம்பி மாஞ்சு போயிட்டான்.''

''அது சரி, தியாகையர் எப்படி இருப்பா ராம் பார்க்கறதுக்கு!''

''வெட வெடன்னு நல்ல சேப்பா இருப்பா ராம். நான் பார்க்கக்கொடுத்து வைக்கலெ!''

''அவருக்கு என்னென்ன பட்சணம் சாப் பாடு எல்லாம் பிடிக்குமாம்?''

''இதேதுடிம்மா! இதெல்லாம் எதுக்குக் கேக்கறது இந்தப் பொண்ணு! ஏண்டிம்மா! நம்ம ஊரிலே என்ன சாப்பிடுவா எல்லாரும்! சாதம், குழம்பு, கூட்டு, பாயசம், சுகியன், வடை, அதிரசம், இட்லி தோசை, கொழுக் கட்டை — இதைத்தானே நாம் சாப்பிட றோம்! இதுகளைத்தான் தியாகையரும் சாப் பிட்டிருப்பார். ஆனா இந்த நாள் மாதிரி உருளைக் கிழங்கு, காப்பி, டீ எல்லாம் அப்ப ஏது? கிழங்குன்னா கருணைக் கிழங்கு, சேப்பங் கிழங்குதான். அவர் பரம ஆசாரமா யிருப்பாராம்.''


''உண்மைதான் பாட்டி. அப்புறம் தியா கப்பிரம்மம் திருப்பதிக்குப் போனாராமே? இப்படிக் காவேரியைத் தாண்டித் தஞ்சாவூர் போனாராமா? இல்லே, இப்படியே கும்பகோ ணம் போய்ப் போனாராமா?''

''அதெல்லாம் யாருடிம்மா கண்டா? திருப்பதிக்குப் போயிட்டு வந்தாராம். அது தெரிஞ்சிருக்கு! கொட்டையூர் வழியாப் போனா என்ன? கண்டியூர் வழியாப் போனா என்ன? திருப்பதிக்குப் போயிட்டு வந்துட் டார். அத்தோட விடுவியா?''

மாலதி வெகு வேகமாக எழுதிக் கொண் டிருந்தாள். மூதாட்டியின் பேச்சில் மயங்கி விட்டதால் மணி பன்னிரண்டடித்ததையும் ஒரு தஸ்தா தாள் தீர்ந்து விட்டதையும் பேட்டியை ஒரு கட்டத்தில் நிறுத்தி எஞ்சிய வற்றைப் பிற்பகலில் வந்து கேட்டுக் கொள்வ தாகக் கூறி விடைபெற்றாள் மாலதி.

தாமதித்து வந்ததற்காக அகோரநாதன் மாலதியைக் கடிந்து கொண்டு, எல்லோரை யும் தியாகையர் வாழ்ந்த இல்லத்துக்கு அழைத்துச் சென்று அவர் இறைவனைத் தொழுத இடம், உண்ட இடம், உறங்கிய இடம் போன்ற பல இடங்களைக் காண்பித்து விளக்கினார். பிறகு உணவு விடுதியில் பகல் உண்டியருந்தி, விடுதிக்குச் சென்று, தத்தம் பேட்டிகளைப் பற்றி மாணவிகள் சுருங்க எடுத்துரைத்தார்கள். தனக்குப் பேட்டி யளித்தவர் தானே கூறுவது போல் எழுதியிருந்த கிரிஜா, அதைப் படிக்கத் தொடங்கினாள்.

''என் பெயர் ஞானஸ்கந்தன். இண்டர் மீடியட் வரையில் படித்திருக்கிறேன். என் முப்பாட்டனாரின் முப்பாட்டனாரான ஐயா தீட்சிதர் நூற்றெட்டு வாஜபேய வேள்வி களும், ஐந்து முறை சோம யாகமும் செய்த வர். நல்ல இலக்கிய சாதனைகள் புரிந்தவர். பஞ்சநதீச்வரர் பேரில் முப்பது காவியங்களும் மூன்று நாடகங்களும் இயற்றி யிருக்கிறார். அவருடைய பல அபிப்பிராயங்கள் போற்றத் தக்கவை. ஏனெனில் எனக்கும் அவற்றோடு உடன்பாடு உண்டு. என்னவெனில், கலை என்னும் ஏணியில் சங்கீதம் என்பது அடிப் படி. அதாவது மிக மிகத் தாழ்ந்தது. கலைகளில் சிறந்தது இலக்கியம்தான். அதற் குப் பிறகுதான் சிற்பம், ஓவியம், நடனம், இசைக் கலை எல்லாம் வரும். இலக்கியத்தி லும் தலையாயது உரைநடை இலக்கியமே. கவிதை கடையானது. உரைநடையிலும் சிறு கதையும் நாவலும்தான் தலையாயவை. ஹென்ரி ஜேம்ஸ், மாப்பஸான், செக்காவ் போன்று எழுதக் கூடியவர் நம் நாட்டில் ஆறே பேர்தான் உண்டு. ஒன்று நான், இரண் டாவது சிறுத்தொண்டர், மூன்றாவது சௌனகர் என்ற புனை பெயரில் எழுதும் சோனி, நாலாவது ஐயப்பா, ஐந்தாவது மகிஷபதி, ஆறாவது தாஸரதி. இந்தத் தாஸரதி கூட இப்பொழுது ரொம்பத் தெரிந்தவன் மாதிரி நாவல் நாடகம் எல்லாம் எழுதத் தொடங்கி விட்டான். இனிமேல் என்னுடைய பட்டிய லில் நான் அவனைச் சேர்ப்பதாக உத்தேச மில்லை... தியாகையர் நாவல் எழுதியிருந் தால் நோபல் பரிசு வாங்கி யிருப்பார். அவ ருக்கு அவ்வளவு ஆற்றல் இருந்தது. ஆனால் பயன்? விழலுக்கிறைத்த நீராக, இசைப் பாலையில் தம் திறமைகளைக் கொட்டி வீணாக்கி விட்டார். அதனால் எங்கள் முப்பாட்டனா ரான ஐயா தீட்சிதருக்கு அவரைக் கண்டால் ஆகவில்லை. ஆனால் தியாகையர் மீது எனக்கு ''பர்ஸனல்'' விரோதம் ஒன்றும் கிடையாது. அதனால்தான் அவரது பாட்டுக்களை பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்து வரு கிறேன். ஒவ்வொரு கீர்த்தனைக்கும் ஐயா





விரம் பிராங் தருவதாக ''பாரிஸ் பொக்கே'' சஞ்சிகை சொல்லியிருக்கிறது. அப்படி ஐம்பதாயிரம் பிராங்க் சேர்ந்ததும் மாம்பலத்தில் ஒரு வீடு வாங்கிக் கொண்டு குடியேற உத்தேசம். இத்தனை தாராளமாக நம் தேசம் இல்லாததால் தான் தியாகையர் இலக்கியத்துக்குப் பதிலாக, குறுக்கு வழியில் புகழ் தேடும் சங்கீதக் கலையில் ஈடுபட்டார் என்பது என் கருத்து....''

ஞானஸ்கந்தனுரின் கருத்துகள் பெரும் சலசலப்பை மாணவியரிடையே எழுப்பி, ஓயாத சொற்போரை மூட்டும் தருணம் நெருங்கவே அகோரநாதன் ''ஒழுங்கு, ஒழுங்கு'' என்று அடக்கி, வாதப் பிரதிவாதங்கள் தேவை இல்லை என்றும், அவரவர்கள் குறிப்புக்களைச் சுருக்கமாகக் கூறவேண்டும் என்றும் உத்தரவிட்டு அலமுவைப் பேச அழைத்தார்.

''நான் வைத்தியலிங்க ஆசாரி என்பவரைச் சந்தித்தேன். அவருடைய முன்னோர்கள் தாம் தியாகையருக்கு ஜாலரா, உஞ்சவிருத்திக்கான பாத்திரம் முதலியவற்றைச் செய்து தந்ததாகக் கூறினர். அதற்கு மேல் உணர்ச்சிப் பெருக்கால் அவரால் பேச முடியவில்லை. நன்றி உணர்விலும் அவரது நாத்தழுதழுக்க ஏதும் கூற முடியாமல் வருந்தினார். தியாகையருக்கு இச் சாதனங்களைச் செய்தளித்த நாள் முதலாக அவருடைய வம்சத்தில் தேவை, முடை என்பதே இல்லாது போய், சீரும் சம்பத்துமாக வாழ்கிறார்களாம். அவருடைய உறவினர்களில் பலர் தென்னாப்பிரிக்காவிலும் இலங்கையிலும் ஒப்பந்தக் கூலிகளாக வேலை செய்யப் போய் அவதியுற்ற காலையில் அவர் குடும்பம் செல்வத்தில் புரளுகிறதென்றும், அதற்கு ஒரே காரணம் தியாகையர்தான் என்றும் கூறினர் அவர்'' என்று சொல்லி முடித்தாள் அலமு.

பின்பு எழுந்த உமா, கிரிஜாவைப்போலவே பேட்டியளிப்பவர் தன்மையில் சொல்வதாகவே எழுதியிருந்தாள். ''என் பெயர் ஐப்பேசக் கவிராயர். சித்திரக் கவி ஆயிரக் கணக்கில் ஒரு நாளில் பாடுவேன். என் பெரியன்னையின் முப்பாட்டனாரின் அருளால் கிடைத்த வரம் அது. அந்த முப்பாட்டனார் தான் ஐயாறப்ப கவிராயர். அவர் தியாகையரிடம் தனியன்பு கொண்டவர். அதனால் 'தெலுங்கில் பாடாதீர். மக்களுக்குப் புரியும் தமிழில் பாடுவீர்' என்று பன்முறை மன்றாடியும் என்ன காரணத்தாலோ ஐயரவர்கள் கேட்கவில்லை. 'தமிழ் நாட்டு இசைப் புலவர்கள் இந்தத் தெரியாத மொழியில் பாடினும் பாக்களின் பொருளைத்தையும் சிதைத்துக் கொல்வார்கள்' என்று எச்சரித்தும் ஐயரவர்கள் கேட்கவில்லையென்று தெரிகிறது. என் பாட்டனார் கூறியது மெய்யாகிவிட்டது என்பதை நான் விசனத்துடன் கூறத்தான் வேண்டியிருக்கிறது.''

அம்புஜம் எழுந்தாள். ''நான் பேட்டி கண்டது பிரணதார்த்திகர சர்மாவை. இவர் எம். ஏ. படித்து, அரசாங்கத்தில் நல்ல பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர். தியாகையர் வருடா வருடம் சீதா கல்யாணம் செய்வதைக் கண்டு இவர் வெகுண்டெழுகிறார். 'ராமன் ஆப்டர்ஆல் ஒரு மனுஷன். அவனைத் தெய்வத்துக்குச் சமானமாக வைத்துக் கலியாணம் செய்யலாமா? ஏன் பார்வதி கலியாணம் இல்லையா? மீனாட்சி கலியாணம் இல்லையா? இதையெல்லாம் ஏன் தியாகையர் செய்திருக்கக் கூடாது? அதனால் தியாகையருக்கு 'ஒன் ட்ராக் மைண்ட்' என்றுதான் முடிவு கட்டவேண்டியிருக்கிறது. அதனால்தான் அவர் காலத்தில் வாழ்ந்த என் தாத்தாவின் எள்ளுப் பாட்டனாரான பஞ்சு சிரௌதிகள் அவரை முகாலோபனம் செய்வதையே நிறுத்திவிட்டார்' என்று சர்மா அவர்கள் கூறினார்கள்.''

ரமா ஏகநாத் ராவ் என்பவர் கூறியவற்றை எழுதியிருந்தாள். ''மராட்டிய மன்னரான சரபோஜி அழைத்ததற்குத் தியாகையர் 'நரஸ்துதி இந்த நாவால் செய்ய மாட்டேன்' என்றாராம். ராஜா தெய்வத்துக்குச் சமானம், விஷ்ணு அம்சம் என்று நம் ஸ்மிருதிகள் கோஷிக்கின்றன. மேலும் ஒவ்வொரு உயிரிலும் கடவுளைக் காணும் ஐக்கிய பாவம் தியாகையருக்கு இருந்திருந்தால் இந்த மாதிரி பதிலை அவர் சொல்லியிருக்க மாட்டார் என்பது ஏகநாத்ராவின் கருத்து'' என்று ரமா கூறி அமர்ந்தாள்.

அதற்குள் நேரமாகி விட்டது. ஏழு மாணவியரும் ஒவ்வொரு பேட்டியைத்தான் முடித்திருந்தார்கள். இன்னும் மும்மூன்று முடித்தாக வேண்டும். எல்லாவற்றையும் முடிக்க மூன்று நாட்கள் எப்படிப் போதும் என்று கலங்கினார் அகோரநாதன். மீண்டும் மாணவியர் கிளம்பினார்கள்.

ஐந்தாம் நாள் இரவுதான் எல்லாம் முடிந்தன. அலமு உதட்டைப் பிதுக்கி முனகினாள். ''இருந்திருந்து இத்தனை வருஷம் கழிச்சு உற்சவம் பார்க்கணும்னு வந்தோம். ஒரு கச்சேரி கேட்கலே. சமாதியைக் கூட எட்டிப் பார்க்கலே. இத்தனை நாளா பேட்டி பேட்டி, பேட்டி. கை ஒடிய ஒடிய எழுதியே தீர்த்துப் பிட்டோம்!'' என்று அவள் அழாக் குறையாக நொந்து கொண்டாள். மற்றவரும் ஒத்துப் பாடினார்கள்.

''பாட்டும் கூத்தும் கேட்கவா வந்தோம்? வேலையல்லவா முக்கியம். கல்லூரியில் படிக்கிற நீங்கள் இந்தக் கட்டுப்பாட்டைக் கூடத் தாங்காவிட்டால் என்னதான் செய்யப் போகிறீர்களோ?'' என்று பெருமூச்செறிந்து ''சரி, சமாதிக்கு வாருங்கள் அதையும் பார்த்துவிடலாம்'' என்று கிளம்பினார் அகோரநாதன்.

இவர்கள் போவதற்கும் பாகவதர்வாள் ஆஞ்சனேய உற்சவத்தை முடித்து வெளியே வரவும் சரியா யிருந்தது.

எல்லோரும் காலையில் தஞ்சை வந்து, வரகப்பையர் சந்தில் தியாகையர் ஆராதித்த விக்கிரகங்களைக் கண்டுவிட்டு போட் மெயிலில் சென்னை திரும்பி வந்தார்கள்.

''ஐயரும் ஐயாறும்'' என்று ஆங்கில நூலை எழுதி அடுத்த ஆண்டு பகுள பஞ்சமியன்று தம் நண்பரிடம் காட்டினார் அகோரநாதன். அதைப் படித்து, ''அகோரம், இந்த மாதிரி 'ரிசர்ச்சை நான் என் ஆயுசிலேயே பார்த்தது கிடையாது. மண்டூகங்கள் நெறைஞ்ச இந்தத் தேசத்திலா இதை வெளியிடறது? நான் டர்னருக்கு எழுதுகிறேன்'' என்று அதை அமெரிக்காவுக்கு அனுப்பினார் நண்பர்.


''சங்கீத மூவரில் ஒருவரைப் பற்றித்தானே எழுதியிருக்கிறார் அகோரநாதன். மற்ற இருவரையும் பற்றி இதே மாதிரி திறனாய்வு எழுதட்டும். அதற்காக இருபதாயிரம் டாலர் சாங்ஷன் செய்கிறோம்'' என்று டர்னர் பதில் எழுதினார். அவற்றையும் எழுதி முடித்து முன்னுரையில் மாணவியரின் உதவிக்கு நன்றி செலுத்தினார் அகோரம். அதன் பயனாக அலமுவுக்கு அமெரிக்காவில் படிக்க உதவிச் சம்பளம் கிடைக்கவே அவள் அங்கு போய் அமெரிக்கர் ஒருவரை மணந்து அங்கேயே தங்கி விட்டாள். மற்றவர்களுக்குச் சங்கீதப் பேராசிரியைகளாகவும் ஆசிரியைகளாகவும் இந்தியாவில் பல இடங்களில் வேலை கிடைத்தது. கிரிஜா ஒரு கலெக்டரை மணந்து கொண்டாள். ஆனால் ஆராய்ச்சியை விடவில்லை. அலமுவின் யோசனையின் பேரில் தியாகையர் பாடியது தமிழ்த் தெலுங்கா, தெலுங்குத் தெலுங்கா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறாள். அதை முடித்து வெற்றி பெற்றால் அவளுக்கு கிராண்ட் கான்யான் பல்கலைக்கழக 'டாக்டர்' பட்டம் கிடைக்கும்.

மங்கல நன்னாளில்
அணியவோ......
அளிக்கவோ......

''தாரகராம் ஸில்க் ஹவுஸின்''
தரமிக்க பட்டுப் புடவைகளைத்
தேர்ந்தெடுங்கள்

•

தாரகராம் ஸில்க் ஹவுஸ்
ராம்நகர் – – கோயமுத்தூர் – 9
(போன் : 2871)




வருஷம் முழுவதும் பண்டிகையின் குதூகலம்...

நேஷனல் எக்கோ ரேடியோ


அளிக்கும் இன்ப அனுபவம்!

பண்டிகை நாட்கள் முடிந்த பிறகும், குடும்பத்தினர் அனைவரும் இணையிலா இசை இன்பத்தை அனுபவிப்பதற்கு ஒரு நேஷனல்-எக்கோ ரேடியோ இருந்தால்போதும். அது உங்கள் வீட்டை இனிமையான சங்கீதம் நிறைந்த இன்ப உலகமாக மாற்றும்!

உங்களுக்குத் திருப்தியளிக்கும் முறையில் தயாரிக்கப் பட்ட இந்த ரேடியோக்கள் உங்கள் சக்திக்கேற்ற விலைகளில் உள்ளன... நீங்கள் தேர்ந்தெடுக்க, ரூ. 125.00லிருந்து ரூ. 725.00 வரையிலுள்ள 9 வனப்பு மிகுந்த மாடல்கள்! உங்கள் அருகிலுள்ள நேஷனல்-எக்கோ வியாபாரியை இவற்றை இலவசமாக இயக்கிக் காட்டச் சொல்லுங்கள்.




மாடல் U-764:
5 வால்வுகள், 3 பாண்டுகள்
அழகிய பெட்டி. ரூ. 265.00




மாடல் U-755:
6 'நோவல்' வால்வுகள்,
3 பாண்டுகள் வனப்புள்ள
மரப்பெட்டி. ரூ. 355.00







மாடல் 768: 9 வால்வுகளின் வேலையைச்
செய்யும் 6 'நோவல்' வால்வுகள்,
8 பாண்டுகள். அழகிய மரப்பெட்டி.
ரூ. 570.00




மாடல் B-764:
ட்ரை பாட்டரி ஸெட்.
4 வால்வுகள், 3 பாண்டுகள்
அழகிய பெட்டி. ரூ. 265.00




மாடல் U-756: 3 'நோவல்' வால்வுகள்,
2 பாண்டுகள். குறைந்த விலையில்
பெரிய ஸெட்களின் மதிப்பு. கண்கவர்
பெட்டி. ரூ. 125.00



மாடல் A-744:
8 வால்வுகளின் வேலையைச் செய்யும்
6 'நோவல்' வால்வுகள், 4 பாண்டுகள்.
கண்ணைக்கவரும் பெட்டி. ரூ. 405.00



மாடல் B-755:
ட்ரை பாட்டரி ஸெட். 5 'நோவல்'
வால்வுகள், 3 பாண்டுகள்.
வனப்புள்ள மரப்பெட்டி. ரூ. 355.00



மாடல் A-767:
7 வால்வுகள், 8 பாண்டுகள். வனப்பு
மிகுந்த பெரிய பெட்டி. ரூ. 725.00

விலைகள் எல்லாம் எக்ஸைஸ்
வரி உட்பட; இதர வரிகள் தனி

GRA

ஜெனரல் ரேடியோ &
அப்ளையன்ஸஸ்
லிமிடெட்

பம்பாய் . கல்கத்தா
மதராஸ் . டில்லி . பாட்னா
பெங்களூர் . ஸெகந்திராபாத்

JWT/GRA/4226a

நேஷனல் எக்கோ



வால்மீகி வசித்த தலம்



குசலவருடன் வால்மீகி

ஸ்ரீ ராமனும், சீதையும், ராம சீதையின் காதையை அருளிய வால்மீகி முனிவரும், அந்தக் கதையை ராமனின் திரு முன்னரே அவன் யாரென்று அறியாமல் பாடிய தெய்வக் குழந்தைகளான லவகுசர்களும் பாரத மக்களின் உள்ளங்களி லெல்லாம் வாழ்கிறார்கள். உள்ளம் என்று வந்துவிட்டால் அதன்பின் சரித்திரமும், பூகோளமும் எங்கோ கைகட்டிப் பின் நின்றுவிட வேண்டியது தானே; காலத்திலோ, இடத்திலோ வாழ்ந்து முடிவதற்காகவா ஆண்டவன் மக்களைப் படைக்கிறான்? உள்ளத்தில் வாழ்ந்து, உள்ளத்தால் வாழ்ந்து, முடியாமலே நிலைபெறுவதற்கு அல்லவா மனிதன் என்ற ஜீவராசியைப் பகவான் படைத்திருக்கிறான்?

எனவே நாம் உள்ளத்தில் வாழ வைக்கும் சரிதங்களை, வெளியுலகிலும் நிகழ்த்திப் பார்க்கும்போது தோன்றும் கற்பனைகளைக் காலத்துக்கோ இடத்துக்கோ உட்படுத்தி, சரி தப்பு பார்ப்பதில் பொருளே இல்லை.


இவ்வாறு, பாரத உள்ளத்தில் கலந்து விட்ட ராமனையும், சீதையையும் ஆதி முனி வால்மீகியையும் லவகுசர்களையும் தொடர்புறுத்தும் பல பதிகள் இந்தியாவில் உண்டு. இந்தியாவில் தமிழகத்தில் உண்டு. தமிழகத்திலும் சென்னைக்கு ஆறே மைலில் அண்டர் புகழும் பெங்களூர் சாலையை அடுத்து மிகவும் வசதியான இடத்திலேயே இப்படிப்பட்ட ஒரு தலமுள்ளது.

அதைக் கோயம்பேடு எனச் சொல்கிறார்கள். வால்மீகி பகவானின் ஆசிரமம் இங்குதான் இருந்ததென்றும், சீதா பிராட்டி லவகுசர்களை இங்குதான் ஈன்றது என்றும், குசலவபுரம் என்பதே மருவிக் கோசை நகராகிப் பிறகு கோயம்பேடாகி விட்டது என்றும் ஸ்தல புராணம் கூறுகிறது. ராம பிரானின் அசுவமேதக் குதிரையை லவ குசர்கள் பிடித்துக் கட்டியதாகவும், இதன் மீது தம் புத்திரர்களை இன்னாரென்று அறியாமல் அயோத்தியர் கோமான் அவர்கள் மீது போர் தொடுக்க, வீரத்தில் சிறந்த அந்த ஞானக் குழந்தைகள் ராம லட்சுமணாதியரையும் வதம் செய்ததாகக் கதை விரிகிறது. பிறகு வால்மீகி முனிவர் சிவபெருமானின் லிங்க உருவத்தை ஸ்தாபிக்க, லவகுசரும் அதனைத் தொழுதிருக்கிறார்கள். அதன் பயனாக மாண்ட ராம லட்சுமணர்கள் மீண்டதாயும், அப்படி அருள் புரிந்த பரமேசுவரன் தான் இன்று கோயம்பேடு ஈசுவரன் கோயிலில் குடி கொண்டிருக்கிறான் என்றும் ஐதிஹ்யம். வடக்குப் பார்த்த ஈசன் சந்நிதி மிகவும் அபூர்வமாகும். இங்கு மூலஸ்தானப் பெருமான் வடக்கு பார்த்திருப்பதோடு மடக்குப் போலவும் ஆவுடையார் மீது சாய்ந்திருப்பது அதி விசேஷமாகும்.

சென்னைக்கு அருகில், சாந்தச் சூழலிலே இப்படியொரு ஈசுவரன் கோயில் மட்டுமின்றி அதனை அடுத்து அதே அளவு புகழ் கொண்ட பெருமாள் கோவிலும் உள்ளது. கைலாசமும் வைகுண்டமும் ஒன்று சேர்ந்தாற் போலச் சிவன் கோயிலுக்குப் பக்கத்திலேயே, வைகுண்ட வாஸப் பெருமான் எழுந்தருளியிருக்கிறார். ராமபிரான் நாராயணனே ஆனபடியால் அவன் தனது குமாரர்களுடன் போர் புரிந்து பிரக்ஞை இழந்தபோது வால்மீகி முனிவர் நாராயணனைத் துதிக்காமல், பரம்பொருளின் பரமசிவக் கோலத்தைப் பிரார்த்தித்திருக்கிறார். ஆனால் இதற்கு முன்பு அவர் பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமனைத்தான் தொழுதிருக்கிறார். அந்தப் பரந்தாமனே இந்த வைகுண்ட வாஸப் பெருமான் என்று சொல்கிறார்கள்.


இரண்டு கோயில்களும் புராதனமானவை. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மூன்றாவது குலோத்துங்க சோழன் கோசைநகர் கோயில்களைப் பரிபாலித்து வந்திருக்கிறான்.

கோயம்பேடு கோயிலும், குளமும்






பிள்ளையார்



நடராஜர்




துர்க்கை

விஜய நகர மன்னரான புக்கராயரும் இந்தத் தலத்தில் தனியானதோர் ஈடுபாடு காட்டியிருக்கிறார். சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரும் பயன் அளிக்கும் கல்வெட்டுச் சிறப்பு மிக்க ஆலயங்கள் இவை. அந்தக் கல்லில் எழுத்தை மட்டும் வடிக்காமல் எண்ணத்தை வடித்துச் சமைத்த எழிலார்ந்த பல திரு உருவங்கள் இங்கு உண்டு. அவற்றில் சிலவற்றையே இந்தப் பக்கங்களில் காண்கிறீர்கள். ஸ்தல வரலாற்றுக்கிசைய சீதா ராமனுக்கு உலோகச் சிலைகள் உள்ளன. குசலவர்களோடு கூடிய வால்மீகிக்குச் சிலா விக்கிரகம் உள்ளது.

இவ்விரு அற்புதமான ஆலயங்களும் மகிமை மங்கி வந்திருக்கின்றன. தற்போது இவற்றைப் புதுப்பிக்கப் பெருமக்கள் பலரடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. கோபுரங்கள், மண்டபங்கள், திருக் குளம் இவற்றை ஜீர்ணோத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்யக் குழுவினர் உத்தேசித்திருக்கிறார்கள். குழுவின் காரியதரிசியும் பொருளாளருமாகிய திரு நந்தகோபால் அவர்கள் அல்லும் பகலும் இத்திருப்பணிக்காகவே உழைத்து வருகிறார். இந்த நல்ல பணியை ஸ்ரீகாமகோடி பெரியவர்கள் மனமுவந்து அங்கீகரித்திருக்கிறார்கள். சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்பு அவர்கள் கோயம்பேடு ஆலயத்திலே சந்திர மௌளீசுவர ஆராதனம் நடத்தி, இப் பதிக்குப் பழம் பெருமையுடன் புதுப் பெருமையும் கூட்டி இருக்கிறார்கள்.

இவ்வாலயத் திருப்பணிக்கு அன்பர்களின் திரவிய உதவி மிகவும் தேவைப்படுகிறது. தினமணி வம்ச திலகனான ராம பிரானுக்காக அவனது இளவல்களாகிய லவகுசர் பூஜித்த இத்தலத்துக்குக் கைங்கர்யம் செய்யக் கதிரவன் திருநாளாகிய பொங்கல் ஒரு நல்ல வாய்ப்பாகும். இந்தத் திருப் பணியில் பங்கு பெற விரும்புவோர், **திரு கே. ஆர். நந்தகோபால், பொருளாளர், திருப்பணிக் குழு, கோயம்பேடு கிராமம், வில்லிவாக்கம் போஸ்ட், சென்னை** என்ற முகவரிக்கு நிதி அனுப்பி வைக்க வேண்டும். 'தருமமிகு சென்னை'க்கு அருகே கோயம்பேடு ஆலயத்தில் எழுந்தருளியுள்ள தர்ம சம்வர்த்தனி இந்த சிவ—விஷ்ணு தர்மம் தழைக்க அருள்வாளாக.

Photo Copyright: **Archaeological Survey of India**



வெண்கலச் சிலையில் ராமபிரானும் சீதையும் — முன் அழகும் பின் அழகும்.



ஆண்டாள்

எலிகள்

தமிழழகன்

வட்ட வட்ட எலி
வால் இல்லாத எலி

தட்டில் அமரும் எலி
தளதளக்கும் எலி

பட்டுப் போன்ற எலி
பார்க்க வெள்ளை எலி

சுட்டுத் தின்னும் எலி
ஜோராய் இருக்கும் எலி

என்ன எலி தெரியுமா ?
சொன்ன பிறகே புரியுமா ?


[illegible]

என்ன விநோதம் பாரு !

✲ வருஷத்துக்கு 365 நாட்கள்தானே? ஆனால் கி. மு. 47ம் ஆண்டுக்கு மட்டும் அப்படியல்ல. ஜூலியஸ் சீஸர் என்ற ரோமானிய மன்னனின் ஆணைப்படி இந்த வருஷத்துக்கு 445 நாட்களாகக் கணக்கிடப்பட்டது.


✲ ஒரு மனிதன் இரவு பகல் தூங்காமல் எங்கும் நிற்காமல் நடந்துகொண்டே இருந்தால் உலகத்தை 428 நாட்களில் சுற்றி வந்து விடலாம். எக்ஸ்பிரஸ் வண்டி இதேபோல் 40 நாட்களில் உலகைச் சுற்றி வந்துவிடும். ஒலிக்குச் சாதாரண உஷ்ண நிலையில் 32½ மணியும் ஒளிக்கு 1/10 விநாடியும் பிடிக்கும். இதே போலத் தாமிரக் கம்பியில் மின்சாரத்தைச் செலுத்தினால் 1/10 விநாடியில் உலகைச் சுற்றி வந்துவிடும்.

✲ சமுத்திரத்தின் ஆழம் எவ்வளவு என்று தெரியுமா? நீர் மட்டத்திலிருந்து ஆறரை மைல்களுக்கும் அதிகமான ஆழம் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பிலிப்பைன் தீவுகளை அடுத்துத்தான் இத்தகைய அதிகமான ஆழமுடைய இடங்கள் இருக்கின்றன.



உங்கள் ஆல்பத்துக்கு

இங்கிலாந்திலே அரசபரம்பரையினர் அபூர்வமானதும் விலை மதிப்பற்றதுமான பொருள்களை வைத்துப் பாதுகாக்கு மிடத்துக்கு 'டவர் ஆப் லண்டன்' என்று பெயர். சரித்திர முக்கியத்வம் வாய்ந்த பல நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்றிருக்கின்றன. இந்த மாளிகையைக் காவல் காக்கும் காவலாளிகளுக்கே தனிப்பட்ட மதிப்பு உண்டு என்றால் அதன் பெருமையைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? 'டவர் ஆப் லண்டனை'க் காவல் காக்கும் விசேஷக் காவலாளி ஒருவரையே மேலே காண்கிறீர்கள்.



இங்கு 64 கட்டங்கள் இருக்கின்றன. இதைப் பார்த்ததும் ஏதோ தாயக்கட்டான் விளையாட்டுப் போலிருக்கிறது என்று எண்ணி விடாதீர்கள். இது ஜனவரி சீஸனல்லவா? பொருட்காட்சிகள், சங்கீத விழாக்கள் எல்லாம் உண்டே. ஒரு கண்காட்சியில் உள்ள 64 கடைகளையும் இது குறிக்கிறது. அடுத்தடுத்துள்ள வெவ்வேறு ஸ்டால்களை விளக்கவே வண்ணக் கட்டங்களும் வெள்ளைக் கட்டங்களும். கிட்டுவும் பட்டுவும் கண்காட்சிக்குப் போனார்கள். 'கி' என்பது கிட்டு. 'ப' என்பது பட்டு. கூட்டத்தில் இருவரும் பிரிந்து விட்டார்கள். கிட்டு பட்டுவை வந்தடைய வேண்டும். மிகக் குறைந்த திருப்பங்களில் எல்லாக் கடைகளுக்கும் ஒரே ஒரு முறை விஜயம் செய்து விட்டு அவன் பட்டுவிடம் வரவேண்டும். பல வழிகள் இருந்தாலும் மிகக் குறைந்த திருப்பங்களில் எல்லாக் கடைகளையும் பார்க்கவேண்டும் என்பதுதான் முக்கியம். முடியுமா என்று பாருங்கள். —**விடை அடுத்த இதழில்**

வரவேற்பும் வாழ்த்தும்

குழந்தைகளுக்கெல்லாம் எமது பொங்கல் வாழ்த்துக்கள்.

வாழ்த்து என்றதும் உலகில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள், பிறரை எப்படி எல்லாம் வரவேற்று உபசரிக்கிறார்கள் என்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று தோன்றுகிறது.

ஜப்பானியர் (1) முழங் காலில் கைகளை ஊன்றித் தலையை வளைத்து, குனிந்து விருந்தினர்களை வரவேற்பார்கள்.

மேல்நாடுகளில் விருந்தினர்களைக் கண்டதும் கைகளைக் குலுக்கியும், பெண்களைச் சந்திக்கும்போது மரியாதையாகத் தலையில் உள்ள தொப்பியை உயர்த்துவார்கள்.

வாழை இலையால் முடைந்த பெரிய தொப்பிகளைத் தலையில் அணிந்து கொண்டு விருந்தினரை வரவேற்பார்களாம் இந்தோ சீனாவில் (2) உள்ள பெண்கள்.



பாகிஸ்தானின் மலைப் பகுதியில் வாழும் 'மோக்' என்ற ஒரு வகுப்பார் விருந்தாளிகளைக் கண்டதும் மார்புறத் தழுவி வரவேற்பார்கள். பிறகு பேசிக் கொண்டிருக்கும்போது விருந்தினர்களின் கையை விடாமல் பற்றிக்கொண்டிருப்பார்கள்.

ஹவாய்த்தீவுக்கு நீங்கள் போனீர்களானால் உங்களுக்கு ஹவாய்த் தீவு வாசிகள் (3) வண்ண மலர்களால் ஆன அழகான மாலையை அணிவித்து வரவேற்பார்கள்.

சீனக்காரர்கள் பலே கெட்டிக்காரர்கள். மேனாட்டாரைப் போலக் கையைக் குலுக்க விருந்தாளிகளிடம் தங்கள் கையை நீட்டமாட்டார்கள். விருந்தினரைக் கண்டதும் தங்கள் கைகளைத் தாங்களே குலுக்கிக் கொள்ளுவார்கள். (4)

எஸ்கிமோக்கள் (5) தங்களுக்கு மிகவும் வேண்டப்பட்டவர்களைச் சந்தித்ததும் மூக்கோடு மூக்கைத் தேய்த்துத் தங்கள் அன்பைத் தெரிவித்துக் கொள்ளுவார்களாம்.


அராபியர்கள் (6) விருந்துண்ணுகையில் மூன்று கோப்பை காப்பிக்கு மேல் குடிக்க மாட்டார்கள். மூன்றுவது கோப்பை குடித்தானதும் போதும் என்று மரியாதையாகக் காப்பிக் கோப்பையை ஆட்டிவிட வேண்டும். இல்லாவிட்டால் பானம் பரிமாறுபவன் குடிக்கக் குடிக்க ஊற்றிக் கொண்டே இருப்பான். விருந்து முடிந்ததும் சூடான வாசனைத்தைலம் விருந்தினர்களுக்கு வழங்கப்படும். இதனால் விருந்தினர்கள் தங்கள் தாடிகளுக்கு வாசனை ஏற்றிக் கொள்ளுவார்கள். உண்ணும் போது உணவு தாடிகளில் விழுந்திருந்தால் அதன் வாசனையை மாற்றவே இந்தப் பழக்கம்.


நாக்கை நீட்டினால் கேலிசெய்வதாகத் தானே அர்த்தம்? ஆனால் திபேத்தில் நாக்கை நீட்டுவது மரியாதை. (7) திபேத்தியர்கள் விருந்தினர்களை வரவேற்பதற்கு அடையாளமாக ஒரு வெள்ளைத் துணியை அவர்களுக்குப் பரிசளிப்பார்கள். விருந்தாளிகளும் ஒரு வெள்ளைத் துணியைத் திரும்பத் தரவேண்டும். இந்தத் துணிக்குக் 'காட்டா' என்று பெயர். எதிர்பாராது விருந்தினர் யாராவது வந்து விட்டால் வரவேற்கவென்றே திபேத்தியர் எப்போதும் இம்மாதிரியான வெள்ளைத் துணிகளை நிறைய வைத்திருப்பார்களாம்.

நம் நாட்டில் விருந்தினர்களை வரவேற்கும் பழக்கம் பிராந்தியத்துக்குப் பிராந்தியம் மாறுபட்டிருந்தாலும் பொதுவாகக் கை கூப்பி 'வணக்கம்' என்று வரவேற்பதுதான் நம் பாரதப் பண்பாடு என்று உங்களுக்குத் தெரியுமே?









BET

உங்கள் தேவை

சிங்கிள் பேஸ மோட்டாரா?
அல்லது 3 பேஸ் மோட்டாரா?

எதுவாக இருந்தாலும் எமது ஒப்பற்ற

BET மோட்டார்களையே

வாங்குங்கள்

உழைப்பிற்கும் உறுதிக்கும் உத்திரவாதமுள்ளது

$\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, 1 & 1.5 H. P.
சிங்கிள் பேஸ் மோட்டார்களும்
1 to 10 H. P. 3 பேஸ் மோட்டார்களும்
தயார் செய்கிறோம்

உற்பத்தியாளர்கள்

பிராட்வே இன்ஜினீயரிங் & ட்ரான்ஸ்போர்ட் கம்பெனி

தந்தி: "பக்கெட்" — கோயமுத்தூர் — போன்: 3119

தொழிற்சாலை: படேல் ரோடு, போன்: 4623 - ஆபீஸ்: பழைய போஸ்டாபீஸ் ரோடு

தி பாலக்காடு சிட் பண்ட்ஸ் பிரைவேட் லிட்.

சென்னை-1

ஸ்தாபிதம் 1947 — இணைப்பு: 1951

சென்னை ஆபீஸில் துவங்கும் புது மாதச் சீட்டு நெ. 263

முழு டிக்கட்	ரூ.	11 200/-	மாதம்	ரூ. 200/-	வீதம்	56	மாதங்கள்
1/2	,, ரூ.	5,600/-	,,	ரூ. 100/-	,,	56	,,
1/4	,, ரூ.	2,800/-	,,	ரூ. 50/-	,,	56	,,
1/8	,, ரூ.	1,400/-	,,	ரூ. 25/-	,,	56	,,
1/16	,, ரூ.	700/-	,,	ரூ. 12/50	,,	56	,,
1/32	,, ரூ.	350/-	,,	ரூ. 6/25	,,	56	,,

பிரதி மாதமும் குலுக்குதலும். 4 மாதத்திற்கு ஒரு முறை முழு டிக்கட்டுக்கு ஏலமும் நடத்தப்படும்


முதல் குலுக்கு தேதி 4-2-1963

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 331/333, தம்பு செட்டித் தெரு, சென்னை-1

A. S. பரமேஸ்வர அய்யர்
மானேஜிங் டைரக்டர்

L.R.Swami


பொன்விலங்கு
மணிவண்ணன்



முதல் அத்தியாயம்

வாழ்க்கையின் எல்லாவிதமான அழகுகளும் இந்த இடத்திலிருந்துதான் ஆரம்பமாகின்றன என்பது போல் அந்த மலைச் சிகரங்கள் அத்தனை அழகாக இருந்தன. அழகாயிருக்கிற எல்லாவற்றையும் உங்களால் இரசிக்க முடியுமானால் மல்லிகைப் பந்தல் என்ற பெயரின் அழகைக்கூட நீங்கள் நன்றாக இரசித்து அநுபவிக்க முடியும்தான். சாயங்காலம் ஆறு, ஆறரை மணி சுமாருக்குச் சூட்கேஸும் கையுமாக 'மல்லிகைப் பந்தல் ரோடு' இரயில் நிலையத்தில் இறங்கிய முதல் விநாடியிலிருந்து இந்த விநாடிவரை சத்தியமூர்த்தி அந்தப் பெயரின் அழகைத்தான் இரசித்துக்கொண்டிருந்தான்.

மேலே மலைக்குப் போகிற கடைசி பஸ்ஸையும் கோட்டை விட்டுவிட்டு இப்படி அந்தப் பெயரின் அழகையும் அந்த அழகின் தொலை தூரத்துச் சாட்சிகளாய்ச் சாயங்கால வானத்திலே மெல்லிய ஓவியக் கோடுகள் போல் ஏறி இறங்கித் தெரியும் மலைகளையும் இரசிப்பதில் தனக்கென்ன இலாபம் என்று அவன் நினைக்கவில்லை. இன்னொன்றின் நலத்தைப் புரிந்து கொள்ள முயலும் போதோ, உணரும்போதோ சுய நலத்தை அளவுகோலாக வைத்து இலாப நஷ்டம் பார்க்கும் வழக்கம் அவனிடம் என்றுமே இருந்ததில்லை. இலாபகரமாகவோ செழிப்பாகவோ வாழ்ந்தும் அவனுக்குப் பழக்கமில்லை. தன்னுடைய நஷ்டங்களைச் சகித்துக் கொண்டே பிறருடைய இலாபங்களுக்காக நிறையச் சந்தோஷப் பட்டிருக்கிறான் அவன். முள் படுக்கையின் மேல் கால் நீட்டிப் படுத்துக்கொண்டே முகம் மலரச் சிரிக்கும் சில அபூர்வ யோகிகளைப் போல் வாழ்க்கையின் கவலைகளைச் சுகமாக ஏற்றுக் கொண்டு வளர்வது அவனுக்குப் புதுமையில்லை. நினைவு தெரிந்த நாளிலிருந்து அவன் அப்படித்தான் வளர்ந்திருக்கிறான். கல்லூரி


நாட்களிலிருந்தே அப்படித்தான். அவனது படிப்பும் சிந்தனையும் வெறும் புத்தகங்களால் மட்டுமே வளர்ந்ததில்லை. அவற்றின் வளர்ச்சிக்கு வாழ்வில் அவனடைந்த கவலைகளும் கஷ்ட நஷ்டங்களுமே உதவிசெய்திருக்கின்றன.

மலையடிவாரத்து இரயில் நிலையமாகையினால் மெல்ல மெல்லக் குளிர் உறைக்கத் தொடங்கியிருந்தது. புகை படர்வதுபோல் கண்ணெதிரே தெரியும் தோற்றங்களைப் பனி மூடியிருந்தது. இரயில் சக்கரங்கள் உரசி உரசித் தேய்ந்த இருப்புப்பாதைகள் அந்த இருட்டிலும் வெள்ளிக் கோடுகளாய், நெடுந்தூரத்துக்கு மின்னிக் கொண்டிருந்தன. அந்த இடத்திலிருந்து அறுபது மைல் தொலைவு பயணம் செய்து மல்லிகைப் பந்தலுக்குப் போக வேண்டும். இரயிலிலிருந்து இறங்கியவுடன் சாயங்காலம் மேலே மலைக்குப் போகிற கடைசி பஸ்ஸிலேயே அவன் போயிருக்க வேண்டும். தற்செயலாய்ச் சந்திக்க நேர்ந்த நண்பன் ஒருவனிடம் பேசிக் கொண்டிருந்ததில் பஸ் தவறிவிட்டது. இரயில் நிலையத்திலிருந்து வெளியேறிப் படி இறங்கினால் எதிரே பஸ் ஸ்டாண்டுதான். அவ்வளவு அருகில் இருந்தும் மிகச் சில விநாடிகளில் பஸ்ஸைத் தவற விட்டு விட்டான் அவன். நண்பனைத் தவற விட்டிருந்தால் பஸ் தவறியிருக்காது. பழகிய நண்பனைத் தவற விட முடியாத காரணத்தால் பஸ் தவறிவிட்டது.

''சத்யம்! எங்கே இந்தப் பக்கம் இப்படி அபூர்வமாக...'' என்று கேட்டுக் கொண்டே முகத்தில் ஆச்சரியமும் மலர்ச்சியும் தோன்ற எதிரே வந்துவிட்ட நண்பனை எப்படிப் பார்க்காதது போல் போய்விட முடியும்? நண்பனோடு பேசி அனுப்பி விட்டு இரயில் நிலையத்திலிருந்து வெளியேறிச் சென்று பார்த்தபோது பஸ் போயிருந்தது. அவனுடைய வாழ்க்கையில் எத்தனையோ பல நல்ல சந்தர்ப்பங்கள் இப்படிக் கடைசி விநாடியில்தான் தவறியிருக்கின்றன. இன்றைக்கு இந்தப் பயணமும் அப்படித்தான் தவறிப்போய் விட்டது.

நாளைக்குப் பொழுது விடிந்தால் சரியாகப் பத்து மணிக்கு மல்லிகைப் பந்தல் கல்லூரி இண்டர்வ்யூவுக்குப் போய் நிற்க வேண்டும் அவன். காலையில் முதல் பஸ் ஏழு மணிக்கோ ஏழேகால் மணிக்கோ இருப்பதாகச் சொன்னார்கள். அதில் இடம் கிடைத்துப் புறப்பட்டுப் போனால் பத்து மணிக்கு மேல்தான் மல்லிகைப் பந்தலுக்கே போய்ச் சேர முடியும். இண்டர்வியூவுக்குப் போகுமுன் குளித்து உடைமாற்றிக் கொள்ளக்கூட நேரமிருக்காது.

மலைநாட்டு நகரமான மல்லிகைப் பந்தலைத் தேர்ந்தெடுத்து அங்கு ஓர் இலட்சியக் கலைக் கல்லூரி நடத்தி வரும் தொழிலதிபர் பூபதியைப் பற்றிச் சத்தியமூர்த்தி நிறையக் கேள்விப்பட்டிருந்தான். கண்டிப்பும் கண்ணியமும் உள்ளவராகச் சொல்லப்படும் அந்தப் பெரிய மனிதர் இண்டர்வ்யூவுக்குத் தாமதமாக வந்து நிற்கும் ஒரு விரிவுரையாளனைப் பற்றி என்ன நினைப்பார்? இதை நினைத்துப் பார்க்கும்



போதே மனம் வேதனைப் பட்டது அவனுக்கு.

நான்கு புறமும் பச்சை வெல்வெட் பதித்த நகைப் பெட்டிக்குள் கிடக்கும் முத்தாரத்தைப் போல் ஏலமும், காப்பியும், தேயிலையும், கோக்கோவும், தேக்கும், ரப்பரும் விளையக் கூடிய வளமான மேற்கு மலைத் தொடரின் சரிவில் பள்ளத்தாக்கினிடையே அமைந்திருக்கும் அந்த அழகிய ஊரில் வேலை செய்யும் வாய்ப்பைப் பெற முடியாமல் இழந்து விட நேருமோ என்று எண்ணிய போது அந்த இழப்பை ஏற்றுக் கொள்ளத் தயங்கியது அவன் மனம்.

தன் இலட்சியத்துக்கும், மனப்பான்மைகளுக்கும் ஒத்து வராது என்ற காரணத்தினால் எத்தனையோ பல நல்ல வேலைகளுக்கு அவனே முயற்சி செய்யாமல் விட்டு விட்டிருக்கிறான். திருமணமாகாத தங்கைகள் இருவரும் மூத்துத் தளர்ந்த பெற்றோரும் தன் கையை எதிர்பார்த்துக் குடும்பத்தின் தேவைகளை முன் வைத்துக் காத்துக் கொண்டிருப்பதும், வயிற்றைப் பணயம் வைத்து வாழ வேண்டிய அவசியமும், ஒருபுறம் இருந்தாலும், மல்லிகைப் பந்தல் கல்லூரி வேலையை அவனே மனம் விரும்பி அடைய முயன்றான். அவனுக்கே அதில் ஓர் ஆசையிருந்தது.

''முக்கியமான ஊர்களில் பெரிய ஓட்டல்கள் இருப்பது போல்தான் கல்லூரிகளும் இருக்கின்றன. மேற்கு நாடுகளில் இருப்பது போல் அமைதியான நாட்டுப்புறங்களிலும் வனப்பு வாய்ந்த மலை நகரங்களிலும் கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் ஏற்படுகிற வரை இந்த நாட்டில் சர்வகலாசாலைப்படிப்பு ஒரு புதிய மறுமலர்ச்சியை அடையப் போவதில்லை. ஒழுங்கு, மரியாதை கட்டுப்பாடுகளோடு மாணவர்களை உருவாக்கி ஆசிரியர்கள் பெருமதிப்பை அடையும் கல்லூரிகள் அத்திபூத்தாற் போல் இருக்கின்றன. 'தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள் தேவை' என்று கல்லூரிகள் ஆசிரியரைத் தேடி விளம்பரம் செய்கிறாற்போல் — 'இலட்சியவாதியான சிறந்த ஆசிரியர் ஒருவர் வேலை செய்யத் தகுதி வாய்ந்த கல்லூரி ஒன்று தேவை' என்பதாக நானே பத்திரிகைகளில் விளம்பரம் செய்யலாம் என்று பார்க்கிறேன்'' என்று விதண்டாவாதம் பேசி நண்பர்களிடம் விவாதம் செய்கிற சத்தியமூர்த்தியே மனம் ஒப்பி ஒரு கல்லூரி வேலையைத் தேடிக் கொண்டு புறப்பட்டதைக் கண்டு அவனோடு பழகியவர்கள் ஆச்சரியம்தான் அடைந்தார்கள். சத்தியமூர்த்தி அந்தக் கல்லூரியின் விரிவுரையாளனாக விரும்பியதற்கு இரண்டு சரியான காரணங்களிருந்தன. ஒரு காரணம், அந்த ஊரின் இயற்கை வனப்பு; மற்றொரு காரணம் அந்தக் கல்லூரியின் நிர்வாக வனப்பு.

தமிழ் நாட்டின் செழிப்பான ஆற்றங்கரைகளிலும், சாலைகள் செல்லாத மூலை முடுக்குகளிலும் இப்படி எத்தனையோ அழகான ஊர்கள் இருக்கலாம். ஆனால் மல்லிகைப் பந்தலின் அழகும் இயற்கை எழிலும் அவை எல்லாவற்றிலிருந்தும் தனியாகப் பிரித்துச் சிறப்பாகச் சொல்லத் தகுந்த ஒன்றே தவிர அவற்றோடு சேர்த்து அவற்றில் ஏதோ ஒன்றாக வைத்து எண்ணத் தகுந்தது அல்ல. அப்படிச் சிறப்பித்துச் சொல்லுவதற்குத் தனியாக ஒரே ஒரு காரணம் மட்டுமில்லை. சிறப்பாகப் பல காரணங்கள் இருந்தன.

கிராமத்தின் அழகுகளும், நகரத்தின் சௌகரியங்களும் நிறைந்த ஊர் கவர்ச்சி மிக்கதாக இருப்பதற்குக் கேட்பானேன்? மண்ணின் பெருமை — அதன் மேலே வாழும் மனிதர்களின் குணங்களை வைத்துக் கணிக்கப்படுகிறது என்பது சரியானால் மல்லிகைப் பந்தலில் அப்படிக் குணங்களை உடைய பெருந்தன்மையாளர் சிலர் எப்போதும் இருந்தார்கள்; இப்போதும் இருக்கிறார்கள்.

'' நாடா கொன்றோ காடா கொன்றோ...


—என்று மண்ணை வாழ்த்திப் பாடியிருக்கிறாளே, தமிழ் மூதாட்டி-அந்த வாழ்த்து மல்லிகைப் பந்தலுக்கு முற்றிலும் பொருந்தும். காடாரம்பமான அந்த மலை நாட்டு நகரம் ஆரவார வேகங்களிலிருந்தும் பரபரப்பான ஆடம்பரங்களிலிருந்தும் விலகி ஒதுங்கியிருந்தாலும், நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் இருப்பிடமாக விளங்கியது.

நாகரிகம் பெரிய பெரிய நகரங்களிலிருந்து பிறந்து வளர்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது இன்றைய நகரங்களின் நெருக்கடியில் இருப்பதற்கு இடமில்லாமல் புறக்கணிக்கப்பட்டு மல்லிகைப் பந்தலைப் போன்ற சிறிய அமைதியான ஊர்களில் புகலிடம் பெற்றிருந்தது.

மல்லிகைப் பந்தலில் வாழ்க்கை இயந்திரமாக ஓடிக் கொண்டிருக்காது; நிதானமாக நடந்து கொண்டிருக்கும். தார் ரோடுகளும், சிமெண்டுப் பூச்சுக்களும் தரையை மூடி மண்ணின் ஈர வாசனையைத் தடை செய்ய மாட்டா.

அசைந்து ஆடிக்கொண்டே ஆசுவாசம் பெறுங்கள்.
ஓய்ந்து போயிருக்கும் அவயவங்களுக்கு அதனுடைய அமைதி
யான அசைவு இதமாக இருக்கும். உள்வளவு கொண்ட
அதன் முதுகுப்புறம், உங்களை இன்பமாக இளைப்பாற
அழைக்கிறது. அதன் மகிழ்வூட்டும் சொகுசை நீங்கள்
அநுபவிக்கும்பொழுது. அதன் துணி உங்கள்
உடல் வளைவுகளையெல்லாம் அணைத்துக்
கொள்ளுகிறது. இந்த இன்பமான
வசதியுடன், எஃகினால் கச்சிதமாகச்
செய்யப்பட்டிருக்கும் இந்தச் சாய்ந்தாடும்
ஈசி சேர்கள் இடத்தை அடைத்துக்
கொள்வதில்லை. அதோடு முதலில்
வாங்கும் பொழுதும் பிறகு
அதைப் பாதுகாப்பதிலும்.
செப்பனிடுவதிலும்
செலவு குறைகிறது.

A CRADLE OF COMFORT




ரூ. 18.00
விற்பனை வரி,
உள்ளூர் வரிகள் தனி

அதுதான்
மடக்கும்

CROMELITE

எஃகு குழாய்
பர்னிச்சரின்
விசேஷ அழகு.



தரத்தில் சிறந்த
அடுக்கடுக்காக

- ஒவ்வொரு உலோகப் பகுதியும் 'பாலிஷ்' செய்யப்பட்டது. துருப்பிடிக்காமல் இருக்க, சீதோஷ்ணம் பாதிக்காத சிறந்த எனாமல் வர்ணம் வாட்டியெடுக்கும் முறையில் தீட்டப்பட்டது.
- எடுப்பான நிறங்களில் உறுதியான எளிதில் கிழியாத முரட்டுத் துணி.
- மடக்கும் உறுப்புகள் விசேஷமாகத் தயாரானவை
- ஈரத் துணியைக் கொண்டு பளிச்சென்று துடைத்து விடலாம்.

தயாரிப்போர்:
க்ரோம் லைட் (இந்தியா) பிரைவேட் லிட்.
பி-35 இந்தியா எக்ஸ்சேஞ்சு ப்ளேஸ், கல்கத்தா-1
விநியோகஸ்தர்கள்:

மெஸ்ஸர்ஸ் அடிஸன் & கோ. லிட்., சென்னை, பெங்களூர். மெஸ்ஸர்ஸ் பாலா க்ளாஸ் & க்ரோக்கரீஸ் பிரைவேட் லிட். சென்னை, பெங்களூர், எர்ணாகுளம், ஹைதராபாத். மெஸ்ஸர்ஸ் ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட்., சென்னை, பெங்களூர், செகுந்தராபாத். மெஸ்ஸர்ஸ் மகமத் இப்ராஹிம் & கோ. பிரைவேட் லிட்., சென்னை, பெங்களூர், ஹைதராபாத். மெஸ்ஸர்ஸ் ரேடியோ லிட்., சென்னை, ஹைதராபாத். மெஸ்ஸர்ஸ் ஸ்பென்ஸர் & கோ லிட்., 1/153, மவுண்ட் ரோடு, சென்னை.

எல்லா இடங்களிலும் ஈர மண்ணின் மணம் தன் சகல விதமான வளங்களோடும் மணந்து கொண்டிருக்கும். காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளும் தாகத்தோடு அங்கு மனிதர்கள் தேவைகளுக்கு மீறிய பரபரப்புக் கொண்டு திரிய மாட்டார்கள்; காரியங்கள் நியாயமாக நிறைவேறும் என்று நம்பிக்கையோடும், நாணயத்தோடும் உழைத்துக் கொண்டிருப்பார்கள். அந்த ஊர் மக்களைப் போலவே எவரையும், எப்போதும் வாட்டவோ, காயவோ விரும்பாதது போல் ஆண்டு முழுவதும் ஒரே விதமான குளிர்ந்த சூழ்நிலை அங்கு நிலவிக் கொண்டிருக்கும். இத்தகைய அழகிய ஊரை இன்னும் அழகுபடுத்துவது போல் தொழிலதிபர் பூபதி ஒரு சிறந்த கலைக் கல்லூரியை அங்கு நிறுவி வளர்த்திருந்தார். எங்கோ ஒதுக்குப்புறமான மலைகளுக்கு நடுவே உள்ள ஊரில் அமைந்திருந்தாலும் படிப்பின் தரத்தினாலும் கல்வியைப் பரப்பும் உயர்ந்த இலட்சியத்தினாலும் மாணவர்கள் தங்கிப் பயிலும் விடுதிக் கட்டுப்பாடுகளாலும் தமிழ் நாட்டு மக்களிடம் பெரும் புகழ் பெறத் தொடங்கி யிருந்தது அந்தக் கலைக் கல்லூரி. மிகப் பெரிய நகரங்களில் உள்ளவர்களும்கூட அந்தச் சிறிய மலை நகரத்தைத் தேடிப் போய்த் தங்கள் பிள்ளைகளையோ, பெண்களையோ சேர்க்கத் தவிப்பதும் பொறிகை தேடுவதும் வழக்கமா யிருந்தது. அங்கு சேர்ந்து கல்வி கற்பதையே ஒரு பாக்கியமாகக் கருதினார்கள் பலர்.



சத்தியமூர்த்தி மனம் ஈடுபட்டு ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் போது இலகு

வாகத் தேர்ந்தெடுக்கத் துணிந்து விட மாட்டான்.

''நல்ல வேலையாகத் தேடிப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அது கிடைக்கிற வரை உண்மையே மேலெழுந்து நிற்பது போல் உயர்ந்து தோன்றும் மதுரையின் இந்தக் கோபுரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதையே நான் ஒரு வேலை யாகச் செய்து கொண்டுதான் இருக் கிறேன்'' என்று தத்துவம் பேசிக் கொண்டிருந்த சத்தியமூர்த்தியே இண் டர்வ்யூவுக்குப் புறப்பட்டதைக் கண்ட பின் மல்லிகைப் பந்தல் என்ற அந்த ஊரும் அதன் பெருமைக்கு ஒரு காரண மான பூபதி கலைக் கல்லூரியும் ஏதோ ஒரு விதத்தில் நிச் சயமான தகுதி வாய்ந்தவையா யிருக்கும் என்பது மேலும் உறுதியாகி விட்டது.

மாணவனா யிருக் கும்போதே சத்திய மூர்த்திக்கு நெஞ்சு உரம் அதிகம். எவ் வளவு வெம்மை யான அனுபவ மானாலும் தாங்கிக் கொண்டு அந்த வெம்மையையே உண்டு வலிமை பெறுவது அவன் வழக்கம். கல்லூரி நாட்களில் சக மாணவர்கள் அவனுக்கு நெருப்புக்கோழி என்று கூடச் சூடாக ஒரு பெயர் வைத்திருந் தார்கள். கல்லூரியில் மாணவர்களின் யூனியன் தலைவனாக இருந்து அவன் சாதித்த சாதனைகளும் சமாளித்த எதிர்ப்புக்களும் என்றும் மறக்க முடியாதவை. மாணவனாக இருந்த காலத்தில் தன்னுடைய ஒவ்வொரு நோட்டுப் புத்தகத்திலும், கல்லூரியில் தான் தங்கிப் படித்த விடுதி அறையி லும் கீழ்க்கண்ட வாக்கியத்தைக் கொட்டை எழுத்துக்களில் பெரிதாக எழுதி வைத்துக் கொள்வது அவன் வழக்கம்.

''இது இப்படித்தான் நடக்கும் — இப்படித்தான் நடக்க முடியும் - என்று எந்த முயற்சியும் நீ ஆசைப்படுகிற படியே முடிய வேண்டும் என்பதாகச் செயலை மறந்து விளைவை மட்டும் எண் ணிக் கற்பனைகளை வளர்க்காதே. அது வேறு விதமாக நடந்தாலும் தாங்கிக் கொள்ளத் தயாராயிரு. **கீழே விழுவது மீண்டும் எழுவதற்காகவே.**''

— என்று பலரிடம் பேசியும் பலமுறை பேசியும் திரும்பத் திரும்ப எழுதியும் இந்த வாக்கியங்களின் பொருள் அவன் மனத்தில் பதிந்து ஊறிப் போயிருந்தது.

'கீழே விழுவது மீண்டும் எழுவதற் காகவே' என்ற வாக்கியத்தை விவேகா னந்தர் தம்முடைய தலைமுறையில் அடி மைத் தளையில் சிக்கிக் கீழே விழுந்து கிடந்த பாரத நாட்டை நினைத்துக் கூறினரா, தனி மனிதனை நினைத்துக் கூறினரா என்று சத்திய மூர்த்தி தனக் குள் பல முறை ஆழ்ந்து சிந்தித் திருக்கிறான்.

பஸ்ஸைத் தவற விட்டு விட்டு மல் லிகைப் பந்தல் ரோடு இரயில் நிலையத் தின் பிரயாணிகள் தங்கும் அறையில் உட்கார்ந்து நிதானமாக அந்த ஊரின் பெயரழகை இரசித்துக் கொண்டிருந்த போதும் இந்த வாக்கியத்தைத்தான் நினைத்துக் கொண் டிருந்தான் அவன். அவனுடைய வறுமை மயமான இளமைப் பருவத் தில் இந்த வாக்கி யத்தை அடிக்கடி நினைத்தாக வேண் டிய சந்தர்ப்பங்கள் அடுக்கடுக்காக அவ னுக்கு ஏற்பட்டிருக் கின்றன. கீழே விழு கிறபோதெல்லாம் வேகமாக எழ வேண்டும் என்ற முனைப்பையும், தன்னம்பிக்கையையும் அவன் அடைந்திருக்கிறான். ஒவ்வொரு முறை கீழே விழ நேரிடும்போதும் முன்னால் விழுந்த போது எழுந்ததை விட இப்போது இன்னும் வேகமாக எழ வேண்டும் என்ற துடிப்பை அவன் உணர்ந்திருக்கிறான். தன்னுடைய பலம் தான் அடைகிற வெற்றிகளால் ஞாபகப் படுத்தப் பெறுவதாக அவன் ஒரு போதும் நினைத்தது மில்லை; நம்பியது மில்லை. தன்னுடைய பலமும் வலிமை களும் தான் அடைகிற ஒவ்வொரு தோல்வியின் போதும் ஞாபகப்படுத்தப் பெறுவதாகத்தான் அவன் உணர்ந் திருக்கிறான்; நம்பி யிருக்கிறான் - வாழ்ந் திருக்கிறான்.

கல்லூரிப் புத்தகங்களும், பல்கலைக் கழகத்தார் கொடுத்திருந்த எம். ஏ. டிகிரியும் செய்ததைவிட அதிகமாகக் கவலைகளும், வறுமையும், ஏமாற்றங் களும், தோல்விகளுமே அவனைப் பெரிய சிந்தனையாளனாகச் செய்திருந்தன. நியாயமான கவலைகளில் பிறக்கிற சிந் தனையே தத்துவமாக மாறுகிறதென்று கல்லூரி விவாத மேடையில் பல முறை பேசியிருக்கிறான் சத்தியமூர்த்தி. ஒரு மனிதனின் நேர்மையான சமுதாயத் தேவைகள்கூட வாழ்க்கையில் அவன் நினைத்தவுடனேயோ, ஆசைப்பட்ட

பொன் மொழி

'நாடா யிருந்தால் என்ன? காடா யிருந்தால் என்ன? மேடா யிருந்தால் என்ன? பள்ளமா யிருந்தால் என்ன? எங்கு உன் மேல் நடக்கும் மனிதர்கள் நல்லவர்களாக இருக்கிறார் களோ, அங்கு நீயும் நன்றாக வாழ்கிறாய், மண்ணே!'

உடனேயோ கிடைத்து விடாதென்று சத்தியமூர்த்தி மிக இளமையிலிருந்தே உணர்ந்திருந்தான். அவனுடைய ஒரே வலிமை இந்த உணர்ச்சிதான். நல்ல மனிதன் வாழ்க்கையில் தன்னுடைய ஒவ்வொரு தேவைக்காகவும் மட்டுமே போராட முடியாது; தன்னுடைய தேவைக்காகவும், நியாயத்துக்காகவும் சேர்த்துப் போராட வேண்டியிருக்கும். சிந்தனையினாலோ, செயலினாலோ போராடித்தான் எதையும் அடைய முடியும். மனத்தினால் போராடப் பொறுமையும், பக்குவமும் இல்லாதவர்கள்தான் அவசரப்பட்டுக் கைகளால் போராடி விடுகிறார்கள்.

வாதாம்பழத்தில் பருப்பு மாதிரி உரித்துத் தட்டித் தேடிச் சுவையைக் கண்டு பிடித்து எடுக்க வேண்டியிருக்கிறது — வாழ்க்கையில். வாழ்க்கையின் மிகப் பெரிய தேவை செல்வமும், செழிப்பும் அல்ல; இன்றுள்ள சூழ்நிலையில் நல்ல மனிதர்களும் நல்ல எண்ணங்களும்தான் சமுதாயத்தின் மிகப் பெரிய பற்றாக் குறையாய், மிகப் பெரிய தேவையாய் எதிர்பார்க்கப்பட்டு நிற்கிறது.

மல்லிகைப் பந்தல் ரோடு இரயில் நிலையத்து 'வெய்ட்டிங் ரூமி'ல்அமர்ந்து இரவுச் சாப்பாட்டையும் பசியையும் மறந்து இப்படி ஏதேதோ சிந்தித்துக் கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி.குளிர் அதிகமாகவே பெட்டியைத் திறந்து சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டான். சாயங்காலம் கிடைக்காமல் தவறிப் போன கடைசி பஸ்ஸையும், நாளைக்குப் பொழுது விடிந்தால் அறுபது மைலுக்கு அப்பால் சரியாகப் பத்து மணிக்குக் காத்திருக்கும் 'இண்டர்வ்யூ'வையும் நினைத்த போது மட்டும் சம்பந்தா சம்பந்தமின்றிப் போய்க் கொண்டிருந்த அவனது சிந்தனை ஒரு கணம் தடைப்பட்டு நின்றது. பின்பு மேலே வளர்ந்து தொடர்ந்தது.

'இரயில் நிலையத்தில் பிரயாணிகள் தங்கியிருக்கும் அறைக்கு 'வெய்ட்டிங் ரூம்' என்று பெயர் வைத்தவர்கள் எத்தனை பொருத்தமாகப் பெயர் வைத்திருக்கிறார்கள். வெயிட்டிங் ரூமில் காத்துக் கொண்டிருக்கும் போது அப்படிக் காத்திருப்பவர்கள் இரயிலுக்காக மட்டும் காத்திருக்கவில்லை. சுகமும், துக்கமும் இலாபமும், நஷ்டமும், திருப்தியும், அதிருப்தியும் கலந்த பல்லாயிரம் காரியங்களை நோக்கிப் புறப்பட்டுச் செல்வதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசைகளும், நிறைவேறவேண்டியவைகளும் வரிசை வரிசையாகக்காத்துக் கொண்டிருப்பதால் மனிதனுடைய மனம்தான் மிகப் பெரிய 'வெய்ட்டிங் ரூம்' என்று பாதி வேடிக்கையாகவும், பாதி துயரமாகவும் நினைத்தான் சத்தியமூர்த்தி. அந்த வேளையில் அப்படிச் சிந்திப்பதில் ஒரு சுகம் இருந்தது.

மிகப் பல சமயங்களில் மனிதனுடைய மனம்தான் உடம்பைக் காட்டிலும் அதிகப் பரபரப்போடு காத்துக் கொண்டிருக்கிறது. இரயில் நிலையத்து 'வெய்ட்டிங் ரூமி'லும் அப்படித்தான். முகத்தில் புன்னகை மலர அந்த வெய்ட்டிங் ரூமில் தன்னைச் சுற்றிலும் இருந்தவர்களையெல்லாம் பார்க்கவேண்டும் என்ற ஆவலோடு கண் பார்வையைச் சுழல விட்டான் சத்தியமூர்த்தி. அவனைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் இழுத்துப் போர்த்தி உறங்கிக் கொண்டிருந்தார்கள். படுத்து உறங்க இடமில்லாத சிலர் உட்கார்ந்தபடியே அந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவர் மனத்திலும் ஏதாவதொரு காரியம் காத்திருக்க வேண்டும். ஆனால் அது மற்றவருக்குத் தெரியவும் தெரியாது, புரியவும் புரியாது. ஏனென்றால் அந்த மற்றவர் மனத்திலும் எந்தக் காரியமோ காத்துக் கொண்டிருக்கிறது.

'அதோ அந்தக் கிழவர் மூலையில் சுருண்டு படுத்திருக்கிறாரே; அவருடைய தலைமாட்டில் இருக்கும் சிறு துணிப் பையையும், நெஞ்சுக்கும் சட்டைப் பையிலிருக்கும் பணத்துக்கும் பாதுகாப்பாகத் தூக்கத்திலும் அந்த இடத்தைத் தழுவியிருக்கும் கையையும், பார்த்தால் ஆறாவது பெண்ணுக்கோ, ஏழாவது பெண்ணுக்கோ வரன் தேடிப் புறப்படுகிற அப்பாவித் தந்தையாகத் தோன்றுகிறது. இதோ கழுத்தில் டையையும், மூக்குக் கண்ணாடியையும் கூடக் கழற்றாமல் உட்கார்ந்தபடியே பாதித் தூக்கம் தூங்கும் இந்த மனிதர் ஏதோ ஒரு கம்பெனியின் ஊர் சுற்றும் பிரதிநிதியாயிருக்க வேண்டும். இதோ இங்கே ரப்பர் தலையணையை ஊதி உப்ப வைத்துக் கொண்டிருக்கிற பையன் ஒரு கல்லூரி மாணவனாயிருக்க வேண்டும்.


'எல்லாரும் காத்திருக்கிறார்கள்! எதற்காக? இரயிலுக்காக மட்டும் அல்ல; வேறு எதற்காகவுமோ சேர்த்துத்தான் காத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று எண்ணிய போது வாழ்க்கையையே ஒரு பெரிய வெய்ட்டிங் ரூம் ஆகக் கற்பனை செய்யலாம் போலத் தோன்றியது சத்தியமூர்த்திக்கு. அடுத்த கணமே அப்படிக் கற்பனை செய்வது தன் வயதுக்கு அதிகப்பிரசங்கித்தனமோ என்ற தயக்கமும் ஏற்பட்டது அவனுக்கு. புத்திக் கூர்மையாலும், துறுதுறுவென்று எதையாவது சிந்தித்துக் கொண்டிருக்கும் சிந்

விசேஷ சலுகை - ஒரு அழகான சோப்பு பெட்டி இனாம்

ஒரே சமயத்தில் இரண்டு சோப்பு கட்டிகள் வாங்குவோருக்கு ஒரு அழகான சோப்பு பெட்டி இனாமாக வழங்கப்படும்.

(கைவசமுள்ள வரையில்)






மெரோலின் உங்களுடைய உடல் வனப்பை எடுத்துக் காட்டுகிறது—உங்கள் சருமத்தின் ஆரோக்கியத்தை சீராக்குகிறது — உடல் துர்காற்றத்தை அகற்றுகிறது — அதன் மருத்துவ குணங்களாலும் துர்நாற்றத்தை போக்கும் சக்தியாலும் உங்கள் ஸ்னானத்திற்குப்பின் சுகத்தை அளிக்கின்றது.



நீங்கள் கொடுக்கும் விலைக்குமேல் சோப்பின் பெறுமானம் அதிகம் உள்ளதால், இந்த சலுகையால் உங்களுக்கு இன்னும் அதிக லாபம்!

வெஜிடபிள் சோப் ஒர்க்ஸ்
கோழிக்கோடு.

SNP/M-324





ஓடி விளையாடு, பாப்பா!

ஆம், குழந்தைகள் ஓடிவிளையாட... ஓய்ந்திருக்காமலிருக்க ...அவர்களுக்கு சத்துள்ள உணவுப் பொருள் தேவை.

வைடமின் 'A' வைடமின் 'D' கலந்த காமதேனு வனஸ்பதியில் தயாரித்த தின்பண்டங்களை அவர்களுக்கு வழங்குங்கள். கை படாமல் சாஸ்திரீய முறையில் தயாரிக்கப்பட்ட உயரிய சமையல் சாதனம் காமதேனு வனஸ்பதி.



இல்லாள் கைகண்ட
இன்பச் சமையல் சாதனம்

காமதேனு
வனஸ்பதி!

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

MC 62/3

தனை அனுபவத்தாலும் அவன் மனத்துக்கு வயது அதிகமாயிருந்தாலும் உலகம் அவனுடைய தோற்றத்தையும், உடலையும், இளமை மலர்ந்த வசீகரமான முகத்தையும் கொண்டு அவனை இளைஞனாகத்தானே சொல்லும். மூத்துத் தளர்ந்து தலை நரைத்த பின்பே சில உண்மைகளைச் சொல்லும் உரிமையை மனிதன் அடைய முடிகிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக மூத்துத் தளர்ந்து தலை நரைத்த பின்போ உண்மைகளைப் பேசும் சுபாவமே சிலரிடமிருந்து போய் விடுகிறது. சிந்தனைச் சுதந்திரம் உள்ள நாடுகளில் உண்மையைப் பேச வயது ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பது சத்தியமூர்த்தியின் கருத்து.

வெட வெடக்கும் குளிரில் இன்று இரவு இந்த மலையடிவாரத்து இரயில் நிலைய வெயிட்டிங் ரூமில்விழித்துக்கொண்டிருப்பது போலவே வாழ்க்கை முழுவதும் மற்றவர்கள் சோர்ந்து தளர்ந்தாலும் தான் ஒருசிராக விழித்திருக்க வேண்டுமென்று விநோதமானதொரு விருப்பம் உண்டாயிற்று அவனுக்கு. அந்த நல்ல விருப்பத்தை உடனே வைராக்கியமாக மாற்றிக்கொண்டது அவன் மனம்.



ஏதோ சாப்பிட்டோம் என்று பேர் செய்து முறையைக் கழிப்பதற்காக ரயில் நிலையத்துப் பழக் கடையில் நாலு மலைப் பழம் வாங்கிச் சாப்பிட்ட பின் 'வெய்ட்டிங் ரூமி'ல் காலியாயிருந்த கட்டில் ஒன்றில் தலைக்கு அணைவாக சூட்கேஸை வைத்துக் கொண்டு படுத்தான் சத்தியமூர்த்தி. தூக்கம் வரவில்லை. கட்டிலில் புரண்டுகொண்டே விடியப் போவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். 'போது விடிந்ததும் பஸ் நிலையத்துக்குப் போய் மல்லிகைப் பந்தலுக்குச் செல்கிற முதல் பஸ்ஸைப் பிடித்துப் புறப்பட வேண்டும். அப்படிப்போனாலும் 'இண்டர்வ்யூ'வுக்காகக் குறிப்பிட்டிருக்கும் நேரத்துக்கு மேலே அரை மணி நேரம் தாமதமாகி விடும். ஆனாலும் பரவாயில்லை. எவ்வளவு கண்டிப்பான மனிதர்களாக இருந்தாலும் உண்மைக்கு ஒரு நிமிஷம் நெகிழ்ந்துதான் ஆகவேண்டும். எனக்குப் பஸ் கிடைக்க வில்லை என்பது உண்மை. தாமதமாக 'இண்டர்வ்யூவு'க்கு வர நேர்ந்ததற்கு அதையே நான் காரணமாகச் சொல்லலாம். தவிரவும் பூபதி அவர்களைப் போல் கண்டிப்பிலும் கட்டுப்பாட்டிலும் அக்கறை யுள்ளவர்கள் உண்மையை மதிப்பதிலும் அக்கறை யுள்ளவர்களாகத்தான் இருப்பார்கள்' — என்று எண்ணிக்கொண்டே படுத்திருந்த சத்தியமூர்த்தி சூட்கேஸின் மேல் வைத்திருந்த தன் தலை பட்டென்று கட்டிலில் மோதும்படி இருட்டில் ஒரு கை சூட்கேஸை உருவி விட்டு நழுவியதை அவசரமாக உணர்ந்து அப்படியே தாவி எழுந்து அந்தக் கையையும் சூட் கேஸுடன் சேர்த்துப் பிடித்து விட்டான். அவன் படுத்துக் கொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம் வெளிச்சத்தில் தூக்கம் வராத யாரோ ஒரு பிரயாணி விளக்கை அணைத்திருந்தார். இருட்டில் சத்தியமூர்த்தி விழித்துக் கொண்டிருக்கிறானா, தூங்குகிறானா என்பதைப் புரிந்துகொள்ள முடியாததால் திருட வந்தவன் கையும் களவுமாகப் பிடிபட்டு விட்டான். வேறு யாராக வாவது இருந்தால் விளக்கைப் போட்டு 'வெய்ட்டிங் ரூமில்' தூங்கியும் தூங்காமலும் இருந்த அத்தனை பேரையும் எழுப்பிப் பெரிய கலவரம் உண்டாக்கி யிருப்பார்கள். சத்தியமூர்த்தி ஓசைப் படாமல் பிடிபட்ட கையையும், சூட்கேஸையும் சேர்த்து இழுத்துக் கொண்டு ஸ்டேஷன் பிளாட்பாரத்துக்கு வந்தான். சூட் கேஸை உருவிக் கொண்டு ஓட முயன்றவன் பதினைந்து பதினாறு வயது மதிக்கத் தகுந்த பையனாக இருந்ததைக் கண்ட போது, கோபமும், கொதிப்பும் அடைவதற்குப் பதில் சத்தியமூர்த்தியின் மனத்தில் கருணையும் பரிவுமே ஏற்பட்டன. நெருப்புப் போல் செம்பட்டை படர்ந்திருந்த அந்தப் பரட்டைத் தலையும், இளமையின் மலர்ச்சியில்லாமல் பஞ்சடைந்த கண்களும், 'என்னை விட்டு விடுங்கள்' என்று கெஞ்சுகிற முகமுமாக நின்ற அந்தப் பையனைப் பார்த்துச் சிரித்தான் சத்தியமூர்த்தி. பின்பு அந்தச் சிறுவனை நோக்கி நிதானமாகப் பேசினான்:

''பார்த்தாயா தம்பீ! காரும் பங்களாவும் டெலிபோனும் வைத்துக் கொண்டு உலகறிய நல்லவர்களாகவும், மனமறியப் பொய்யர்களாகவும் வாழ்ந்து மிகவும் கௌரவமாகத் திருடிக் கொண்டிருக்கிற பலர் சமூகத்தில் பிடிபட மாட்டார்கள். உன்னைப்போல் வயிறு பசித்துப் போய்த் திருடுகிற அப்

பாவிகள்தான் பிடிபட்டுத் திருட்டுப் பட்டமும் கட்டிக் கொள்வார்கள். இதோ இப்படி என்னோடு வா. நீ திருடிக்கொண்டு போவதற்கிருந்த இந்த சூட்கேஸில் என்ன இருக்கிறதென்று நான் உனக்குக் காண்பிக்கிறேன்'' என்று சிரித்துக் கொண்டே மின்சார விளக்குக் கம்பத்தினடியில் பிளாட்பாரத்தில் இருந்த சிமெண்டுப் பெஞ்சுக்கு அந்தப் பையனை இழுத்துக் கொண்டு போய் வற்புறுத்தி உட்கார வைத்துத் தன்னுடைய சூட்கேஸைத் திறந்தான் சத்தியமூர்த்தி. பிடிபட்டு விட்ட அதிர்ச்சியிலும் கம்பீரமாக ஆறடி உயரத்துக்கு வாட்ட சாட்டமாக நிற்கும் அந்த சூட்கேஸின் சொந்தக்காரர் தன்னை என்ன செய்யப் போகிறாரோ என்ற பயத்திலும் அந்தச் சிறுவனின் உடம்பு வெட வெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. அவனுடைய குழிந்த கண்கள் மருண்டு நோக்கின.

''இதோ பார்! இது பல்கலைக் கழகப் பட்டம். இதைப் பெறுவதற்காக உழைத்துப் படித்துப் பெற்றுக்கொண்டவனே சில சமயங்களில் இதை வைத்து ஒன்றும் செய்ய முடியாமல் போகிறது. அப்படி இருக்கும்போது இதைத் திருடிக்கொண்டு போய் நீ என்ன செய்ய முடியும்? இந்தப் பட்டத்தைத் தவிர வேறு நாலைந்து சர்ட்டிபிகேட்டுகளும் நன்னடத்தைச் சான்றிதழ்களும் இண்டர்வியூ கார்டும் ஒரு நாள் பயணத்துக்கான துணி மணிகளும் சோப்பும் சீப்பும் தான் இந்த சூட் கேஸில் இருக்கின்றன. பிறருடைய பணத்தைத் திருடினால் அதை நீ உன்னுடையதைப் போல் வைத்துக் கொண்டு செலவழிக்க முடியும். பிறருடைய படிப்பையோ பட்டத்தையோ திருடினால் ரூபாய் நோட்டைப் போல் அவற்றைச் செலவழித்து நீ ஒரு பயனும் பெற முடியாது. வயிற்றுக்கு இல்லாமல் ஏழையாகி விடலாம். ஆனால் பண்பினால் ஏழையாகி விடக் கூடாது'' என்று சட்டைப் பைக்குள் கையை விட்டு அங்கு நாணயங்களாகக் கிடந்த அத்தனை காசுகளையும் அரை ரூபாய், கால் ரூபாய்களையும் அந்தப் பையனின் கைகளில் அள்ளித் திணித்தான் சத்தியமூர்த்தி. பையன் ஒன்றும் புரியாமல் மலைத்துப் போய் நின்றான்.

தன்னுடைய சூட் கேஸை மூடிக் கொண்டு சத்தியமூர்த்தி மறுபடியும் 'வெய்ட்டிங் ரூமு'க்குத் திரும்பி வந்த போது அது இருளில் ஆழ்ந்து கிடந்தது. தூங்குகிறவர்களின் குறட்டை ஒலியும், தூங்காதவர்கள் புரண்டு படுக்கும் ஓசையுமாக இரவு பதினொரு மணிக்கு மேல் ஒரு மலையடிவாரத்து இரயில் நிலையத்துச் சூழ்நிலை எப்படிச் சோர்ந்து போயிருக்க முடியுமோ, அப்படிச் சோர்ந்து போயிருந்தது அது. அவன் திரும்பி வருவதற்குள் முன்பு அவன் படுத்திருந்த கட்டிலை வேறொருவர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததன் காரணமாகப் படுக்க வழியின்றி அவன் நாற்காலியிலேயே உட்கார வேண்டியதாயிற்று.

'படிக்க வேண்டிய வயதில் படிப்புக்கும் வழியின்றிப் பசிக்கும் வழியின்றி இப்படித் திருட்டுத் தொழிலுக்குத் தயாராகும் சிறுவர்கள் பெருகப் பெருகத் தேசத்தின் சமுதாய வாழ்வில் எதனாலும் தீர்க்க முடியாத நோய் பெருகுகிறது. பத்தியமில்லாமல் மருந்து சாப்பிடுவது போல் இத்தகைய அடிப்படை நோய்களைத் தீர்க்காமல் வேறு வளர்ச்சிகளுக்குத் திட்டமிடுவதில் பயனென்ன?' — என்று எண்ணத் தொடங்கியிருந்தான் சத்தியமூர்த்தி. 'இந்தத் தேசம் முன்னேற ஒரே ஒரு வழிதான் உண்டு. பிறருடைய உணவைப் பங்கிட்டுக் கொள்ளும் மனிதர்களைப் போல் பிறருடைய பசியைப் பங்கிட்டுக் கொள்ளும் மனிதர்களும் பெருக வேண்டும். ஆனால் இந்தத் தேசத்தின் துர்ப்பாக்கியமோ என்னவோ, இங்கு மற்றவர்களுடைய உணவைப் பங்கிட்டுக் கொள்ளும் மனிதர்களே அதிகமாக இருக்கிறார்கள். மற்றவர்களுடைய பசியைப் பங்கிட்டுக்கொள்ளும் மனிதர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள்' என்று நினைத்து நினைத்து மனம் தவித்தான் அவன். 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'— என்று பாரதி பாடியிருப்பதும் ஞாபகம் வந்தது. இப்படி எத்தனை எத்தனையோ விதமான சிந்தனைகளில் நீந்தியே இரவைக் கழித்து விட்டான் அவன்.

அங்கே அந்த மலையடிவாரத்து இரயில் நிலையத்தில் சூரியோதயம் மிக மிக அழகாயிருந்தது. ஒரு காரியத்தை ஆவலோடு எதிர்பார்த்துத் தூங்காமல் விழித்திருந்து தவித்த பின் விடிகிற விடியற்காலைக்குக் கவர்ச்சியும் அழகும் அதிகம். மனித இதயத்தைப் பலவிதமான சிந்தனைகளால் தவிக்கத் தவிக்கப் படுத்திய பின் மெல்ல மலர்கிற காலை விலைமதிப்பற்றதாக இருப்பதைச் சத்தியமூர்த்தி பல முறை உணர்ந்திருக்கிறான். இரயில் நிலையத்து வெயிட்டிங் ரூமிலேயே அவசரம் அவசரமாக நீராடி உடை மாற்றிக் கொண்டு அவன் பஸ்ஸுக்குப் புறப்பட்டபோது காலை ஆறரை மணிக்கு மேலாகியிருந்தது. காலைச் சிற்றுண்டியைப் போகிற வழியி


K.T.R. பொன்னாங்கண்ணி தைலம்*

ஊதுபத்திகள் ★ ஓம வாட்டர்

சந்தன பேஸ் பவுடர்

K.T.R. வாசனாதி திரவிய சாலை விஜயபுரம் திருவாரூர், தமிழ்நாடு

சென்னை நகர பூரண விநியோகஸ்தர்கள் ஸ்ரீ ரகுநாத் ஏஜென்ஸிஸ், 35. மங்கபதி நாயக் தெரு, சிந்தாதிரிப்பேட்டை



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்காராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414. மதராஸ்-5

தந்தி : 'EVERMANS' போன் : 85834

சேரக் கடைசி தேதி 17-1-1963 ... முதல் ஏலத் தேதி 19-1 1963

25 மாதங்கள்	மாதாந்திரச் சீட்டுகள் (3-வது சனிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது


(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

டெல்லி கிளை ஆபீஸ்கள் : கான்லைன் ஹவுஸ், 1/24, ஆஸப் அலி ரோடு, புது டில்லி-1 ★ பாலுஸேரி பில்டிங் 14–A/4, W. E. A. கரோல்பாக், புது டில்லி-5 ★ 198, முதல் மாடி, ஜோர்பாக் நர்ஸரி, புது டில்லி-3 பெங்களூர் கிளை ஆபீஸ்: 185, முதல் மாடி, ஆறுவது கிராஸ், காந்தி நகர், பெங்களூர்-9 ★ பம்பாய் கிளை ஆபீஸ்: "வீணு விஹார்" 17-A, ஸயான் மாதுங்கா எஸ்டேட் (கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்) பம்பாய்-22 ★ கல்கத்தா கிளை ஆபீஸ் 48, லேக் பிளேஸ், கல்கத்தா-29

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி

மோட்டார் பம்புகள்



* நீடித்த உழைப்புக்கு நம்பிக்கை கொண்டவை
* குறைந்த மின்சார சக்தியில் அதிக தண்ணீர்
* நிசப்தமான ஓட்டம்
* செலவில் சிக்கனம்
* உழைப்புக்கும் உறுதிக்கும் உத்திரவாதம் உள்ளவை

தயாரிப்பாளர்கள் :

பீளமேடு இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிமிடெட், 234, அவனாசி ரோடு, பீளமேடு, கோயமுத்தூர்-4

போன்: 4746

ஊல்லனில் மிகச் சிறந்தவற்றிற்கு

தாரிவால்

வாங்குங்கள்



இன்றைய நாகரீகம் வுல்லனைத் தேர்ந்தெடுக்கிறது. அது மிக நேர்த்தியானது, கண்கவர் வர்ணத்துடன் பார்ப்பதற்கு எப்பொழுதும் நன்ருக இருக்கிறது. வுல்லனுக்கு இணையேதுமில்லை. மிகச் சிறந்த வுல்லன்களுக்கு, பெண்மணிகள் மிகவும் விரும்பும் நவநாகரீகமான பாணிகளிலும், பல நிறங்களிலும் உள்ள தாரிவால் வுல்லன்களைவிட நேர்த்தியானவற்றை உங்களால் தேர்ந்தெடுக்க முடியாது.



விற்பனை பிரதிநிதிகள்:
T. R. S. ஐயங்கார் & சன்ஸ், N-I,
சிக்பேட், பங்களூர்—2.
T. R. S. ஐயங்கார் & சன்ஸ்,
20/17, கனி மார்க்கெட்,
கிடங்குத் தெரு, மதராஸ்—1

நியூ ஈகர்டன் வுல்லன் மில்ஸ், தாரிவால், பஞ்சாப், இந்தியா.

லிருந்த ஓர் ஓட்டலில் முடித்துக்கொண்டு அவன் பஸ் நிலையத்தில் நுழைந்தபோது மலை மேல் உள்ள மல்லிகைப் பந்தலுக்குப் போகிற முதல் பஸ் தயாராக நின்று கொண்டிருந்தது. பஸ்ஸில் இரண்டு பேருக்கு மட்டுமே இடம் இருந்தது. சத்தியமூர்த்தி இரண்டாவது ஆளாக அந்தப் பஸ்ஸில் ஏறிக் கொண்டான். அவனுக்கு முன்பே ஒரு வெள்ளைக்காரர் ஏறிக் கொண்டுவிட்டதனால் அந்தப் பஸ்ஸில் இடம் பிடித்த கடைசிப் பிரயாணி சத்தியமூர்த்தியாக இருந்தான். இன்னும் இரண்டு விநாடிகள் தாமதித்து வந்திருந்தால் இதுவும் தவறித்தான் போயிருக்கும். நல்ல வேளையாக அப்படி நேரவில்லை.

பஸ் புறப்பட்டது. அந்த அதிகாலை நேரத்தில் முகத்தில் சில்லென்று வந்து வீசும் குளிர்ந்த காற்றில் சிலிர்த்துக் கொண்டே பயணம் செய்வது சுகமாக இருந்தது. இரு புறமும் அடர்ந்து செழித்த பசுமையினிடையே வளைந்து வளைந்து செல்லும் மலைச் சாலையில் போகும்போது சத்தியமூர்த்தியின் மனத்தில் அந்தப் பயணமே பெருமிதத்துக்குரியதோர் அநுபவமாகத் தோன்றியது. சாலையின் இரு புறமும் எங்கெங்கிருந்தோ பறவைகளின் இனிய ஒலிகளும் நீர் சலசலத்து ஓடும் ஓசைகளும் தந்தியிலிருந்து பிரிந்த நாதத்தைப் போல் விடுபட்டு வந்த இனிமையாய்ப் பிறந்த இடத்துச் சுவடு இல்லாமல் வந்து பரவிக் கொண்டிருந்தன. சவுந்தரியம் இறைபட்டுக் கிடக்கும் அந்த மலைகளின் வழியே பயணம் செய்து மல்லிகைப் பந்தலை அடைந்தபோது பத்தே கால் மணிக்கு மேல் ஆகிவிட்டது. பள்ளத்தாக்கில் இறங்கி ஊருக்குள் புகுந்து நிலையத்தில் பஸ் நின்றவுடன் சத்தியமூர்த்தி அவசரமாகப் புறப்பட்டான். நான்கு புறமும் மலைகளுக்கு நடுவில் இப்படி அமைத்திருப்பதை விட வேறெந்த விதமாக அமைந்திருந்தாலும் அழகாயிராதென்பது போல் அவ்வளவு கச்சிதமான அழகுடன் அமைந்திருந்தது மல்லிகைப் பந்தல். ஊரிலிருந்து சற்றே விலகி மலைச் சரிவில் கட்டப்பட்டிருந்த பூபதி கலைக் கல்லூரிக்குச் சத்தியமூர்த்தி போய்ச் சேர்ந்தபோது பத்தரை மணிக்கு மேலும் மூன்று நான்கு நிமிடங்கள் ஆகிவிட்டன. அங்கே கல்லூரி அலுவலகத்தைச் சேர்ந்த ஒருவர் சத்தியமூர்த்தியை எதிர்பார்த்துத் தயாராகக் காத்திருந்தார்.

''கல்லூரி அதிபர் பூபதி அவர்களுக்கு உடல்நலக் குறைவாக இருப்பதால் இண்டர்வியூவை அவரது பங்களாவிலேயே நடத்திவிட ஏற்பாடாகியிருக்கிறது. பிரின்ஸிபாலும் அங்கேயே போய்க் காத்துக் கொண்டிருக்கிறார். உங்களை எதிர்பார்த்துத்தான் இங்கே நின்று கொண்டிருக்கிறேன் நான். நீங்கள் வந்தவுடன் அங்கே அழைத்துக் கொண்டு வரச் சொல்லி யிருக்கிறார்கள். புறப்படலாமா?'' என்று சத்தியமூர்த்தியை எதிர்கொண்டார் அவர்.

அவன் கல்லூரிக் கட்டிடத்துக்குள் நுழைந்ததுமே அவனை இன்னாரென்று விசாரித்துத் தெரிந்து கொண்டவுடனேயே அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார் அவர். தாமதமாக வர நேர்ந்ததற்காகக் கல்லூரி அதிபரிடமும் முதல்வரிடமும் காரணம் சொல்லி மன்னிப்புக் கேட்க வேண்டி யிருக்கும் என்று தான் எதிர்பார்த்திருந்ததற்கு மாறாகப் பண்புடனும், பெருந் தன்மையுடனும் தன்னை அழைத்துப் போக ஒரு மனிதர் காத்திருந்ததைப் பார்த்தவுடன் சத்தியமூர்த்தி வியப்படைந்தான்.

கல்லூரிக் காம்பவுண்டுக்கு மிக அருகிலேயே தனியாக மேடு போலிருந்த பகுதியில் அடர்ந்த தோட்டத்தினிடையே தொழிலதிபர் பூபதியின் பங்களா அமைந்திருந்தது. வீட்டுக்கு முன் நீண்ட பாதையில் இரு புறமும் குண்டு குண்டாகப் பூத்திருந்த மல்லிகைப் பூக்களின் நறுமணத்தை நுகர்ந்து கொண்டே நடந்தான் சத்தியமூர்த்தி.

அந்தப் பங்களாவின் முன்புறத்து அறை வாயிலுக்கு அருகே வந்ததும் சத்தியமூர்த்தியை உள்ளே செல்லுமாறு அறைப் பக்கம் கையைக் காண்பித்து விட்டு உடன் வந்தவர் வெளியிலேயே நின்று கொண்டார். அறைக்குள் நுழைந்ததுமே இலட்சிய ஆர்வமும், செல்வச் செழிப்பின் பெருந் தன்மையும் தெளிவாகத் தெரியும்படி வீற்றிருந்த அந்த முதியவரைத்தான் சத்தியமூர்த்தியின் கண்கள் முதன் முதலாகச் சந்தித்தன. பக்கத்தில் நாற்காலியில் அமர்ந்திருந்தவர்தான் கல்லூரியின் பிரின்ஸிபாலாக இருக்க வேண்டுமென்று அநுமானித்துக் கொள்ள முடிந்தது. சத்தியமூர்த்தி இருவருக்கும் வணக்கம் செலுத்தி விட்டு நின்றான்.

''இப்படி உட்காருங்கள்'' — என்று தமக்கு எதிரேயிருந்த நாற்காலியைச் சுட்டிக் காண்பித்தார் பூபதி. சத்தியமூர்த்தி அடக்க ஒடுக்கமாக உட்கார்ந்தான். பிரின்ஸிபால் தம் கையிலிருந்த பைல் கட்டை அவிழ்த்து ஒரே ஒரு விண்ணப்பத்தை மட்டும் அதிலிருந்து உருவி எடுத்துப் பூபதிக்கு முன்னால் வைத்துவிட்டு ''கே. சத்தியமூர்த்தி ஃபார் டமில் லெக்சரர் போஸ்ட்....'' என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டுப் போய்ப் பழையபடி தம் நாற்காலியில்

அமர்ந்தார். இருக்கிற நிலைமையைக் கூர்ந்து நோக்கி அநுமானம் செய்ததில் முழு இண்டர்வியூவையும் கல்லூரி அதிபரே நடத்திவிடுவார்போல்தோன்றியது.

அந்த அறையையும் அதை நிரப்பி யிருந்த பிரம்மாண்டமான புத்தக அலமாரிகளையும் அறைக்குள்ளிருந்தே வீட்டுக்குள் போவதற்காக உட்பக்க மாய் அமைந்திருந்த வாயிலில் தொங்கிய கிளிகள் எழுதிய துணித் திரைச் சீலையையும் சலவைக் கல் பதித்த தரையையும் ஒவ்வொன்ருகப் பார்த்துக்கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி. அதே நேரத்தில் அநுபவமும், படிப்பும், முதுமையும் நிறைந்த பூபதி அவர்களின் கண்கள் தன்னைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருப்பதை அவன் கண்டான். யாரோ நெருங்கிய விருந்தாளியை விசாரிப்பது போல் கேள்வி ஆரம்பமாயிற்று.

''ஹவ் டூ யூ ஃபைண்ட் திஸ் ப்ளேஸ்?'' (இந்த ஊர் எப்படி இருக்கிறது?)

''வெரி நைஸ்... ஸோ பியூட்டிஃபுல்' (மிக நேர்த்தியாக இருக்கிறது...நிரம்ப அழகாயிருக்கிறது) என்று சிறிதும் இடைவெளி விடாமல் சுபாவமாகப் பதில் சொன்னுன் சத்தியமூர்த்தி. மீண்டும் சில கணங்கள் மௌனமாக அவன் முகத்தைப் பார்த்தார் அவர். அப்படிப் பார்த்த பின் சிரித்துக் கொண்டே மேலும் சொன்னர்:

''மிஸ்டர் சத்தியமூர்த்தி! நீங்கள் என்னுடைய கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக வேலை பார்ப்பதற்கு விண்ணப்பம் போட்டிருக்கிறீர்கள். உங்களிடம் நான் ஆங்கிலத்தில் கேள்வி கேட்டு 'இண்டர்வ்யூ' செய்வது முறையில்லை. இனிமேல் எல்லாம் தமிழிலேயே கேட்கப் போகிறேன்...''

''அதனுலென்ன சார்? எந்த மொழியில் பேசினுலும் பேச நினைக்கு முன் உருவாகிய மனத்தின் கருத்து ஒன்ருகத்தான் இருக்கும்'' — என்று சத்தியமூர்த்தி பதில் சொன்னுன். அவர் இந்தப் பதிலைக் கேட்டு அயர்ந்து போயிருக்க வேண்டும். ஆனுல் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் மேலும் அவனைக் கேட்டார் அவர். ''நீங்கள் இப்போதுதான் பஸ்ஸிலிருந்து இறங்கி நேரே இங்கே வருகிறீர்கள் என்று நினைக்கிறேன்...''

''ஆமாம்! நேற்று மாலை கடைசி பஸ் தவறி விட்டது.''

''இன்று காலை சரியாகப் பத்து மணிக்கு இங்கே இருக்க வேண்டும் என்று இண்டர்வ்யூ கார்டில் உங்களுக்கு எழுதியிருந்ததாக ஞாபகம்...''

''எழுதியிருந்தபடியே வந்துவிடத்தான் முயன்றேன்.பஸ் தவறிவிட்டது.''

''பஸ் தவறவில்லை! பஸ்ஸை நீங்கள் தவற விட்டு விட்டீர்கள்...''

''..............''

இந்த இடத்தில் அவருக்குப் பதில் சொல்வதற்குப் பொருத்தமான வார்த்தைகள் கிடைக்காமல் எதிரே பச்சைக் கிளிகள் பறக்கும் திரையைப் பார்த்தான் சத்தியமூர்த்தி. அந்தத் திரை சற்றே விலகி நிஜமாகவே ஒரு கிளிக் குஞ்சு தெரிந்தது. விலகி மறைந்த திரையில் இருக்கும் பச்சைக் கிளி ஓர் இளம் பெண்ணுகி ஆனந்தம் பூத்துக் கொண்டிருக்கும் தன் அழகிய கண்களால் இங்கே அறைக்குள் நடந்து கொண்டிருப்பதைக் கண்டுகொண்டிருப்பது புரிந்தது. வெள்ளைச் சலவைக் கல் தரையில் ரோஜா நிறம் பளீரென்று தெரியும்படி முன் நகர்த்தி, ஊன்றிக் கொண்டிருந்த தன் சிவப்புப் பாதங்களை அந்தப் பச்சைக் கிளியின் கண்கள் இமையாமல் பார்ப்பது கண்டு கூச்சத்தோடு பின்னுக்கு நகர்த்தி வேஷ்டியில் அந்தப் பாதங்கள் மறையும்படி செய்து கொண்டான் சத்தியமூர்த்தி. திரை விழுந்தது. பறக்க முடியாத ஓவியக் கிளிகள் மறுபடி தெரிந்தன. உண்மைக் கிளி திரைக்குப் பின் மறைந்தது. இப்பால் பூபதி அவர்களின் பேச்சு மீண்டும் அவனேடு தொடர்ந்தது.

''மன்னிக்க வேண்டும் மிஸ்டர் சத்தியமூர்த்தி! இண்டர்வ்யூக்கள் கல்லூரி அலுவலகத்தில் வைத்தே நடத்தப்படுவது வழக்கம். இன்று என் உடல் நிலை காரணமாக இங்கு மாற்றினேன். அதனுல்தான் நீங்கள் நேரம் தவறி வந்ததற்கும் சேர்த்து மன்னிக்கப்படுகிறீர்கள். இந்த இண்டர்வ்யூ கல்லூரியிலேயே நடந்து நானும் பத்து மணிக்குச் சரியாக அங்கு வந்திருந்தேனுனல் பத்தடித்து ஐந்து நிமிஷம் வரை பார்த்து விட்டு இண்டர்வ்யூவைக் கான்ஸல் செய்திருப்பேன்.''

''சார்!....வந்து....''—என்று ஏதோ சொல்வதற்காக நிமிர்ந்தான் சத்தியமூர்த்தி. இப்போதும் திரைக்கு அப்பாலிருந்து ஆனந்தம் பூத்து மலரும் அந்தக் கண்கள் வெளியே தெரியத் தொடங்கியிருந்த அவனுடைய அழகிய நீண்ட நளினமான ரோஜா நிறப் பாதங்களைப் பார்த்துக் கொண்டிருந்தன. சத்தியமூர்த்தியின் பார்வை சென்ற பக்கமாகவே பூபதி அவர்களுடைய பார்வையும் திரும்பிச் சென்றது. சத்தியமூர்த்தி தலையைக் குனிந்து கொண்டான்.

''பாரதி! இப்படி வா....அம்மா....'' என்று அவர் உட்பக்கமாகத் திரும்பி மெல்ல அழைப்பதைக் கேட்டுத் தலை நிமிர்ந்த சத்தியமூர்த்தி மீண்டும் ஆனந்தம் பூக்கும் அந்தக் கண்களைச் சந்தித்த போது இன்னும் அவை அவன் நீண்ட அழகிய சிவப்புப்பாதங்களையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. (தொடரும்)



தரம் மிகுந்த காபி....

நல்ல காபி மிக ஆனந்த மளிப்பது

தரம் மிகுந்த நல்ல காபியை போல் ஆனந்த மளிப்பது உலகத்தில் வேறொன்றுமில்லை. அது நட்பை வளர்பதுடன் மனிதர்களை வசப்படுத்துவதிலும் உதவுகிறது.

காபி எந்த மனநிலையிலும் திருப்தி அளிக்கிறது



காபி போர்டு
பெங்களூர்

தரமான காபி தயாரிப்பது மிக சுலபம். இதைப் பற்றிய எங்கள் இலவச புத்தகத்திற்கு எழுதுங்கள். எந்த பாஷையில் வேண்டு மென்பதையும் குறிப்பிடுங்கள்.



ஏழு வைட்டமின்கள்


சேர்ந்தது, ஏற்றமிகு அமுல் பாலுணவு



புரதச்சத்து நிறைந்த அமுல் பாலுணவு வைட்டமின் ஏ, பி₁, பி₂, பி₆, சி, டி ஆகிய சத்துக்களும், நியசினமைடும் கொண்டது. இந்த வைட்டமின் சத்துக்கள் சீரிய, ஆரோக்கியமிக்க வளர்ச்சிக்கு உதவுவதோடு உங்கள் மழலைச் செல்வத்தை நோயிலேயிருந்து காத்திடுகின்றன.

தயாரிப்பாளர்கள்:
கெய்ரா டிஸ்ட்ரிக்ட் கோவாப்பரேடிவ் மில்க் ப்ரொட்யூசர்ஸ் யூனியன் லிட்.
அகில இந்திய விநியோகஸ்தர்கள்: VOLTAS வோல்டாஸ் லிமிடெட்.

ASP/ABF-24 TAM




பொங்கலோ பொங்கல்!
பொங்கலோ பொங்கல்
பொங்கலோ...ஓ
பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்
வருஷத்துக்கு ஒருநாள் இந்தப் பக்கம் வருவதற்கு பொங்கல் இறும் வேறயா?
பொங்கல் வருஷத்துக்கு ஒரு நாள் தானே வரதுங்க!
சாமா
STOP
தூக்கிய திருவடி துணையென நம்பினோம்!
என்ன இருந்தாலும் வெள்ளைத் தோலுக்கு மதிப்பு வேறுதான்!
ஒழிக ஒழிக
வீடு பூரா வெள்ளையடிக்க கூலி இவ்வளவு தானா?
ஆமாம்!
இந்த வீட்டுக்காரர் ஒழிக கருமி ஒழிக ஒழிக!

ருசியின் தராதரத்தை

நிறுத்துப் பார்க்க முடியாது—

ஆனால்



சுதாவினால்

தயாரிக்கப்பட்ட
சமையலின்
தரத்தை
நீங்கள்
சுவைத்து
உணரலாம்



A KERALA GOVERNMENT PRODUCT

சுதா-ஒரு உன்னத சமையல் சாதனம். சுத்தமான தாவர எண்ணெய்களினால் தயாரிக்கப்பட்டதும், வைட்டமின் சேர்ந்ததுமான சுதா பிரத்யேக வாசனையும், சாப்பாட்டிற்கு ஆர்வமூட்டும் சுவையும் தருகிறது.

சுதா சமையலுக்கு அதிக சுவையும் இல்லத்திற்கு அதிக இன்பமும் தருகிறது.

இப்பொழுது 2, 4 கிலோ, கிலோகிராம் எடைகளில்
கவர்ச்சியான டின்களில் கிடைக்கும்



இந்த
அலுமினியம் அரை லிட்டர்
அளவுபடி இரண்டு கிலோகிராம்
டின்கள் மூன்று வாங்குபவர்களுக்கு
இலவசமாய் கைவசமிருக்கும்வரை
வழங்கப்படும்.

கவர்ன்மெண்ட் ஹைட்ரோஜனேஷன் பாக்டரி
(பொதுத்துறையிலுள்ள ஒரே வனஸ்பதி தொழிற்சாலை)
கோழிக்கோடு - கேரளம்

GHF-14



1. சந்தை இரைச்சலில்...

வணக்கங்கள் பல.

மூன்று வருஷ கால இடைவெளிக்குப் பிறகு 'கல்கி' வாசகர்களுடன் தொடர்பு கொள்கிறேன்.

இதில் எனக்கும் உங்களுக்கும் ரொம்ப மகிழ்ச்சி. 'ப்ளஷர்' தான்! இல்லையா?

''ப்ளஷர் இருக்குன்னு டாக்டர்....'' என்று சொல்லிக் கொண்டு என்னிடம் பலர் வருகிறார்கள். நீங்களும் நானும் 'கல்கி' மூலம் சந்திப்பது இந்தப் 'பிளஷர்' அல்ல. 'ப்ரஷர்' என்பதைத்தான் நாகரிக உலகில் சிக்கித் தவிக்கும் சில கர்நாடகப் பிரகிருதிகள் 'ப்ளஷர்' என்று சொல்கிறார்கள்.

நாகரிகத்தின் ஏகபோக உரிமைபெற்றவர்—அதாவது நாகரிகத்திலே பிறந்து நாகரிகத்திலே வளர்ந்து நாகரிக மயமாய் விளங்குவோர்—இவ்வித நகைச்சுவை மிக்க சொற்களை நமக்கு நல்க மாட்டார். ஆயினும் அவர்களுடைய இன்றைய முற்போக்கான நாகரிக வாழ்க்கையே இந்த (ப்ளட் ப்ரஷர் என்னும்) ரத்த அமுக்க நிலை ஏற்படுவதற்கு முக்கிய முதற் காரணமாகும் என்பதை அவர் அறிவாரோ என்னவோ என்ற வியப்பை மட்டும் உண்டாக்கத் தவற மாட்டார். நாகரிகத்தின் உச்சாணி மட்டத்தில் அமைந்த இன்றைய முற்போக்கு வாழ்க்கையில் இரைச்சல், பேரிரைச்சல் என்னும் இன்னலும் ஒன்று. இந்தப் பேரிரைச்சலால் ரத்த அமுக்கம் அதிகரிக்கிறது என்பது மட்டுமல்ல; வேறு பல கேடுகளும் விளைகின்றன. ரத்த அமுக்கம் அதிகரிப்பதற்கும் அநேக காரணங்கள் உண்டு. இந்த இரைச்சலையே முதலில் கவனிப்போம்.

''சந்தை இரைச்சலில் குடியிருந்து கெட்டேனே!'' என்று ஒரு பழமொழி. இரைச்சலால் விளையும் இன்னல்களைத் தெரிவிக்க இப் பழமொழியைவிட விளக்கம் தேவையா?

'ஒலி' என்பது ஒரு மகாசக்தி. (ஓங்காரமென்னும்) ஒலி மயந்தான் [படைப்பினுட்பட்ட] யாவுமே என்பது வேதம் தெரிவிக்கும் ஒருண்மை. அணுசக்தியின் திறன் மகத்தானதென்று நாம் அறிவோம். இம்மகா சக்தியை ஆக்கத் துறையில் உபயோகிப்பது போலவே அழிக்கும் துறையிலும் உபயோகிக்கலாம் என்பதும் நாமறிவோம். அவ்விதமேதான் ஒலியின் சக்தியும் ஆக்கத் துறையில் இசை, இன்னிசை என்றெல்லாம் பரிணமித்து நற்பயனை நல்குகிறது. இன்னிசைச் சக்தியால் ஊட்டம் பெற்றுத் தாவரங்களும் செழிப்பாய் வளருகின்றன என்பதை நாம் படிக்கிறோம். ஆகவே சில ரோகங்கள் குணமாவதற்கும் இன்னிசை உதவும் என்று நமது சாஸ்திரங்கள் சொல்லுமானால் அதை நம்ப மறுக்க முடியுமா? இவ்வாறு ஆக்கத் துறையில் ஒலியானது இசை, இன்னிசை, கீதம், கானம், சங்கீதம் என்று பெயர் பெற்றுப் பயனளிக்கிறது. சத்தம், இரைச்சல், பேரிரைச்சல், கூச்சல், பெருங் கூச்சல், பேய்க் கூச்சல் என்று பெயர் பெறும் வகையில் ஒலி பரிணமிக்கும் போது அழிக்கும் துறையில் செயல்படுகிறது.

உஷ்ணத்தின் நிலையை அளக்க உஷ்ணமானிகள் இருப்பது போல் நமது செவிப் புலனில் தட்டிச் சத்தத்தை உணரச் செய்யும் ஒலி அலைகளின் மோதலின் சக்தியை அளந்து தெரிவிக்கவும் ஓர் ஒலிமானியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். உஷ்ணத்தை இத்தனை டிகிரி என்று செவ்வெண்ணால் குறிப்பிடுவது போல ஒலியின் சக்தியை 'டெஸிபெல்' என்று சொல்லுகிறார்கள்.

ஒலியின் அலைகள் மோதுவதால் செவிப் புலனில் ஏற்படும் அமுக்கத்தை டெஸிபெல் அளவை என்னும் (ஒலி அளவை) நுண் கருவி மூலம் கணக்கிடுங்கால் அவ் வமுக்கத்தில் ஏற்படும் மிகமிகச் சிறிய அளவை அல்லது அமுக்கத்தின் பேதத்தை டெஸிபெல் என்பர்.

ஓர் இலையின் அசைவால் ஏற்படும் ஒலியின் அமுக்கத்தை இக்கருவி மூலம் 10 டெஸிபெல் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வாறே அமைதி மிக்க ஓர் இல்லத்தில் 30 டெஸிபெல், திறமை மிக்க ஒரு சாதாரண அலுவலகத்தில் 50 டெஸிபெல், இரைச்சல் மிக்க ஒரு சிற்றுண்டி இல்லத்தில் 100-110 டெஸிபெல் என்றெல்லாம் ஒலியின் அமுக்கம் இருப்பதாக மேல்நாட்டு விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் மூலம் தெளிந்து தெளிவுபடுத்துகின்றனர்.

150 டெஸிபெல்லுக்கு அதிகமான (அமுக்கமுள்ள) ஒலியைக் கேட்க நேரிடுமோ — அவ்வொலி நமது உட்செவியைத் தாக்கிப் பாழாக்கி நம்மைச் செவிடராக்கி விடும்.

குழந்தைகளைச் சீராட்டிக் கொஞ்சிக் குலவுவதாக எண்ணி அதன் காதினுள் ''குர்ர்ர்ர்'' என்று கூவும் திருச் சமூகத்துகள் இதைக் கவனிக்க! அப்போதுதான் பிறந்த குழந்தை. அதன் புலன்களுக்குச் செயல் புரியும் திறமை இருக்குமா? தாயின் வயிற்றில் உள்ள வரையில் 'கதகத' வென்று ஓரளவு சுகமான உஷ்ணத்தையே அனுபவித்து வருகிறது 'அச்சிக, பெட்டைக் கோழியின் அடையிலுள்ள முட்டையினுட் கருப் போல. இந்த உஷ்ணம் கருவின் வளர்ச்சிக்கு அனுகூலமான வாய்ப்பை அளிக்



கிறது. பிறந்ததும் வெளிக் காற்றின் ஸ்பரிசம் ஏற்படுகிறது. இக்காற்று அச்சிசு அதுவரையில் அனுபவித்து வந்த கதகதப்பான அனுபவத்துக்கு மாறுபட்டதாய் மிகவும் தணுப்புள்ளதாய் இருக்கிறது. திடீரென்று இத்தணுப்புத் தட்டியதும் அதுவும் தேகம் முழுதும் தட்டியதும் ஒருவித அதிர்ச்சியுடன் ஓர் எழுச்சி ஏற்படுகிறது. உடனே சிசு உடலைச் சிறிது முறுக்கிச் சிலிர்த்துக்கொண்டு வாயைத் திறந்து பெருமூச்சாகச் சுவாசத்தை (வெளிக் காற்றை) உள்ளே இழுத்துக் கொள்கிறது. அச்சுவாஸக் காற்றை வெளியிடவும் அவ்வதிர்ச்சியும் எழுச்சியும் உடற்சிலிர்ப்புமே உதவி புரிவதால் குழந்தை அழத் தொடங்குகிறது. அழுவதால் மேலும் காற்றை உட்கொள்ளவும் அதனால் சுவாசாசயம் விரிந்து விரிந்து பெரிதாகவும் மேலும் அதிகமான பிராண வாயுவை ஏற்கவும், பிராணவாயுவினால் ஊட்டம் கிடைக்கவும் ஆசயங்கள் இயங்கவும், பசி ஏற்பட ஆகாரத்தைப் பருகி உடல் வளர்ச்சி பெறவும் வாய்ப்பு உண்டாகிறது.



ஆகவே, ''பேரன் பிறந்தானுமே! சந்தோஷம். தீர்க்காயுசா இருக்கணும். குழந்தை நன்றாய் அழுகிறதா ?'' என்று கேட்டுக் கொண்டே வருவாள் ஒரு தொண்டுக் கிழமான பாட்டி. மேலும் ''குழந்தைக்குக் கீழே மொத்துன்னு போட்டு விடு!'' என்று சில கந்தல் துணித் துண்டுகளைக் கொண்டு வந்து அன்பளிப்பாய் உதவுவாள்.

இன்றோ, ''கங்கிராகுலேஷன்ஸ்!'' என்று சொல்லிக் கொண்டே வரும் நாகரிக நங்கை, ஒரு ரப்பர் நிப்பில், ஒரு பௌடர் டப்பி இவைகளைக் கொண்டுவந்து நீட்டுகிறாள். இரு வகைப் போக்குக்குமுள்ள வித்தியாசத்தைப் பாருங்கள்.

பிறந்த குழந்தைக்கு சுவாஸோச்சுவா சத்தை இயங்கத் தொடங்கி விடுமளவுக்கு வெளியிலுள்ள காற்றின் தணுப்பு அவசியந்தான். அதே தணுப்பு அதிகமாகிக் குழந்தைக்கு மார்ச்சளி பிடிக்காமல் காப்பாற்றுவதும் அவசியமல்லவா? பாட்டியின் அன்பளிப்பின் உண்மைத் தத்துவமும், ''குழந்தை நன்றாய் அழுகிறதா?'' என்று யோககேஷமம் கேட்டதின் உட்கருத்தில் புதைந்திருக்கும் தத்துவமும் எவ்வளவு உயர்ந்தவை! இந்தப் பாட்டியை, ''அது ஒரு கர்நாடகம்'' என்று அஃறிணைச் சொல்லால் விளிக்கும் இன்றைய நாகரிக நங்கையின் விசாரணையிலோ அன்பளிப்பிலோ இவ்வுயர்வு இருக்கிறதா? இவ்விருவரில் யாருடைய போக்கு உண்மையில் முற்போக்கானது ? பாட்டியுடையதுதான்!



பிறகு இக்குழந்தையின் மற்றைய புலன்களும் செயல்பட நாம் பயிற்சி அளிக்கவேண்டும். இதற்கு முதன் முதலில் செவிப் புலனைத் தான் இயக்குவிக்க வேணுமென்பது நமது வைத்திய சாஸ்திரம் கூறும் முறையாகும். சிறியதான இரண்டு மணிக்கால் கற்களை எடுத்துக் கொண்டு அவற்றை ஒன்றோடொன்று குழந்தையின் செவியினருகில் உரச வேண்டும். மிக மிகச் சிறிய அளவில் சத்தம் ஏற்படுமல்லவா? இது செவிப்புலனைத் தானாக இயங்கச் செய்யும். காலக்கிரமத்தில் ஒரு கிலுகிலுப்பைச் சத்தத்தை அறிய நேரிடும் போது குழந்தை சத்தம் வரும் திசையில் திரும்பிக் கேட்பதைக் காண்கிறோம்.

இதனிடையில் குழந்தை வெளிச்சத்தைப் பார்க்கவும் கற்றுக் கொள்கிறது.

சத்தம் என்பது ஆபத்தைக் குறிக்கும் ஓர் எச்சரிக்கை. ஒரு மிருகம் காட்டில் அசைபோட்ட வண்ணம் உறங்கிக் கொண்டிருக்கிறது. எங்கோ ஓரிடத்தில் ஒரு சிங்கத்தின் கர்ஜனை கேட்கிறது. உடனே அந்த மிருகம் துள்ளி எழுகிறது. செவியைச் கண்டித் திருப்பிக் கண்களை உருட்டி உருட்டி நான்கு பக்கங்களும் மிக மருட்சியுடன் பார்க்கிறது. ஓடித் தப்புவதா? எதிர்த்து நின்று போரிடுவதா? இது இமைக்கும் நேரத்துக்குள் நிச்சயிக்கப்படுகிறது. அந்த ஒரு கணத்துக்குள் அந்த மிருகத்தின் நரம்புகள் என்ன துடிதுடிப்பை அனுபவித்திருக்கும். அதன் புலன்களும் ஆசயங்களும் எவ்வித அதிர்ச்சியை அடைந்திருக்கும் என்று எண்ணிப் பார்த்தால் பயங்கரமானதாக இருக்கும். சத்தத்தால் உண்டான விளைவு.

மனிதனுக்கும் அதேவிதம்தான். ஒரு திடீர் சப்தத்தைக் கேட்பது அல்லது மிக அதிகமான டெஸிபெல் உள்ள சப்தத்தைத் தொடர்ந்து கேட்பது ஆகியவற்றால் திடீரென்றோ அல்லது தொடர்ச்சியாகவோ ஓர் அதிர்ச்சியை அனுபவிக்கிறான். நரம்புகள் யாவும் புடைத்து நிற்கின்றன. ரத்த அழுக்கம் ஏகத் தாறுக அதிகரித்து விடுகிறது. ஹிருதயத் துடிப்பு ரேஸ் குதிரைக் கணக்கில் ஓட ஆரம்பிக்கிறது. 'தெருத்தித் தெருத்தி' மூச்சு விடத் தொடங்குகிறது. அச்சமயம் ரத்தத்தில் உள்ள இனிப்புச் சத்தும் (பிளட் ஷுகர்) அதிகரித்து விடுகிறது.

இன்றைய வாழ்விலோ இந்தச் சத்தம் என்பது பேரிரைச்சல் என்ற டெஸிபெல் அளவில் எங்குமே எல்லாச் சமயத்திலும் இருப்பதால் மனிதனும் இடைவிடாத உத்வேகத்துக்கு உட்பட்டவனாகவே இருக்கிறான். மனத்துக்கு அமைதி என்பது மருந்துக்கும் இருப்பதில்லை. இதனால் கிரந்திகளில் சில, அதிகமாகத் தமது சுரப்புத் திரவத்தை ஊற்றுகின்றன. சில கிரந்திகள் கருகிச் சுருங்கிச் செயல் புரியாமல் நாசமாகின்றன. லிவர் என்னும் ஈரல்கூட இவ்விதக் கேட்டுக்கு உள்ளாகிற தென்றால் ஜீரணகோசம், ஹிருதயம், நரம்புகள் இவைகளைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

சமைக்கும்போதே இளைப்பாறலாம்

இந்த அற்புத மண்ணெண்ணெய் அடுப்பு கண்டு பிடிக்கும் வரையில் சமையல் என்றாலே மிகக் கஷ்டமான காரியம் என்று கருதப்பட்டு வந்தது. இப்பொழுது நீங்கள் சமைக்கும்போதே இளைப்பாறலாம். கரி உடைக்கும் கஷ்டமோ அடுப்பூதும் சிரமமோ கண்ணில் புகை மண்டுதலோ இல்லை. சமையலறையில் புகைக்கரிப் பிடிக்காது. இந்த அடுப்பு துப்புரவானது எளிதானது எளிமையானது.

- தூசி, தும்பு, புகை, சத்தமில்லை
- சிக்கனமும் பாதுகாப்புமுள்ளது
- ஸ்பேர் பாகங்கள் கிடைக்கும்



காஸ் ஜனதா

மண்ணெண்ணெய் அடுப்பு


சுவையான சமையல் | சுலபமான சமையல்

தயாரிப்பாளர்கள் :

தி ஓரியண்டல் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

77, பௌபஜார் தெரு, கல்கத்தா-12.





அத்தியாயம் 3

அடிமைக்கு விடுதலை

வடிவேலுவின் கரங்களுக்கிடையில் உருண்டு கொண்டிருந்த ஒரு சிறிய கூழாங்கல் காவிரி ஆற்றின் பிரவாகத்தில் 'டொலக்'கென்ற சத்தத்துடன் விழுந்தது. நீர்த் துளிகள் நாலாபுறமும் சிதறின. அதே நேரத்தில் பழைய நாட்களைப் பற்றிய வடிவேலுவின் சிந்தனையும் துண்டாடப்பட்டுச் சிதறியது.

'எதற்காக நான் கூழாங்கல்லை நீரில் எறிந்தேன்?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான் வடிவேலு. 'அன்றைக்குப் பெனிஸிலின் மருந்து அடங்கிய கண்ணாடிக் குப்பிகளைச் சாக்கடை ஜலத்தில் போட்ட நினைப்பில் இன்று இந்தக் கூழாங்கல்லையும் வீசியிருக்கிறேன்...!'

ஆம், கள்ளத்தனமாக எடுத்து வந்த மருந்தைக் காண்பித்து டாக்டரையும் அழைத்துக் கொண்டு அவன் சக்குவின் வீட்டை அடைவதற்குள் அவள் உயிர் பிரிந்து விட்டது. அரும்பாடு பட்டுத் தான் அபகரித்துக் கொண்டு வந்த மருந்தினால் பலனேது மில்லை என்று நிச்சயமானதும் அதனை அவன் டாக்டரிடமே வைத்துக் கொள்ளுமாறு கொடுத்தான்.

இருட்டுச் சொத்தை அவர் தமக்கென்று வாங்கிக் கொள்ளத் துணிவின்றி மறுதளித்து விட்டார். ஆகவேதான் வீடு திரும்புகையில் அதனை அலட்சியமாகத் தெரு ஓரச் சாக்கடையில் விசிறி அடித்து விட்டான் வடிவேலு.


ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் அவன் இப்போது எழுந்து கிராமப்புறத்தை நோக்கி நிதானமாக நடந்தான். சக்கு இறந்து போனதற்காக அவன் அப்படியொன்றும் வருத்தப்பட்டு விடவில்லே. மாருக, உலகை விட்டு மட்டுமல்லாமல் தன் வாழ்க்கையை விட்டும் ஒரு வழியாக, நிரந்தரமாக ஒழிந்தாளே என்ற அளவில் அமைதியே உண்டாயிற்று அவனுக்கு. சாதாரணமாக, ஒருவர் உயிருடன் இருக்கும்போது அவரிடம் எத்தனே குற்றம் குறைகளைக் கண்டாலும் மரணம் அவரை ஆட்கொண்ட பிறகு, அவரிடமிருந்த துர்க்குணங்களே மறந்து மன்னித்து நற்பண்புகளே மட்டுமே பார்த்து, 'ஐயோ பாவம்! போய் விட்டாரே' என்ற இரக்கப்படுவது மனித இயல்பு. ஆனல் வடிவேலு குற்றமற்ற பலர் குருதி வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்தவன். போர்க்களத்தில் வீர மரணம் அடைந்தோரை மட்டுமல்லாமல் வீதிகளிலும் வீடுகளிலும் விமானத் தாக்குதலுக்குள்ளாகி மக்கள் கொத்துக்கொத்தாக வீழ்ந்து படுவதைக் கண்டவன். அவர்களில் சூது வாதறியாத பச்சிளம் பாலகர்கள் பலர் என்பதனே உணர்ந்தவன். சாவை விடக் கொடுமையான சித்திர வதையைச் சீனர்கள் அனுபவிப்பதை அறிந்தவன். மருத்துவ விடுதியில் படுத்த படுக்கையாகக் கிடக்கும் நோயாளிகளேக்கூடக் கொன்று குவிக்கும் கொலே வெறியைச் சந்தித்தவன். ரத்த தாகம் ஓர் அளவுக்கு மீறிப் போக அதனைத் தணித்துக் கொள்ள மனிதர்கள் அகப்படாதபோது பரபரக்கும் கைகளால் மிருகங்களே — வாயில்லா ஜீவன்களே – ஆடு மாடுகளே வீணுக வெட்டிச் சாய்க்கும் கோரத்தைப் பார்த்தவன்! அவ்வாறெல்லாம் மக்கள் மடியும்போது சாகத் தகுதி பெற்ற ஒருத்தி இறந்து போனதற்காக அவன் கண்ணீர் உகுக்கத் தயாராக இல்லே. ஆரம்பத்தில் அவள்மீது வைத்திருந்த ஆசையினல் அவளிடமிருந்த குறைகளுக்குச் சந்தர்ப்பச் சூழ்நிலேகளே காரணம் எனக் கற்பித்துக் கொண்டிருந்த அவன், பின்னர் அவளுடைய உண்மையான ரூபத்தைத் தெரிந்து கொண்டு அவளே வெறுத்தான். எனினும் அவளே உயிர் பிழைக்கவைக்கத் தன்னுல் இயன்ற மட்டுமல்ல, தன்னுல் முடிந்ததற்கும் மேலாகவே முயன்று பார்த்து விட்டான். அப்படியிருந்தும் அவள் வாழவில்லே யானல் அவள் இவ்வுலகில் நடமாடுவது ஆண்டவனுக்கே அடுக்கவில்லே என்பது தானே அர்த்தம்? அவளுக்காகத் தான் பரிதாபப்படுவானேன்?

கண்ணீர் உகுப்பதென்றல் அதை டைமெனுக்காகச் சிந்தலாம். தாரைதாரையாக அவன் கண்களிலிருந்து நீர் பெருகவும் செய்தது, அவளே நாற்சந்தி ஒன்றில் சந்தித்தபோது. அதை எண்ணு கையிலேயே உடல் சிலிர்த்தான்...

வெற்றிபோதை ஏறிய ஜப்பானியர் சீனர்களே மிகுந்த துன்பத்துக்குள்ளாக்கி வருகிருர்கள் என்பதைக் கேள்விப்பட்டதும் குமாரி அவனுக்கு டைமெனப் பற்றி நினேவூட்டுகிருள். '' 'இந்திராணி' என்று அவனுக்கு வேடிக்கையாகப் பெயர் சூட்டியதாகச் சொன்னீர்களே, சீன தேசத்தவள்தானே அந்த இந்திராணி?'' என்று கேட்கிருள்.

சென்ற இரண்டொரு நாட்களாகத்தான், அருவமான காதல் உணர்ச்சியின் உண்மையான தன்மையை அவன் குமாரியின் எழில் தோற்றத்தைப் பார்க்கும்போதெல்லாம் அனுபவித்து மகிழ்ந்து வந்திருக்கிருன். அரக்க குணத்தையே கடந்த பல நாட்களாகக் கண்டவனுக்கு அன்பு தந்த இன்பச் சுகம் நடுக்கும் குளிரில் நெருப்பு ஜ்வாலேயின் அருகில் நெருங்குவது போல் இதமாக இருந்திருக்கிறது. அவன் புதிதாகக் கண்டு கொண்டிருந்த காதலின் இந்த இனிய இயல்பு அவனே மன





மோகன மயக்கத்தில் ஆழ்த்தியிருக்கிறது. வேறு எதைப் பற்றியும் அவனைச் சிந்திக்க விடாமல் செய்து வந்திருக்கிறது. இப்போது, அவன் திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறான். ''ஐயோ! அவள் அந்த ராட்சதர்கள் கையில் சிக்காமல் இருக்க வேண்டுமே?'' என அஞ்சி அலறுகிறான்.

''சீக்கிரம் போங்கள். அவளை இங்கே அழைத்து வந்து விடுங்கள். இந்த வீட்டிலேயே அவள் ஒளிந்திருக்கட்டும்!''

வடிவேலு தலையசைக்கிறான். ''குமாரி! அதனால் உங்களுக்கு — உனக்கும் உன் அப்பாவுக்கும் ஏதேனும் துன்பம் நேர்ந்தால்...?''

''அப்பாவுக்கு ஜப்பானியரிடம் நிறையச் செல்வாக்கு உண்டு. கதிரேசனுடைய இல்லத்தை அவர்கள் சோதனையிடத் துணிய மாட்டார்கள். அப்படியே நாம் ஒரு சீனப்பெண்ணுக்கு அடைக்கலமளித்திருக்கிறோம் என்பதை ஜப்பானியர் அறிந்து கொண்டாலும் பரவாயில்லை. அதையெல்லாம் சமாளித்துச் சரிக்கட்ட அப்பாவுக்குத் தெரியும்.''

இந்த உறுதிமொழி கிடைத்ததும் வடிவேலு புறப்பட்டு விடுகிறான். டையெனுடைய இருக்கை அமைந்திருக்கும் கட்டிடம் பாதிக்கு மேல் குண்டு விழுந்ததால் பாழாகிக் கிடப்பது அவன் கண்களுக்குத் தென்பட்டதுதான் தாமதம்; நெஞ்சு பதைபதைக்க அவன் விரைவாக ஓடுகிறான். விடுவிடுவென்று மாடிப் படிகளேறிச் செல்கிறான். அவளுடைய மூன்று அறைகளும் முழுமையாகவே இருக்கின்றன. ஆனால் அவற்றினுள் சகலமான பொருள்களும் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. தாறுமாறாக இறைந்து கிடக்கும் அவளுடைய உடைமைகள் சோகக் கதை பகர்கின்றன. வாசல் கதவின் அருகிலேயே நின்று, நாலா புறமும் கண்ணோட்டம் செலுத்துகிறான் வடிவேலு. சின்னஞ் சிறு கைக்குட்டை முதல் பெரிய பெரிய சுவர் ஓவியங்கள் வரை அனைத்திலும் நுணுக்கமான கலையழகுடன் மிளிர்ந்த அந்த அறைகள் இப்போது அலங்கோலமாய்க் கிடக்கும் நிலை அவன் இதயத்தை உருக வைக்கிறது. பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அங்கு சில மணி நேரங்களுக்கு முன்பாகக் கேட்டிருக்கக் கூடிய பல வகைச் சத்தங்கள் மீண்டும் அவன் செவிகளை நாராசமாய்த் தாக்குவது போன்றபிரமை உண்டாகிறது. 'படார்' என்று தாளிடப்பட்டுள்ள கதவு பலவந்தமாய்த் தள்ளித் திறக்கப்படும் ஓசை, கொடூர சித்தம் படைத்தவர்களின் கோரமான சிரிப்பொலி, அபலை ஒருத்தியின் தீனக் கூக்குரல், பாத்திரங்களும் பண்டங்களும உருளும சத்தம், மிருக வெறி கொண்டவர்களின் கொக்கரிப்பு, இச்சை மிக அவர்கள் உரக்க எழுப்பும் நெடுமூச்சுக்கள், வீதியில் பூட்கள் கடகடவெனத் தாளம் போடுகிற ஒலி, துணி கிழிக்கப்படும் ஓசை.... திரும்பித் தறி கெட்டு ஓடுகிறான் வடிவேலு. ஆயினும் அவன் தன்னுடைய எண்ணங்களை விட்டு எங்ஙனம் எவ்வளவு தூரம் தப்பி ஓடிவிட முடியும்? டையெனைக் காப்பாற்றத் தக்க தருணத்தில் வரத்தவறியதற்காகத் தன்னைத் தானே நொந்து கொள்கிறான். 'எனக்கு எச்சரிக்கை செய்த குமாரிதான் இதனைச் சற்று முன்னதாகவே ஞாபகப்படுத்தியிருக்கக் கூடாதா? அவளைக் குறை சொல்லி என்ன பயன்? காதலின் இனிய புது மணத்தை நுகர்கின்ற சுகானுபவத்தில் மதியிழந்து, செயலிழந்து நானிருந்தேனென்றால் மாண்டவன் மீண்ட அதிசயத்தைக் கண்ணுக்கு மெய்யாகக் கண்ட அவளது மகிழ்ச்சியும் இன்பமும் அதைக் காட்டிலும் இன்னும் எவ்வளவு அதிகமாயிருக்க வேண்டும்? ராணுவத் தலைமைக் காரியாலயத்துக்குத் தினமொரு முறை தப்பாமல் அலைந்து திரும்பியும் அவனுக்கு என்னைப் பற்றிய நிச்சயமான விவரம் ஒன்றும் தெரியவில்லை.'

காணாமற்போனவர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறான் அவன். மரணமடைந்தோர் அல்லது எதிரிகளால் கைதாக்கப்பட்டோர் என்கிற வரிசையில் இருந்திருந்தால்கூடப் பரவாயில்லை. அதில்




"என்ன!
வீட்டில்
அமிர்தாஞ்சனம்
இல்லையா?
கணுக்கால் சுளுக்குக்கு
இப்போது என்ன தடவுவேன்?"
எந்த சமயத்திலும் அமிர்தாஞ்சனம் தேவைப்படலாம். ஆகவே, எப்போதும் ஒரு டின் வைத்திருப்பது நலம். அமிர்தாஞ்சனம் வீட்டில் இருந்தால் கவலைக்கு இடமேயில்லை.
அமிர்தாஞ்சன் லிமிடெட்
14/15 லஸ் சர்ச் ரோடு, மதராஸ்-4
பம்பாய்-1, கல்கத்தா-1, புது டில்லி-1
AMRUTANJAN
Pain Balm
JWT/AM-1878

இந்த நிச்சயமற்ற தன்மை நிலவி நெஞ்சை முறுக்கிப் பிழிந்திருக்காது. அவன் இறந்துவிட்டதாய்க் கருதி அழுது புலம்புவதா அல்லது உயிருடன் திரும்புவான் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்பதா என்றே புரியாமல் அவள் வேதனையினால் வதைக்கப்பட்டிருக்க மாட்டாள். நாளாக ஆக அவள் நம்பிக்கை குறைந்து கொண்டு வந்திருக்கிறது. ராணுவக் காரியாலயத்தில் விசாரித்ததிலும் இறந்துவிட்டான் என்று எண்ணவே அதிகமாக இடமிருப்பதாய்க் கூறியிருக்கிறார்கள். அச்சமயத்தில்தான் மாண்டவன் மீண்ட அந்த அற்புதம் நிகழ்ந்திருக்கிறது. தலைகால் புரியாமல் அவள் சந்தோஷத்தால் தவித்திருக்கிறாள். அவனுடன் ஒட்டி உறவாடி விளையாடிக் கதை பேசிக் கழித்த ஒவ்வொரு விநாடியும் அவளுக்கு அளப்பறிய ஆனந்தத்தை அளித்திருக்கிறது. அந்நிலையில், இந்த அளவுக்கு அவள் நினைவு வைத்துக் கொண்டதே பெரிய காரியம். இந்திராணி ஜப்பானியரிடம் அகப்பட்டு அல்லலுற்றதற்கு அவள்மீது பழி சுமத்துவதில் அர்த்தமில்லை. இந்திராணியைப் பற்றிக் குமாரி என் மூலமாகக் கேள்விப்பட்டதுடன் சரி. அவள் எவ்வாறு இருப்பாளென்று கூட அவளுக்குத் தெரியாது. தவறெல்லாம் தன்னுடையதுதான்.

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு விசனத்துடன் நடக்கிறான் வடிவேலு. அந்தத் தருணத்தில் அந்தப் பக்கமாய் ஒரு ராணுவ லாரி வருகிறது. அதனுள்ளிருக்கும் பல பெரிய சாக்கு மூட்டைகளுள் ஒன்றினைச் சில ஜப்பானியச் சிப்பாய்கள் கீழே இறக்குகிறார்கள். தேங்காய்கள் நிறைந்த மூட்டையாக இருக்குமென்று வடிவேலுவுக்குத் தோன்றுகிறது. சிப்பாய்கள் கோணியை அவிழ்க்கிறார்கள். தலைகீழாய்ப் பிடித்து உதறி உலுக்குகிறார்கள். தேங்காய்கள் வீதியில் விழுந்து நாற் திசைகளிலும் உருளுகின்றன. தேங்காய்கள்தானா அவை? ஐயோ! என்ன பயங்கரம்! அவ்வளவும் சீனர்களின் தலைகள்! ராணுவ வாகனத்திலிருந்து நீளமான ஈட்டிகளை ஜப்பானியர் எடுக்கிறார்கள். அவற்றின் கூர்முனைகளில் அத்தலைகளைச் செருகி நாற்சந்தியின் மையத்தில் நடுகிறார்கள். லாரியில் ஏறிக் கொள்கிறார்கள். லாரியின் பேரிரைச்சலையும் அவர்களுடைய ஆபாசச் சிரிப்பு மூழ்கடித்து விடுகிறது. அந்தரத்தில் நிற்கும் அத்தலைகளை நிமிர்ந்து நோக்குமாறு தன் கண்களுக்குக் கட்டளையிடுகிறான் வடிவேலு. வேண்டா வெறுப்பாக அவன் விழிகள் உயருகின்றன. ஒவ்வொரு முகமாகப் பார்த்து வருகின்றன. மூன்று முகங்களைக் கண்ட பின் நான்காவது தலைப் பக்கமாக அவன் திருஷ்டி செல்லவில்லை. கைக்குட்டையில் சுற்றிச் கால் சராய்ப் பைக்குள் வைத்திருந்த பித்தான்களை எடுக்கிறான். உள்ளங்கையில் அவற்றை ஏந்திப் பரிதாபமாய்த் தன்னைப் பார்த்து விழிக்கும் அவனெதிரே சொரிகிறான். மூலைக்கொன்றாக அவை சிதறி ஓடுகின்றன. ''இந்தப் பித்தான்கள் ஒவ்வொன்றும் உனக்காக நான் பழி வாங்கிய ஒரு ஜப்பானிய உயிரைக் குறிக்கும், டையென்!'' எனக் கூறுகையில் அவன் கன்னங்களில் கண்ணீர் வழிகிறது. ''உன்னை அடிமைப்படுத்தி வைத்திருந்த யுத்த அரக்கன் கடைசியில் மனமிரங்கி உனக்கு விடுதலையும் அளித்துவிட்டானா?'' என்று கேட்டு மனம் புழுங்குகிறான். அக்கணத்தில் தன்னையும் ஜப்பானியரையும் உலகையும் கடவுளையுமே கூட அடியோடு வெறுக்கிறான்....

'மனத்தில் உருவான அத்தனை வெறுப்பும் உண்மையாகவே என்னைச் சன்னியாசம் வாங்கிக் கொள்ளச் செய்திருக்க வேண்டும்; அதற்குப் பதிலாகத் துறவி போல் வேஷம் போட்டு இந்தக் காவி உடைக்கு மாசு கற்பித்து வருகிறேன் நான். துறவுக் கோலம் பூணுகிற அளவுக்கு நான் தைரியசாலி அல்லதான். போர்க்களத்தில் காட்டுகிற தீரத்தைப் போலன்றி சன்னியாசம் வாங்கிக்கொள்வதற்குத் தனியானதொரு துணிச்சல் தேவை. அது என்னிடம் இல்லை. எப்படியானாலும் இனி இந்தக் காவி உடைக்குப் பின்னால் நான் மறைந்து ஒளிந்து வாழக் கூடாது.'

இவ்வாறு தீர்மானித்துக் கொண்ட வடிவேலு சென்னையை அடைந்து புதுதில்லிக்கு ரயிலேறு முன்னர், ரயில் மாறியது போல் தன் வேஷத்தையும் மாற்றிக் கொண்டான்.

அத்தியாயம் 4

பாயும் புலிகள்

புதுதில்லியில் ஜந்தர்மந்தர் என அழைக்கப்படும் அந்தப் பழங் காலத்திய வான சாஸ்திர ஆராய்ச்சிக் கூடத்தையே நுணுகி ஆராய்ந்து கொண்டிருந்தான் வடிவேலு. பல மைல் தொலைவிலிருந்து தில்லியைக் காண வந்தவர்களும் அந்நகரிலேயே நிரந்தர வாசம் புரியும் பலரும் மாலைப் பொழுதை மனோ

ரம்மியமான சூழலில் கழிக்க விரும்பி அங்கே வந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் சீக்கிய குலத்து இளம் சிங்கமென மதிக்கத் தக்கவனாய்த் தென்பட்ட வடிவேலு, பாரதத்தின் பழங் காலச் சிறப்புக்களில் கர்ம சிரத்தை கொண்டிருக்கும் ஒருவனாகவும் காட்சியளித்தான். விநோதமான உருவம் கொண்டிருந்த கட்டடங்களைக் கூர்ந்து கவனித்து வந்தான். ஏதோ ஒரு புதிய எண்ணம் மனத்தில் பளிச்சிட, மேற்கொண்டு ஆராய்ச்சிக்குரிய விஷயமாக அதனைக் கருதி, மறந்து விடாதிருக்க ஒரு சிறிய நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளவும் செய்தான். சரியாக இருநூறு வருஷங்களுக்கு முன்னால் அந்த வான சாஸ்திர நிலையத்தைக் கட்டுவித்த ஜெய்சிங் என்கிற ராஜபுத்திர வீரனின் அறிவாற்றலை வியக்கின்ற சரித்திர நிபுணனோ இவன் என்று தன்னைப் பார்ப்போரைச் சிந்திக்க வைத்தான் வடிவேலு. ஆனால் உண்மையில் எதையோ, அல்லது யாரையோ எதிர்பார்த்து அவன் காத்திருந்தான். அதனை வெளிக் காண்பித்துக் கொள்ளாது இயல்பாக நடிக்க அரும்பாடு பட்டான். 'நான் இங்கே சந்திக்க வேண்டியவரைச் சந்தித்து அளவளாவி விட்டால் பின்னர் நிம்மதியாகத் தாராவைத் தேடிப் போகலாம். அவளிடம் கூற வேண்டியவை எவ்வளவோ உள்ளன. நான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியவையும் ஏராளமாக இருக்கின்றன. சீக்கிரமாக இவன் வந்து தொலையக் கூடாதா? அந்த இவன் யார்? அவன் எப்படி இருப்பான்? இங்கு உலவி வந்து கொண்டிருக்கும் கூட்டத்தினரில் ஒருவனாய் அவன் ஏற்கனவே இந்த இடத்தை வளைய வந்து கொண்டிருப்பானோ? என்னை இப்போது அணுகலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறானோ? நேதாஜியின் 'பாயும் புலி'களில் ஒருவன் தான் நான் என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி நிச்சயப்படுத்திக் கொள்ள நிதானிக்கிறானோ?'

அங்கிருந்த படிக்கட்டுக்கள் பலவற்றிலும் ஏறி இறங்கி அலுத்து விட்டது வடிவேலுவுக்கு. வேறு வழியின்றி அவன் இப்போது மீண்டும், எல்லாவற்றையும் விட மிக உயரமான படிக்கட்டு ஒன்றில் ஏறிச் செல்லத் தொடங்கினான். உச்சியில் இருந்தபடி சுற்று வட்டாரப் பூங்காவை நன்கு காண முடிந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சின்னங்களாக விளங்கும் சில கட்டடங்களும் தென்பட்டன. 'புது தில்லியியே!' என்று அந்தகரை அன்புடன் அழைத்தான் வடிவேலு. 'இன்னும் சிறிது காலம் பொறுத்திரு. உனக்கு விடிவு காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. 'சலோ தில்லி!' என்கிற தாரக மந்திரத்தைச் சுபாஷ் பாபு உச்சரித்து விட்டார்!'

தன்னைத் தேடி வர வேண்டியவர்களைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தில் வடிவேலுவின் விழிகள் தோட்டத்தை வளைய வந்தன. 'இதோ மாடிப்படிகளில் ஏறி வருவது யார்? அடேடே! கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த கதையாகத் தாராவல்லவோ வந்து கொண்டிருக்கிறாள்? இன்றிரவு அவள் வீட்டுக்குப் போய்த் திரும்புவதாயிருந்தேனே? இப்போதே அவளிடம் பேச்சுக் கொடுப்பதா? அதனால் தான் இங்கு வந்த காரியத்துக்கு ஏதேனும் குந்தகம் நேர்ந்தால்? ஒருவேளை அப்படியும் இருக்குமோ? தாராவைச் சந்திப்பதற்காகவே தான் நான் இங்கு வந்திருக்கிறேனோ? எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. நான் யார் என்பதை அவசரப்பட்டு வெளியிட்டு விடக் கூடாது.'

இதற்குள்ளாகத் தாரா அவனுக்கு மிக அருகில் வந்து விட்டாள். படிக்கட்டின் உச்சியில் நின்ற அம் மனிதரைக் கவனியாதது போல் கவனித்தாள்.... துணுக்குற்றவளாகக் கரத்தை உயர்த்தித் தன் மொட்டு இதழ்களில் பட்டு விரல்களைப் பதியச் செய்தாள். ஒரே வினாடிதான், அடுத்தகணம் தன்னைச் சமாளித்துக் கொண்டு வேறுபுறம் திரும்பி இயற்கைச் சூழலில் தன் இதயத்தை லயிக்க விட்டாள்.

நோட்டுப் புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு ஹிந்தியில், ''டில்லியும் அதன் சுற்றுப்புறங்களும் ஒருகாலத்தில் வெறும் காடாக இருந்தன. பாயும் புலிகள் அங்கே உலவி வந்தன'' எனத் தனக்குத் தானே உரக்கப் படித்துக் கொள்பவனைப் போல் நடித்தான் வடிவேலு. 'பாயும் புலி' என்ற சொற்களைக் கேட்டதுதான் தாமதம்; மலர்ந்த முகத்துடன் அவள் விருட்டெனத் திரும்பியபடியே, ''ஜெய் ஹிந்த்!'' என்றாள்.

''நீண்ட நேரமாய்க் காத்திருக்கிறீர்களா?'' என்று வருத்தம் தெரிவிக்கும் முகமாகக் கேட்டாள். ஹிந்தியில் அவள் பேசியதற்குத் தமிழில் பதில் அளித்தான் வடிவேலு. ''சரியாக முக்கால் மணி நேரம் ஆகிறது. இது மட்டும் ஒரு புண்ணிய க்ஷேத்திரமாக இருந்திருந்தால் பண்ணிய பிரதட்சணங்களுக்கும் படியேறி இறங்கியதற்கும் சேர்த்து மறு பிறவியற்ற மோட்சம் கிடைப்பது சர்வ நிச்சயம்!''

ஆச்சரியமும் குதூகலமும் போட்டியிட்ட அந்த மலர் வதனம் நாணத்தால் சிவந்தது. அடுத்து விஷமத்தனம்


TAM. OTM-IIA
இளம் வயதினுக்கும்
இளம் இதயத்துக்கும்
ஏற்ற இனிய
துணிவகைகள்
தாகர்ஸே
ஆடைகள்
நாகரீகத்தின் முக்கிய விருப்பம்
ஸான்போரைஸ்ட்
·SANFORIZED·
லேபில் உள்ளது.
தாகர்ஸே க்ரூப் ஆலைகள்
• தி க்ரெஸண்ட் ஸ்பின்னிங் & மானுபாக்சரிங் கம். லிட்.
• தி வெஸ்டர்ன் இந்தியா ஸ்பின்னிங் & மானுபாக்சரிங் கம். லிட்.
• தி இந்தியன் மானுபாக்சரிங் கம். லிட்.
• தி ஹிந்துஸ்தான் ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் கம். லிட்.

அங்கு குடிகொண்டது! ''நினைத்தேன்!'' என்றாள் அவள்.

''என்னவென்று?''

''நீங்கள் நீங்களாகத்தான் இருக்க வேண்டுமென்று.''

''சிக்கிய இளைஞனை என்னைக் கண்டதும் ஏற்பட்ட திகைப்பைத்தானே குறிப்பிடுகிறாய்?''

''அதற்கும் முன்னால் சுபாஷ் பாபுவிடமிருந்து சிலர் அந்தரங்கச் செய்திகளைக் கொண்டு வரலாம் என்ற தகவல் கிடைத்த போதே ஊகித்தேன், அவர்களில் ஒருவராக நீங்களும் அவசியம் வருவீர்களென்று.''

''தாரா! அத்தனை உறுதியாக எப்படி நீ தீர்மானித்து விட்டாய்? நான் மலாயாவுக்குச் சென்றது யுத்தம் புரிவதற்காக. கண்டிப்பாக உயிருடன் திரும்புவேன் என்று எந்தத் தைரியத்தில் முடிவுக்கு வந்தாய்?''

எட்டிப்பார்க்கும் கண்ணீரைக்கட்டுப்படுத்த முயலுகையில் அவள் இமைகள் இலேசாகப் படபடத்தன. ''பூஜாபலனில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு!''

''தாரா! நான் பத்திரமாகத் திரும்ப வேண்டுமென்று நீ அன்றாடம் பிரார்த்தித்ததாகவா சொல்கிறாய்?''

''இல்லை; உங்கள் நலனை உத்தேசித்துக் கடவுளைத் தியானிக்காத நேரமே இல்லை என்கிறேன்.''

''தாரா!''—மேலே பேசவிடாமல் வடிவேலுவின் நெஞ்சை ஏதோ அடைத்தது.

''இப்போது நீங்கள் எதுவும் சொல்லிச் சிரமப்பட வேண்டாம். அதற்கு இது இடமுமல்ல; வாருங்கள்.''

ஜந்தர் மந்தரை விட்டு அவர்கள் வெளியே வந்தார்கள். தெரு ஓரமாய் இருந்த ஒரு மோட்டார்க் காரை அணுகினார்கள். காரின் பின்புறக் கதவை டிரைவர் திறந்து பிடித்தான். இருவரும் ஏறிக் கொள்ளக் கார் கிளம்பியது.

''என்ன வாத்தியாரய்யா? ஆளை அடையாளம் தெரியவில்லையா?'' என்று கேட்டான் வடிவேலு.

''அடேடே! வடிவேலு தம்பியா? தாடியும் மீசையும் பலமாயிருக்கே; அதனால் ஏமாந்து விட்டேன்'' என்றார் டிரைவர் வெங்கிட்டு.

''நீங்கள் மட்டுமென்ன? ஆளே ரொம்ப மாறிவிட்டீர்கள். ஆனால் மூக்கு நுனியில் சரிந்து தொங்கும் மூக்குக் கண்ணாடி வாத்தியார்களின் 'டிரேட் மார்க்' ஆயிற்றே! அது சரி, குடுமி இருக்கிறதா, வெட்டி எறிந்துவிட்டீர்களா?''

''குல்லா போடுவதன் தாத்பர்யமே அதை மறைப்பதுதானே தம்பி?''

ஏதேதோ பேசிக்கொண்டே அவர்கள் பழைய தில்லியை அடைந்தார்கள். ஒரு சந்துக்குள் புகுந்து சென்ற கார், பழங்காலத்துக் கட்டடம் ஒன்றின் முன்னால் போய் நின்றது.

குறுகலான வீதியும் ஜன சந்தடியும் சேர்ந்து, தோட்டம் துரவு ஏதுமற்ற அந்தப் பங்களாவைச் சிறிதாக்கிக் காட்டினாலும் உள்ளே சென்ற பின்னர் அது எவ்வளவு விசாலமானது என்பது புரிந்தது. அரண்மனை போல் நீள அகலங்களைக் கொண்டிருந்த அதில் பண்டைக் காலத்தில் ஒரு மொகலாய மன்னனின் மந்திரியோ சேனாபதியோதான் வாழ்ந்திருக்க வேண்டும். இப்போது அதன் ஒரு புறத்தில், சிலர், தடுப்புத் திரைகளை வைத்துச் சிறிய அறைகளாகப் பிரித்துக் கொண்டு குடியிருந்தார்கள். மறுபக்கம் கடைகண்ணிகள் இருந்தன. இடையில் வாலிபர்கள் கூடி, சீட்டு, கேரம், டேபிள் டென்னிஸ் போன்றவை விளையாடச் சங்கம் அமைத்துக்கொண்டிருந்தார்கள். அதன் பின்னால் ஒரு நூலகம். தாரா திரும்பிப் பாராமல் நேராக நூல்நிலையத்தை அடைந்தாள். அங்கே சில புத்தகங்களைப் புரட்டுவது போல் பாவனை செய்து விட்டு மறு கோடிக்குப் போனாள். சுற்றுமுற்றும் ஒரு தடவை நோட்டம் பார்த்துவிட்டு, ஒரு புத்தக 'ஷெல்பை'த் தன் பக்கமாய் இழுத்தாள். அப்போதுதான் அது ஒரு ரகசியக் கதவு என்று உணர்ந்தான் வடிவேலு. ''சீக்கிரம்!'' என்று கூறிவிட்டுத் தாரா கதவுக்குப் பின்னால் மறைந்தாள். வடிவேலு பின்தொடர்ந்தான்.

படிகளில் இறங்கிப் போய் ஒரு பெரிய பாதாள அறைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு ஏராளமான யுவர்களும் சில யுவதிகளும் கூடி யிருப்பதைப் பார்த்தான் வடிவேலு. பலமான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டிருந்தவர்கள் சட்டென்று சர்ச்சையை நிறுத்திக் கொண்டு கண்ணிமைக்காது தாராவையும் வடிவேலுவையும் நோக்கினார்கள்.

''தாரா! சுபாஷ் பாபுவிடமிருந்து செய்திகொண்டுவந்திருப்பவரா இவர்?'' என்று அவர்களில் ஒருவன் கேட்டான்.

தாரா பெருமிதப் புன்னகையுடன் தலையை மேலும் கீழுமாய் அசைத்தாள். ''தோழர்களே! வடிவேலு என்பவரைப் பற்றி உங்களுக்குப் பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறேனல்லவா? ஜப்பானியருடன் போராடிப் பெற்ற அனுபவங்களையெல்லாம் தாய்த் திருநாட்டை விட்டு அன்னியனை விரட்டி அடிக்கப் பயன்படுத்தப் போகும் வீரர் வடிவேலு இவர்தான்!'' என்றாள்.

''ஜெய் ஹிந்த்!'' என்ற கம்பீர முழக்கம் அந்த விசாலமான கூடத்தை நிறைத்தது. (தொடரும்)

பினிக்ஸ் ஆடைகள்

நவநாகரீகக் குறிப்புகளில்
முதலிடம் பெறுகின்றன

பாப்ளின்கள் • வாயில்கள் • ஷர்ட்டிங்குகள்

பினிக்ஸ்
மில்ஸ்
ஒரு ரூயா
ஸ்தாபனம்

RPY.6.TAM









வீடு ஒழித்தல்

குட்டி கிருஷ்ணன்

‘பொங்கலோ பொங்கல்!’ என்றதும் யார் புதுத் தெம்பு பெற்றுக் கட்டவிழ்த்து விடப்பட்ட காளையைக் கட்டிப் பிடிக்கும் உற்சாகத்துடன் துள்ளிக் குதித்தாலும் சரி, என்னால் மட்டும் அது முடியவே முடியாது. பொங்கல் திருநாள் வருகிறதா? கூடவே வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், பாயஸம், வடை, கரும்பு எல்லாம் என் மனக்கண்ணெதிரே பளிச்சுப் பளிச்சென்று தோன்றி மறையும். அவற்றை ஒரு கை பார்க்கவும் நான் தயார். சுவாமிக்கு நிவேதனம் ஆகும் வரையில் பல்லைக் கடித்துத் தின்று விடாமல் பசியைப் பொறுத்துக்கொண்டு காத்திருக்கவேண்டுமா? சரி, அப்படியே செய்கிறேன். பலகாரங்களின் நறுமணத்தால் கவர்ந்திழுக்கப்பட்டுத் திருட்டுத்தனமாய்ச் சமையலறைக்குள் புகுந்து ஒரே ஒரு வடையைக் கூட ருசி பார்க்காமல் இருக்கவேண்டுமா? அதற்கும் சம்மதந்தான்.

ஆனால் மனத்துக்குகந்த இந்தத் தினத்துக்கு ஒரு வாரம் முன்னதாகவே பாட்டி ஒரு வெடிகுண்டை என் மீது வீசி என் ஆர்வத்தைக் கொன்றே விடுவாள்.

''ஏண்டா, கிட்டா! பொங்கல் வருகிறதே! வீட்டுக்குச் சுண்ணாம்பு அடிக்க ஏற்பாடு பண்ணேண்டா!'' என்று பாட்டி உத்தரவு பிறப்பிக்கும்போது என்னைக் கவலை ஆட்கொண்டு விடும். கூடவே 'அச்சூ' என்று அபசகுனம் மாதிரி ஒரு தும்மலும் வெளிப்படும். சுண்ணாம்பு என்ற சொல்லே என்னைத் தும்ம வைக்கிற தென்றால் நிஜமாகவே வீட்டுக்குச் சுண்ணாம்பு அடிக்கும்போது....

மேலே எழுத விடாமல் அடுக்குத் தும்மலாக வெளிப்படுகிறது. கண்களை நீர் மறைக்கிறது.... இந்த அவதிக்குக் காரணம், தூசி, தும்பு, சுண்ணாம்பு நெடி இவற்றுக்கும் எனக்கும் உள்ள ஒப்புரவின்மையா அல்லது சுண்ணாம்பு அடிப்பதற்கு ஏற்படக் கூடிய செலவை எண்ணும் போது ஏற்படுகிற 'அலர்ஜியா' என்பது என் ஆராய்ச்சிக்கு இன்னும் பிடிபடாத விஷயமாகவே இருந்து வருகிறது. அதைப் பற்றி மற்றவர்களுக்கு என்ன அக்கறை?

''ஆமாம், அண்ணா! வீடு முழுதும் ஒரே எலியும் மூட்டைப் பூச்சியும் தான் ஓடுகின்றன'' என்று பாட்டி சொல்லுக்குப் பரிந்து பேசினாள் என் தங்கை மைதிலி.

இது வரைக்கும் பாட்டியின் யோசனையைக் கேட்டு மைதிலி ஒரு தடவை நடந்து கொண்டாள் என்பது கிடையாது. 'அடுத்த வருஷம் கலியாணமாக வேண்டும், அடக்கமாயிருக்கக் கற்றுக் கொள். வெங்காயச் சருகுச் சேலையும் நாளைக்கு ஒரு சினிமாவும் வேண்டாம்' என்று பாட்டி படித்துப் படித்துச் சொல்கிறாளே, கேட்கிறாளா இவள்? இதற்கு மட்டும் வக்காலத்து வாங்கிக் கொண்டு வந்து விட்டாள். எனக்குச் சுடச்சுட ஏதேனும் பதில் சொல்ல வேண்டும்போலிருந்தது.

''மூட்டைப் பூச்சியும் எலியும் மட்டும் தானா? இன்னும் பாம்பு,





தேன், நட்டுவாக்களி, பூரான் எல்லாமே இந்த வீட்டிலே குடியேறி யிருந்தால் அதிசயப் படுவதற்கில்லே. அத்தனே அழகா வைத்துக் கொள்கிறீர்கள் வீட்டை. பழசை யெல்லாம் எத்தனே நாட்களுக்குக் கட்டிக் காக்கிறது? உபயோகம் தீர்ந்து போச்சுன்னு வாசல்லே தூக்கிப் போட வேண்டியதுதானே?'' என்று இரைந்தேன்.

பாட்டியையும் என்னேயும் மாறி மாறிப் பார்த்துவிட்டு ''ஐயோ, அண்ணு! உனக்கு மூளேயே கிடையாது. எந்த இடத்தில் எந்தச் சமயத்தில் எதைப் பேச வேண்டும் என்பது இல்லேயா?'' என்று கேட்டு நாசுக்காக மைதிலி நெற்றியைத் தட்டிக் கொண்டாள். அப்போதுதான் திடுக்கிட்டவனுய் விழித்துக் கொண்டேன். பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு, 'நான் அந்த அர்த்தத் தில் சொல்லவில்லே.....' என்று ஆரம்பிப்ப தற்குள்ளாகப் புதியதோர் அர்த்தம் கண்டு பிடிக்க முயலுவது புதியதோர் அசட்டுத் தனம் என்று உணர்த்துவது போல் பாட்டி வேகமாய் அங்கிருந்து அகன்று சென்று விட்டாள்.

இவ்வளவு தூரம் நடந்த பிறகு பாட்டி யின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யாமலிருக்க முடியுமா? ''ஏண்டா, முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கே?'' என்று காரியாலயத் தோழன் முத்து வினவிய தும் நான் என் சங்கடத்தை விவரித்தேன்.

''இதற்கு ஏண்டா, மூக்காலே அழறே?'' என்றுன் முத்து. ''சித்தப்பா சீனிவாசனிடம் அழைத்துக் கொண்டு போகிறேன். அவரிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்து விடு!''

''அவர் பெரிய இன்ஜினீய ராச்சே? ஏகமா கேட்பாரே!'' என்னும்போதே ஐயோ மறுபடி யும் அசட்டுத்தனமாய்ப் பேசுகி றேமே என்றெண்ணி நான் கதி கலங்கிப் போனேன். அதற்கேற் ருற் போல், ''என்னடா சொல் கிருய்? உன்னே ஏமாற்றித்தான் என் சித்தப்பா வயிறு வளர்க் கணும் என்கிருயா?'' என்று முத்து கேட்டான்.

''சேச்சே! அதெல்லாமொன்று மில்லே!'' என்றேன் அவசரம் அவசரமாக. மானேஜரிடம் ஏதாவது சாக் குப் போக்குச் சொல்லி விட்டு நாலரை மணிக்கே கிளம்பி விடத் தீர்மானித்தோம்.

மிஸ்டர் சீனிவாசன் ஆங்கில எழுத்துக்கள் இருபத்தாறில் குறைந்தபட்சம் இருபதை யேனும் தமது பல்வேறு பட்டங்களில் பிடித் துப் போட்டிருப்பார் என்பது பெயர்ப் பலகை யைப் பார்த்ததுமே தோன்றியது. உள்ளம் நடுங்க அவர் எதிரிலே போய்க் கூனிக் குறுகிக் கொண்டு ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன்.


''மை பிரண்ட்!'' என்று என்னே அறிமுகப் படுத்தி வைத்தான் முத்து. ''ஏண்டா! பேசாமலிருக்கே? என்ன வேணுமோ, சொல் லேண்டா!'' என்றுன் என்னேப் பார்த்து.

''கண்ணும்பு.....!'' என்று சனஸ்வரத் தில் ஆரம்பித்தேன்.

''வாட்? வாட்?'' என்று துள்ளி எழுந் தார் அவர்.

என்னே மேலும் கீழுமாக நாலு கொம்பு உள்ள ஆட்டையோ, ஆறு கால்கள் உள்ள மாட்டையோ அல்லது நெற்றிக் கண்ணேயும் சேர்த்து மூன்று கண்கள் உள்ள பசுவையோ நோக்குவது போல் ஆராய்ந்தார். இது நான் எதிர்பார்த்திருந்த ஒன்றுதான்.

''என் ஸார்! ஸிக்ஸ்டி டூ முடிந்து ஸிக்ஸ்டி த்ரீ ஆரம்பமாகப் போகிறது, தெரியுமோ, இல்லேயோ? இன்னும் ஹைதர் காலத்தி லேயே இருக்கிறீரே, ஐயா! உலகத்திலே எவ்வளவு முன்னேற்றம்? வானத்தை அளக்கிறுன், பூமிக் கடியிலே அணு குண்டு, வெடிக்கிறுன்.




சீனுக்காரன் நம் தேசத்து வாசல் கதவைத் தட்டிண்டிருக்கான். இன்றைக்கு வாரும் ஐயா, இன்றைக்கு வாரும்!''

''வருகிறேன்!'' என்றேன் மென்று விழுங்கியவாறே. ''என்ன செய்யலாம் என்கிறேள்?''

''டிஸ்....டெம்....பர்ர்ர்!.....'' என்றார் இன்ஜினீயர் ஒரு கரத்தையும் அதில் ஒரு விரலையும் தலைக்கு மேல் உயர்த்தி, ஏதோ ஒரு மாயாஜால அற்புதத்தை எனக்குச் கட்டிக் காட்டும் மந்திரவாதியைப் போல. நான் அண்ணாந்து நோக்கிவிட்டு அங்கு ஒன்றுமில்லை என்று கண்டு தலையைத் தாழ்த்தினேன்.

''ஏனய்யா! டிஸ்டெம்பர் என்று கேள்விப்பட்டதே இல்லையா நீர்?''

''என் பாட்டி கொஞ்சம் பழைய காலம். தை பிறக்கையில் வெள்ளை அடிக்க வேண்டும் என்பாள்....''



'' அலம்பி விடலாம் ஸார்! டிஸ்டெம்பர் பூசிய சுவர்களைச் சோப்புப் போட்டுத் தேய்த்துக் குளிப்பாட்டி அப்பழுக்கு இல்லாமல் வைத்துக் கொள்ளலாம். தினம் தினம் தை பிறக்கட்டுமே, பரவாயில்லை. ஒரு பிரச்னையும் கிடையாது. உங்கள் பாட்டியிடம் இதைச் சொல்லுங்கள்.''

''அதற்கு எவ்வளவு செலவாகுமோ?''

''சோப்பு நாலணா, தண்ணீருக்குக் காசு இல்லை!''

''சுவரைக் கழுவுவது பற்றிக் கேட்கவில்லை. டிஸ்டெம்பர் அடிக்க......''

''கண்ணை மூடிக் கொண்டு நான் எதையாவது சொல்லி வைக்க முடியுமா? உங்கள் வீட்டில் மொத்தம் எத்தனை அறைகள்? சுவர்களின் நீளம் உயரம் என்ன? மேல் கூரையின் நீள அகலம் என்ன? சுற்றுச் சுவர் வெளிச் சுவர் உட்சுவர் முதலியவற்றின் அளவுகளையெல்லாம் சொல்லுங்கள்; கணக்குப் போட்டுப் பார்க்கிறேன்.'' அரை மணி நேரம் என் மூளையைக் குழப்பி விட்டு ஒரு தொகையைக் குறிப்பிட்டார் இன்ஜினீயர்.

தலையைச் சுற்றிக் கொண்டு வர, சுருண்டு விழப் போகும் தருணத்தில் அபயம் அளிப்பவர் போல, ''ஒருதடவை டிஸ்டெம்பர் அடித்து விட்டால் பிறகு ஐந்தாறு வருஷங்களுக்குக் கவலை இல்லையே!'' என்றார்.

'நீங்கள் கூறிய தொகையை வைத்துக் கொண்டு பத்து வருஷங்களுக்குச் சுண்ணாம்பு அடிக்கலாமே?' என்று நான் பதிலுக்குக் கேட்கவில்லை. அவ்வளவு பெரிய இன்ஜினீயரிடம் எதிர்த்துப் பேச எனக்குத் திராணி ஏது?

''யோசித்துச் சொல்கிறேன்!'' என்று கூறி எழுந்தேன்.

'' எதையும் செய்யாமல் வெறுமனே யோசித்து யோசித்துக் காலம் கடத்தித்தான் இந்த டமிலன் — டாம் இடியட் — உருப்படாமல் போகிறான். அப்புறம் தெற்கு தேய்கிறது என்று புலம்பிப் பயன் என்ன? தேயத்தான் செய்யும் ஐயா!''

அசட்டுச் சிரிப்புடன் அங்கிருந்து நழுவப் பார்த்தேன்.

''ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது!'' என்றார் இன்ஜினீயர். ''உட்காருங்களேன் போகலாம். என்ன அவசரம்?.... என் 'ஒய்ப்' ராமேசுவரம் போகணும்னு ரொம்ப நாளாச் சொல்லிக் கொண்டிருந்தாள். சரிதான்னு போன வாரம் போய் விட்டுத் திரும்பி வந்துண்டு இருக்கேன். அன்றைக்குப் பத்து மணிக்கு மெட்ராஸிலே ரொம்ப முக்கியமான மீட்டிங். ரயில் செங்கல்பட்டை விட்டுக் கிளம்பியது. கொஞ்ச தூரம் போனதும் நின்று விட்டது. ரொம்ப நேரமாச்சு. மறுபடியும் புறப்படுகிற வழியாக இல்லை. எனக்கோ அவசரம். ஜன்னல் வழியே வெளியே தலைநீட்டினேன். கார்டு கண்ணிலே தட்டுப்பட்டார். 'என்ன சுவாமி விஷயம்?' என்றேன். 'எருமை மாடு ஸார்!' என்றார். ரயில்வே லைனிலே எருமை மாடு குறுக்கே படுத்துக்கொண்டு விட்டதாம். 'நாசமாய்ப் போச்சு' என்று அலுத்துக்கொண்டு தலையில் கையை வைத்தபடி உட்கார்ந்திருந்தேன். ஒருவழியா ரயில் மறுபடியும் கிளம்பியது. அப்பாடா என்று நிம்மதி அடைவதற்குள் கொஞ்ச தூரம் போய்ப் பழையபடி ரயில் நின்றுவிட்டது. எனக்கு ஒரே கோபம். கீழே இறங்கிக் கார்டைக் கண்டுபிடித்துத் தாமதத்துக்குக் காரணம் விசாரித்தேன். பதில் கிடைத்தது, 'எருமை மாடு சார்!' என்று. 'அடராமா! ஏன் சுவாமி இந்தப்பக்கத்தில் எருமை மாடுகள் ஜாஸ்திபோலே இருக்கு. கண்டபடி திரிய விட்டுவிடுறாங்களோ?' என்று கேட்டேன். 'சே! அதெல்லாம் ஒன்றுமில்லை. அதே எருமை மாடுதான் ஸார்!' என்றாரே பார்க்கலாம்! இந்த மாதிரி குறுக்கே வந்து நிற்கிற எருமைகளில் கூட நாம் முன்னேற்றம் காண முடியறதில்லை.''

போனால் போகட்டும் என்பதற்காக இல்லாமல் நிஜமாகவே அந்த ஹாஸ்யத்தை ரசித்துச் சிரித்து மகிழ்ந்து விட்டுக் கிளம்ப எழுந்தேன்.

''எங்கே ஸார் போகிறேள்? உட்காருங்கள், நூறு ரூபாய் கம்மி பண்ணுகிறேன்!'' என்றார் அவர்.

''வேண்டாம் ஸார். வெள்ளைதான் அடிக்கணும்....!''

''சரி, உமக்காக மேலே இருபத்தைந்து குறைச்சுக்கிறேன். திருப்திதானே ஐயா?''

''ரொம்ப தாங்ஸ் ஆனால்....''

''வெள்ளைதான் அடிக்கணுமாக்கும்!''

''ஆமாம்!''

''நூற்றைம்பது ரூபாய் ஆகும்!''

''என் கணக்குக்கு நூறுதான் ஆகிறது!''

''நாளைக்கு ரெண்டு ஆட்களை அனுப்பறேன். ஆபீசுக்கு லீவு போட்டு விட்டு ஒத்தாசைக்குக் கூடமாட இருங்கள்'' என்று கூறி இன்ஜினீயர் எங்களை அனுப்பி வைத்தார்.




ஜாம்–பெக்
புண்ணை யாற்றி
இதமளிக்கிறது

ஜாம்–பெக் உபயோகிக்கும்பொழுது புண்பட்ட இடங்களில் எரிச்சல் ஏற்படுவதில்லை. ஏனெனில் அதில் மூலிகை மருந்துகளும், ஆன்டிசெப்டிக்குகளும் சேர்ந்துள்ளன. சரும உபாதைகளுக்கும் சொரி பொடுகுகளுக்கும் மற்றும் தசைவலிகளுக்கும் உலகப் புகழ்பெற்ற ஜாம்–பெக் உபயோகியுங்கள். இது மிருகக் கொழுப்பு மற்றும் எண்ணெய்கள் சேர்க்கப்படாதது என்பதற்கு உத்திரவாதம்.

Zam-Buk

ஜாம்–பெக்
மூலிகைக்
களிம்பு



எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸி.இ. புல்போர்ட் (இந்) பிரைவேட் லிமிடெட், பம்பாய்

சோல் ஏஜண்டுகள் :

தாதா & கம்பெனி

86, நைனியப்ப நாய்க்கன் தெரு, சென்னை-3

தாய்நாட்டைப் பாதுகாப்பவர்களுக்கு எங்களுடைய



தாழ்மையான காணிக்கை

நாட்டிற்கு நேர்ந்திருக்கும் நெருக்கடியை உத்தேசித்து, தி பஞ்சாப் நேஷனல் பாங்க் ராணுவத்தில் பணியாற்றுபவர்களுக்கும், அவர்களுடைய மனைவியர்க்கும் பாங்கியின் ஒரு ஆபீஸிலிருந்து மற்றொரு ஆபீஸிற்கு, அதே கணக்கில் அல்லது வேறொருவர் கணக்கிற்கு பணம் அனுப்புதல், சம்பளம், மற்ற செக்குகளை வசூலித்தல், நிலைப்படி பணம் கொடுப்பதற்கான கிரக்தா உத்திரவுகளை நிறைவேற்றுதல் ஆகிய வைபோன்ற வழக்கமான பாங்கிங் சாதனைகளை எந்தவிதமான கட்டணமும் வசூலிக்காமல் இலவசமாக அளிக்கும். அன்றுட கணக்குகளுக்கும், சேமிப்பு நிதிக் கணக்குகளுக்குமான சாதாரண கட்டணங்கள் விதிக்கப்படமாட்டா. விவரங்களுக்கு சமீபத்திலுள்ள எங்களுடைய காரியாலயத்தில் தயவுசெய்து விசாரிக்கவும்.

தேசிய பாதுகாப்பு நிதிக்காகப் பொதுமக்கள் அளிக்கும் நன்கொடைகளை எந்தவிதமான கட்டணமும் இல்லாமல் பாங்கியின் எல்லாக் காரியாலயங்களும் வாங்கி அனுப்பும்.

தி
பஞ்சாப் நேஷனல்
பாங்க் லிமிடெட்,

ஸ்தாபிதம், 1895
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : புது டில்லி

சிறப்பாக சுவைஇன்பம் அளிக்கும்

காபி



ப்ரூக் பாண்ட்

பேமிலி பிராண்ட் ப்யூர் காபி

இதையெல்லாம் இன்ஜினீயர்களைப் பற்றிக் குறை சொல்வதற்காகவும் என்னுடைய சாமர்த்தியத்தைப் பறைசாற்றிக் கொள்வதற்காகவும் நான் எழுதுவதாக யாரும் எண்ணிக்கொள்ளக் கூடாது. என் போன்ற நடுத்தர வர்க்கத்தினரிடம் கட்டிடக் காண்டிராக்டர்களும் இன்ஜினியர்களும் காட்டுகிற கருணையையும் அன்பையும் விளக்குவதாகவே வைத்துக் கொள்ளவும்! தங்களிடம் வருபவர்களின் வாழ்க்கைத்தரத்துக்கு ஏற்றவாறு அவர்கள் நடந்து கொள்வதைக் கவனிக்க வேண்டும். வாழ்க்கைத் தரமோ நிலையான தொன்று இல்லை. இன்று இரண்டு அறைகளில் வசிப்பவன் நாளை நாலு அறைகளைக் கொண்ட சொந்த வீடு கட்டலாம்; அவன் வாழ்க்கைத் தரம் இன்னும் உயரவும் செய்யலாம். அடுக்கு மாடிப் பங்களாவில் வசிப்பவனிடம் கூரைக்கு ஆஸ்பஸ்டாஸ் ஷீட் போடுவது பற்றித் தவறிப் போய்க்கூடப் பேசிவிடலாமா? ஆகவே அதிகமாகப் பரிச்சயமில்லாத ஒரிவரிடம் உரையாடுகையில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது தானே? அந்த முறையில் வாழ்க்கைத்தரத்தில் என்னை உயர ஏற்றி வைத்துவிட்டார். படிப் படியாக மேலிருந்து கீழே இறங்கி வந்தார் இன்ஜினீயர் சீனிவாசன். அவர் சமர்த்தர்!

அவர் முன் யோசனை ஒருபுறமிருக்க நிஜமாகவே வாழ்க்கைத்தரத்தில் மேலிருந்து கீழிறங்கி வரவேண்டிய நிர்ப்பந்தம் சிலருக்கு நேர்ந்து விட்டால் என்ன செய்வது? சிறிய வீட்டில் இருப்போர் இன்னும் கொஞ்சம் பெரிய வீட்டுக்குப் போவதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. ஆனால் அதுவரை வசித்து வந்த பெரிய வீட்டைக் காலி செய்து சின்ன வீட்டுக்குக் குடி மாறினால்.... இரண்டு வருஷங்களுக்கு முன்னர் அத்தகையதோர் ஆபத்தான நிலை எனக்கு ஏற்பட்டது. லாரி டிரைவரும் உடன் வந்த கூலி ஆட்களும் அப்படியே மலைத்துப் போய் நின்று விட்டார்கள். ''ஏன் சாமி இவ்வளவு சாமான்களையும் எங்கே கொண்டு போய் வைக்கப் போகிறீங்க?''

''எப்படியோ ஏற்றிப் போய்ப் புது ஜாகையில் சேர்ப்பித்துவிடு. அப்புறம் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்ற நான், அவனைத் தனியே அழைத்துப்போய் ரகசியக் குரலில் ''இதில் முக்கால் வாசிக்கு மேல் விற்றுவிடப் போகிறேன்'' என்றேன். அவன் புரிந்து கொண்டவனாகத் தலையைப் பலமாக ஆட்டிவிட்டு மற்றச் சகாக்களையும் அழைத்துக் கொண்டு பொருட்களை லாரியில் ஏற்றினான்.

அலமாரிகளும் கட்டில்களும் மேஜைகளும் நாற்காலிகளும் ஷெல்புகளும் ஸ்டூல்களுமாய்ப் புதிய இடத்தில் வாசலில் வந்திறங்கின. அந்தச் சின்னஞ் சிறு வீட்டைப் பார்க்கும் போது எனக்குப் பரிதாபமாக இருந்தது. ஐயோ பாவம்! தாற்காலிகமாகத்தான் என்றாலும் கூட இத்தனையையும் அது எப்படித் தன்னுள் அடக்கிக்கொள்ளப் போகிறதோ?

''சாமி! எதை எதை எங்கெங்கே வைக்கணும்? சொல்லுங்க.''

''டிரெஸ்ஸிங் டேபிளை இதோ இங்கே போட்டுடலாம்.''

''டிரெஸ்ஸிங் டேபிள் மண்ணாங்கட்டிக்கெல்லாம் இந்த வீட்டிலே இடம் கிடையாது. அந்த இடத்தில் புஸ்தக அலமாரி வரணும்.''



''டாக்டர் ஸார்! எனக்கு வரவர மறதி ரொம்ப அதிகமாகிக் கொண்டு வருகிறது. எந்த விஷயத்தைப் பற்றியும் சில நிமிஷங்கள் கூட நினைவு வைத்துக் கொள்ள முடியவில்லை. ரொம்பக் கவலையாயிருக்கிறது!''

''எத்தனை நாட்களாக உங்களுக்கு இந்தத் தொந்தரவு?''

''எந்தத் தொந்தரவைப் பற்றிச் சொல்லுகிறீர்கள்?''

''குப்பை கூளத்தை முதல்லே கொண்டு வந்து வீட்டை ரொப்பிவிடு.''

''எதைக் குப்பை என்கிறாய்? டிக்கென்ஸும் ஸ்காட்டும் வோட்ஹவுஸும் குப்பையா?''

''எழுதினவாளையோ, எழுதியதையோ சொல்லவில்லை. புஸ்தகமெல்லாம் வெறும் கந்தலாகக் கிடக்கு....''

''பேசாமல் வாயை மூடிக்கோ. கந்தனாம் கந்தல். நீ பாத்திரக்காரனுக்குப் போடவென்று மூட்டை கட்டி வைத்திருக்கிறாயே, அந்தக் கந்தலை முதலில் வாசலிலே இருக்கிற குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு வா.''

''சாமி! மணி என்னங்க?''

''என்னப்பா உனக்கு அதுக்குள்ள தலை போகிற அவசரம்!''

''சாப்பாட்டு நேரங்க.''— அவர்கள் போய் விட்டார்கள்.

''தர்க்கத்திலேயே நீங்கள் பொழுதைக் கழித்து விட்டீர்கள். ஐந்து மணியானால் அவன் லாரியை ஓட்டிண்டு போய்விடுவான்.''

''நான் ஒன்னும் சொல்லல்லே. நீங்களே எல்லாத்தையும் கவனிச்சுக்குங்கோ!''

''நன்னாத்தான் இருக்கு. அப்புறம் அரிசி எங்கே வைச்சிருக்கேள், புளியைக் காணுமே என்று அவளைக் கேட்டுண்டிருப்பியா?'' - இது என் தாயார்:.

''இந்தா! நீ பேசாமே கிளப்புக்குப் போய் அரட்டை அடிச்சுட்டுத் திரும்பி வரச்சே எடுப்புச் சாப்பாடு கொண்டுவந்துடு. இங்கே நாங்க பார்த்துக்கறோம்'' என்றாள் தாயார் தொடர்ந்து.

எப்படியோ ஒரு வழியாகச் சாமான்களெல்லாம் வீட்டுக்குள் போய்ச் சேர்ந்தன. மனிதர்கள் நுழையத்தான் இடமில்லை! சமையலறையை அடைய இரண்டு லாங் ஜம்ப், ஒரு ஹை ஜம்ப். குளியலறைக்குப் போக ஹர்டில் ரேஸ். ஆபீஸ் அறையை அடைய எடை தூக்கும் போட்டி! இவ்வாறு நாங்கள் அனைவருமே விளையாட்டு மன்னர்களாகிக்கொண்டிருந்தோம். படுக்கையறைக்குள்ளோ ஒருத்

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணா

ஸ்திரீகள் ஆரோக்ய
சௌபாக்யத்திற்கு

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்
சென்னை-17.

எக்ஸிமா
சொறி

உங்கள் சருமத்தில் சுமார் 5 கோடி மெல்லிய துவாரங்களும் மடிப்புகளும் உள்ளன. கிருமிகள் அவைகளில் மறைந்திருந்து, தாங்கமுடியாத அரிப்பு, வெடிப்பு, மேலாகப் பரவும் படை, தோல் உரிதல், எரிச்சல், பருக்கள், படர்தாமரை காலில் அரிப்பு முதலிய உபாதைகளை உண்டுபண்ணுகின்றன. சாதாரண சிகிச்சைகள் தற்காலிகமான நிவாரணம் அளிக்கும். ஏனெனில், அதன் மூலம் உபாதைகளுக்கு மூலகாரணமான கிருமிகள் அழிவதில்லை. விஞ்ஞான முறையில் தயாரித்த இந்த மருந்து, நிக்ஸோடர்ம் (Nixoderm) துரிதமாக இந்தக் கிருமிகளைக் கொன்றுவிடுகிறது. மற்றும் உங்கள் சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் வசீகரமாகவும் இருக்கச் செய்கிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடர்ம் (Nixoderm) வாங்குங்கள். சரும உபாதைகளின் மூலகாரணமான கிருமிகளை நிக்ஸோடர்ம் நிச்சயமாக அழிக்குமென்ற பூர்ண நம்பிக்கையுடன் வாங்குங்கள்.

தர் நுழைந்தால் இரண்டு பேர்கள் வெளியேற வேண்டும். ஆகவே ஏக்கத்துடன் ஒருவரை யொருவர் பார்த்தபடி நாளும் என் சகதர்மிணியும் காலத்தை ஓட்ட வேண்டியதாயிற்று. இந்த நிலை இப்படியே நீடிப்பதை நான் விரும்பவில்லை.

ஏலக் கம்பெனிக்காரர் ஒருவரை அழைத்து வந்து தேவையற்றவை என்று எனக்குத் தோன்றிய பொருள்களையெல்லாம் காண்பித்தேன். எல்லாவற்றுக்கும் அவர் மதிப்புப் போட்டு எழுதிக் கொடுத்தார். மொத்தம் ஐந்நூறு ரூபாய் ஆயிற்று. ரொம்ப சந்தோஷம் அடைந்தேன் நான். "கனையாக ஐந்நூறு ரூபாய் கைக்கு வந்ததும் ரொம்ப நாட்களாக நீ ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் காசு மாலையை வாங்கிக் கொண்டு வந்து என் கையாலேயே அதை இந்த வழவழ கழுத்தில் தவழ விட்டு அழகு பார்க்கப் போகிறேன்" என்று மனைவியிடம் ரகசியமாகச் சொன்னேன். அன்றிரவு தாயாரிடம் மெல்லப் பேச்சை ஆரம்பித்தேன். பட்டியலையும் அவளுக்குப் படித்துக் காட்டினேன்.

"கழிச்சல்லே போக. ஏண்டா கல்லுரல் ஒண்ணை நூறு ரூபாய் பெறுமேடா? கல்லு மாதிரி இருக்கு...."

கல்லுரல் கல்லு மாதிரி இராமல் வேறு எப்படி இருக்கும் என்று எனக்குப் புரியவில்லை.

"இல்லை அம்மா, இடத்தை அடைத்துக் கொண்டு இரண்டு கல்லுரல்கள் எதற்கு என்றுதான்......!"

"பேஷ்! உனக்கு என்னடா தெரியும் கல்லுரலைப் பற்றி? ஒண்ணு மிளகாய்ப் பொடி இடிக்கவும் ஒண்ணு தோசைக்கு அரைக்கவும் வைச்சண்டிருக்கேன்."

"இரண்டையும் ஒரு கல்லுரலிலேயே...."

"நீ பிறந்ததுலேயிருந்து இத்தனை நாளா நான் எனக்குத் தெரிஞ்ச மாதிரிதான் தோசை வார்த்துப் போட்டிருக்கேன். நீயும் பிடிச்சுத் தான் சாப்பிட்டிருக்கிறாய். ஆனால் இப்போ அவள் வந்துட்டாள். மெத்தப் படிச்சவள்.."

"அம்மா! அம்மா! வேண்டாம். கல்லுரல் இங்கேயே இருக்கட்டும். அது இடத்தைத் துளிகூட அடைக்கவே யில்லை. அந்தக் கண்ணாடி பீரோ....?"


"உங்க அப்பா எனக்கு வாங்கிக் கொடுத்தது ன்னு அது ஒண்ணுதான் இருக்கு இப்போ. அதற்கும் வினை வந்துடுத்தா!" அம்மா கண்களைக் கசக்க ஆரம்பித்தாள்.

நான் ஏலக் கம்பெனிக்காரர் எழுதிக் கொடுத்த சீட்டைக் கிழித்தெறிந்தேன்.


"ஏண்டா கோவிச்சுக்கறே? எல்லாமே உன்னுடையதுதானே? என்ன வேணுமானாலும் செய்துகொள்."

"என்ன வேணுமானாலும் செய்துகொள் என்று விட்டாயல்லவா? செய்து காட்டுகிறேன், பார்" என்று மார் தட்டினேன்.

பக்கத்துத் தெருவில் மாதம் பத்து ரூபாய்க்கு ஒரு சின்ன அறையை வாடகைக்கு விடப் போகிறார்கள் என்று பேச்சாயிருந்தது. ஓட்டமாக ஓடிப் போய் அந்த அறையை ஆக்கிரமித்துக் கொண்டேன். வீடு ஒழித்தலைக் காட்டிலும் வீட்டை ஒழித்தல் அல்லது வீட்டை விட்டு ஒழிதல் மிகமிக சுலபம்தானே?


மிகச் சிறந்ததினால்
தையுங்கள்
உஷாவினால்
தையுங்கள்
உஷா தையல் இயந்திரம் வெகுவாக விரும்பப்படுவது அதன் நவீன அமைப்பினாலும் கம்பகமான உழைப்பினாலும். பாகங்கள் எளிதில்கிடைக்கின்றன. இடையே மாற்றிக்கொள்ளக்கூடியவை. மேலும் விற்பனைக்குப் பிறகு உஷாவின் சேவை மிகவும் தலைசிறந்தது. சுமார் ஐம்பது நாடுகளில் உள்ள பெண்மணிகள் உஷாவின் தொல்லையற்ற வேலைத்திறமைக்கும் சேவைக்கும் உத்திரவாதமளிக்கின்றனர்.
இன்றைய நாளில் தைப்பது என்பது மிகவும் வேடிக்கையானது.
எங்கள் வசீகர தவணையில் வாங்கும் முறைகளுக்கு உங்கள் அருகாமையிலுள்ள உஷா டீலரை அணுகுங்கள்.
உஷா
தையல்
இயந்திரம்
ஜே என்ஜினீயரிங் ஒர்க்ஸ் லிமிடெட்., கல்கத்தா-31

இன்றைய இன்பமான வாழ்க்கைக்கு கைத்தறிகள்



விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுப்பதற்கு எண்ணற்ற வகைகள்; இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்தவை; கண்ணைக் கவரும் வண்ணங்கள்; மனதைக் கவரும் நவீன மோஸ்தர்கள்; நீங்கள் நினைப்பதைவிடக் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

படுக்கை விரிப்புகள் — ஜமக்காளங்கள் — மேஜை விரிப்புகள்-திரைத்துணிகள்—உறைத் துணிகள்.

எங்களுடைய நவீனமான, புது பட்டுப்பகுதிக்கு விஜயம் செய்யுங்கள்.

ஹாண்ட்லூம் ஹவுஸ்

கைத்தறி ஆடைகள் கவர்ச்சியை அளிக்கும்

9, எடன் பஜார், சென்னை-3. போன்: ஷோரூம் 33405

மற்றும்

221, டாக்டர் தாதாபாய் நௌரோஜி ரோடு, பம்பாய்-1

2, லின்ட்ஸே தெரு, கல்கத்தா-16. 9-ஏ, கான்னட் ப்ளேஸ், புதுடில்லி

வெளி நாடுகளில்:

கொழும்பு, சிங்கப்பூர், ஏடென், கோலாலம்பூர்

தலைமை ஆபீஸ்:

ஆல் இந்தியா ஹாண்ட்லூம் பாப்ரிக்ஸ் மார்க்கெட்டிங் கோ-ஆபரேடிவ் சொஸைட்டி லிமிடெட்

ஜன்மபூமி சேம்பேர்ஸ், பம்பாய்-1

அத்தியாயம் முப்பத்தொன்பது

ஈழப் பயணம்

முன்னிரவு கடந்து பின்னிரவு முற்றி வரும் நேரம். கைம்மை நோன்பு ஏற்ற கிழவியின் முகம் போல் வெளிறிச் சிறுத்திருந்த தேய்பிறைச் சந்திரன் கீழை வானிலே அப்போது தான் சோம்பலாகத் தலைதூக்கியிருந்தது.

அந்த நடுச்சாம நேரத்திலே, ஆலம்பாக்கம் ஏரியின் கிழக்குக் கரையோரம், பெருவள நல்லூர்ச் சாலையையொட்டி- தன்னந் தனியாக அமைந்திருந்த கொகுடிக் கோயிலொன்றின் சிறிய கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான் பல்லவ மன்னன் பரமேசுவர வர்மன். நேற்றிரவு இதே நேரத்தில் இளங்காரிக் குடையானின் இல்லத்திலிருந்து புறப்பட்டு வரும் வழியில் இந்தக் கொகுடிக் கோயிலைக் கண்டு இறை வழிபாடு செய்ய உள்ளே சென்றவன் இப்போதுதான் வெளியே வருகிறான்.



பத்தினிக் கோட்டம்

ஜெகசிற்பியன்

ஓரிரவும் ஒரு பகலும் ஓடிக் கழிந்த உணர்வே இல்லாத அத்தனை ஆழ்ந்த தியானம்!

களைப்பும் சோர்வுமாகக் கோயிலின் அர்த்த மண்டபத்தில் வந்து அமர்ந்தான் பரமேசுவர வர்மன். சாலையோரமிருந்த இரண்டு மரங்களுக்கிடையே சந்திரன் அகப்பட்டு விட்டிருந்ததால் அதன் மங்கலான ஒளி மண்டபத்தில் மட்டுமே நிரவலாகியிருக்க மற்றப் பகுதியெல்லாம் இருளில் புதைந்திருந்தது.

சளுக்கியப் படையெடுப்புக்குப் பின் பல்லவ நாட்டில் உள்ள கோயில்களெல்லாம் எத்தனை சீர்கேடுற்றுப் போயிருக்கின்றன என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது அந்தக் கொகுடிக் கோயில். மக்கள் சுதந்திரமாக வீட்டை விட்டு வெளியே வர முடியாத நிலையில் இருக்கும்போது அவர்களின் வழிபாட்டு ஸ்தலங்கள் எப்படிச் சீருடன் விளங்க முடியும்? பெரும்பாலான கோயில்களில் அந்தி — சந்தி பூசைகள் கூட நடைபெறாமல் நின்றுபோயிருந்தன. பல்லவர் ஆட்சியிலே கோயில் பாதுகாப்புக் கெனவும் அதன் துப்புரவுக்கெனவும் வழங்கி வந்த ஆலரசு மானியம், வெளவாலடி மானியம் முதலானவை இப்போது நிறுத்தப்பட்டு விட்டிருந்ததால், கோயில்களின் கோபுரங்களிலும் திருமதிற் சுவர்களிலும் ஆல் அரசு முளைத்து விட்டிருந்தன; வெளவால்கள் குடியேறித் தாய்



மைக்குப் பங்கம் விளைவித்தன. இந்நிலைமைக்கு இந்தக் கொகுடிக் கோயிலும் விலக்காக வில்லை.

ஆனால், 'கொகுடிக் கோயில்' எனப் பெயர் பெறுவதற்குக் காரணமான—ஒரு வகை முல்லை இனத்தைச் சேர்ந்த—கொகுடிச் செடிகள் அந்தக் கோயிலைச் சுற்றிப் பாங்குற வளர்ந்திருந்ததால், அவற்றில் பூத்த மலர்களின் நறுமணம் சில்லென்ற காற்றிலே மிதந்தெழுந்து அங்கு நிலவிய அநுசிதமான சூழலை மறக்கடித்துக் கொண்டிருந்தது.

அந்த நறுமணக் காற்றின் தழுவலால் களைப்பு நீங்கப் பெற்ற பரமேசுவரவர்மன், இப்போதுதான் முதன் முதலாகத் தன்னைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான்.

எடுத்த எடுப்பிலேயே அவன் மனத்தில் இந்தக் கேள்விதான் எழுந்தது: 'எங்கே போவது? என்ன செய்வது? எதிர்கால வாழ்வை எப்படிக் கழிப்பது?'

என்ன செய்வது என்பது பற்றியும், எதிர்கால வாழ்வை எப்படிக் கழிப்பது என்பது பற்றியும் அவன் கவலைப்படவில்லை; எங்கே போவது என்ற கேள்வியை மட்டும் தனக்குள்ளே திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டான்.

பெருவளநல்லூர்ச் சேதியக் கலைஞரின் இல்லத்தில் இனியும் போய்த் தங்கியிருந்து அவருக்குச் சிரமம் தரக் கூடாது என்று அவன் ஏற்கனவே முடிவு செய்து விட்டிருந்தான். அப்படியானால் இப்போது எங்கே போவது?

காஞ்சிக் கோட்டையைச் சளுக்கிய விக்கிரமாதித்தன் கைப்பற்றியதுமே அங்கிருந்து சுரங்க வழியாகத் தப்பி வந்த அவன், தான் எங்கே போவது என்ற கேள்விக்குத் தேர்ந்தெடுத்த ஒரு முடிவை இப்போது தன் நினைவுக்குக் கொண்டு வந்தான்.

ஆமாம்; பரமேசுவரவர்மனின் பாட்டனான மாமன்னன் நரசிம்மவர்மனால் வாழ்வளிக்கப் பெற்ற மானவன்மன் என்பான் இப்போது ஈழத்துப் பேரரசனாக இருந்து வருகிறான். இந்த மானவன்மன் ஒரு காலத்தில் அட்டதத்தன் என்பவனிடம் அரசு கட்டிலை இழந்து விட்டுக் காஞ்சிக்கு ஓடி வந்து நரசிம்மவர்மனிடம் தஞ்சம் புகுந்தவன். நரசிம்மவர்மனும் அவனைத் தன சகோதரனாகப் பாவித்து அன்புடன் போஷித்தான். இதனால் அவ்விருவருக்குமிடையே ஆழ்ந்த நட்பு நிலவுவதாயிற்று. இந்நிலையில், சளுக்கியப் புலிகேசியுடன் போர் தொடுக்க நரசிம்மவர்மன் வாதாபிக்குப் புறப்பட்டுச் சென்றான். அப்போது தன் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்த மானவன்மனைக் காஞ்சி அரண்மனையிலேயே இருக்கச் செய்தான். ஆனால் மானவன்மனோ, அருமை நண்பன் போர்க்களத்தில் அல்லலுறும்போது தான் அரண்மனையில் வாளாவிருப்பது அழகல்ல என்று எண்ணித் தானும் ஒரு படைக்குத் தலைமை தாங்கிப் போய் நரசிம்ம வர்மனுக்குப் பக்கபலமாக இருந்து சளுக்கியரை எதிர்த்துப் போரிட்டான். வெற்றி வாகை சூடிய நரசிம்மவர்மன் காஞ்சிக்குத் திரும்பியதும், தனது வெற்றிக்குப் பெரிதும் காரணனாயிருந்த மானவன்மனுக்கு நன்றி காட்டும் வகையில், மாப்படை, மக்கள் படை, மரக்கலப் படை முதலானவற்றைக் கொடுத்து அவனை இலங்கைக்கு அனுப்பி வைத்தான். படை உதவி பெற்றுச் சென்ற மானவன்மன், அட்டதத்தனை எதிர்த்துப் போராடி, இழந்த அரசு பீடத்தை மீட்டுக் கொண்டான். ஆனால், அடுத்து எழுந்த போரில் அட்டதத்தனிடம் தோற்றுக் காஞ்சிக்கே திரும்ப ஓடி வந்து விட்டான். தன் நண்பனை எப்படியும் இலங்கை மன்னனாக்கிவிட வேண்டும் என்று வைராக்கியம் பூண்ட நரசிம்மவர்மன், பல்லவப் படைகள் அனைத்தையும் ஒன்று திரட்டி மானவன்மனிடம் ஒப்படைத்து மாமல்லபுரத் துறைமுகம் வரை கூடச் சென்றான். இலங்கைப் போரில் தானும் கலந்து கொள்ளப் போகிறவன்போல் கப்பலிலும் ஏறினான்; ஆனால் அவன் இலங்கைக்குச் செல்லவில்லை. பல்லவப்படை வீரர்களோ தமது மன்னனும் தம்முடன் போருக்குப் புறப்படுகிறான் என்று எண்ணி உற்சாக வீறு பெற்றவர்களாய் இலங்கை நோக்கிச் சென்று அட்டதத்தனுடன் கடும் போர் நிகழ்த்தினர். நரசிம்மவர்மனின் யுத்த தந்திரம் பலித்தது. மானவன்மன் வெற்றி பெற்றுச் சிங்களத் தீவின் அரி



யனை ஏறினான். இவ்வாறு பல்லவரால் வாழ்வு பெற்ற அந்த ஈழத்து மன்னனிடம் போய்ப் புகலடைந்து விடலாம் என்ற முடிவுக்குத்தான் இப்போது பரமேசுவரவர்மன் வந்தான்.

இப்படி நாடு கடந்து நாடு போய்ப் புகலடைவது இழிவாயிற்றே என்று அவன் மனம் சுணங்கிச் சுருண்டது. ஆயினும் சளுக்கியப் புலிகேசியால் அரசு இழந்த கலிங்க மன்னன் ஒருவனும் இப்படித்தான் இலங்கைக்குச் சென்று புத்த பிக்குவாகி விட்டிருக்கிறான் என்பதை எண்



ணித் தன்னையே ஒருவாறு தேற்றிக் கொண்டு அங்கிருந்து புறப்படுவதற்காக எழுந்தான்.

நேரே பெருவளநல்லூருக்குப் போய் வாகனம் ஒன்றை அமர்த்திக்கொண்டு நாகைத் துறைமுகத்துக்குப் பயணமாகி அங்கிருந்து ஈழத்துக்குக் கப்பல் ஏறிவிடுவது என்பது அவன் திட்டம்.

கொகுடிக் கோயிலை விட்டுச் சாலையில் இறங்கிய பரமேசுவரவர்மன் எவ்வித பரபரப்புமின்றிச் சாவதானமாகவே நடக்கலானான்.

அத்தியாயம் நாற்பது

நள்ளிரவில் கண்ட காட்சி!

அமைதியாக நடந்து கொண்டிருந்தான் பரமேசுவரவர்மன். ஆனால் அவன் மனமோ பல்வேறு திசைகளில் ஓடித் திரிந்து அலைமோத ஆரம்பித்தது. தன்னைச் சார்ந்த ஒவ்வொருவரையும் இப்போது எண்ணிப் பார்த்தான்.

பத்து மாதங்கள் சுமந்து பெற்ற அன்னை காடவன்மாதேவியின் நினைவே முதலில் எழுகிறது. அவர் இப்போது பல்லவபுரம் அரண்மனைக் கோட்டையில் சிறைப்பட்டிருக்கிறார். வெளியில் இருப்பதைவிடச் சிறை மிகவும் பாதுகாப்பான இடம். துன்பமயமான இந்த உலகத்தின் அன்றாட நடப்புகளைக் கொண்ட வெம்மை நிழல் தீண்ட முடியாத சாந்தி நிகேதனம் அது. பெற்ற மைந்தனால் எவ்வித பயனும் பெறாத அவருக்கு அதைத் தவிர ஆறுதல் பெறக்கூடிய இடம் வேறேதுமில்லை. ஆனால், தமது மகன் கடல் கடந்து போய் விட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் பதறித் துடிப்பார். அழுது புலம்புவார். புலம்பட்டும். என்ன செய்வது? அது அவர் விதி!....

அப்புறம் இளவரசன் கோவிந்த வர்மனைப் பற்றிய நினைவா? ஆமாம்; அவன் துடிப்பு மிக்க இளைஞன். துயரங்களைக் கண்டு அஞ்சாதவன். சாகசங்கள் செய்வதையே பெருமையாகக் கொள்பவன். வாழ்க்கையே அவனுக்கு ஒரு விளையாட்டு. உலகம் அவனுக்கோர் இன்பச் சுரங்கம். எதிர்பாராத இடுக்கண்களேற்பட்டாலும் அவற்றிலிருந்து அவனைக் காப்பாற்றச் சோழ இளவரசி இளங்கோப்பிச்சி இருக்கிறாள். அவளுடைய காதலின் குளிர்ந்த அணைப்பில் தீயைக்கூடத் தாண்டிவிடுவான். ஆனால் தன் தமையன் அநுராதபுரத்துக்குப் போய்விட்டான் என்று கேள்விப்பட்டதுமே குமுறித் துடிப்பான். கோழை என்று தூற்றுவான். அப்படித் தூற்றியதற்காக நாளெல்லாம் உட்கார்ந்து அழுவான். அப்புறம் அந்த விஷயத்தை மறந்தும் விடுவான். ஆகவே, அவனைப் பற்றிக் கவலையில்லை!....

பிறகு? சந்திரலேகைச் சிற்றரசரான பெரும்பிடுகு முத்தரையர் வருகிறார். நட்பு, நேர்மை, வீரம், மானம், சேவை இவற்றைத் தவிர வேறொன்றும் அறியாத அப்பாவி மனிதர் அவர். பல்லவ மன்னன் ஈழநாட்டுக்கு ஓடிப் போனான் என்று அறிய நேர்ந்தால், அதற்காக அவர் வருந்த மாட்டார்; மகிழ்ச்சியே அடைவார். காரணம், 'அவன் வெளிநாட்டில் இருப்பதே நல்லது; தேவையானபோது வரவழைத்துக் கொள்ளலாம்' என்ற முடிவுடன் இரகசியப் படை திரட்டல் வேலையைச் சுதந்திரமாகச் செய்ய அவருக்கு இது நல்ல வாய்ப்பாகிவிட்டது. சளுக்கியர்களை விரட்டிவிடலாம் என்று அவர் இப்போதே மனப்பால் குடிக்க ஆரம்பித்து விடுவார். 'சுதந்திரம், சுதந்திரம்' என்று கோஷித்துக்கொண்டே போர்க்களத்தில் உயிரை விட வேண்டும் என்பதில் அவருக்குத் தீராத வேட்கை. தம் உடலில் பட்ட விழுப்புண்களை எண்ணிக் கணக்கிடுவது ஒன்றுதான் அவருக்கு மகிழ்ச்சி தரும் விஷயம். அவருடைய வாழ்க்கை அநேகமாக அதிலேதான் முடியப் போகிறது. அவ்வாறே முடியட்டும்!...

அவருக்குப் பின் பழையாறைச் சோழரின் நினைவு. மற்றவர்களையும் புரிந்து கொள்ளாமல், தம்மையும் மற்றவர்கள் புரிந்துகொள்ள விடாமல் சதுராடி வரும் விநோத மனிதர் அவர். பல்லவ மன்னன் சொந்த நாட்டை விட்டுக் கப்பல் ஏறிவிட்டான் என்று கேள்விப்பட்டதும் அதுபற்றி அவர் என்ன நினைப்பார் என்பதைக்கூட யாரும் அறிய முடியாது. எனவே, அந்தப் புதிர் மனிதரைப் புரிந்து கொள்ளும் பொறுப்பை விதியிடமே விட்டுவிடலாம்!....

அதற்குப் பிறகு? சேதியக் கலைஞர் பரவாதி மல்லரைப் பற்றிய எண்ணம். அவர் ஆயிரங்காலத்துப் பயிர். ஒவ்வொரு சகாப்தத்தையும் நிறைவாக்குவதற்கென்றே பிறந்து வரும் மகா மனிதர்களில் ஒருவர். பல்லவர்களின் பெயரை எதிர் காலத்தின் முதுகிலே என்றென்றும் அழியாத விதமாகப் பொறித்து விட்ட பிரம்ம வித்தகர். கோயில்கள் பலவற்றைப் படைத்துக் கொடுத்திருக்கும் அவருக்கே ஒரு


ஆடைகளில் மிகச் சிறந்தது ....
S R M
எஸ். ஆர். எம்.
புல்வாயில்கள்
பிரிண்டட் வாயில்கள்
பாப்ளின்கள்
வேஷ்டிகள்
மல்கள்
லீனோக்கள்
கைக்குட்டைகள்
ஸ்ரீராம் மில்ஸ் லிமிடெட்.
பெர்குஸன் ரோட், பம்பாய்-13
SRM-9-TAM.

கோயில் எடுப்பிக்க வேண்டிய அவ்வளவு பெரிய கலைஞர். பல்லவ மன்னன் சிங்களத் தீவில் புகலடைந்தான் என்பதை அறிந்ததுமே, தாம் அவனுக்குச் சரியான பாதுகாப்புச் செய்யத் தவறியதால் தான் அவன் அத்தனை நெடுந் தூரம் சென்று விட்டான் என்று எண்ணித் தம்மையே நொந்துகொண்டு துயரில் ஆழ்வார். ஆனால், அவரிடமுள்ள தூரிகையும் சிற்றுளியும் சேர்ந்து அந்தத் துயரத்தை எளிதில் அகற்றிவிடும்!....

இறுதியாக?—

நடந்து கொண்டிருந்த பரமேசுவர வர்மன் தன் கழுத்தில் கிடந்த சவுக்கைக் காய் மாலையைக் கையில் எடுத்து நிலவின் சன்னமான ஒளியில் உற்றுப் பார்த்தான். மறுகணம் அவன் நடையில் ஒரு தயக்கம் ஏற்பட்டது. வேகம் குறைந்தது. நிதானம் தவறியது. அவன் நின்றே விட்டான்.

திரும்பிப் போய்விடத் தீர்மானித்து விட்டாற்போல் அங்குமிங்குமாகத் திரும்பிப் பார்த்தான். பிறகு வேகமாகத் தலையை ஆட்டிக் கொண்டான். நீண்ட பெருமூச்சு விட்டவாறு முன்போல் தெளிவாக மேலே நடந்தான்.

'ஜல், ஜலங்!... ஜல், ஜலங்!'

விரைந்து நடந்துகொண்டிருந்த பரமேசுவர வர்மன் சட்டென்று நின்று சாலையின் எதிரே தன் பார்வையை ஓட்டினான். தொலை தூரத்தில் ஒரு பல்லக்கு வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அந்தப் பல்லக்கைச் சுமந்து வரும் ஆட்களின் கரங்களிலிருந்த ஈட்டி முனை வளையங்கள் குலுங்கும் ஒலிதான் அது.

'இந்த நேரத்திலே பல்லக்கில் பயணமாகி வருவது யாராக இருக்கும்?'

அவன் தயங்கி நின்றான். பிறகு சாலையை விட்டு இறங்கி ஒரு மரத்தடியில் போய் மறைந்து நின்றுகொண்டான். பல்லக்குச் சமீபித்துவிட்டது.

என்ன ஆச்சரியம்! அந்தச் சாலையின் இருபுறமுமிருந்து ஏழெட்டுப் பேர் திமுதிமுவென ஓடி வந்து பல்லக்கைச் சூழ்ந்து கொண்டனர். பிறகு பலவந்தமாக அதைக் கீழிறக்கினர். மறு விநாடி, பல்லக்குத் தூக்கிகளுக்கும் வழிமறித்த ஆட்களுக்குமிடையே பயங்கர சிலம்பச் சண்டை மூண்டுவிட்டது. ஒரே கூச்சல், அலறல், கூக்குரல்!

திடீரெனச் சண்டை நின்றது. வழிமறித்த ஆட்கள் சாலையின் இருபுறமும் சிதறி ஓடி மறைந்தனர். பல்லக்குத் தூக்கிகள் வெற்றிச் சிரிப்புடன் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு பல்லவபுரத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினார்கள்.

இந்த நெஞ்சை உலுக்கும் விந்தை நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டு மரத்தடியில் மறைந்து நின்றிருந்த பரமேசுவர வர்மன் நிம்மதியாக மூச்சு விட்டவாறு சாலையில் ஏறித் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

சற்று முன் சிலம்பச் சண்டை நடந்த இடத்தைக் கடந்து இரண்டு மூன்று அடி எடுத்து வைத்த அவன், ஏனோ திடுக்குற்று நின்று பரபரப்புடன் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான்.

எங்கோ, யாரோ மரண அவஸ்தைப் படுவது போன்ற முனகல் ஒலி கேட்டது!

ஒலி வந்த இடத்தைக் குறி வைத்து ஓடினான் பரமேசுவர வர்மன். அங்கே, சாலையின் ஓரம் நெடிதுயர்ந்த மனிதரொருவர் இரத்தக் காயங்களுடன் புழுதியில் கிடந்து துடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. உடல்தான் அப்படித் துடித்ததே தவிர, சுயப் பிரக்ஞை இருப்பதாகத் தெரியவில்லை.

மங்கிய நிலவொளியில் அந்த மனிதரின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான் பரமேசுவர வர்மன். அவனுக்குப் பரிச்சயமில்லாத புதிய முகமாக இருந்தது அது.

ஒரு கண நேர சிந்தனை. அவன் ஒரு முடிவுக்கு வந்தான். பலத்த காயங்களுடன் சுவாதீனமிழந்து கிடந்த அந்த மனிதரைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு, அரைக் காதம் தூரத்துக்கு அப்பாலிருந்த ஓர் ஆதுர சாலையை நோக்கி நடக்கலானான். (தொடரும்)

சத்வைத்தியசாலை (Private) லிமிடெட், நஞ்சன்கூடு
ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட் அவர்களின்
60 வருடமாய நம்பிக்கை பெற்ற "நஞ்சன்கூடு-மருந்துகள்"
உங்கள் குடும்பத்திலும் கைவசம் இருப்பது அவசியம்
I.D.C. 12.
பனி காலத்தில் தேவை
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
யாவருக்கும் தின உதவி
மாதர்களுக்கு சிறந்த உதவிகள்
சதாவரி லேகியம் பலவிருத்திக்கு 5.00
சூடிகுளிகை கர்ப்பிணிகளுக்கு டானிக் 2.50
டோனடெல் பிரசவத்திற்குப்பிறகு காச லேகியம் 5.00
மருந்துகளின் விபரமான கேட்லாக் வேண்டுபவர்களுக்கு அனுப்பக்கூடும்
சோல் ஏஜண்டுகள்: யுனைடெட் கன்னர்ஸ், 54, பந்தர் தெரு சென்னை-1 (மதுரை, கோவை, பம்பாய்)



ருசிக்கும் தரத்திற்கும் சிறந்தது!

அம்பீஸ்

அரிய தயாரிப்புகள்:

★ ஆவக்காய்

★ மாங்காய்

★ எலுமிச்சம்

முதலிய ஊறுகாய் வகைகள்




தயாரிப்பாளர்கள் :

அம்பீஸ் கபே

6, 7, பிராட்வே, சென்னை-1.

சிங்கப்பூர், மலேயா & மத்தியகிழக்கு நாடுகளிலும் கிடைக்கும்

LRS/AC/16



சருமப்
பராமரிப்புக்குத்
தகுந்த
ஏற்பாடு
அவசியம்...
அதற்குகந்தவை
'ஹேஸலின்'
அழகு
சாதனங்கள்



ஸ்னோ * கோல்ட் க்ரீம் * டால்க்

உங்கள் சருமத்துக்குத் தனிப்பட்ட அழகுப் பராமரிப்பு தரும் மூன்று வகை நறுமண அழகுப் பொருள்கள்.

* "'ஹேஸலின்' ஸ்னோ"—மேனி யெழிலுக்கு மெருகூட்டி, சருமத்தைப் பாதுகாக்கிறது.
* 'ஹேஸலின்' கோல்ட் க்ரீம் ஊடுருவிச் சுத்தம் செய்து, சருமத்தை மழமழப்போடும், கட்டுத் தளரா இளமையுடனும் இருக்கச் செய்கிறது.
* 'ஹேஸலின்' டால்க் நறுமணமுள்ள நயமான பவுடர் - பூசிக்கொண்டால்...ஆகா! என்ன குளுமை! என்ன புதுமை! என்ன புது மணம்!



பர்ரோஸ் வெல்கம் தயாரிப்புக்கள்

BWY-10-TAM.



தெய்வத்தின் தெய்வம்

— காந்தன் —

பணக்காரப் பெண் கண்மணியும், ஏழைப் பெண் அன்னமும் இணைபிரியாத் தோழிகள். கண்மணியின் அண்ணனைக் காதலித்த அன்னம் தோழியின் உதவியினால் அவனையே கரம் பற்றுகிறாள்; கரம் பற்றிய சூட்டோடு கார் விபத்தில் கணவனை இழந்து விடுகிறாள். அன்னத்தின் அண்ணன் பாபு; அவனை மணக்கிறாள் கண்மணி. அப்புறம்தான் கதையே ஆரம்பமாகிறது. கட்டிய கணவனுக்கு அடங்காத கண்மணி அட்டகாசம் பண்ணி விவாகரத்து வரையில் வந்துவிடுகிறாள். இளம் விதவையான அன்னத்துக்குப் புனர் விவாகம் செய்துவைப்பதற்காகத்தான் இதுவரையில் நாடகம் ஆடினதாகக் கண்மணி கூறுகிறாள். சுபமாக முடிகிறது.

விஜய குமாரிதான் கண்மணி. படத்தின் கண்மணியும் அவர்தான். நடிப்பிலும் அவர்தான் கண்மணி! தன் அண்ணன் அன்னத்தைத் தனியிடத்தில் சந்தித்துப் பேசியதைக் கண்டு சீற்றங்கொண்டு, நெறியை எடுத்துக் கூறி அவனைக் கடிந்து கொண்ட இடம் கண்மணியை உயர்த்திக் காட்டுவதோடு கதையையும் உயர்த்தி விடுகிறது. எஸ். எஸ். ராஜேந்திரனுக்கு வெறும் சோகமோ, நிராத் தாபமோ கொடுக்கப்பட்டால் அவ்வளவாகப் பிரகாசிப்பதில்லை என்னும் உண்மை அவர் நடித்த பல படங்களிலும், பல முறையும் கண்டதுதான். ஹாஸ்யம் சேர்ந்தால் அவர் நடிப்பில் ஒரு துடிப்பு ஏற்பட்டு விடுகிறது. பாபு மனத்தில் எதையும் வைத்துக் கொள்ளத் தெரியாதவன். எதையும் போட்டு உடைத்துப் பேசிவிட வேண்டும் என்னும் கருத்துக் கொண்டவன். அந்த இயல்பை ராஜேந்திரன் எல்லோரும் ரஸிக்கும் வண்ணம் எடுத்துக் காட்டுகிறார்.

உருவத்தில் உயர்ந்திருக்கும் எஸ்.வி. ரங்காராவ் நடிப்பிலும் எப்போதும் உயர்ந்துதான் நிற்கிறார்! குடும்பப் பாசத்தைத் தத்ரூபமாகக் காட்ட அவரால் எப்படியோ முடிகிறதே!

மகன் இறந்த துக்கத்தை விட மருமகளின் துயரம் அவரை நெகிழ்த்திவிடுகிறது என்பதைப் பொங்கிப் பொருமி, விம்மி, வெய்துயர்ந்துக் கண்ணீர் உகுத்து அவரால் வெளியிட முடிவது பாராட்டுக்குரியது தான். நாகேஷுக்கு யோகம் அடிக்கிறது. சமீபத்தில் வெளியான படங்களில் அவர் நடிப்பு சபாஷ் போட வைத்து விட்டது. இதில் டிரைவராக வந்து தன் காதலியிடம் எஜமானனுக்கும் தனக்குமுள்ள ஒற்றுமையை விளக்கிச் சக்கைப் போடு போடுகிறார்.


டி. கே. பாலசந்தர் அன்னத்தைக் காதலித்து, வீணை வாசித்து, குற்றாலத்து அருவியிலே காதலியுடன் குளித்து, கல்யாணம் முடிந்ததும் கார் விபத்துடன் விடைபெற்றுக் கொள்கிறார். விபத்தில் காரின் நடிப்பு தத்ரூபம்!

எழுத்தாளர் "பிலஹரி"யின் கதையை ஆதாரமாகக் கொண்டது என்று படத்தில் வெளியிட்டிருப்பது கௌரவமான காரியம்.

குமாரி மணிமாலா வெள்ளித் திரைக்குப் புது முகம். அன்னமாக வந்து, அன்ன நடை நடந்து, ஆடிப் பாடிக் கண்ணீரில் கரைந்து கடைசியில் புனர் வாழ்வு பெறுகிறார். இந்தப் படம் சப்பென்று போய்விட்டதே!

சுவையான நிகழ்ச்சிகள் மாறி மாறி வந்து சுவையூட்டுவதால் திரைக்கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களைத் திறம்பட வகித்திருக்கும் கே. எஸ். கோபாலகிருஷ்ணனுக்கு வெற்றிதான்.

நடிப்பின் சிறப்பில், படப் பிடிப்பில், காட்சிகளின் அமைப்பில், நடிகர்களின் தேர்ந்தெடுப்பில் "தெய்வத்தின் தெய்வம்" நல்லபடியாக அமைந்து விட்டது.





உண்மை ஒன்று தான்!...

''போங்கள், அத்தான்!'' என்று சிணுங்கினாள் வீணா. அவள் சிணுங்குவதும் வீணை கானமாகத்தான் இருக்கும்.

அந்தக் கானத்தைச் சப்புக் கொட்டிச் சுவைத்த ஹரி, பாண்ட்டின் இடுப்புப்புறத்தில் விரல்களை விட்டுத் தளர்த்தியபடியே, ''போகத்தான் போகிறேன், தேவீ, போகத்தான் போகிறேன்'' என்று பரிகாசமான குரலில் கூறியபடியே அவளை நெருங்கினான்.

சோபாவில் அமர்ந்திருந்த மனைவியின் முகத்தருகே குனிந்து, கைகட்டி வாய்புதைத்த படி, ''இன்னும் பத்தே நாட்கள்தான்; தேவியார் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தால் பதினாயிரம் மைல் தாண்டி, 'ஸ்டேட்ஸை'க்குப் போயே போய் விடுகிறேன்'' என்றான் ஹரி விஷமச் சிரிப்புடன்.

அவன் தன்னை அவ்வளவு அருகில் வந்து பார்ப்பது பிடிக்காதது போல் வீணா கண்களை மூடிக் கொண்டாள். அவளது இமை விளிம்புகள் ஈரமாயின. உதடுகள் படபடத்தன. துக்கம் சிறுசிறு குளிகைகளாகத் திரண்டுவந்து தொண்டையில் ஏறி இறங்கிற்று.

அவளைப் பார்க்கவே ஹரிக்கு வேடிக்கையாக இருந்தது. பட்டு மாதிரி ஒரு பெண் அவள். மினுமினுக்கும் தன்மையில் பட்டு; துவண்டு விழுந்து சரியும் உணர்வுகளாலும் பட்டு. அந்தப் பட்டு உணர்வுகளைக் கசக்கிப் பார்ப்பது அவனுக்கொரு வேடிக்கை. கொந்தளித்துக் கொண்டிருந்த அவனுடைய மர்மமான அக வாழ்வுக்கு இந்த வேடிக்கை மிகவும் தேவையாக இருந்தது.

''அடேயப்பா, தேவிக்கு எவ்வளவு கோபம்? வராதா பின்னே? 'போங்கள், அத்தான்' என்று ஆக்ஞையிட்டவுடனேயே சிரமேற்றாங்காமல், 'பத்து நாள் கழித்துப் போகிறேன்' என்றால் கோபம் வராமல் கொஞ்சவா தோன்றும்? எனவே இப்போதைக்கு, இன்னும் பத்தே நிமிஷத்தில்.....''

''அந்தப் பாழாய்ப்போன புரபஸர் வீட்டுக்குப் போய் தீர்களாக்கும்!'' என்று சீறிய வீணா அறையைவிட்டு வெளியே கிளம்பினாள். வாசற்படியில் குறுக்கே கையை வைத்து நின்று கொண்டு அவளைத் தடுத்தான் ஹரி.


''பார்த்தாயா, பார்த்தாயா! எய்தவன் இருக்க அம்பை நோவது போல் என்னை விட்டு விட்டுப் புரபஸர் ஸ்டுவர்ட்டின் மேல் பாய்கிறாயே! நான் மகாபுத்திசாலி என்று நினைத்து அவராகவா முன்வந்து எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்? நான்தான் இந்த 'பிஸினஸ் மானேஜ்மெண்ட்'டை நன்றாகக் கற்றுக் கொண்டால் ஆபீஸில் நன்றாக முன்னுக்கு வரலாமே, இன்னும் நாலு காசு சம்பாதித்து வீணா தேவி விரும்பியதை யெல்லாம் வாங்கிக் கொடுக்கலாமே என்று அவரிடம் பாடம் படிக்கிறேன். ஆனால் அந்த மாதரசிக்கோ அதெல்லாம் புரிகிறதா? கோபித்துக் கொள்கிறார்'' என்றான் ஹரி.

''போங்கள், அத்தான்!'' என்ற வழக்கமான சிணுங்கலை வழக்கத்தைவிட அதிகமாகச் சிணுங்கி வீணாதப் பொறிகளை உதிர்த்த வீணா, ''உங்கள் மேல் எனக்கு ஏது அத்தான் கோபம்?'' என்று தன் முகம் சிவக்கக் கேட்டாள்.

''எனக்குத் தெரியாதா வீணா? நீ கோபமாகக் காட்டிக் கொண்டாலும் உனக்கு என்

மேல் கோபம் வராது. 'போங்கள் அத்தான்' என்று சிணுங்கும் போதும் என்னை நீ போகச் சொல்லவில்லை'' என்றான் அநுகூலமாக.

''இரண்டாவதாகச் சொன்னீர்களே, அது தப்பு; உங்களை நான் உண்மையாகவேதான் போகச் சொல்கிறேன்'' என்றாள் விஜு. அதன் பொருள் புரியாமல் விழித்த ஹரியை நமட்டுச் சிரிப்புடன் நோக்கி, ''ஆமாம், உங்களை உண்மையாகவேதான் வெளியே போகச் சொல்கிறேன் — என்னையும் அழைத்துக் கொண்டு'' என்று முடித்தாள். மொட்டுச் சிரிப்பு மடலவிழ்ந்தது. ஹரியும் சேர்ந்து சிரித்தான்.



''நான் மாலை வேளைகளை உன்னுடன் செலவிடுவதில்லை, உன்னை அழைத்துக் கொண்டு வெளியே போவதில்லை என்பதுதானே உன் குறை விஜு?'' என்று செல்லமாகக் கேட்ட ஹரி, ''அந்தக் குறை எனக்கு மட்டும் இராதா? இந்தப் பாடத்தைப் படிக்கத் தொடங்கி விட்டேன். முடிக்கத்தானே வேண்டும்? அதனால்தான் 'ஸ்டேட்ஸ்' கிளம்புமட்டும் இயன்றவரை முடிக்கப் பார்க்கிறேன். அமெரிக்காவில் நான் படிக்கப் போவதற்கு இது எவ்வளவோ உறுதுணையாக இருக்கும். இன்றோடு ஒரு மாதிரி கடையைக் கட்டி விடலாம் என்று உத்தேசம். நாளைக்கு விஜுக் குட்டியோடு 'ஜூ' போவேனும்'' என்று சந்தனமாக இழைந்து, குளிர்ந்து, மணந்து பேசினான்.

''போங்கள் அத்தான்! இனிமேல் உங்களை எங்காவது அழைத்துப் போகச் சொன்னால் என் பேரை மாற்றிக் கூப்பிடுங்கள். நீங்கள் சொன்னது பச்சைப் பொய்'' என்று பச்சைக் குழந்தையைப் போலக் குரல் உடைந்து படபடத்தாள் விஜு.

''நிஜமாகத்தான் விஜு!'' என்றான் ஹரி.

''என்ன, நிஜமாக நீங்கள் சொன்னது பொய்தான் என்கிறீர்களா?'' என்று அவள் கேட்டவுடன் ஹரி கலீரென்று சிரித்தேவிட்டான்.

ரா. கணபதி

வீணாவோ விம்மும் குரலில், ''நாளைக்கு எப்படிப் போக முடியுமாம்? நாளைக்குத்தான் உங்களுக்கு ஆபீஸில் 'ஷிஃப்ட்' ஆச்சே! ஒன்று விட்டு ஒரு நாள் பாடம்; ஒன்றுவிட்டு ஒரு நாள் மத்தியான 'ஷிஃப்ட்'. என்னோடுதான் ஒரு சாயங்காலம் கூட இருக்கமாட்டீர்கள்'' என்று முனகினாள்.

''நாளைக்கு இல்லை யென்றால் நாளன்றைக்குப் போகிறோம்; அவ்வளவுதானே ? அதற்கு அப்புறம் ஆபீஸ்கூடக் கிடையாது. வெளி நாடு போவதால் ஒரு வாரம் லீவு தருகிறார்களாம். சரி, நான் வரட்டுமா?'' என்று கடிகாரத்தைப் பார்த்தான் ஹரி. அவனை மாற்ற மும்மூர்த்திகளாலும் முடியாது.

அவளும் பேசாமல் அவனுடன் வாசல் வரை வந்தாள்.

அவன் காரில் ஏறப் போகும் சமயத்தில், ''நாளன்றைக்கு இங்கு ரஸிகாதேவியின் நடனமாம். இரண்டு ஸீட்டுக்கு ரிசர்வ் செய்யச் சொல்லி ஃபோன் செய்து விடவா?'' என்றாள் வீணா நாணத்துடன்.

''ஓ யெஸ், ஹனி'' என்றான் ஹரி.

''அப்படியென்றால்?''

''இனி மேல் வெளியே அழைத்துப் போகச் சொன்னால் பெயரை மாற்றிக் கூப்பிடுங்கள் என்றாயே! அதனால்தான் ஹனி'' என்று கூறிய ஹரி காரை 'ஸ்டார்ட்' செய்தான்.

பெரிய அலை மடிந்து விழும் போது அதிலிருந்து ஒரு குட்டி அலை 'களுக்'கென்று துள்ளி விழுமே, அது போல் குதித்துக் கொண்டு உள்ளே ஓடினாள் வீணா.

'அலைப் பிஞ்சேதான் அவள்!'

காரைவிட வேகமாக ஹரியின் சிந்தனையும் ஓடிற்று. தோன்றித் தோன்றி மறையும் பல அலைகள்தான் வீணா. இந்த நிமிஷம் ஒரு கோபம், அடுத்த நிமிஷம் ஒரு தாபம், அதற்கடுத்த நிமிஷம் ஒரு மனஸ்தாபம், அதற்கு மறு நிமிஷமே சந்தோஷம். ஒன்றிலாவது ஆழம் கிடையாது. அலைக்கு ஏது ஆழம்? மேலோடு பூத்துப் பூத்து, பூரித்துப் பூரித்து அழுந்த வேண்டியதுதானே அது? வீணா என்று நிரந்தரமான உணர்வுகள் கொண்ட ஒரு பெண் இருக்கிறாள் என்பதைவிடச் சஞ்சலிக்கும் உணர்வுகள் கொண்ட நூறு நூறு வீணாக்கள் ஒவ்வொரு விநாடியும் தோன்றி மறைந்து கொண்டிருப்பதாகத்தான் அவனுக்குப்பட்டது. கதையிலும் சினிமாவிலும் காணும் கதாநாயகிகளின் உணர்வுகளைத் தன் மீது ஏற்றிக் கொண்டு அவையே தன்னுடையவை என்று எண்ணி வருகிறாள் அவள். நடிப்பே இயற்கை என்றெண்ணிய விசித்திர நடிகை இந்த வீணா.

ஹரிக்குச் சிரிப்பு வந்தது. அவனும்தான் நடிக்கிறான். இல்லாத உணர்வுகளை யெல்லாம் இருப்பதாகக் காட்டிக் கொள்கிறான். வெளி உலகம் அறியாத இரகசிய மேடையில் தன் நடிப்பை அரங்கேற்றத்தான் ஒன்றுவிட்டொரு நாள் செல்கிறான்; இன்று அவன் செல்வதும் நடிக்கத்தான். ஆனால் இது எவ்வளவு ஆழமும், உயரமும் வாய்ந்த நடிப்பு! எவ்வளவு சூறாவளிகளும், பெரு வெள்ளங்களும், எரிமலை வெடிப்புக்களும் கொண்ட நடிப்பு! தனக்கு இந்த உள்ளீடற்ற பெண் வீணா மனைவியாக வந்து வாய்த்தாளே! இதையெல்லாம் சொன்னால் கூட அவளால் புரிந்து கொள்ள முடியாது என்பதால்தான் அந்தப் பேதைப் பெண்ணிடம் தன் இதயத்தின் அந்தரங்கங்களை ஒளித்து வருகிறான் அவன். யானைக்கு உணவாகத் தரும் தேவதாருக் கிளையை மான் பேட்டுக்கு அளிக்க முடியுமா?

வழக்கம்போலவே பொன்னூரில் புறப்பட்ட வண்டி தேனூற்றங்கரையில் தேனூரை யடுத்துள்ள ஸ்டுவர்ட்டின் வீட்டுவாசலில்தான் வந்து நின்றது. வர்த்தகக் கல்லூரி ஒன்றில் பிரின்ஸிபலாக இருந்து ஓய்வுபெற்ற ஸ்டுவர்ட் ரமணீயமான தேனூரிலேயே தங்கி விட்டார். அவரிடம்தான் ஹரி தொழில் நிர்வாக நுட்பங்களைப் படித்து வந்தான். அன்றோடு ஒருவாறு இந்தக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டுக் கிளம்பினான்.

தன்னிடம் பாடங்களை முடித்துக்கொண்டு புறப்படும் ஹரி அவ்வளவு பதற்றமாக—பண்புக் குறைவாக என்றே கூடச் சொல்லலாம் — விடைபெற்றுக் கொள்வது ஏன் என்று புரபஸர் ஸ்டுவர்ட்டுக்குப் புரிய வில்லை. அவன் உள்ளத்திலிருப்பதை அவர் கண்டாரா? தன் மனசுக்குச் சற்றும் பிடிக்காத ஒரு காரியத்தைச் செய்யத்தான் அவன் செல்கிறான். அதைச் செய்யும்படி நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. அப்படி ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்ட பின் இன்னும் இங்கு கால தாமதம் செய்வானேன் என்றுதான் அவசரமாகப் புறப்பட்டான் ஹரி. 'குட் பை' கும்பிடு வைத்து விட்டுக் காரைக் கிளப்பினான் ஹரி. அது பொன்னூருக்குத் திரும்பவில்லை. தேனூற்றங்கரையோடு எதிர்த்திசையில்தான் சென்று கொண்டிருந்தது.

காரின் சக்கரம் முன்னோக்கிச் சுழலச் சுழல அவனது நினைவுச் சக்கரம் காலப் பாட்டையில் பின்னோக்கிச் சென்றது.

''ஹரி, விஷ்ணுவுக்குச் சிவன் சக்கரம் அளித்ததாகச் சொல்வார்கள்! நான்தான் சிவா, ஹரியாகிய நீ விஷ்ணு. உனக்கு நான் ஒரு சக்கரம் அளிக்கப் போகிறேன்'' என்று சிறுவன் சிவா சிரித்தபடி கூறியபோது அது என்ன சக்கரமாக இருக்கும் என்று ஹரியால் ஊகிக்க முடியவில்லை.

''கதைகளில் எல்லாம் காலச் சக்கரம், காலச் சக்கரம் என்று வருமே, அந்தக் காலச் சக்கரத்தைத்தான் உனக்குத் தரப் போகிறேன்'' என்ற சிவா நிஜார்ப் பையைத் துழாவினான்.

அப்போது சிவாவுக்கு வயசு பன்னிரண்டுதான். ஆனால் அவன் படிக்காத தமிழ் சஞ்சிகை கிடையாது. அநாயாசமாகப் பெரிய விஷயமெல்லாம் பேசுவான்.

வழ வழப்பான ஒரு சிறிய அட்டை வட்டத்தை நிஜார்ப் பையிலிருந்து எடுத்த சிவா ''இதுதான் காலச் சக்கரம்; அதாவது காலண்டர் சக்கரம். புது வருஷம் பிறக்கப் போகிறதல்லவா? அதற்காக உனக்கு என் பிரஸண்டாக வாங்கினேன்'' என்று கூறி அதை ஹரியிடம் கொடுத்தான்.

அது வேறொன்றும் இல்லை. 'பெர்ப்பெசுவல் காலண்டர்' என்று சொல்வார்களே அது தான். வருஷம், மாதம், கிழமை, தேதி இவைகளைத் தக்கபடி பொருத்தினால் எத்தனை

தந்தி: ''அம்ருதம்'' P. B. No. 82 போன்: 2208

ஆர்ய வைத்திய பார்மஸி (கோயமுத்தூர்) லிட்.

தலைமை ஆபீஸ் திருச்சி ரோடு, கோயமுத்தூர்-1

உண்மையான ஆயுர்வேத
மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும்
சிறந்த இடம்

கிளைகள்: புது டில்லி, சென்னை, கள்ளிக்கோட்டை, திருச்சூர், பாலக்காடு
எர்ணாகுளம், கண்ணனூர், பொன்னானி, ஆலத்தூர்
கஞ்சிக்கோடு, கோயமுத்தூர் (ஜங்ஷனுக்கு எதிரில்)

சேல்ஸ் டிப்போ சப் ஜெயில் ரோடு, கள்ளிக்கோட்டை

பாக்டரி: கஞ்சிக்கோடு (S.Rly.) நர்ஸிங்ஹோம்: திருச்சி ரோடு, கோயமுத்தூர்

பிரதம வைத்தியர் & மானேஜிங் ஏஜண்டு
ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்

N. B. விபரங்களுக்குத் தலைமை ஆபீசுக்கு எழுதவும்

J. S. R.

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்!

★

கோவையில் பின்னி மற்றும் உயர்தர மில் ஜவுளிகள்
மில் முத்திரை விலைக்கே கிடைக்கும் ஒரே இடம்!

C. S.V's. கிளாத் சென்டர்

ராஜ வீதி — — கோயமுத்தூர்

★

எங்களது புதிய கிளை R. S. புரம் திவான்பகதூர் ரோடில்
தொடங்கவிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

தேசீயப் பாதுகாப்புக்கு
உங்கள் தங்கம்

கையிலுள்ள
தங்கம் மற்றும்
தங்க நகைகளை
தங்கப்
பத்திரங்களாக
மாற்றிக்கொள்ளுங்கள்.
ஆண்டுக்கு
6½ சதவீத வட்டி
பெறுங்கள்.

6½% தங்கப் பத்திரங்கள் 1977
வாங்குங்கள்

சொத்து வரியிலிருந்தும், மூலதன லாபவரியிலிருந்தும் விலக்கு.
செலுத்தும் தங்கம் எப்படி கிடைத்தது என்று கேட்கப்படமாட்டாது.

1963, பிப்ரவரி 11ந் தேதி வரையில் விற்பனைக்குக்
கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்.

ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா காரியாலயங்கள், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் கிளைகள், மற்றும் அதன் துணை பாங்குகளின் கிளைகள்


DA 62/654

ஆண்டுகளுக்கு வேண்டுமானாலும் உபயோகிக்கக் கூடிய கையடக்கமான காலண்டர் அது.

''எத்தனையோ விநோதப் பொருளெல்லாம் இருக்க இதை எதற்காக எனக்குப் பரிசாகத் தேர்ந்தெடுத்தாய்?'' என்று சிவாவைக் கேட்டான் ஹரி.

''அதுதான் எனக்கும் தெரியவில்லை. என்னவோ உனக்கு இதைத்தான் தர வேண்டும் என்று 'தோன்றியது. தந்தேன்'' என்றான் சிவா. அப்படியெல்லாம் பெரிய மனிதனைப் போலப் பேசுவது அவனுக்குப் பழக்கம்தான்.

பத்தாண்டுகளுக்குப் பின்னால் தான் அந்தப் பரிசை அளித்ததற்கு ஓர் உட்காரணத்தைச் சிவாவே மங்கலாகக் கண்டான். இந்தப் பத்தாண்டுகளில் பதினாயிரம் ஆண்டில் பெறக் கூடிய புத்தி வளர்ச்சியையும், இதய வளர்ச்சியையும் பெற்று விட்டான் அவன். இலக்கியக் கடலில் மூழ்குளித்து அற்புதம் அற்புதமான முத்துக்களையும், பவழங்களையும் திரட்டி விட்டான். காவியச் சுரங்கங்களில் குடைந்து குடைந்து அடியில் சென்று பொன்னையும் மணியையும் குவித்து விட்டான். அவனுடைய உள்ளத்திலே முத்தின் குளுமையும் பவளத்தின் தூய்மையும் பொன்னின் ஒளியும் மணியின் தெளிவும் நிறைந்தன. சிவாவே ஒரு மகா காவியமாகி விட்டதாக ஹரிக்குத் தோன்றும். இந்தக் காவியத்தைப் படிக்கும் ஒரே வாசகன் தான் மட்டும் அல்லவா என்பதில் அவன் பெருமை கொள்வான். இதை மற்றவர்கள் படிக்க முடியவில்லையே என்று துயரமும் கொள்வான்.



சிவாவின் அதிசயமான ரஸானுபவத்தைக் காண உலகம் கொடுத்து வைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். துள்ளித்திரியும் காளைப் பருவத்தில் அவன் நுரையீரல்கள் பலவீனமுற்றுப் படுத்த படுக்கையானான். அவனைக் கண்ணில் வைத்து இமையால் மூடிக் காத்து வந்த அவன் தந்தை சிங்காரம் எவ்வளவோ ராஜ வைத்தியமெல்லாம் செய்தும் அந்த நோய் மருந்துக்குப் பிடிபடவில்லை.

ஆனால் சிவாவோ தான் நோய்வாய்ப்பட்டதைக் குறித்துச் சிறிதும் கவலையுற்றதாகத் தெரியவில்லை. உடலால் துள்ளித் திரிவதை அவன் பெரிதாகக் கருதவில்லை. உள்ளத்தால் அவன் அமிருத மயமான ஒரு சித்தனைச் சொர்க்கத்தில் ஒரு மூலை முடுக்கின்றி, ஓர் இண்டு இடுக்கின்றி அத்தனை இடங்களிலும் துள்ளித் திரிந்து வந்தான். இனி அவன் துள்ளித் திரிய இடமே இல்லை. எனவே, 'துள்ளலை விட்டுப் புறப்பட்டேன்' என்று அருள் வாசகம் கூறுவது போல ஏதோ ஓர் அமைதியை நாடத் தொடங்கினான். இலக்கிய நினைவுகளை இறைவன் நினைவு அகற்றத் தொடங்கியது.

திருமணமான புது மாப்பிள்ளையாக ஹரி வீணாவுடன் தன் நோயாளி நண்பனைக் காண வந்த போதுதான் காலம் எவ்வளவு வேகமாக ஓடிவிட்டது என்று சிவாவுக்குத் தெரிந்தது. சின்னஞ் சிறியவர்களாகத் தாங்கள் ஆடியதும் பாடியதும் நேற்றுப் போல் தோன்றியது. பின்னைப் பருவத்தில் தான் 'காலச் சக்கர'த்தை ஹரியிடம் கொடுத்ததற்கும் ஒரு புது அர்த்தம் தெரிந்தது.

''ஹரி, நீயும் உன் மனைவியும் நீண்ட நெடுங் காலம் வாழ வேண்டும். என் ஆயுளையும் சேர்த்துப் போட்டுக் கொண்டு நீ சிரஞ்சீவியாக... காயுசாக வாழ வேண்டும். இதற்காகத்தான் நான் என் காலச் சக்கரத்தை உன்னிடம் கொடுத்தேன் போல் இருக்கிறது!'' என்றான் சிவா. ஹரி எதுவும் பேச வொண்ணாது நெஞ்சம் நெகிழ்ந்து போனான்.

ஹரிக்கு மணமானபின் வீணா என்ற ஒரு புது உறவும் சிவாவுக்குக் கிட்டியது. அவனைக் கொழுந்தன் என்றே சொல்வாள் வீணா. ஹரியுடன் இட்டமும், நுட்பமும் மிகுந்த தன் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்வது போல வீணாவுடன் நளினமும், எளிமையும் கூடிய கருத்துக்களையெல்லாம் பகிர்ந்து கொள்வான் சிவா. எண்ணங்களையே கிரிக்கெட் பந்தாக்கி ஹரியுடனும், பூப்பந்தாக்கி வீணாவுடனும் ஆடி மகிழ்ந்தான் சிவா.

ஹரி, வீணா இருவருமே அவனை அடிக்கடி பார்த்து வந்தார்கள். பார்த்துப் பார்த்து நெஞ்சு உடைந்து வந்தார்கள். அணு அணுவாக, இம்மி இம்மியாகச் சிவா மாண்டுகொண்டிருப்பதைப் பார்த்துத் தவித்தார்கள். பலவீனமுற்றிருந்த அவனது நுரையீரல்களில் காச நோயும் கண்டிருப்பதாக அறிந்தபோது பதறிப் போனார்கள்.

ஆனால் சிவாவோ சிரித்துக் கொண்டே தான் இருந்தான். வாய்விட்டுச் சிரிக்க முடியாதபடி பயங்கரமான வறட்டு இருமல் தடை செய்தாலும் இதயத்தால் சிரித்துக் கொண்டேதான் இருந்தான்.

அன்று ஹரி மட்டும் தனியாக வந்ததால் சிவா அவனுடன் பளு மிகுந்த எண்ணங்களையெல்லாம் பந்தாடி மகிழ்ந்தான்.

"உன்னால் எப்படி சிவா இவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்க முடிகிறது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ஹரி.

"ஏன், நான் மகிழ்ச்சிக் குறைவாக இருக்கும்படி இப்போது என்ன நேர்ந்து விட்டது? ம்.... சொல்ல மாட்டாய்.... சொல்ல உனக்கு மனசு வராது.... நமக்குள் ஏன் ஹரி இந்தத் தயக்கம்? என் முடிவு தொலைவில்லை என்று நீ நினைக்கிறாய். அது எனக்கும் தெரிந்திருக்கும் என்று நம்புகிறாய். அது தெரிந்திருந்தும் நான் எப்படி இவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்கிறேன் என்பதுதானே உன் ஆச்சரியம்? ஹரி, அது தெரிந்திருப்பதால்தான் நான் இவ்வளவு மகிழ்கிறேன். ஆமாம் ஹரி, 'வாழப் பிறந்தவன்' என்று ஒரு சொற்றொடர் உண்டல்லவா? அது போல நான் சாகப் பிறந்தவன். பிறக்காமலே இருந்தால் எப்படிச் சாக முடியும்? அதனால்தான் நான் பிறந்திருக்கிறேன். வாழப் பிறந்தவர்கள் எப்படி ஒவ்வொரு விநாடியும் ஆனந்த வாழ்வு வாழ்கிறார்களோ அப்படியே நான் ஒவ்வொரு விநாடியும் ஆனந்தமாக மடிந்து வருகிறேன். அணு அணுவாக, இம்மி இம்மியாகக் கலைத்துச் சாகிறேன்."

தொடர்ந்து வந்த ராட்சத இருமல்கள் சிவாவைப் பேச முடியாமல் திணறவைத்தன.

"வேண்டாம், சிவா! உனக்குப் புண்ணியமாகப் போகட்டும், நீ தயவுசெய்து பேசாதே!" என்று மன்றாடினான் ஹரி.

"ஹரி, இன்னமும் ஏன் உனக்கு இந்தப் போலி ஆசை? நான் பேசாமல் கொள்ளாமல் இருந்தால் மட்டும் பிழைத்தெழப் போகிறேன் என்று நினைக்கிறாயா என்ன? நான் கிளம்பி விட்டேன் ஹரி, கிளம்பி விட்டேன். அதற்குமுன் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி விட வேண்டாமா?" என்று உள்ளம் திறந்து கேட்டான் சிவா.

ஹரியினால் அதை மறுக்க முடியவில்லை. "வாஸ்தவம்தான் சிவா! ஆனால் நீ உடல் குலுங்க இருமிக் கொண்டு, பொருமிக் கொண்டு பேசுவதை என்னால் தாள முடியவில்லையே!" என்று அரற்றினான் அவன்.

"என் உடம்பை மறக்க வேண்டிய நான் தான் வந்து விட்டதே. இன்னமும் உடல் குலுங்குவதையும் இருமுவதையும் ஏன் பொருட்படுத்த வேண்டும்? 'மெய்யும் பொய்யான பின்' என்று சொல்கிறார்களே, அது போல இந்த என் மெய்யும் பொய்யாகும் காலம் நெருங்கி விட்டது" என்ற சிவா சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு துளிர் போன்ற துவளும் குரலில் பேசலானான்: "நம் தமிழ் மொழியில் உயிர் எழுத்து, மெய் எழுத்து என்று பிரித்துச் சொல்கிறோமே அதைப் பற்றி நீ நினைத்துப் பார்த்ததுண்டா? உயிர் வேறு, மெய் வேறு என்பதால்தானே அப்படி ஒலிகளை இரண்டு விதமாகப் பிரித்திருக்கிறார்கள்? மெய்யானவை என்று நடைமுறை உலகம் கருதுவதிலெல்லாம் உயிர் என்ற ஜீவதத்துவம் இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை போலும்! மெய்யென்பது நடைமுறை உலகம் சத்தியம் என்று நம்பும் தாற்காலிகமான உண்மைதான். உயிர் என்பதே அந்த மெய்க்கு உண்மைத் தன்மையை அளிக்கும் நிரந்தர சத்தியம். உடம்புக்குள் அந்த நிரந்தர உண்மையின் நிழல் விழுவதால்தான் அதை மெய்யென்கிறோம். ஹரி, நான் உண்மையின் நிழலில் வாழ விரும்பவில்லை. உண்மை என்பதாகவே வாழ விரும்புகிறேன். மெய்யென்று உலகம் கருதும் இந்த உடம்பான பொய் படும் பாட்டைத் தான் நீங்களெல்லாம் எலும்புருக்கி நோய் என்று எண்ணுகிறீர்கள். அசட்டுத்தனமாக ஏதேதோ வைத்தியமும் செய்து பார்க்கிறீர்கள். அது பிசகு நண்பா, முழுப் பிசகு! தாற்காலிக சத்தியமான உடம்பு நிரந்தர உண்மையாகப் பரிணமிப்பதற்காகத்தான் இந்த மெய்யில் உள்ள எலும்புகள் உருகுகின்றன" என்று கூறிய சிவா மிகவும் சன்னமான குரலில் பாடத் தொடங்கினான்:

புன்புலால் யாக்கை புரைபுரைக்கனியப்
பொன்னெடுங்
கோயிலாப் புகுந்தென் என்பெலாம்
உருக்கி...
என்பே உருக நின்அருள் அளித்துன்
இணைமலரடி....
இன்பே யருளி எனை உருக்கி....

"சின்ன உயிரைப் பெரிய உயிர் உண்டு தனக்குள் அடக்கமாக்கிக் கொள்வதில் ஊன் உருகும் போது துன்பமே தெரியாது ஹரி. அது இன்பம். அதனால்தான் நான் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன்."

'இன்பே அருளி......' என்று மீண்டும் பதிகத்தைத் தொடங்கினான் சிவா.

"சிவா, நீ வெகு வெகு உயரத்தில் எங்கோ பறக்கிறாய். என்னுடைய சிந்தனைச் சிறகுகளுக்கு அவ்வளவு மேல் எழும்பச் சக்தி இல்லை. கீழே இறங்கி வா சிவா!" என்றான் ஹரி பதற்றத்துடன்.

"என்னைக் கீழே இறக்காதே ஹரி! அரும்பு நன்றாக மலர்ந்து விட்டது போல் என் அகத்துக்குள் ஏதோ ஒன்று நன்றாக மலர்ந்து விட்டது. புஷ்பம் எவ்வளவு காலம் மலர்ச்சியுடன் இருக்க முடியும்? முழுதும் மலர்ந்த மறுகணத்திலிருந்தே அல்லவா அது வாடத் தொடங்குகிறது? அது போல என் சிந்தனைகளும் இனி சிறிது சிறிதாக ஓய வேண்டியதுதான். பூ மலர்ந்ததிலிருந்து வாடுமளவும் உள்ள சொற்ப காலத்தில் அதை ஆண்டவனுக்கு அர்ச்சிப்பது போல் என் சிந்தனை மலர்கள் வாடும் வரை அவற்றால் சிவபெருமானையே அர்ச்சிக்க விரும்புகிறேன். என்னைக் கீழே இறக்காதே ஹரி" என்று தீனமாகக் கேட்டுக்கொண்டான் சிவா. நார்ஸிஸஸ் என்பவன் புஷ்பமாக மாறியதாக ஒரு கிரேக்கக் கதை உண்டே, அது ஹரியின் நினைவுக்கு வந்தது.

இப்படியெல்லாம் வான மண்டலத்தில் பறந்து ஆகாசத் தாமரைகளைச் சேகரித்து அகத்தில் தூவிக் கொண்ட சிவாதான் அடுத்த வாரம் ஹரி அவனைச் சந்தித்த போது துயரக் கடலில் தோய்ந்து கிடந்தான். வெகு நேரம் அவன் பேசவே இல்லை. அதாவது வாய் மொழியாகப் பேசவில்லை. ஆனால் அவனே சோகம் என்ற உணர்ச்சியின் மொழியாகிப் படுத்துக் கொண்டிருப்பது போல் ஹரிக்குத் தோன்றியது.

17-1-1963 வியாழன்

அன்று எங்கள் புது
ஜவுளிக் கடையும்
மளிகைக் கடையும்

காந்திபுரம்

கிராஸ்கட் ரோடில்

துவங்க இருக்கிறது
என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறோம்

இப்படிக்கு

1. **ராமு & கோ.**
   போன் 4397 - R. S. புரம்
2. **ராமு & கோ.**
   போன் 5124 - அவனாசி ரோடு
3. **A. ரங்கசாமி செட்டியார்**
   போன் 3344 - R. S. புரம்
4. **சேகர் & கோ.**
   புது மார்க்கெட்

கோயமுத்தூர்

எங்கள் நேர்மையான சேவை
உங்களுக்குத் தேவை

வீடுதோறும் ஒளிரவேண்டிய
லிப்கோ வெளியீடு

ஸுந்தர காண்டம்

கீர்த்தனாசார்ய
ஸ்ரீ C. R. S. அவர்களின்
தமிழ் மொழிபெயர்ப்பு.

விசேஷாம்சங்கள் :

- பாராயணக் கிரமங்கள்
- பல க்ஷேத்ர ராமர் படங்கள்
- பல திவ்ய மங்கள ஸ்தோத்ரங்கள்



இலவசம்

இப்புத்தகத்துடன் ஸம்ஸ்க்ருத ஸுந்தர காண்டம் — மூலம் (பிரதிகள் கிடைக்கும் வரை) ஒரு பிரதி இலவசமாகத் தரப்படுகிறது.

'கல்கி' சைஸில் 520 பக்கங்கள் — முழு காலிகோ பைண்டிங். நான்கு வண்ண அழகிய மேலட்டை — கவர்ச்சிகரமான வெளியீடு.

விலை ரூ. 12.50; தபால் மூலம் ரூ. 14.50
(முன் பணம் தேவை)

பிரதிகள் கிடைக்கும் இடங்கள் :


தி லிட்டில் ஃப்ளவர் கம்பெனி (லிப்கோ) (போன் : 41538) ரங்கநாதன் தெரு, சென்னை-17. எம். தாமோதரம் & கம்பெனி, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், சென்னை-1; ஹிக்கின்பாதம்ஸ், சுதேசமித்திரன் ரெயில்வே ஸ்டால்கள்.

NALIN

INDIAN OIL CO.

A NATIONAL UNDERTAKING, DISTRIBUTING PETROLEUM PRODUCTS FOR INDUSTRY.

All India is now served by **INDIANOIL**, the new State-owned petroleum distribution organisation, and most of the requirements for Industrial and Automotive fuels and Special Products, including Lubricants, can speedily be met.



AROMEX:
for manufacturing carbon black, varnishes and paints, wood preservatives, wire enamels, rust-proof coatings and as solvent for insecticides

FUEL OILS:
to help conserve coal. IOC's low-sulphur content **Furnace Oil** is ideal for a wide range of industries. **Tea Drier Oil** is fast replacing coal on tea and coffee plantations

NAPHTHA:
for petrochemicals, fertilizer projects and town gas

DIESEL OILS:
IOC's low-sulphur content **HSD** prevents acid corrosion and increases the life of all road and waterway transport, railway locomotives and of other heavy-duty equipment. **LDO** for power stations, small workshops and pumping engines

LUBRICANTS/ INSULATORS:
Axle Oil for railways and for other fast-moving axles in heavy machinery. **Transformer Oil** for use as an insulating medium in transformers and switchgear

Indian Oil Company Ltd.
(A Govt. of India Undertaking)
"Rashmi", Carmichael Road, Bombay 26-WI
P. 64, Sundari Mohan Avenue, Calcutta 14;
"Chordia Mansion", 150-A Mount Road, Madras 2;
National Insurance Bldg., Parliament Street, New Delhi 1.

INDIANOIL

mas. IOC. 1321 R

''ஏன் சிவா, என்னவோ போல் இருக்கிறாய்? பேச மாட்டாய்?'' என்று பரிவோடுகக் கேட்டான் ஹரி.

சிவாவின் கண்களிலிருந்து நீர் பொங்கி வழிந்தது. கமறி வரும் பேய் இருமல்களை அடக்கமாட்டாது குமுறி அழுதான் அவன். அவனை ஆசுவாஸப்படுத்த ஹரி எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்குப் பலனே இல்லாமல் போயிற்று. தானாகவேதான் அவன் தேம்பித் தேம்பி ஓய்ந்தான். அவ்வப்போது நீண்ட பெருமூச்சுக்கள் குறுக்கிட அவனாகவேதான் பேசவும் தொடங்கினான்:

''போன முறைதான் நான் எத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று நீ வியந்து போனாய். சித்தனை மலர்ச்சிதான் மகிழ்ச்சிக்குக் காரணம், இந்த மலரை ஈசனுக்கென்றே அளிக்கப் போகிறேன் என்றெல்லாம் சொன்னேன். அப்போதிருந்த உயர்ந்த மனோபாவத்திலிருந்து இறங்க மாட்டேன் என்றேன். கடைசியில் இறங்கியே விட்டேன் ஹரி. இந்த உலகப் பாசபந்தங்கள் என்னை வந்து உடும்பாகப் பிடித்துக் கொண்டு விட்டன. இருக்கும் உறவுகளையெல்லாம் உதறிய எனக்குப் புதிய உறவு ஒன்று வெகு இறுக்கமாக ஏற்பட்டிருக்கிறது.'' கரைகாணாத அவலம் புரளும் குரலில் பேசினான் சிவா.



ஏதேதோ அதிசயங்களையெல்லாம் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்ற ஆர்வத்தால் துடித்தான் ஹரி. சிவாவோ சாவதானமாகத் தலையணை உறையில் கையை விட்டு ஒரு தபால் உறையை எடுத்து ஹரியிடம் நீட்டினான். விலாசம் எழுதின கை எழுத்து ஹரிக்குப் பழக்கமானதுதான். சிவாவுடைய மாமா பொன்னம்பலம்தான் செம்பட்டியிலிருந்து எழுதியிருந்தார்.

''மாமாதானே எழுதியிருக்கிறார்?'' என்று கேட்டான் ஹரி.

''மா...மா...? இப்போதைக்கு அப்படித்தான் வைத்துக் கொள்ளேன். கடிதத்தைப் பிரித்துப் பார்த்தால் உனக்கே எல்லாம் புரியும்'' என்றான் சிவா.

தபால் உறையில் கைவிட்டு இழுத்த ஹரி ஒரு கடிதத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்தான்....

''உன் அப்பாவுக்கல்லவா எழுதியிருக்கிறார்?.... ஓ, இன்னொரு கடிதமும் இதே கவரில் இருக்கிறதே. இது உனக்கா?'' என்று கேட்டான்.

''எனக்கு எழுதிய கடிதத்தில் ஒன்றும் விசேஷமில்லை. என் உடம்புக்காக மிகவும் வருத்தப்பட்டு எழுதியிருக்கிறார். அவ்வளவுதான்! அப்பாவுக்கு அவர் எழுதிய கடிதத்தைத்தான் நீ படிக்க வேண்டும்... ம்.. ஒரு சிறிய பிசகு எவ்வளவு பெருத்த எதிர் விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது? அப்பாவுக்கும் எனக்குமாக இரண்டு கடிதங்களை ஒரே உறையில் வைத்து அனுப்பிய மாமா அப்பாவின் பெயரை விலாசத்தில் எழுதுவதற்குப் பதில் கைப் பிசகாக என்னுடைய பெயரை எழுதி விட்டார். கடிதம் என் கைக்கு வந்து சேர்ந்து விட்டது'' என்றான் சிவா.

சிங்காரத்துக்குப் பொன்னம்பலம் எழுதிய கடிதத்தின் முதல் வரிகளிலிருந்தே ஹரிக்கும் அந்தத் தவறு புரிந்து விட்டது.

''அன்புள்ள மைத்துனர் சிங்காரத்துக்கு,

இத்துடன் உள்ள கடிதத்தைச் செல்வன் சிவாவிடம் சேர்த்து விடவும்.....

செல்வன் சிவாவைச் சுற்றிச் சுற்றியே தான் என் நினைவு கடந்த சில காலமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. உங்களுடைய கடிதத்தைக் கண்டதிலிருந்து அது அதிகமாகி விட்டது. எப்போதோ சில முறை சிவாவைக் கண்டு, அவனுடன் சொந்த மாமாவைப் போல் உறவு கொண்டாடும் எனக்கே அந்தக் குழந்தையிடம் இவ்வளவு பாசம் இருக்கிறதென்றால் அவனை விலை கொடுத்து வாங்கிஎடுத்து வளர்த்து இத்தனை காலம் அருமை பெருமைகள் செய்த நீங்கள் இப்போது வயிற்றில் நெருப்பைத்தான் கட்டிக் கொண்டிருப்பீர்கள்.

நமக்கு இத்தனை கவலை என்றால், அவனைப் பெற்றெடுத்த அந்த அபாக்கியவதி ராதையைப் பற்றி எண்ணவே தான் முடியவில்லை. ஆனால் அவள் இன்று தன் பிள்ளையின் உடல் நிலையைப் பற்றி ஏது மறியாததால் இந்தக் கவலை இல்லாமல் இருக்கிறாள். விபரீதம் நேர்ந்து விடும் முன் அவள் சிவாவை ஒரு முறையேனும் பார்த்து விட்டால் நல்லதோ; அவளிடம் இன்னமும் சிவாவின் உடல் நிலையை ஒளித்து வைத்தால் பாபமோ என்று சில சமயங்களில் தோன்றினாலும் அந்த எண்ணம் சரியில்லை என்றே பிறகு படுகிறது. இத்தனை காலம் பிள்ளையை இழந்திருந்தவள் இப்போது அவனைச் சிறிது காலத்துக்கு மீண்டும் பெற்று அதன்பின் நிரந்தரமாக இழப்பதானால் அவள் இதயம் மேலும் சிதிலமாகும், அவ்வளவுதான். எனவே சமீபத்தில் நான் தேனூர் சென்றிருந்த போது கூட அவளிடம் அவன் உடம்பைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. ஆனால் நான் சொல்லாமலேயே அவள் உள்ளூறப் பதறுவதாக எனக்குத் தோன்றியது. என்னிடம் வாய்விட்டு எதுவுமே சொல்லாவிடினும் அவள் பிள்ளையைக் காணத் தவிக்கும் தவிப்பையும், துடிக்கும் துடிப்பையும் நன்றாகப்புரிந்துகொண்டேன். பச்சாத்தாபப்பட்ட போதிலும் அதற்கு நிவர்த்தி காணமுடியாதபடி. நாம் செய்த முன் யோசனையற்ற செயலுக்காக ஆண்டவன் நம்மை மன்னிப்பானா?

பொன்னம்பலம்



பபூனின் மனைவி : இந்த மாதிரி குல்லா வெல்லாம் வச்சிண்டு போறீங்களே, யாரேனும் பார்த்துச் சிரிக்கப் போறாங்க!

ஹரிக்கு இதயமே பனிக் கட்டி போல் உறைந்து விட்டது. சிவா சிங்காரத்தின் பிள்ளை இல்லையா? அப்படியானால் அவன் யாருடைய மகன்? 'ராதை என்று குறிப்பிட்டிருக்கும் சிவாவின் தாய் யார்? அவளுக்கும் பொன்னம்பலத்துக்கும் என்ன சம்பந்தம்? அவளிடமிருந்து சிவா எப்படி இங்கு வந்து சேர்ந்தான்?

இந்தக் கேள்விகளில் எதற்குமே சிவாவும் விடை அறிந்திருக்கவில்லை. ''இந்தக் கடிதத்தில் கண்டதற்கு மேலாக எனக்கும் எதுவுமே தெரியாது ஹரி. நான் யாரிடம் கேட்டு இந்த மர்மத்தை விளங்கிக் கொள்வது?.... அப்பாவிடமா? .... ஏன் ஹரி, அப்படி வேதனையுடன் சிரிக்கிறாய்? சிங்காரம்தான் என் தந்தை அல்லவே என்பதனாலா? என்றால் அப்படி நினைக்க முடியவில்லை. தந்தைக்கும் மேலாக என்னை அவர் பராமரிக்கிறார், பரிவு காட்டுகிறார். இப்போது தம் உயிரைக் கொடுத்து அதனால் என்னைப் பிழைப்பிக்க முடியும் என்றால் பிராணத் தியாகமும் செய்வார். அப்படிப்பட்டவர், என் தந்தை அல்ல என்பதை நான் தெரிந்து கொண்டு விட்டேன் என்பதை அறிந்தால் எவ்வளவு கிலேசம் அடைவார் என்பது உனக்குத் தெரியாது ஹரி. அவரை நான் என் தந்தையாகவே எண்ணிச் செத்ததாகத்தான் அவர் நினைக்க வேண்டும்.

''அப்பாவை விட்டால் இந்த விஷயமாக நான் பொன்னம்பல மாமாவிடம் தான் விளக்கம் கேட்க முடியும். அவருக்குக் கடிதம் எழுதலாமா, அவ்வாறு நான் கடிதம் எழுதியிருப்பதை அப்பாவுக்குத் தெரிவிக்காமல் இருக்குமாறும் அதிலேயே குறிப்பிடுவோமா என்றும் எண்ணிப் பார்த்தேன். அவருடைய பதில் வருவதற்கு முன்பே நான் போய் விட்டால்? எனவே இந்த யோசனையையும் விட்டு விட்டேன்.

''ஆனாலும் என் மனசு மட்டும் பஞ்சுத் தும்புகளாகச் சிதறிக் கொண்டே இருக்கிறது, ஹரி. என்னைப் பார்க்க வேண்டும் என்று என் அன்னை தவிக்கிறாள், துடிக்கிறாள் என்பதை எண்ணும் போதெல்லாம் என் மனசு இதயச் சுவர்களைப் பிய்த்துப் பிறிக் கொண்டு அவளிடம் சென்று விடாதா என்று இருக்கிறது. நான் கண்டிராத என் அன்னைக்காக, 'சாகப் பிறந்தவன் நான்' என்று இடமாகச் சொல்லி வந்த எனக்கே வாழ மாட்டோமா என்றிருக்கிறது. உடல் குணமாகாதா, என்றோ ஒரு நாள் பிற்காலத்திலேனும் அம்மாவைச் சந்தித்து அவள் தவிப்பையும் துடிப்பையும் தணிக்க மாட்டோமா என்ற ஆசை எழுகிறது.

''பட்டினத்தார் பாடல் ஒன்று உனக்குத் தெரியுமா ஹரி? 'பெற்ற தாய்தனை மக மறந்தாலும்' என்று தொடங்கும். 'கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும் நமசிவாயத்தை நான் மறவேன்' என்று அதில் வரும். நான் கற்ற இலக்கியத்தை யெல்லாம் ஆண்டவனுக்காக மறக்க முடிந்தது. பெருமைப்பட்டேன். 'நூலிலுள்ள தும்புகளை யெல்லாம் ஒரே இழையாகக் கூராக்கி விட்டோம்; அது ஊசியில் சென்றுவிடும்' என்று இறுமாந்தேன். வேறெந்தத் திசையிலும் என் ஆசைகள் செல்லாமல் ஆண்டவனையே பிடித்துக் கொண்டு விட்டன. இந்த நிலையிலேயே சாக வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் அந்தச் சமயத்தில் இந்தத் தாய்ப்பாசம் வந்து பிடித்துக் கொண்டு விட்டது. கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும் பெற்ற தாய் தனை மகவு மறப்பது முடியாத காரியம் போல் இருக்கிறது. இந்தப் பாசத்துடன் நான் எப்படிச் சாக முடியும்? என்னுடைய இந்த உடல் வேண்டுமானால் சாகலாம். ஆனால் உள்ளம் எப்படி அமைதி பெறும்? நிரந்தரமான உண்மையில் கரைந்து போய் உயிராகவே ஆகும் சாவு அதற்கு எப்படிக் கிட்டும்? அப்படியானால் நான் மீண்டும் பிறக்க வேண்டுமா ஹரி?'' என்று கேட்ட சிவா ஆவேசமாகக் குரலை உயர்த்தினான்.

''மாட்டேன், மாட்டேன். நான் இந்தப் பிறவியிலேதான் சாசுவதமாகச் சாக வேண்டும். இத்தனை காலமாக அந்தச் சாவுக்கே என்னைத் தயார்ப் படுத்திக் கொண்டு வாழ்ந்த நான் இனிமேல் பிறக்க முடியாது'' என்று வெறி பிடித்தவன் போல் கூவிவிட்டு ஆயாசம் தாளாது அப்படியே சுருண்டு கொண்டான். ராட்சத இருமல்கள் அவன் உடலைக் குலுக்கின

ஹரியின் உள்ளமும் குலுங்கியது. குலுக்கி விட்டு வைத்த திரவ மருந்தின் தூள்கள் தாமாக அடியில் படிவதுபோல் அவனுடைய உணர்ச்சிகளும் தாமாக அடிவாரத்தில்சென்று படிந்தன. முன் எப்போதும் கண்டிராத ஒரு தெளிவு ஹரியின் உள்ளத்தில் பிறந்தது. அமைதியாக அவன் சிவாவிடம் கூறினான்.

''சிவா! நீ மீண்டும் பிறக்க வேண்டாம். ஆண்டவனைத் தவிர வேறு யாரையும் நீ எண்ண வேண்டியதில்லை. உண்மைதான் சொல்கிறேன், என்னை நம்பு. உன்னுடைய ஆயுளை எல்லாம் எனக்களிப்பதாக முன்பு ஒரு சமயம் நீ சொன்னாய் அல்லவா? இப்போது உன் ஆசைகளையும் எனக்கே எனக்குத்

சிறிய தொழில்களை ஆரம்பித்து அதிக லாபம் பெறுங்கள்

தற்சமயம் பிரசுரமான 'சிறு தொழில்கள்' என்ற தமிழ்ப் புத்தகம் (புதிய மூன்றாவது பதிப்பில்) அநேக விதமான கைத்தொழில்களை ஆரம்பம் செய்ய பூரா விவரமும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மிஷின்களின் விவரமும், சாமான்களின் விவரமும், சர்க்காரின் உதவியின் மூலம் மிஷின்களைத் தவணையில்பணம் செலுத்தி பெறும் விதமும், வெளி தேசத்து சாமான்களை வரவழைக்கும் விதமும் அடங்கியுள்ளது. 856 பக்கங்கள், 300 படங்கள், விலை ரூ. 13. தபால் செலவு ரூ. 1.60 ந. பை.

COTTAGE INDUSTRY


(KT-153) P.B. 1262, Jamuna Rd., **DELHI-6**, Phone: 229835

பரிமளிப்பதில் புது ரகம்...

காந்தாரிடின்



கூந்தல் தைலம்



பெங்கால் கெமிகல்

கல்கத்தா
பம்பாய்
கான்பூர்

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிபூட்டர்கள்
ஆர் எல். கௌடர் கோ., 59, பந்தர் தெரு, சென்னை 1

ஆந்திர ராஜ்ய டிஸ்ட்ரிபூட்டர்கள்
சத்யநாராயணு பார்மஸி, குமாரி தெரு, விஜயவாடா-1 & விஜயநகரம்

தந்துவிடு. இதோ இந்தக் கணமே உன் அன்னையன்பை நான் எடுத்துக் கொள்கிறேன்.

"ஹரியும் சிவனும் ஒன்று என்று சொல்வார்கள் அல்லவா? நானும் நீயும் ஒன்றாகி விடுவோம் சிவா. அதாவது நீ போனபின் நானே நீயாகி விடுகிறேன் — உன் அன்னை ஒருத்திக்காகவாவது நானே சிவாவாகி விடுகிறேன். அவளை எப்படியேனும் தேடிக் கண்டு பிடித்து நானே அவள் மகன் என்று நம்பச் செய்கிறேன். அவளுடைய தவிப்பையும், துடிப்பையும் தணிக்கிறேன். போதுமா சிவா? இனிமேல் நீ சாந்தமாக சாகவதச் சாவு சாகலாமல்லவா?" என்று அன்பொளி குளிர்ந்து வீசக் கேட்டான் ஹரி.

சிவா அவனைத் தன் அருகில் குனியுமாறு ஜாடை காட்டி அப்படியே ஆரத் தழுவிக் கொண்டான்.



அப்புறம் சிவா சில நாட்கள் தான் இருந்தான். கடைசி கடைசியாக அவன் பேசியது ஒரு நாள் மாலை ஹரியில்லாமல் தனியாக வந்திருந்த வினுவிடம் தான். இரவு ஷிஃப்ட் முடிந்தவுடன் அங்கு வந்து சேர்ந்து சிவாவின் தலைமாட்டில் அமர்ந்திருந்த ஹரி காலை வரையில் கண் கொட்டவில்லை. மறு நாள் பூ மலரும் நேரம். மென்காற்றில் சுகந்தம் கலந்து வந்தவுடன் நார்ஸிஸஸை நினைந்தபடி கனத்த இமைகளை நன்கு விரித்துச் சிவாவை நோக்கினான் ஹரி. அந்த அறைக்கு வெளியே இருந்த வேப்ப மரத்திலிருந்து ஒரு கொழுந்து காற்றில் பிரிந்து ஜன்னல் வழியாக வந்து சிவாவின் மீது விழுந்தது. அந்தக் கொழுந்தையும் சிவாவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான் ஹரி. 'கொழுந்தன்' என்று கொச்சை மொழியில் சிவாவுடன் வினு உறவு கொண்டாடியது எவ்வளவு பொருத்தம்? அந்த முகத்தில் சொட்டிய அழகும் அமைதியும் இந்த மரணத்துக்காகவே தான் அவன் பிறந்தான் என்று சேதி சொல்லின. சாகப் பிறப்பது என்றால் என்ன என்பது ஹரிக்குப் புரிந்தது.

தேனூர் கிராமத்தில் தேரடித் தெருவில் சிங்காரத்துக்கு ஒரு வீடு இருப்பதாகவும், அதில் யாரோ ஒரு பெண் வசிப்பதாகவும் தகவல் கிடைத்தது ஹரிக்கு. சிவாவின் தாய் ராதையைப் பற்றிப் பொன்னம்பலம் சிங்காரத்துக்கு எழுதியிருந்த கடிதத்துடன் அதைப்பிணைப்பது ஹரிக்குச் சிரமமாகவில்லை. உடனேயே அவளைத் தேடிச் செல்ல அவன் துடித்தாலும் அலுவலகத்துக்குப் பெரிய அதிகாரி ஒருவர் இன்ஸ்பெக்ஷனுக்கு வந்துவிட்டதால் ஒரு வாரத்துக்கு வெளிக் கிளம்ப முடியாத நிலை ஏற்பட்டது. என்றாலும் அவனுடைய ஆர்வம் அணை மீறிப் போன படியால் அதற்குள்ளேயே ராதைக்கு ஒரு கடிதம் எழுதி விட்டான். 'தானே சிவாவாக எழுதினான். அவளைக் காண வருவதாக முன்கூட்டியே அறிவித்து விட்டான். தான் அவளைக் காண்பதற்காக எவ்வளவோ ஏங்குவதாக எழுதினான். தங்கள் சந்திப்பை இரகசியமாக வைத்திருக்கும்படியும் கேட்டுக் கொண்டான்.


ஆம், அவன் தன் மாறுவேஷ நாடகத்தைப் பரம இரகசியமாகவே வைத்திருக்கத் தான் முடிவு செய்தான். அன்னை தந்தையிடம் மட்டுமின்றி வினுவிடமும் அதைப் பற்றிச் சொல்வதில்லை என்று உறுதி கொண்டான். ஆழமில்லாத அந்த விளையாட்டுப் பெண்ணுக்கு இதெல்லாம் புரியாது என்றே விஷயத்தை ஒளித்தான். இன்ஸ்பெக்ஷன் முடிந்த அன்று மாலையே தேனூர் தேரடித் தெருவை அடைந்தான்.

அன்றிலிருந்து இன்று வரை எத்தகையதொரு அன்புக் கோட்டையை எழுப்பி விட்டாள் ராதை?

ராதை! எவ்வளவு சோகம் செறிந்த சரிதம் அவளுடையது? துயரத்தின் மேல் துயரமாக அப்படியும் ஒரு வாழ்வா?

இள வயசிலேயே தந்தையை இழந்து மாற்றாந்தாயிடம் அவள் பட்ட பாடு கொஞ்சமா, நஞ்சமா? அந்தக் கொடுமைக்காரி ஒரு துன்மார்க்கனுக்கு அவளை மணம் முடித்து வைத்தபோது அவள் மனம் என்ன வேதனைப் பட்டிருக்க வேண்டும்? கலியாணமான ஓராண்டுக்குள்ளேயே அந்தத் துன்மார்க்கத்துக்குப் பலியாகி அவன் உயிரிழந்த போது ராதையின் வாழ்க்கை எப்படி வெறிச்சோடிப் போயிருக்கும்? அப்படி வெறிச்சோடிப் போய் விடவில்லை, தனக்கு இன்னும் எட்டு மாதத்தில் தாய்மை கிடைக்கப் போகிறது என்று அறிந்த போது அவள் கொண்ட ஆனந்தத்திலேயே எவ்வளவு துயரமும் பின்னிப் பிணைந்திருக்கும்? திக்கற்ற இளம் விதவையாகி, மீண்டும் சிற்றன்னையிடம் போய்ச் சிறுமைப் படக் கூடாது என்பதற்காக இரண்டு விட்ட சகோதரர் பொன்னம்பலத்தின் வீட்டில் கர்ப்பிணியாகப் போய் நின்றபோது அவள் எவ்வளவு கூசிப் போயிருப்பாள்?

ராதை பொன்னம்பலத்தைப் புகலடைந்த போது அவர் வீட்டுக்கு அவரது சகோதரியும், சிங்காரத்தின் மனைவியுமான ராஜம்மாளும் வந்திருந்தாள். நீண்ட நாளுக்குப் பிறகு, பல குறைப் பிரசவங்களுக்குப் பிறகு, மீண்டும் தாய்மையை எதிர்பார்த்து அவள் வந்திருந்தாள். "இந்த முறை மட்டும் நீ குழந்தையும் கையுமாகத் திரும்பி வராவிட்டால் என் பிள்ளைக்கு வேறிடத்தில் கலியாணம் செய்து விடுவேன்" என்று மிரட்டி அவளை அனுப்பி வைத்திருந்தாள் சிங்காரத்தின் தாய். சிங்காரத்துக்கு ராஜம்மாளிடம் உயிர். ஆனால் அன்னையாரை எதிர்க்கவோ திராணி கிடையாது. இந்த முறையாவது பிள்ளை வரம் கிட்ட வேண்டுமே என்று வேண்டாத தெய்வத்தை யெல்லாம் வேண்டினார். ஆனால் தெய்வங்கள் கைவிட்டு விட்டன. ராஜம்மாளுக்குச் செத்தே பிறந்தது ஒரு குழந்தை. அதே தெய்வங்கள் இன்னொரு சோதனையும் செய்திருந்தன: அதற்குச் சில நாட்களுக்கு முன்புதான் ராதைக்கு அழகே



போர்ட் குளோஸ்டர் இண்டஸ்ட்ரீஸ் லிட்.

14. நேதாஜி சுபாஷ் ரோடு

கல்கத்தா -1

AIYARS FGI-18

அனைவருக்கும் எமது

பொங்கல் நல் வாழ்த்துக்கள்!


★

NMC பம்புகள்

NMC எலக்டிரிக்

மோட்டார்கள்

சிறந்தவை



NMC மோட்டாருடன்
இணைக்கப்பட்ட NMC பம்பு

உறுதிக்கும், உழைப்பிற்கும்

சிறந்தது

★

தயாரிப்பாளர்கள்

நவமணி & கோ.

பாப்பநாயக்கன்பாளையம்

கோயமுத்தூர் -1

போன் : 3980

பிராஞ்சு :

30, தம்புசெட்டித் தெரு

மதராஸ் -1

அனைவருக்கும் எங்கள்


பொங்கல் வாழ்த்துக்கள்!

★

PHILIPS

பிலிப்ஸ்

ரேடியோக்கள்



சமீபத்திய புதிய மாடல்கள்

பிலிப்ஸ்

லாம்புகள், பிட்டிங்குகள்

பிலிப்ஸ் ஒலிபெருக்கிகள்

மின்சாரக் கருவிகள்

தானே இயங்கும்

'வீனஸ்' வாட்டர் ஹீட்டர்கள்

★

விவரங்களுக்கு

ஓரியண்டல் எலக்டிரிகல்ஸ்

162-A, அவினாசி ரோடு, கோயமுத்தூர்

பிலிப்ஸில் பயிற்சிபெற்ற சிறந்த என்ஜினியர்களால்
விசேஷத்தன்மையுடன் செப்பம் செய்யப்படுகிறது

உருவான ஓர் ஆண் குழந்தை பிறந்திருந்தது. சிங்காரம் அந்த அழகை இரசித்தும், தம் அன்னையிடம் உள்ள பயத்தாலும் ஓர் அபிப்பிராயம் தெரிவித்தார். அது பொன்னம்பலத்துக்கும் அநுகூலமாக அமைந்தது. ராதையை வைத்துப் பராமரிப்பது போதாமல் அவள் பிள்ளையை வேறு பரிபாலிக்கும் பொறுப்பு கழுவுவதில் அவருக்கும் திருப்திதான். அப்புறம் என்ன? ராதையின் பிள்ளை ராஜம்மாளின் பிள்ளை சிவாவாகப் பொன்னூருக்குத் திரும்பினான். சிறிது காலத்திலேயே இதற்குக் காரணமாக இருந்த சிங்காரத்தின் தாய் கண்ணை மூடினாள். அப்புறம் இருந்தாற்போலிருந்து ஒரு நாள் காய்ச்சலடித்து ராஜம்மாளும் மாண்டு போனாள். ஆனால் சிவாவிடம் சிங்காரம் வைத்த பாசம் மாளவில்லை. அது வளர்ந்து கொண்டே போயிற்று. ராதையின் மகனாக அவனை ஒப்புக்கொள்ள அவருக்கு மனமில்லை. என்றாலும் அவனுக்கு ஒரு செவிலித் தாய் போலச் சில மாதங்கள் அவளைத் தம் வீட்டிலேயே வைத்துக்கொண்டிருந்தார். பையனுக்குப் பேச்சு புரியும் பருவம் வந்ததும் எந்த நிமிஷத்தில் அவள் அவனிடம் உண்மையைச் சொல்வாளோ என்று அஞ்சினார். பணத்தைக் கொடுத்துப் பொன்னூரிலிருந்து இருபது மைல் தொலைவில் தேனூரில் தமக்கிருந்த ஓர் ஓட்டு வீட்டில் அவளைக் குடி வைத்தார். வாரம் ஒரு முறை அவள் பொன்னூருக்கு வந்து சிவாவைப் பார்க்கலாம் என்றும் ஏற்பாடு செய்தார். அதற்குப் பின் அந்த ஏற்பாட்டுக்கும் பயந்தார். தான் இருக்கும்போதும், தன் முன்னரும்தான் அவள் சிவாவுடன் பேசலாம்; அவளுடைய பாசத்தையெல்லாம் இனி அவள் அதிகமாகக் காட்டி அந்தச் சிறுவனைத் தொட்டுக் கொஞ்சுவதையும், கெஞ்சுவதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தார். ராதையால் இதைத் தாளமுடியவில்லை. தந்தையாக இல்லாதவர் தந்தையாக நடிப்பதற்காகத் தாயானவள் தாயில்லை போல் நடிக்க வேண்டும் என்பதில் அவள் மனம் கசந்து போனாள். சிவாவைப் பார்ப்பதையே நிறுத்திக் கொண்டு விட்டாள். நிறுத்திக் கொண்டாலும் அவளது இதயக் குமுறல் மட்டும் தணியவில்லை. எப்படித் தணியும்? தீயை வைக்கோலால் மூடி அணைக்க முடியுமா என்ன ?



அந்தக் குமுறலைத் தணிக்கத்தான் ஹரி சிவாவாகச் சென்று வந்தான் அவளிடம். அவள் அடிக்கடி தன்னிடம் வரவேண்டுமென அவள் விரும்பியதையும் அவன் புரிந்துகொண்டான். இப்படி அடிக்கடி அவளிடம் செல்வதற்கு ஒத்தாசையாகத்தான் தேனூருக்கு அருகே வசித்த பேராசிரியர் ஸ்டூவர்ட்டிடம் பாடம் பயின்று வந்தான். படிப்பதற்குப் போவதாகச் சாக்குச் சொல்லிவிட்டுப் பாடம் முடிந்த பின் ராதையைச் சந்தித்து வந்தான். அவன் ஏதோ தூர உறவினன் என்று அவள் ஊரில் சொல்லிக்கொண்டாள். அந்தச் சந்திப்புக்கே இப்போது தடங்கல் வந்து விட்டது. ஹரியின் அலுவலகத்தார் அவனை 'ஸ்டடி டூர்' என்பதாக அமெரிக்காவில் இரண்டாண்டுகள் படித்து வரத் தேர்வு செய்து விட்டார்கள். இந்தச் சமயம் பார்த்து ராதைக்கு இதயம் வீங்கிக் கொண்டு அவளைப் படுக்கையில் தள்ளி விட்டது. எந்த நிமிஷத்திலும் அவளுக்கு எதுவும் நேரலாம் என்று சொல்லி வைத்தியர்களும் கை விட்டு விட்டார்கள். வைத்தியமெல்லாம் ஹரியின் ஆதரவில்தான் நடைபெற்றது. இந்தச் சூழ்நிலையில் அவளிடம் எப்படி அமெரிக்கா போவது பற்றிப் பேச முடியும்? பெற்ற தாய் அவ்வாறு மரணப் படுக்கையில் கிடக்கும் போது எவனேனும் அயல் நாடு செல்லத் துணிவானா? பெரிய இக்கட்டில் சிக்கிக் கொண்டு அவதிப்பட்டான் ஹரி.

சிவாவுக்காகவும் துர்ப்பாக்கியவதி ராதையின் அன்புக்காகவும் அமெரிக்கா போகாமலே இருக்கக் கூட அவன் தயார்தான். ஆனால் அலுவலகத்தில் என்ன காரணம் கூறுவது? ஒழுங்கு முறைகளுக்குப் பெயர் பெற்ற அந்த ஆங்கிலேய நிறுவனத்தில் தக்ககாரணம்காட்டாவிட்டால் 'பிளாக் மார்க்' அல்லவா கிடைக்கும்? அதோடு, அவனுடனேயே வேலை பார்க்கும் சில உறவினர்கள் மூலமாக அவனை மேல் நாடு போகத் தேர்ந்தெடுத்திருப்பது வீட்டில் தெரிந்து விட்டது. தான் இப்போது போகாதிருப்பதென்றால் அவர்களுக்கெல்லாம் என்ன காரணம் சொல்வது?

கடந்த சில நாட்களாக இதே சிந்தனையில் ஹரி உழன்ற உளைச்சல் உண்டே! அப்பப்பா! அதை வெளியிலும் காட்டிக் கொள்ள முடியவில்லை. பெரிய இடத்தைச் சேர்ந்த அந்தத் தொட்டால் சுருங்கிப் பெண் வீணாவிடம் நயமாகவும் நேயமாகவுமே இருக்க வேண்டியிருந்தது. அமெரிக்கா போவதற்காகப் பல நடைமுறைகளைப் பூர்த்தி செய்வதும், ஊசி குத்திக் கொள்வதும், பாஸ் போர்ட், விஸா என்று பறப்பதும் வேறு சேர்ந்தது. கடல் கடந்து போக இருப்பவனைக் காண வருபவர்களுடனெல்லாம் இழைந்து குழைந்து பேசியாக வேண்டியிருந்தது. எல்லாம் ஆனபின், வீணாவும் தூங்கிய பின் ஹரி தானும் தன் உணர்வுகளுமாகவே தனித்திருந்து போராடிக்



''கூடா என்ன இருக்கு?''
''சொல்றுவேன் அண்ணா; ஆனா அது ரொம்ப ஆறிப் போன ஜோக்!''

கொள்வான். அந்தப் போரில் ஒவ்வொரு விநாடி ஒவ்வோர் உணர்வு வெற்றி பெறும். இதயம் வீங்கிப் போய் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் ராதையை எண்ணுவான். ஊர் உலகம் என்ன நினைத்தாலும் சரி, உத்தியோகம் பறிபோனாலும் சரி, ராதை இவ்வளவு ஆபத்தான நிலையில் இருக்கும் வரை அமெரிக்கா போவதில்லை என்று அந்தக் கணம் தோன்றும். மறு கணமே 'இது எப்படியும் நடிப்புத்தானே? உண்மை எப்படியும் வெளிப்படத்தானே வேண்டும்? ராதையிடம் உடைத்துச் சொல்லி விட வேண்டியதுதான்' என்று நினைப்பான். தனக்கு இத்தனை மனக் கிளர்ச்சி இல்லாமல் இந்த ராதை மரித்துப் போகக் கூடாதா? எந்த நிமிஷம் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் நேரலாம் என்று வைத்தியர் சொன்னாரே அந்த ஏதோ ஒன்று இந்த நிமிஷமே நேர்ந்து விடக்கூடாதா என்றுகூட அரக்கத்தனமாக எண்ணுவான். எண்ண அலைகளில் மொத்துண்டு, தூக்கம் கொள்ளாமல் இரவெல்லாம் வெளி மாடியில் சுற்றுவான். மண்டையைப் பிடித்துக்கொள்வான். இதயத்தை அழுத்திக் கொள்வான். மறு நாள் காலை எழுந்திருந்து எல்லோரிடமும் சகஜமாக இருப்பதற்காக ஏதேதோ மாத்திரைகளை விழுங்கி வந்தான். அந்த மாத்திரைகள் உடலுக்கு எத்தனை ஊறு விளைவிக்கும் என்று அறிந்திருந்தே விழுங்கினான். கடைசியாக 'இது எப்படியும் ஒரு நாடகமே தான். போலித்தனத்தை முடித்துத்தானே ஆகவேண்டும்? இந்தப் பொய்யை அவிழ்ப்பதில் ஒன்றும் தவறே இல்லை. ராதைக்கும் தனக்கும் ஒரு தொடர்பும் கிடையாது என்பதைச் சொல்லி அவளிடமிருந்து விடை பெற வேண்டியதுதான்' என்று இன்றுதான் ஒருவாறு முடிவு செய்து கொண்டு புறப்பட்டான் ஹரி. ஸ்டுவர்ட்டின் வீட்டில் அவசர அவசரமாகப் பாடத்தை முடித்துக் கொண்டு நாடக அரங்கத்தில் திரையை அவிழ்த்து விடுவதற்குத்தான் தேனூர் சென்று கொண்டிருந்தான்.


ஆனால் ராதையைக் கண்ணுக்கு நேராகக் கண்டபின் உண்மையை உடைப்பது ஹரிக்கு அவ்வளவு எளிதாக இல்லை. அவனுடைய பரிதாபமான வாழ்வு அவ்வளவும் அவன் மனதில் அடர்ந்து இறுகி உறைந்தது. தன் மனதை இரும்பாக்கிக் கொள்வதற்கு அவனுக்கு அவகாசம் வேண்டியிருந்தது. வழக்கம் போலவே ஏதேதோ பேச முயன்றும் அளவுக்கு மீறிக் குழறினான், உளறினான், பதறினான். அதை விட அதிசயம் ராதையும் அன்று அவனைப் போலவே — அல்லது அவனையும்விட—அதிகமாகப் பதற்றமடைந்து காணப்பட்டதுதான். ஒருவாறு அவன் சமாளித்துக்கொண்டான். ''ஒரு விஷயம் அம்மா'' என்று சொல்ல வாயைத் திறந்தான். அதே சமயத்தில், ராதையும், ''தம்பீ, உனக்கு... இல்லை.... உங்களுக்கு ஒரு சமாசாரம் சொல்ல வேண்டுமே'' என்று திக்கினாள்.

அவள் தன்னை 'உங்களுக்கு' என்று பன்மையில் கூறியதும் ஹரி அப்படியே துணுக்குற்றுப் போய் விட்டான். ''என்ன அம்மா, என்ன சொல்கிறீர்கள்?'' என்ற போது அவனையும் அறியாமலே நாவு திகைத்து நின்றது.

''தம்பீ, என்னை அம்மா என்று கூப்பிடாதீர்கள்! நான் உங்கள் அம்மா இல்லை!'' என்ற ராதையின் குரலில் துயரச் சுமை ஏறிக் கனத்தது. ஹரியின் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால்வரை ஆச்சரியமும், அவமானமும் விறுவிறுவெனப் பாய்ந்தன. தலை குனிந்தான்.

''தம்பீ, நான் உங்களை ஏமாற்றி விட்டேன்; ஆனால் நல்லெண்ணத்தினால்தான் ஏமாற்றினேன்'' என்று அவள் பச்சாத்தாபம் ததும்பக் கூறிய போது ஹரி அடைந்த வியப்புக்கு எல்லையே இல்லை. இதென்ன கூத்து?

''தம்பீ, உண்மையில் நான் ராதை இல்லை. ராதையுடனேயே இந்த வீட்டில் குடியிருந்தவள் நான். அவளும் நானும் விண்டால் விள்ளமாட்டாமல் நெருங்கிப் பழகியவர்கள். அவளுடைய வாழ்க்கை இரகசியம் முழுவதும் எனக்குத் தெரியும். அந்த இரகசியத்தைத் துளி அளவு தெரிந்துகொண்டு நீங்கள் இரகசியமாக அவளுக்குக் கடிதம் எழுதியிருந்ததையும் எனக்கு அவள் சொல்லி யிருக்கிறாள். ஆகா, உங்கள் கடிதத்தைப் பார்த்துத்தான் அவள் எப்படி மகிழ்ந்தாள்? வாழ்நாள் முழுவதும் அடிபட்டு வெந்து போன அவள் நீங்கள் ஒரு வாரத்தில் வரப் போவதாக எழுதியிருந்ததைப் படித்து எவ்வளவு சந்தோஷப்பட்டாள் தெரியுமா? ஆனால் அவள் சந்தோஷப்படுவது ஆண்டவனுக்கே பிடிக்கவில்லை. திடீரென்று கீழே விழுந்து அடிபட்ட ராதை ஏன் தன்னிலில் போய் விட்டாள். அந்த ஜன்னியிலும் அவள் 'என் பிள்ளை என்னைப் பார்க்கவேண்டுமென்று ஏங்குகிறானே! அந்த ஏக்கத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக இங்கே வரப் போகிறானே! அப்படி அவன் வந்து, நான் அதற்குள் செத்துப் போயிருந்தால் அவன் எப்படி மனம் உடைந்து போவான்?' என்று தான் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தாள். அப்படி அவள் மகன் மனசு முறிந்து போகாமல் பார்த்துக் கொள்வதாக நான் வாக்குக் கொடுத்தேன். அவளும் ஒருவாறு இந்தப் பாழும் பூமியை விட்டுப் போய்ச் சேர்ந்தாள். அந்த வாக்கைக் காப்பாற்றத்தான் தம்பீ, நானே ராதையாக உங்களிடம் இத்தனை நாட்களாக வேஷம் போட்டேன்.



குன்றுகளுக்கு மேலேயும்

அதிக தொலைவிலும் . . .

பருவ மழைக் காற்றின்னிமை அடங்கியவுடன் நீல வானமும் இன்பமாக இழைந்தடிக்கும் காற்றும் உங்களை, தொலைவிலுள்ள அமைதியான ஓய்வு நாள் வாசஸ்தானங்களுக்கு வாவென்று அழைக்கும். வெகு தொலைவிலுள்ள பனிச்சிகரங்கள் கொண்ட குன்றுகளின் சரிவுடன் ஒன்று சேருகின்ற மென்னீலம் கலந்த செம்மையான பள்ளத் தாக்குகள் வரை விரிந்துபரந்து கிடக்கும் பசுமை படர் நிலங்களைப்பற்றி நீங்கள் கனவு காண்பீர்கள் ஓய்வு நாள் நெருக்கமான கூட்டத்திலே கஷ்டப்படத் தேவையில்லை. கண்டிப்பான கால அட்டவணைகளுக்கும் கட்டுப்பட வேண்டியதில்லை. உங்கள் அம்பாஸடரில் செல்லுங்கள். சொந்தத்திலே சுற்றுப் பிரயாணத் திட்டமும் வகுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஏற்ற தங்குமிடங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். வழியிலே சாவதானமாக பற்பல காட்சிகளைப் பார்த்து அனுபவித்தவாறு உங்களுக்கு விருப்பமான நேரத்தில் அங்கு போய்ச் சேருங்கள்.

உங்கள் குடும்பம் சிறுவர்களுடனோ அல்லது பெரியவர்களுடனோ 4, 5 அல்லது 6 பேர்களைக் கொண்டிருந்தாலும் அத்தனை பேர்கள் அமர்வதற்கும், கால்களை நீட்டுவதற்கும், இடுப்பு இடிக்காமலிருக்கவும், கூரையில் தலை தட்டாதிருப்பதற்கும், முழங்கைகளை வைத்துக் கொள்ளவும் தாராளமான இட வசதி அம்பாஸடரில் இருக்கிறது. தவிர, 16 கன அடி பரப்புள்ள பின் புற பெட்டியில் குடும்பத்தின் மூட்டை முடிச்சுகளையும் வைத்துக்கொள்ள வசதியுண்டு.

சுருங்கச் சொன்னால் பல இடங்களுக்குப் போகவும் பல பணிகள் ஆற்றவும் அம்பாஸடர் மிக ஏற்ற வாகனமாகும்!



ஹிந்துஸ்தான் **அம்பாஸடர்**

ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிட். கலகத்தா-1

கீழ்க்கண்ட இடங்களில் டீலர்கள் உள்ளனர்

ஆக்ரா அம்பாலா கண்டோன்மெண்ட், ஆஜ்மீர், அஹமதாபாத், அஹமத்நகர் அமிர்தசரஸ் அலகாபாத், பரோடா, பெங்களூர், பீலாய், பெர்ஹாம்பூர், பம்பாய், போபால் கல்கத்தா கட்டாக் கோயமுத்தூர், கொழும்பு, திப்ருகார் தும்கா, டேரா டூன் தன்சர், தன்பாத், குவாலியர், கோவா, கோரக்பூர், கௌஹாத்தி இம்பால் இந்தூர், ஜெய்ப்பூர், ஜபல்பூர், ஜோர்ஹாட், ஜல்கான், ஜோத்பூர், ஜம்ஷெட்பூர், ஜலந்தர் ஜம்மு, கான்பூர், கோல்ஹாபூர், கர்நூல், காத்மண்டு, கும்பகோணம், லக்னோ சென்னை மதுரை, மங்களூர், மீரத், நாகபூர், புது டில்லி, நேபாளம், பாட்டியாலா பாட்னா, பூனா, பாண்டிச்சேரி, பாளையங்கோட்டை, ராஜ்கோட், ராஞ்சி, சம்பல்பூர் சிலிகுரி, ஷில்லாங், செகந்திராபாத், சில்சார், ஸ்ரீநகர், சாந்தா தானா, தேஜ்பூர், திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம், வாரணாசி கண்டோன்மெண்ட், விஜயவாடா, விஜயநகரம்

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்

எமது மனமார்ந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

•

KALINGA TUBES LIMITED

33, CHITTARANJAN AVENUE

CALCUTTA - 12

•

MANUFACTURERS OF

STEEL TUBES FOR WATER,
GAS & STEAM DISTRIBUTION

STEPDRAWN STEEL TUBULAR POLES FOR
POWER TRANSMISSION & STREET LIGHTING

''தம்பீ, எனக்கென்றே ஒரு சொந்தப் பிள்ளை இருக்கிறான். வெளியூரில் வேலையாக உள்ள அவன் எனக்கு உடம்பு சரியில்லை என்று தெரிந்து இன்றைக்குத்தான் இங்கு வந்திருக்கிறான். எங்கேயோ வெளியே போனான். அவன் திரும்பும் நேரம்கூட ஆகி விட்டது. அதற்குள் நீங்கள்......'' என்று கூறிப் பேசமாட்டாமல் தவித்தாள் அந்தப் பெண்மணி.

அவசியமில்லாமல் யாரோ ஒருத்திக்காகவா இத்தனை நாள் இத்தனை விதமாக அவதிப்பட்டிருக்கிறான் ஹரி? வீட்டுக்குத் தெரியாமல் இங்கு எவ்வளவு முறை அஞ்சி அஞ்சி வந்து போனான்? பொய்வேஷம் போட்டான்? கடந்த சில நாட்களாக அவன் இராத் தூக்கமில்லாமல் அநுபவித்த நரக வேதனை! என்றாலும் ஹரியால் அவளைக் குறைகூற முடியவில்லை. அவன் இத்தனை நாளாகச் செய்து வந்த காரியத்தைத்தானே அவளும் செய்திருக்கிறாள்? சிவாவுக்காக அவனுடைய தோழன் சிவாவாக நடிக்கலாமெனில், ராதைக்காக ஏன் அவன் தோழி அதேபோல் நடிக்கக்கூடாது? அப்படி நடிப்பதற்கு எவ்வளவு நெஞ்சுத் திண்மையும் நட்புப்பான்மையும் வேண்டும் என்பது ஹரியை விட யாருக்கு நன்றாகத் தெரியும்?

அவளுடைய காலில் விழுந்து எழுந்த ஹரி கண் ஓரத்தில் குறுகுறுத்த முத்துக்களைச் சுண்டி விட்டுக் கொண்டு கிளம்பினான்.

ஆகா, கடவுள் தன்னிடம் எவ்வளவு கருணையாக இருந்திருக்கிறார்? தனக்கு ஒரு விதமான மனச்சாட்சி உரசலுமில்லாமல் எவ்வளவு கச்சிதமாகப் பிரச்னையைத் தீர்த்து வைத்து விட்டார்! பல நாள் உள்ளக் கொதிப்புக்குப் பின் நிம்மதி கண்ட ஹரி இன்று மெய்யாகவே வீணுவிடம் விளையாடிப் பொழுதைக் கழிப்பதற்காகக் காரை விரைவாக வீட்டுக்குச் செலுத்தினான்.

அப்புறம் பத்து நாட்களுக்குக் குழந்தை மத்தாப்புக் கொளுத்தி மகிழ்வது போல வீணுவின் லளிதமான உணர்ச்சிச் சுடர்களைத் தட்டிவிட்டு மகிழ்ந்தான் ஹரி. பலப் பல வர்ணங்களில் இருந்தன அந்தப் பொறிகள். சோப்பு நுரையை ஊதி ஊதிப் பல வண்ணக் குமிழிகளைப் பறக்கவிடும் பாலனாக வீணுவின் எண்ணக் குமிழிகளைப் பறக்கவிட்டுக் களித்தான் ஹரி. வீணு மாற்றி மாற்றிச் சிரிப்பாள். சிணுங்குவாள்; கணங்குவாள்; பிணங்குவாள்; உடனேயே அவனோடு இணங்கி மீண்டும் சிரிப்பாள். சிரிக்கும் போதே விம்முவாள். அவன் தன்னை விட்டு விட்டு அமெரிக்கா செல்கிறானே என்று விசிப்பாள். அத்தனையுமே பொறி மாதிரி உடனுக்குடன் மறைந்து விடுமே அன்றி அவற்றில் உறுதியிருக்காது.

விமான நிலையத்தில் 'டாடா' காட்டிக் கொண்டே அந்தப் பச்சைக் குழந்தையிடமிருந்து பிரிந்து பறந்தான் ஹரி. வீணுவுக்குத் தெரியாமல் தன் அந்தரங்கங்களை மறைத்தது தவறுதானோ என்று அவன் சில சமயங்களில் எண்ணமிட்டதுண்டு. ஆனால் இன்று மிகவும் இளசாக நிற்கும் வீணுவைப் பார்க்கும்போது தான் செய்தது சரியே என ஹரிக்கு நிச்சய முண்டாயிற்று. மொழுகுப் பாண்டத்தில் யாரேனும் அனலை வாரிவைப்பார்களோ? வீணுவால் தாங்கமுடியுமா அந்த மர்மங்களை? 'அதோ அவள் கையிலிருந்து பட படக்கும் கைக்குட்டையைவிட அதிகமாக, சின்னஞ்சிறு உணர்வுகளிலும் படபடக்கும் பெண்ணல்லவா அவள் 'என்ன உள்ளீடற்ற பெண்!'



அந்த உள்ளீடற்ற பெண் விமான நிலையத்திலிருந்து வெளியேறி, தான் மட்டும் ஒரு காரில் ஏறிக் கொண்டாள்! இதென்ன விந்தை? அவளுடைய கார் ஏன் தேனாரை நோக்கிச் செல்கிறது? ராதையாக இருந்த அந்த மூதாட்டியின் வீட்டு வாசலிலேயே அல்லவா அது நிற்கிறது?

''வா, கண்ணா! சிவா ஊருக்குப் புறப்பட்டு விட்டதா?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள் கிழவி வீணுவிடம்.

''ஓ, போயிட்டாரே! உங்களுக்கு உடம்பு எப்படி அம்மா இருக்கிறது?'' என்று அன்பாகக் கேட்டாள் வீணு.

''அப்படியேதான் இருக்கிறது கண்ணா!'' என்றாள் கிழவி.

''மனசு?''

''மனசு இப்போதுதான் அமைதியாக, ஆனந்தமாக, இருக்கிறது.''

''உண்மையாகச் சொல்லுங்கள் அம்மா, என் மேல் உங்களுக்குக் கோபமில்லையே!''

''சீ, அசடு. எதற்குக் கோபம்? நீ சொல்லா விட்டால் என் பிள்ளையின் எதிர்கால மேன்மைக்கே அல்லவா நான் குறுக்கே நின்றிருப்பேன்? முன்பு சிங்காரத்திடம் அவனைத் தியாகம் செய்தது பொய்யாக அல்லவா ஆகியிருக்கும் ?... அசட்டுப் பிள்ளை! நான் சாகக் கிடக்கிறேன் என்பதால் அவன் அமெரிக்கா போக அநுமதிக்க மாட்டேன் என்றல்லவா அவன் எண்ணி விட்டான்?'' என்றாள் ராதை. ஆம், அவள் ராதையேதான்.

''அவர் பட்ட அவஸ்தை சொல்லி முடியாதம்மா. ராத்திரி வேளைகளில் நான் தூங்கி விட்டதாக நினைத்துக் கொண்டு, அதன்பின் தன் உணர்ச்சிகளுடன் தாமே அவர் மல்லுக் கொடுத்ததை என்னால் தாளவே முடியவில்லை. அதைப் பார்த்துத்தான் நான் உங்களிடம் அவர் உங்கள் பிள்ளையே இல்லையென்றும், ராதையின் கடிதத்தைப் பார்த்து விட்டு நீங்களே அவளாக நடிப்பதாகவும் பொய் சொல்ல வைத்தேன். நீண்ட நாள் கழித்து நீங்கள் பெற்ற தாயுரிமையை இழக்க வைத்தேன்.''

விஜயாவின் குரல் கண்ணீரில் கரைந்தது. ''அவர் உங்களுக்காக அமெரிக்கா போகாதிருந்து அதனால் வேலை உயர்வை இழந்திருந்தாலும் கூட நான் வருந்தியிருக்க மாட்டேன். ஆனால் இந்த உணர்ச்சிக் கிளர்ச்சியில் அவருக்குப் புத்தியே பேதலித்துவிடுமோ என்றுதான் பயந்தேன். உங்கள் விஷயத்தை எனக்குச் சொல்லக் கூடாது என்று அவர் மூடி மறைத்ததால், அது எனக்குத் தெரியும் என்று காட்டிக் கொண்டு அவருக்கு ஆறுதல் கூறவும் முடியவில்லை. அவர் என் மன உறுதியில் அவநம்பிக்கை கொண்டிருந்தார்: ஆனால் அந்த அவநம்பிக்கையை நான் அறிந்து விட்டேன் என்று அறிந்தால் பொருந்த மனச் சங்கடம் அடைந்திருப்பார். இதற்கெல்லாம் இடம் தராமல்

ஏற்றமழுத்திடும் கால்களடி

லால்குடி கிருஷ்ணமூர்த்தி

ஏற்ற மழுத்திடும் கால்களடி எங்கள்
இன்னல் துடைத்திடும் பாதமடி
நாற்றைச் செருகிடும் கைகளடி இந்த
நானிலம் காக்கும் கரங்களடி!

ஏரைச் சுமந்திடும் தோள்களடி பஞ்சப்
போரை யெதிர்க்கும் புயங்களடி
சீரைப் பெருக்கிடும் நல்லுழவருடல்
தெய்வத் திருமேனி யாகுமடி!

தங்க உழவர்தம் புன்னகையே தமிழ்த்
தாயின் தனிப்பெரும் பண்டிகையாய்ப்
பொங்கலெனப் புவி போற்றுதடி அவர்
பொற் றொழில் வாழ்த்தி வணங்குதடி!

வாட்டும் குளிரிலும் வெயிலிலும் மேனி
வாடிய போதிலும் தோள் கொடுத்து
ஓட்டைச் சாலாலும் நீரிறைத்துப் பயிர்
ஓங்கத் துணை செய்யும் ஆவினங்கள்

அங்கம் சிலிர்த்தெங்கள் பொங்கலென்றே யெங்கும்
'அம்மா!' வெனக் குரல் பாய்ச்சுதடி
தொங்கும் சலங்கை கிணுகிணுக்க இனித்
தொல்லைகள் இல்லை யென்றார்க்குதடி

பொங்கிய பார்மகள் பெற்றவள் போல் இங்கு
பூவோடு காயுமாய்க் காத்து நிற்க
செங்கரும்பும், வாழைத் தெங்கனிகள் சூழச்
செந்நெற் கதிரேந்தித் தைமகளும்

வந்தனள் இங்கெழிற் பொங்கலென்றே புவி
வாரி வழங்கிய செல்வமொடு
தந்தனள் வாழ்வு இத்தாரணிக்கே இன்பம்
தந்திடும் பொங்கலோ பொங்கலடி!!



எப்படித் தீர்வு காண்பது என்பதில் நான் எவ்வளவு குழம்பி விருப்பேன் தெரியுமா?

''எனக்காக அவர் வெளிப்படச் சிரித்துப் பேசிக் கொண்டே உள்ளூறக் குமைந்தது போல நானும் அவருக்காக விளையாடினாலும் உள்ளூற விண்டு விரிந்து கொண்டிருந்தேன். அவருக்கு முன்பே எனக்குப் பித்தப் பிரமை ஏற்பட்டு விடுமோ என்று கூட அஞ்சினேன். கடைசியில் ஒரு தாயின் தியாகம்தான் இதைத் தீர்த்து வைக்கும் என்று எண்ணி உங்களைப் பொய் சொல்ல வைத்தேன்.'' என்று கூறினான் வீணா— உள்ளீடற்றவள் என்று ஹரி எண்ணிய வீணா.

''நீ செய்ததில் ஒரு தப்பும் இல்லை, மகளே! அது சரி, உனக்கு என்னைப் பற்றி எப்படித் தெரிந்தது?'' என்றாள் ராதை.

வீணா தயங்கினாள். இத்தனை பொய்களுக்கும் போலி நாடகங்களுக்கும் பின் இன்னும் ஒரு பொய்யா?

சிவா சாவதற்கு முதல் நாள் மாலை வீணா அவனைக் காணத் தனியே சென்றிருந்த போதுதான் அவன் தன் பிறப்பு இரகசியம் பற்றித் தான் ஊகித்ததையெல்லாம் அவளிடம் கூறினான். பொன்னம்பலம் சிங்காரத்துக்கு எழுதிய கடிதம் பற்றிச் சொன்னான். ''ஹரி இதை யெல்லாம் உன்னிடம் கூற மாட்டான் என்று நான் நினைத்தது உண்மையாயிற்று. ஆனால் அவன் என்னைப் போல நடிப்பதால் ஏதேனும் இக்கட்டு நேருமானால் அதைத் தவிர்க்க உண்மை அறிந்தவர்கள் இருக்க வேண்டும் என்பதால்தான் இதை யெல்லாம் உன்னிடம் சொல்கிறேன்'' என்றான் சிவா. சாகுமுன் அவனுக்கு எவ்வளவு தீர்க்க திருஷ்டி உண்டாகி யிருக்கிறது! எதிர்காலத்தைத் துளைத்துப் பார்த்ததோடு, வீணாவின் அந்தராத்மாவையும் ஊடுருவிப் பார்த்து அந்த விளையாட்டுப் பெண் எவ்வளவு அழுத்தமானவள் என்று அறிந்து அல்லவா அவளிடம் மர்மத்தை ஒப்பித்திருக்கிறான்! பூம்பந்து ஆடியவளிடம் கிரிக்கெட் பந்தைப் போட்டிருக்கிறான்!

'சிவா மரணமடையுமுன் ராதையைப் பற்றித் தன்னிடம் கூறியதை அவன் இன்னமும் உயிருடன் இருப்பதாக எண்ணும் ராதையிடம் எப்படிக் கூறுவது?'

எனவே சட்டென்று, ''உங்கள் பிள்ளைக்கு எப்படி உங்களைப் பற்றித் தெரிந்ததாம்?'' என்று கேட்டாள் வீணா.

''என் அண்ணா பொன்னம்பலம் சிங்காரத்துக்கு எழுதி யிருந்த ஏதோ ஒரு கடிதம் அவனுக்குக் கிடைத்ததாம். அதிலிருந்து தெரிந்ததாம்'' என்றாள் ராதை.

''அதே கடிதத்தைத்தான் நானும் அவரறியாமல் படித்தேன்'' என்று ஒரு போடு போட்டாள் வீணா. ஒரு பெரிய பொய் வலையின் கடைசி முடிச்சு விழுந்தது.

வீணாவை உள்ளீடற்ற பெண் என்று நினைத்தான் ஹரி. வேய்ங்குழல் உள்ளீடற்றதுதான். ஆனால் அது ஆத்மாவைப் பொங்க வைக்கும் எவ்வளவு கனமான இசையை வெளிப்படுத்துகிறது! வீணா என்று வேணுவில் மெல்லிசை மட்டுமே இசைத்து வந்தான் ஹரி. சிவாவும், ராதையுமோ அதில் கன ராகங்களையும்எழுப்பி விட்டார்கள்; வீணாவை வீணையாக்கி, கன்னடி விட்ட பல விநாடிகளுக்குப் பின்னும் ஸ்வரத்தின் சாயல்களை இழைக்கும் மீட்டுக்களை அதில் தட்டி விட்டார்கள்.

அந்தக்கனமான உணர்வுகள் உள்ளத்தை அழுத்தி வருத்த வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள் வீணா. அவளுடைய உள்ளம் வருந்தியதற்குக் காரணம் இருந்தது. ஆம், கடந்த காலம் என்பது எத்தனை பொய்மையையும், போலித்தனத்தையும், நடிப்பையும் வேய்ந்த கதையாகி விட்டது என்றே அவள் வேதனைப் பட்டாள்.

முதலில் சிங்காரம் நாடகம் நடித்தார், சிவா தன் பிள்ளை என்பதாக. அதன்பின் அவர் தன் அப்பா இல்லை என்றறிந்தான் சிவா. ஆனால் பிறகும் அவர் பிள்ளையாகவே நடித்தான். அப்புறம் அந்தச் சிவாவின் வாழ்க்கையே நாடகமாகத் தேய்ந்து மறைந்தது. ஹரி சிவாவாக நடிக்கத் தொடங்கினான். அதனால் விபரீதம் ஏற்படாமல் தடுக்கவே இந்தப் பொய் வலையில் மேலும் பின்னலிடும் பொறுப்பை ஏற்றாள் வீணா. சிவா உயிருடன் இல்லை என்பதை அறிந்து ராதை மனம் உடையக் கூடாது; ஹரியும் எப்படியாவது இந்தப் பொய்யிலிருந்து விடுபடவேண்டும் என்று யோசித்தாள்வீணா. எனவேதான் ராதையிடம் ஹரி சிவா அல்ல என்று கூறாமலே அவளைப் பொய் சொல்ல வைத்தாள். முழுப் பொய் தானா அது? அந்தப் பொய்யிலுமே ஒரு மெய்யும் கலந்திருந்ததே: ''நீ என்மகனல்ல'' என்று ராதை ஹரியிடம் கூறியது உண்மை அல்லவா?

'எது பொய், எது உண்மை' என்று புரியாமல் குழம்பினாள் வீணா.

தேனாற்றங் கரையில் கார் பறந்து கொண்டிருந்தது. ஆற்றில் அலைகள் எழும்பி எழும்பி மடிந்து கொண்டிருந்தன. ஆம், அந்த அலைகள் எல்லாம் பொய். என்றாலும் அவை பிறந்து மடியும் நிரந்தர உண்மையாக அந்த ஆறு மட்டும் இருந்தது. பொய் அலைகள் கோடானு கோடியாக இருந்தாலும் மெய்யான ஆறு மட்டும் ஒன்றாக ஓடிக் கொண்டிருந்தது. வீணா தெளிவு பெற்றாள்.

உண்மை ஒன்றுதான்: அதுவே பரம் பொருள்; அதில் தோன்றும் இந்த உலகமெல்லாம் பொய். பொய்யென்றாலும் அவை அந்த மெய்யில் தோன்றி மெய்யாகவே கரைபவைதான் என்ற வேதாந்த சத்தியத்தை வேதாந்த ரீதியிலேயே உணர்ந்தான் சிவா. நடைமுறை 'மெய்' நிரந்தர உண்மையில்லை. எல்லாவற்றுக்கும்உயிரான ஒரு பொருள்தான் நிரந்தர உண்மை என்றறிந்து அந்த உயிரை உபாசித்தான் சிவா. இந்த வேதாந்த சத்தியத்தை வேறு விதத்தில் உணர்ந்தாள் வீணா. 'தங்களுடைய பொய் அலைகள் எல்லாமும் ஓர் உண்மையில் பிறந்தவைதான். அவை சுயநலத்துக்காகக் கூறப்படும் துச்சமான பொய் வகையைச் சேர்ந்தவை அல்ல. உண்மை என்பதிலேயே ஒடுங்கும் உத்தமமான அலைகள் அந்தப் பொய்கள்' என்று தெளிந்தாள். அந்த உண்மைக்குப் பேர் அன்பு என்றும் புரிந்து கொண்டாள்.

உண்மை ஒன்றுதான் — வேதாந்தம் சொல்வதுபோல் அதைப் பரம் பொருள் என்று சொன்னால் என்ன? அல்லது வீணா கண்டது போல் அன்பு என்றால் என்ன? அன்பும் பரம் பொருளும் வேறு வேறு அல்லவே!

தளவாடங்களுக்காக தங்கம் தாருங்கள்

நன்கொடைகளை எங்கு செலுத்துவது

தேசிய பாதுகாப்பு நிதிக்கு உங்கள் நன்கொடைகளை நகைகளாகவோ, தங்கக்கட்டிகளாகவோ, ரொக்கமாகவோ பின்கண்டவிடங்களில் செலுத்தலாம்:

- பம்பாய், சென்னை, பெங்களூர், கல்கத்தா, புதுடில்லி, நாகபுரி, கான்பூர் ஆகியவிடங்களிலுள்ள ரிசர்வ்பாங்க் ஆப் இந்தியாவின் காரியாலயங்கள்.
- ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எல்லா காரியாலயங்கள், அதன் துணைகளுள்—அதாவது ஸ்டேட் பாங்க்ஸ் ஆப் ஹைதராபாத், பிகானிர், இந்தூர், ஜெய்பூர், மைசூர், திருவாங்கூர், சௌராஷ்டிரா, பாட்டியாலா ஆகியவைகள்.

நன்கொடைகளை ரொக்கமாகவோ, செக்காகவோ பின்கண்ட இடங்களில் செலுத்தலாம்.

- எல்லா ராஜ்ய கூட்டுறவு பாங்குகள்.
- சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் பாங்க், பாங்க் ஆப் இந்தியா, பாங்க் ஆப் பரோடா, யூனைடெட் பாங்க் ஆப் இந்தியா, நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்க், யூனைடெட் கமர்ஷியல் பாங்க், இந்தியன் பாங்க், இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க், தேக்கராண் நாராஜி பாங்கிங் கம்பெனி, மற்றும் லாய்டு-டாக்ஸ் பாங்க். ஆகியவைகளின் எந்தக் கிளையிலும்.


பாங்குகளில் ரொக்கமாகவோ, செக்குகளாகவோ செலுத்தப்படும் எல்லா நன்கொடைகளும் சமமதிப்பில் ஏற்றுக் கொள்ளப்படும். பாங்க் கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை.

ஒரு ரூபாய் மற்றும் அதற்கு மேற்பட்ட நன்கொடைகளை எந்த தபால் நிலையத்திலிருந்தும் மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கலாம்.

மணியார்டர் கமிஷன் ஒன்றும் செலுத்தவேண்டியதில்லை.

மணியார்டர்களையும் செக்குகளையும் செக்ரடரி, நேஷனல் டிபென்ஸ் பண்ட், பிரதமமந்திரியின் காரியாலயம், புதுடில்லி என்ற விலாசத்துக்கும் அனுப்பிவைக்கலாம்.

தோள் கொடுப்போம் நம் ஜவான்களுக்கு





'பூ'வும் 'கூடை'யும்




குண்டுமணி

தேர்தலுக்கு இரண்டு பேர் நின்றார்கள். முதல் பிரமுகருக்கு நிச்சயம் வெற்றி கிட்டிவிடும், எங்கும் அவரைப்பற்றித்தான் பேச்சு என்று கூறி, வெற்றி விழாக் கொண்டாட ஊர்வலத்துக்கும், பூ மாலை மரியாதைகளுக்கும் ஏற்பாடு செய்து விட்டார்கள். இந்தச் சமயத்தில் எதிர்பாராத விதமாக முதல் பிரமுகர் தோல்வியுற்றார் என்ற செய்தி வந்தால் எப்படியிருக்கும்? தோல்வியுற்றதாகவே கருதிய இரண்டாம் பிரமுகர் வெற்றி பெற்றால் எப்படியிருந்திருக்கும்? தோல்வியுற்றவரின் சோர்வுக்கும், வெற்றி பெற்றவரின் மகிழ்ச்சிக்கும் கேட்பானேன்?

இந்த மாதிரி நிலைமையொன்று சென்னை சட்டக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சென்னை ராஜ்யப் பூப் பந்தாட்டப் போட்டியில் ஏற்பட்டது. பூப்பந்தாட்ட வீரர்கள் கரீம் கோஷ்டியினர் முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்று, இரண்டாம் ஆட்டத்தில் வெற்றியின் தலை வாசற்படியை நெருங்கி விட்டனர். இன்னும் ஓர் எண்ணிக்கை எடுத்தால் அவர் கோஷ்டிக்கு வெற்றி கிடைத்திருக்கும். எல்லோருமே அவர்தான் வெற்றி பெறுவார் என்ற முடிவுக்கு வந்து விட்டனர். இந்தச் சமயத்தில் கரீம் கோஷ்டியினரில் ஐந்து பேருக்கு 'சர்வீஸ்' இருந்தும் ஆட்டத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டதென்றால் அது அதிசயத்திலும் அதிசயம்தானே! முதலில் ஓர் ஆட்டக்காரர் சர்வீஸை 'அவுட்'டில் போட்டார்; அடுத்தவரும் அவுட்டிலே போட்டு விட்டார்! மூன்றாவது சர்வீசும் 'பாலும்'! பாக்கியிருந்த இரண்டு பேரையும் அந்த ஓர் எண்ணிக்கை எடுக்க விடாமல் ஆட்டத்தின் வெற்றியைத் தங்கள் பக்கம் திருப்பிக் கொண்ட அந்த எதிர்க் கோஷ்டியினர் திறமையை என்னென்பது? ஏ. எப். ஆர். ஸி. பூப்பந்தாட்டக் குழுவினரே கடைசியில் கரீம் கோஷ்டியினரைத் தோல்வியுறச் செய்து வெற்றி மாலையைச் சூடிக் கொண்டனர். இந்த வெற்றியின் திருப்பத்தைக் கண்டு அன்று ஆச்சரியப்படாதவர் இல்லை. ஏ. எப். ஆர். ஸி. குழுவின் காப்டன் ஜோசப்பும்' மற்ற ஆட்டக்காரர்களான கோபாலும், மணியும், ஜெயபாலும், ஷெரீபும் இவர் போட்டியில் வெள்ளிக் கோப்பையைப் பெற்றது பூப் பந்தாட்ட ரஸிகர்களுக்கு மறக்க முடியாத சம்பவமாகும்.

ஏ. எப். ஆர். ஸி. பூப்பந்தாட்டக் குழுவினர்



சென்னை ராஜ்ய இருவர் பூப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கணபதியும் ஷெரீபும், ஜெயபாலையும் கோபாலையும் வென்று வெள்ளிக் கோப்பையைப் பெற்றனர். இந்தப் பூப்பந்தாட்டப் போட்டிக்குத் தலைமை தாங்கப் பூப்பந்தாட்டச் சங்கத்தினர் மந்திரியையோ, நீதிபதியையோ அழைக்காமல் பிரபல டென்னிஸ் ஆட்டக்காரர் திரு ஆர். கிருஷ்ணனைத் தலைமை தாங்க வைத்து வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்திருந்தது மிகப் பொருத்தமாயிருந்தது.

டாக்டர் யூ. கிருஷ்ணராவ் அவர்கள் ஞாபகார்த்தமாகச் சென்னை எழும்பூர் ஸ்டேடியத்தில் கூடைப் பந்தாட்டப் போட்டி டிசம்பர் 27, 28, 29, 30 தேதிகளில் நடைபெற்றது. கூடைப் பந்தாட்ட ரஸிகர்கள் ஆர அமர இருந்து காணுவதற்காக ஆட்டத்தை மாலை ஆறு மணியிலிருந்து இரவு பத்து மணி வரை ஒளி விளக்கில் நடத்தினார்கள், ஐந்து 'ஒய் கிளப்' நிர்வாகத்தினர். ஆந்திரா, மைசூர், கேரள ஆண் பெண் ஆட்டக்காரர்களின் 'எக்ஸிபிஷன்' ஆட்டத்தையும் காணும் வாய்ப்பு; சென்னை ரஸிகர்களுக்குக் கிடைத்தது.

வழக்கம் போல் தென்னிந்திய ரயில்வே குழுவினரே இறுதி ஆட்டத்தில் இந்திய விமானப் படை கோஷ்டியினரை வென்று யூ. கிருஷ்ணராவ் ஞாபகார்த்தக் கோப்பையைப் பெற்றனர். இந்திய விமானப் படை கோஷ்டியில் நல்ல ஆட்டக்காரர்கள் இருக்கின்றனர். அவர்கள் பெயருக்கேற்றாற் போல் பறந்து பந்தைக் கூடையில் போட்டு எண்ணிக்கையைக் குவிக்க வேண்டாமோ? அந்தத் திறமை தென்னிந்திய ரயில்வே குழுவினரிடம் அபாரமாக அமைந்திருக்கிறது. ஆரம்பத்திலிருந்து முடிவு வரை ஆட்டத்தை விறுவிறுப் போடு ஆடும் சோடையில்லாத ஆட்டக்காரர்களைப் பெற்றிருப்பதால் அவர்களுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி தானே வந்தடைகிறது. டிசம்பரில் நடந்த 'பூ'ப் பந்தாட்டமும் 'கூடை'ப் பந்தாட்டமும் பூமாரி சொரிந்தாற் போல் சென்னை நகர விளையாட்டு ரஸிகர்களை மகிழ்வித்தன.

''அடடா... ஓடி வாருங்களேன்!....''

''என்னது?... ஓடி வரும்படி என்ன குடி முழுகிவிட்டது?'' வாசல் திண்ணையில் பேப்பர் படித்தவாறே பதிலளித்தார் கப்புரத்தினம்.

''குடிதான் முழுகும் போலிருக்கிறது. வேறென்ன, எல்லாம் உங்கள் அருமைப் பிள்ளைதான். வேறே யாருக்கு இந்த முரட்டுத் தனம் வரும்?....''

கப்புரத்தினம் பேப்பர் படிக்க உட்கார்ந்தாரானால் அவ்வளவுதான். இமயம் அதிர்ந்தால்கூட அவர் அதிர மாட்டார். அசைய மாட்டார்.

''எல்லாம் பழைய விஷயம்தானே... அப்படி என்னதான் செய்து விட்டானாம்?...''

''ஐயய்யோ... சீக்கிரம் வந்து பாருங்களேன்.... திண்ணையிலேயே பேசிக் கொண்டிருந்தால்....''

உள்ளேயிருந்து ஒலித்த குரலின் பதற்றமும் அவசரமும் கப்புரத்தினத்தைச் செய்தி உலகத்திலிருந்து இழுத்து வந்தன. ''பொழுது விடிந்து பொழுது போனால் இந்தப் பிள்ளையின் தொல்லைதான். எவன் மண்டையை உடைத்துவிட்டு வந்து நிற்கிறதோ?..'' என்று முணு முணுத்தவாறே எழுந்து, பேப்பரை மடித்தெறிந்து விட்டு உள்ளே போனார்.

போய்ப் பார்த்தால் – ''அடப் பாவி!...'' என்றது வாய் அவரை அறியாமலேயே.

கப்புரத்தினம் திரும்பிப் பார்த்தார். ஜனுவைக் காப்பாற்ற முடியாமலும் அருகில் நெருங்க முடியாமலும் மங்கை கையைப் பிசைந்தவாறே பாசத்தினால் தவித்து விழித்தாள். பெற்ற வயிறு பிசைகிறதே!...

'உம்: எப்படியோ பெற்று விட்டாளே இந்த அதிசயத் தடியனை!...சே!....'


சலிப்புடனும் கோபத்துடனும் கப்புரத்தினம் 'அவுட் ஹவுஸ்' கட்டுவதற்காக வாங்கி அடுக்கியிருந்த நீண்ட மரத் தூலங்களில் இரண்டை எடுத்து ஜனுவுக்கு இரு புறங்களிலுமாக நட்டுக் கூரைக்கு முட்டுக் கொடுத்தார்.

ஜனுவுக்கு விடுதலை கிடைத்தது.

''பார்த்தாயா, அம்மா! எனக்கு எவ்வளவு பலம்?...'' என்றான் ஜனு பெருமை பொங்க. திணத்த தோள்களை இரண்டு கைகளாலும் படபடவென்று அலைத்து கொண்டான்.

''போதுமடா பாணுகரா! உன் பலத்தினால் இந்த ஊரில் எனக்குள்ள மானம் மரியாதை யெல்லாமே பறி போய் விட்டன. ஊர்ச் சண்டையைச் சமாளிக்கவே ஒரு மூலபலம் வேண்டும் போலிருக்கிறது...கர்மம்.... கர்மம்....!'' என்று ஓங்கித் தலையில் அடித்துக்கொண்டார் கப்புரத்தினம்.

மதர்த்து விம்மி நிற்கும் மகனைக் கண்ட தாய்க்கு அந்தப் பேச்சு பொறுக்க வில்லை.



வேள்வி

கிருஷ்ணா



புறக்கடை முற்றத்தை அடுத்த சார்ப்பின் உத்தரக் கட்டையைத் தன் இரு கைகளாலும் தாங்கியவாறு நின்று கொண்டிருந்தான் ஜனு. உத்தரக் கட்டையின் நடுவில் விரிசல் கண்டு கீழ் நோக்கிச் சாய்ந்திருந்தது. ஓடுகளில் சில வரிசை புரண்டு கீழிறங்கியும் தொறுங்கியும் கிடந்தன. 'ஹெர்குலிஸ்' போல் இரு கைகளையும் மேல் நோக்கி அகலப் பரப்பிப் பாரத்தை முழுதுமாகத் தாங்கும் தூணாகி நின்றான் அவன். அவர் சிமந்த புத்திரன்தான் அவன். முழுப் பெயர் ஜனார்த்தனம்.


முறுக்கி விட்டாற் போன்ற புடைப்புடன் எழும்பி நின்ற தசைகள் தாம் எவ்வளவு மூரட்டு அழகைத் தருகின்றன அவனுக்கு? அவர் பெற்ற பிள்ளைதான் அந்தக் குட்டி பீமசேனன். பலத்தைத் தவிர மற்றொன்றையும் பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியாதவன்.

''என்ன திருக் கோலமடா இது?..'' என்று இரைந்தார் கப்புரத்தினம்.

''விசாரித்துக் கொண்டு நிற்கிறீர்களே! எத்தனை நேரம்தான் குழந்தை தாங்கிக் கொண்டிருப்பான்? அவன் கையை எடுத்தால் தூலக்கட்டை முறிந்து கூரையே சரிந்து விழுமே! அவனுக்குக் கையை வலிக்காதா? சீக்கிரமாய் ஏதாவது செய்யுங்களேன்.''

''குழந்தையை ஏன் இப்படிக் கரித்துக் கொட்டுகிறீர்கள்? அவதார புருஷர்கள் எல்லோரும்....''

''ஐயோ, ஐயோ, வாயை மூடடி! அவதாரமாம், புருஷனும், அஞ்ஞானத்தால் உளறுதே! முரட்டுத் தடியனைப் பெற்று விட்டுப் பெருமை வேறு? நேற்றைக்கு முன்சிப் வீட்டு மாமரத்திலே ஒரு காய்கூட இல்லை... இவன் கிளைகளைப் பிடித்து உலுக்கின வேகத்திலே எல்லாம் உதிர்ந்து போச்சு! இவனோடு சேர்ந்த பீமப் பட்டாளங்களுக்கு ஒரே குஷி. ஆளுக்கு ஒரு பிடி உப்பைக் கொண்டு வந்து கொட்டித்தாம். அத்தனை மாங்காயும் 'ஸ்வாஹா'! ஒன்றையாவது பிடிக்க முடிந்ததோ... எல்லாத் தடியன்களுக்கும் காலிலே 'ராக்கெட்' கட்டியிருக்கு! முன்சிப் என்னைத் திட்டுகிறார். கிராமத்தை விட்டுப் பையனை எங்காவது அனுப்பி விட வேண்டுமாம்.... இல்லையென்றால் நாமே வீடு வாசலை விற்று விட்டு எங்கேயாவது தொலைய வேண்டுமாம்! எல்லாம் உன் அவதார புருஷனால் வந்த வினையாக்கும்....''



''போப்பா, அவருக்கென்ன! சும்மாச் சொல்ல மாட்டாரா பின்னே! ஆறுமுகம் நேத்துக் காலையிலே கீழே விழுந்து கிடந்த ஒரு மாங்காயை எடுத்துக் கடிச்சதற்காக மரத்துலே கட்டி வைக்க உரிச்சாரே! அதற்காகத் தான் அப்படிச் செய்தோம். அவர் செய்தது மட்டும் நியாயமா?''

'' அசடு! பெரியவர்களை இப்படியா பேசுவது?'' என்றாள் மங்கை சலிப்புடன்.

''கேட்டுக்கோ! தர்மபுத்திரன் அப்படியே உன் வயிற்றிலே பிறந்திருக்கிறான்....''

ராஜு எப்பவுமே இப்படித்தான். அவன் மனத்துக்கு நியாயம் எதுவோ அதன்படி நடக்க அஞ்ச மாட்டான். அடி, பிடி, குத்து—அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும். அவனுடைய மனச்சாட்சிக் கோயிலில் குடிகொண்டிருந்த தெய்வமும் மிகவும் தர்மாவேசமுள்

தொழுதிடுவோம்

தென்றல்

நிலமடந்தை சிரிப்பலைகள்
நீந்திவரும் தென்றலிலே
கலகலக்கும் நெல்மணிகள்
காவிநகை காட்டுதடி

சலசலக்கும் வளைக்கரங்கள்
சாணம்பூசிக் கோலமிட
தளதளக்கும் பூசணிப் பூ
தங்கம்போலச் சிரிக்குதடி

கோமகள்போல் மாதங்களில்
குறுஞ்சிரிப்பைக் காட்டுகிற
தைமகளின் பூஞ்சிரிப்பில்
தானைழமணம் பூத்ததடி

பாமணக்கக் கவிஞர்குலம்
பாட்டிசைத்துப் பொங்கலிட்டார்
நாமணக்கக் கவிச்சுவையை
நல்மனதால் தொழுதிடுவோம்!

ளது. விநாடிப் பிரமாணம் தவறினாலும் போதும். சாய்த்து விடும்!

பீமப் பட்டாளங்களின் போட்டியில்லாத தலைவன் ஜனுதான். முழங் கையை மடித்தானானால் திண்டு போல் முண்டா கிளம்பும்.

''குத்துடா!''

எம்பி ஒரு குத்து விடுவான் பட்டு. திருப்பித் திருப்பி விட்டாலும் பட்டுவின் முட்டிதான் வலிக்குமே யொழிய முண்டா அழுந்தாது; குழையாது. பாறையில் வெட்டிய உடம்பு ஜனுவுக்கு.

''சரி, சாப்பிட வா....'' என்றாள் மங்கை.

ஜனு கிளம்பினான்.

''இருடா! எனக்குப் பதில் சொல்லி விட்டுப் போ. சோறு என்றால் ஓடுகிறாயே! விட்டு உத்தரம் உன்னை என்ன செய்தது? அதை ஏன் முறித்துத் தொலைத்தாய்? சொல்லடா!''

ஜனு தன் தந்தையை ஒரு சிலும்பலுடன் முறைத்துப் பார்த்தான்.

''நானா முறித்தேன்? போ, அப்பா! கூரை மேலே ஒரு குருவி வந்து உட்கார்ந்தது. மேலே ஒரு பருந்து வட்டமிட்டது. 'கப்' புன்னு மேலே ஏறிக் குருவியை அமுக்கிட்டேன் நான். பருந்து ஓடியே போச்சு. 'கீச், கீச்'னு அந்தக் குருவி எங்கிட்டே எவ்வளவு விசுவாசமாகப் பேசிற்று தெரியுமா? பாழாய்ப் போன உளுத்த உத்தரம் என் பாரம் தாளாமல் அந்தச்சமயம் பார்த்துக் 'கர்ர், புர்ர்'னுது. 'டபார்'னு மேலேயிருந்து ஒரு குதிகுதிச்சேன். ஓடியே வந்து உத்தரத்தைத் தாங்கிண்டேன். கிழே மூக்காயி அவல் குத்திக் கொண்டிருந்தாள். உத்தரம் சாய்ந்திருந்தால் நேரே அவ தலையிலேதான் விழுந்திருக்கும்!'' என்றான்.

கப்புரத்தினத்துக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. ''சரிடா; பெரிய பிசிச் சக்கரவர்த்தி இவன். குருவியைக் காப்பாத்திட்டான். போடா, போ!'' என்று அலுப்புடன் மொழிந்து விட்டு, வெளியே போனார் கப்புரத்தினம்.

சாலம் வீசிய தென்றலில்—வசந்தத்தில்—மலர்கள் மலர்ந்தன. உலகமே புதியதொரு கலையரங்கமாயிற்று; எங்கு நோக்கினும் வளர்ச்சியின் மலர்ச்சி! மலர்கள் பிஞ்சு வெடித்துக் காய்க்க ஆரம்பித்து விட்டன.

போன ஆண்டு கலியாணம் ஆன பாப்பாக் குட்டிக்குப் பிரசவ காலம் நெருங்கி விட்டது. சீதாராமன் போன மாசமே தகப்பனாகி விட்டான். சோணிப் பட்டுகூட இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்டான். ஜனுவின் பீம பட்டாளம் கலைந்து, ஒவ்வொருவரும் சம்சார ஒடுக்கத்தினுள் ஒடுங்கிவிட ஜனு மட்டும் அப்படியே நின்று கொண்டிருந்தான். ஜனுவின் தம்பி சுந்தரேசன் பி. ஏ. முடித்து விட்டு, விவசாய இலாகாவில் ஒரு பொறுப்புள்ள வேலையையும் சம்பாதித்துக் கொண்டு விட்டான். கலியாணத்துக்காகத் துடித்துக் கொண்டிருந்தான் அவன்.

அன்றுதான் சுந்தரேசனிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

''அப்பாவுக்கு நமஸ்காரம். அங்கு நீங்கள், அம்மா, அண்ணன் எல்லோரும் சௌக்கியம் என்று எண்ணுகிறேன். இங்கே என் இலாகாவின் டைரக்டர்களுள் ஒருவரான கனகசபை தம் பெண்ணை எனக்குக் கொடுப்பதற்காக ஜாதகம் கேட்டார். கொடுத்தேன். ஜாதகம் பொருத்தமாக இருப்பதாகவும் மேற்கொண்டு உங்களோடு பேச விரும்புவதாகவும் சொல்லியிருக்கிறார். பெண்ணைப் போய்ப் பார்த்தேன். எனக்குப் பிடித்திருக்கிறது. அவளும் என்னைப் பண்ணிக் கொள்ளச் சம்மதித்து விட்டாள். இனியாவது முன் போல் தடங்கல் சொல்லாமல் இந்தக் கலியாணத்தை முடித்து வைப்பீர்கள் என்று நம்புகிறேன். இதையும் தவற விட்டால் அப்புறம் நானாகவே பண்ணிக் கொள்ள வேண்டியதுதான். பிறகு என்னைக் குறை சொல்லுவதில் பயனில்லை. அண்ணனுக்குப் பின் எனக்கு என்றிருந்தால் இந்த ஜன்மத்தில் அது நடக்காது. உடன் பதில்.

சுந்தரேசன்.''

''சுந்து என்ன எழுதியிருக்கிறான்? ஏன் இப்படித் தயங்குகிறீர்கள்? கடுதாசியைப் படிக்கத்தான் சொல்லுங்களேன்....'' என்றாள் மங்கை படபடப்புடன்.

கப்புரத்தினம் அந்தக் கடுதாசியை உரக்கப் படித்தார்.

''கேட்டாயா, உன் பிள்ளை எழுதியிருப்பதை. இப்படியே விட்டு விட்டால் அடுத்த வருஷம் இதுதான் உங்கள் பேரன் என்று கொண்டு வந்து காட்டுவான்!''

''வாஸ்தவம்தானே! எதுவும் காலாகாலத்தில் செய்தால்தான் நல்லது...''

''செய்திருக்க வேண்டியதுதான். ஆனால்.''

''எனக்கும்தான் மனசாகவில்லை. ஜனுவுக்கு யார் பெண் கொடுப்பார்கள்? பெரிய படிப்பும் கிடையாது. பார்வைக்கும் முரடன்.

ஸ்ரீமத் ராமாயண பாராயணம்



நவக்கிரகங்களின் தசாபுக்திகளில் எந்த தசாபுக்தி தற்போது தங்களுக்கு நடைபெறுகிறது? அந்த தசாபுக்தியின் தோஷ நிவர்த்திக்குரிய தசாபுக்திகளும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் என்னும் லிப்கோ புத்தகம் (தமிழில்) ஸ்தோத்ரமாலையுடன் விலை ரூ. 2.

குழந்தைகள், ஸ்திரீகள், பெரியவர்கள் யாவரும் தங்கள் கோரிக்கைகளுக்கேற்ப ஸ்ரீமத் ராமாயண ஸர்க்கங்களைப் பாராயணம் செய்வதற்குரிய ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் என்னும் லிப்கோ புத்தகம் (தமிழில்) ஸ்தோத்ரமாலையுடன் விலை ரூ. 3.

ஷி புத்தகங்கள் சென்னை-17. லிப்கோ கம்பெனியாரிடமும், ஹிக்கின்பாதம்ஸ் ரெயில்வே புத்தக ஸ்டால்களிலும் மற்றும் ஏனைய புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

ஸ்ரீ வைஷ்ணவ நித்யாநுஷ்டான க்ரமம் ... ரூ. 1.50

நாடு வளம் பெற....



★ அனைவருக்கும்

LCT

பொங்கல் வாழ்த்துக்கள் ★

நவீன விவசாயக் கருவிகள். இயந்திரங்கள் தயாரிப்பவர்கள்

எல்ஸீடி இண்டஸ்ட்ரீஸ்

திருச்சி ரோடு, த. இ. 864, சிங்காநல்லூர், கோயமுத்தூர்-5

வாழ்வைப் புனிதமாக்குவது பொங்கல் விழா! வாழ்வை இன்பமாக்குவது பட்டு ஆடை

நவீன டிஸைன்களில். காஞ்சீபுரம். கொள்ளேகாலம், ஆரணி பட்டுப் புடவைகள், பட்டுப் பாவாடைகள், பட்டு சோளிகள்

கிடைக்குமிடம்

கல்யாண் ஸ்டோர்ஸ்

கத்தி : ஸ்வர்ணம் (மாம்பலம் ஸ்டேஷன் எதிரில்) போன் 41659

31 ரெங்கநாதம் தெரு, தியாகராயநகர் சென்னை 17

கிளைகள்: ஸ்வாணம் ஸ்டோர்ஸ், கல்யாண் டெக்ஸ்டைல்ஸ், கல்யாண் கிளாத் ஸ்டோர்ஸ்

அவனுக்குத் தெரிகிற நியாயமே வேறு! குடும்ப பாக்கியம் இந்த ஜன்மத்தில் அவனுக்கு ஏது? நீங்கள் பேசாமல் சுந்துவுக்கு அந்தப் பெண்ணை முடித்து விடுங்கள்.''

மங்கை கண்களைத் துடைத்தவாறே உள்ளே சென்றுவிட்டாள். கடிதமும் கையுமாக நின்று கொண்டிருந்த கப்புரத்தினம் தம் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி விட்டு, வேஷ்டி நுனியினால் கண்களை ஒத்திக் கொண்டார். இந்தப் பேச்சுக்களுக்குக் காரணமானவனே உள்ளே விருந்து கேட்டுக் கொண்டிருக்கிறான் என்பது எப்படி அவருக்குத் தெரியும்?

உள்ளே நின்று கொண்டிருந்த ஜானுவின் முரட்டு உடம்பையும் துளைத்துக் கொண்டு இழைச் சரம்போல் உணர்ச்சிக் கூம்புகள் இதயத்தில் தைத்தன. தன் வலிமை மிக்க கரடு முரடான உடம்பை ஒரு தரம் பார்த்துக் கொண்டான் அவன். வாழ்க்கையில் பொருந்த முடியாத அந்த ராட்சஸத் தோற்றத்தின் மேல் அவனுக்கே வெறுப்பு ஏற்பட்டது. நெஞ்சு நிறைய எதிர்த்து நின்ற ரோமங்களை அருவருப்புடன் பார்த்தான்! வீரனுக்கும் மேற்பட்டதோர் அசுரத் தன்மை!

ஜானுவும்தான் சில பெண்களைப் பார்த்தான். அந்த முயற்சியும்தான் நடந்தது. அவனைக் கண்டதுமே அந்தப் பெண்களின் விழிகளில் ஏற்பட்ட பீதி, அவனையே யல்லவா கலங்க வைத்து விட்டது?

ஜன்னலுக்கப்பால் நின்றிருந்த ஜானு, தன் தம்பியின் கடித மொழிகளைக் கேட்டதும் சிலிர்த்துக் கொண்டான். சற்றுத் தள்ளாடிய வாறே அப்படியே மேஜை மேல் இரு கைகளையும் ஊன்றிக் கொண்டான். கூடப் பிறந்த தம்பியின் வாழ்வுக்கேயல்லவா இப்பொழுது குறுக்குச் சுவராய் நிற்கிறான்!

ஊன்றிய கரங்களை எடுத்தவுடன் ...!

யதேச்சையாக ஜானுவின் கண்கள் மேஜை மேல் கிடந்த பேப்பரில் படிந்தன.....

'இந்திய மண்ணுக்கு ஆபத்து. சீனன் படையெடுத்துவிட்டான்' என்று படித்தபொழுது முதுகெலும்பில் ஒரு புது நிமிர்வு ஏற்பட்டது. மீசைப்புறத்தைக் கைகள் தடவின. உள்ளத்தில் ஊறிய அமித பலம் உடலெங்கும் சலசல வெனப் பாய்ந்தோடியது. மனக் கண்ணின் எதிரே இமயம் செம்மாந்து நின்றது. அதன் ஓரத்தில் எல்லையை மீறியதொரு கால்!

கால் வழியே ஓடிய பார்வை உச்சிக்கு வந்ததும் ஜானு துள்ளிப் பாய்ந்தான். அவன் கண்களிலே தர்ம வெறி...

''டேய், ஜானு! என்னடா இது? ஏன் இப்படி விழிக்கிறாய், வெறியன் போல்? எனக்குப் பயமாயிருக்கிறதேடா....''

காப்பி கொண்டு வந்த மங்கை தன் மகனின் நிலை கண்டு வீறிட்டாள்.

''ஒன்றுமில்லை, அம்மா! எனக்கு ஒன்றுமே இல்லை. நான் சிரஞ்சீவி....'' என்று சிரிக்க முயன்ற ஜானு அந்தக் காப்பியை வாங்கி ஒரே மூச்சில் குடித்து விட்டான். சற்று வியர்த்து விட்டதும் ஆசுவாசமாக இருந்தது.

வழக்கம்போல் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார் கப்புரத்தினம். வெற்றிலைச் செல்லத்துடன் வந்து அவர் அருகில் உட்கார்ந்து கொண்டாள் மங்கை. கொட்டைப் பாக்கை எடுத்துப் பாக்கு வெட்டியால் சன்னமாகச் சீவ ஆரம்பித்தாள்.

''ஜானு போய்க் கிட்டத்தட்ட நான்கு மாதங்களாக வில்லையா? பாவிப் பிள்ளையைப் பற்றி ஒரு வார்த்தையாவது பத்திரிகையில் வந்திருக்கிறதா, பாருங்களேன்....''

கப்புரத்தினம் பத்திரிகையை மடித்துவிட்டு மனைவியைக் கூர்ந்து நோக்கினார்.

''அவனா பாவி மகன்? அவனைப் பெறுவதற்கு நாம் புண்ணியம் செய்திருக்க வேண்டும். தன்னைப் பற்றி அவன் புரிந்து கொண்ட அளவு என்னைப் பற்றி எனக்கும் உன்னைப் பற்றி உனக்கும் தெரியாது. நாம் எல்லாரும் சுயநல வட்டத்துக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கிறோம். அவன்....''

''இப்படியெல்லாம் சொன்னால் எனக்குப் புரியாது. நேற்றைக்குப் பக்கத்து வீட்டுச் சுப்பிரமணியம் படிக்கச் சொன்னார். இரண்டாயிரத்துச் சில்லறைப் பேர்கள் போயிட்டாங்களாம். ரொம்பப் பேரைக் கைது பண்ணிட்டாங்களாம். அதுலேயாவது ஜானு உயிரோடு இருக்க மாட்டானா என்று மனம் அடிச்சுக்கிறது.....!''

மங்கையின் கைப் பாக்குவெட்டி அப்படியே நின்றது. குரல் தழுதழுத்தது.

''பைத்தியமே! ஜானு கைதாக வில்லை. இதைக் கேள். பாரதியார் பாடியிருக்கிறார்:

'..............................
...ஆட்டினைக் கொன்று வேள்விகளியற்றி
வீட்டினைப் பெறுவான் விரும்புவார் சிலரே
நெஞ்சகக் குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சகமழிக்கும் மாதவம் புரிவம் யாம்...
வேள்வியி லிதுபோல் வேள்வியொன் றில்லை
தவத்தினி லிதுபோல் தவம் பிறிதில்லை...
ஊழிவாய்ப்புகழினாய்! எழுகவோ எழுக!...
..............................'

என்று. உனக்குத் தெரியுமா? அந்த வேள்விப் பெரும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன் ஜானு. தானே ஆஹுதியாகி வேள்வித் தீயில் கலந்து விட்ட அவனைப் பற்றி இனி நீயும் நானும் கவலைப்படுவதைவிடப் பெருமைப்படுவதுதான் சிறந்தது......!''


''நீங்கள் ஏன் ஆவேசமாய்ப் பேசுகிறீர்கள்? அப்படியானால்...அப்படியானால் ஜானு.......''

''ஜானுவுக்கு அர்ஜுனனும், பீமனும் மாலை போட்டு வரவேற்கிறார்கள்! தர்ம புத்திரர் ஆசி கூறுகிறார்! பாரதியார் அவனை ஆலிங்கனம் செய்து கொள்கிறார். என் மனக் கண்ணால் நான் பார்க்கும் இந்தக் காட்சியை நீ கலைத்து விடாதே மங்கை!....''

பத்திரிகையை எறிந்து விட்டுக் கண்களை மூடிக் கொள்கிறார் கப்புரத்தினம். பாக்கு வெட்டியினிடையில் நசுங்கிய மங்கையின் விரலிலிருந்து ரத்தம் தரையில் சிந்தியது. கண்களில் கண்ணீர் இனி கிடையாது.

பாரதத்தின் வீர பரம்பரை தொடரட்டும்!

Printed & Published by R Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.





ஏஸிஸி மற்றும் சங்கர்

பிராண்ட் சிமெண்டுகள்

சுபிட்ச இந்தியாவை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கோ. ஆப் இந்தியா லிட்.,
தி அஸோஸியேடெட் சிமெண்ட் கம். லிட். • தி இந்தியா சிமெண்ட்ஸ் லிட்.,





உழைத்து, சேமித்து, தேசீய பாதுகாப்பு பத்திரங்களில் முதலீடு செய்யுங்கள்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

